Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 104 | சர்வதேச மின் செய்தித்தாள் | செப்ரெம்பர் 01 2025

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எதிரி
ஈவிரக்கமற்றவன்,
போர் வெறிகொண்டவன்;
எமது தாயகத்தைச் சிதைத்து,
எமது இனத்தை
அழித்துவிடுவதையே
இலட்சியமாகக் கொண்டவன்.
அவனது இதயக்கதவுகள்
திறந்து எமக்கு நீதி
கிடைக்குமென, நாம்
எதிர்பார்க்க முடியாது.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
இணையத்தளம் (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

"விடுதலைப் போராட்ட ஞானி"

லெப். கேணல் மகேந்தி

நிலையுடன் பெயர்: லெப். கேணல் மகேந்தி
நிலையான பெயர்: இராசு மகேந்திரன்
வீரப்பிறப்பு: 14.02.1970
நிலையான முகவரி: கெருடாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்
நிகழ்வு: 10.06.2006 அன்று மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழவுடுருவும் அணியினரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது வீரச்சாவு
மேலதிக விபரம்: கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

மகேந்தி வீரச்சாவடைந்து விட்ட செய்தி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமாதான காலப்பகுதியில் ஒரு வழமையான பகல்பொழுதில் எம்மை வந்தடைந்தது.

செய்தி உண்மையா? பொய்யா? என்ற ஆதங்கத்துடன் உறுதிப் படுத்த முற்பட்ட வேளையில், இல்லை அது உண்மைதான் என்ற கசப்பான யதார்த்தம் உறுதிப்படுத்தப்பட்டு வந்துவிட்டது.

மகேந்தி எமது போராட்ட வரலாற்றில் வித்தியாசமானவன். பல்லாயிரம் பேர் போராடிய இந்த மண்ணில், பல்லாயிரம் வீரர்கள் வீரச்சாவடைந்துவிட்ட இந்த மண்ணில், விடுதலைப் போரில், அவர்கள் எல்லோருடனும் பொதுவான இணைப்பில் இணைத்துப்பார்த்துவிட முடியாத அளவிற்கு மகேந்தி வித்தியாசமானவன்.

மக்களுடன் பழகுவதில் அவன் தனித்தன்மை கொண்டிருந்தான். எல்லோராலும் நினைக்கப்படும் கலகலவென்ற சிரித்த முகம், எவருடனும் அதிர்ந்து பேசாத, முரண்பட்டுவிடவோ அல்லது முறைத்துப் பார்க்கக்கூடவோ தெரியாத கனிவான முகமும், பழகும் பாங்கும் மகேந்தியின் சொத்துக்களாக இருந்தன. அவன் பிறந்து வளர்ந்ததும், போராட்ட காலத்தில் பெரும் பகுதியை கழித்ததுமான யாழ்ப்பாணம், தென்மராட்சி மண்ணில் அனைத்து மக்களுக்கும் அறிமுகமானவன். அனைவரிடமும் அன்புடன் உறவு கொண்டாடும் மனிதனாக மகேந்தி இருந்தான்.

இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில், யாழ் மாவட்டத்தில் மகேந்தி எனக்கு அறிமுகமாகியிருந்தான். அக்காலப்பகுதியில் தென்மராட்சிப் பொறுப்பாக இருந்த தமிழ்ச்செல்வனின் (அப்போதைய தினேஸ்) நம்பிக்கையான உதவியாளர்களில் ஒருவனாக மகேந்தியும் இடம் பெற்றிருந்தான். தென்மராட்சியில் இருந்த விடுதலைப் போராட்ட அணிகளுக்குள் மகேந்தியும் அவனது மூத்த சகோதரனான ரவியண்ணனும் இடம்பெற்றிருந்தார்கள்.

மகேந்தியின் குடும்பமே விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் நெருக்கடிகளுக்கும், கெடுபிடிகளுக்கும் ஆளாகியிருந்த விடுதலைப் போராட்டத்தில் பற்றுள்ள குடும்பங்களில் மகேந்தியின் குடும்பமும் ஒன்றாக இருந்தது.

நான் யாழ். மாவட்டத்தைப் பொறுப்பேற்ற வேளையில் எனக்கான அணிகளை இணைத்துக் கொள்வதற்காக, ஆங்காங்கே இருந்த போராளிகளை என்னிடம் அழைத்திருந்தேன். அவ்வேளையில் அண்ணனும் தம்பியுமாக ஒரே அணியிலிருந்த மகேந்தியும், ரவியண்ணனும் ஒரே அணியில் இருப்பதைவிட யாராவது ஒருவர் என்னிடம் வருவது பொருத்தமாக இருக்கும் என்று நானும் தமிழ்ச்செல்வனுமாக முடிவெடுத்ததும், அவ்வேளையில் மகேந்தி தமிழ்ச்செல்வனுடன் நிற்க ரவி அண்ணன் என்னுடன் வந்து நிதிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதும் இன்றும் நினைவிற்கு வருகின்றது.

மகேந்தியின் இன்னொரு சகோதரனான சூட்டியும் அக்காலப் பகுதியில் இயக்கத்தில் இணைந்திருந்து ஆனையிறவுச் சமர் காலப்பகுதியில் வெற்றிலைக்கேணி தரையிறக்கத்தைத் தடுக்கும் சண்டையில் வீரச்சாவடைந்திருந்தார். சிறப்பான ஆயுதப் பயிற்சிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட போராளிகளை நாம் மணலாற்றுக்குத் தலைவர் அவர்களது தளத்திற்கு அனுப்பினோம். அதில் துப்பாக்கி சுடுவதில் சிறந்த குறி வல்லுநராக இருந்த மகேந்தியும் தெரிவுசெய்யப்பட்டுச் சென்று, பயிற்சி நிறைவு பெற்று வந்தது இன்றும் அவன் தொடர்பாக நினைவிற்கு வரும் ஆரம்பகால நிகழ்வுகள்.

போராட்டச் சக்கரத்தின் நீண்ட காலச் சுழற்சியில் மகேந்தியும் இணைந்தே சுழன்றான். போராட்ட காலத்தில் அறிமுகமான குடும்பம் ஒன்றிலிருந்து தனது காதல் மனைவியைக் கரம் பிடித்ததும், குழந்தைகள் பெற்று குடும்பகாரனாகியதுமான அவனது வாழ்வு தொடர்ந்தது.

சண்டைக் களங்களில் மிகவும் துணிச்சலுடன் செயற்படுபவனாக மகேந்தி பெயர் பெற்றிருந்தான். நிறையச் சண்டைக் களங்களில் அவன் நிறையத் தடவைகள் விழுப்புண்ணடைந்து மீண்டும் மீண்டும் களத்திற்குத் திரும்பும் ஒருவனாகவே இருந்தான். மகேந்தியின் போராற்றலின் மீதும், போர்க்களச் செயற்பாடுகளின் மீதும் எதிரி எப்போதும் அச்சமே கொண்டிருந்தான்.

உள்ளதை உள்ளபடி எவ்வேளையும் எவருக்கு முன்பும் கதைக்கும் பண்பு கொண்டவன் மகேந்தி. அவனது மனதில் இருந்த விடுதலைப் பற்றுணர்வு சார் பண்பினாலும், இயல்பான அவனது நெஞ்சுரத்தினாலும் ஏற்பட்ட பழக்கமாக இதனைக் கொள்ளலாம். இவ்வாறு நெற்றிக்கு நேரே எதனையும் கதைக்கும் பண்பு அவனது பலமாகவும் சில இடங்களில் பலவீனமாகவும் இருந்தது. விடயத்தை மனதில் வைத்திருக்காமல் நேரடியாகக் கதைக்கும் பண்பினால் அவன் சில பொறுப்பாளர்களுடன் முரண்பட்டுவிட வேண்டியிருந்ததையும் நான் அறிவேன். ஆனாலும் அவர்கள் தமது மனதில் மகேந்தி பற்றிக் குறைவாக நினைத்துவிடவோ, அல்லது நிரந்தரமான கசப்புணர்வுடன் இருந்துவிடவோ முடியாதபடி மகேந்தியின் விமர்சனங்களில் நேர்மைப் பண்பு இருந்தது.

மகேந்தியின் போராற்றல் திறன் எதிரிக்குப் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியது. எமது விடுதலை இயக்கத்திற்கு நலல் வெற்றிகளைப் பெற்றுத்தந்தது. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் மாவட்டத்தை ஆக்கிரமித்திருந்த படையினர் மத்தியில் வெற்றிகரமாக நிலைத்துநின்று படையினருக்குக் கணிசமான இழப்பை ஏற்படுத்துவதில் மகேந்தி வெற்றிகண்டிருந்தான்.

படையினரின் நெருக்கமான படை வேலிகளுடன் இணைந்த ஆக்கிரமிப்புக் கொடுங்கோல் ஆட்சிக்கு உள்ளே நிலைபெற்றிருந்தான். அங்குள்ள மூத்த சந்ததியினரால் அடைக்கலம் வழங்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு, இளம் சந்ததியினரை அணி திரட்டிப் போரிட வைத்தது மகேந்தி தனது இராணுவத் தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

சிறீலங்கா அரசிற்கு உண்மையான அச்சுறுத்தலை வழங்கிய மகேந்தியைப் போர் அரங்கிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு எதிரி பெரிதும் முயன்றான். சமாதான காலப்பகுதியில் எமது தாயகத்தில் கனன்று எரிந்துகொண்டிருந்த விடுதலைப் போர்த் தீயின் மீதும், முற்றுகை வேலிகள் மீதும் சமாதானப் போர்வைப் போர்த்தப்பட்டிருந்த காலத்தின் ஒரு வேளையது. அவ்வேளையில் எமது பொறுப்பாளர்களில் ஒருவர் பரபரப்பான செய்தியொன்றுடன் என்னிடம் வந்தார். மகேந்தி தென்கிழக்காசிய

நாடொன்றில் நிற்கின்றார் என்ற செய்தியே அது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் மகேந்தியின் நண்பர்களாகவும் எமது ஆதரவாளர்களாகவும் இருந்த சிலரிடம் மகேந்தி சில உதவிகளை எதிர்பார்த்து தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

தென்கிழக்காசிய நாடு ஒன்றில் நிற்கின்றார். மேலும் ஐரோப்பிய நாடுகளின் உதவிகளை எதிர்பார்க்கின்றார் என்ற வகையிலான போராளியின் கருத்தானது மகேந்தி எங்கேயோ விலகிச் சென்று கொண்டிருக்கின்றார் என்ற செய்தியை மறைமுகமாகச் சொல்வதாகவே இருந்தது. உண்மையில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து மகேந்தியுடன் உரையாடியவர்கள் அவசரமாக அச்செய்தியை எனக்கு அனுப்பியதின் உள் அர்த்தமும் அதுவென்றே நினைக்கின்றேன். விடயத்தைக் கேட்ட நான் உடனடிப் பதிலாகவே மகேந்தியுடன் தொலைபேசியில் உரையாடும்போது எனது சுகசெய்தியைச் சொல்லுமாறும் மகேந்தியிடம் சுகம் விசாரிக்குமாறும் பணித்ததுடன், ஐரோப்பிய நாடுகளில் உள்ள மகேந்தியின் நண்பர்களிடம் அவருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்துகொடுக்குமாறும், அவரது தேவைகளை நிறைவு செய்து கொடுக்குமாறும் கூறியிருந்தேன்.

பின்னர் தலைவர் அவர்களுடன் உரையாடக் கிடைத்த வேளையில் மகேந்தி தென்கிழக்காசிய நாடு ஒன்றில் நிற்பது தொடர்பாகவும், அவரது நிலை தொடர்பாகவும் உரையாடிய வேளையில் மகேந்திக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்குமாறே தலைவர் அவர்களும் கூறியிருந்தார். அவரது மனதில் மகேந்தி பற்றிய உயர்வான மதிப்பின் வெளிப்பாடாகவே அதனை நான் பார்க்கின்றேன்.

ஓரிரு நாட்கள் கழித்து தகவல் கசிந்து சிறீலங்காவின் தகவல் ஊடகங்கள் ஆரவாரம் செய்யத்தொடங்கின. சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் தமது பத்தி எழுத்துக்களில் மகேந்தியைப் பற்றிக் கூறத்தொடங்கினார்கள். மகேந்தி தென்கிழக்காசிய நாடு ஒன்றில் நிற்பதனைக் கண்டறிந்து எழுதியிருந்தார்கள் அவர் இயக்கத்தில் இருந்து விலகி ஓடிவிட்டதாகவும் அதனால் இயக்கம் இனிவரும் காலங்களில் இராணுவ ரீதியாக வெல்லப்படக் கூடியதாக ஆகிவிடும் என்ற வகையிலுமாக, சிங்கள ஆய்வாளர்களின் கட்டுரைகள் நீண்டு அவர்களது கனவுலகில் விரிந்து சென்றது.

சிங்கள தேசத்திற்கு மகேந்தியின் போராற்றல் அந்த அளவிற்கு அச்சுறுத்தலாக இருந்ததை வெளிப்படுத்தி உணர்த்திய சம்பவமாக அது அமைந்தது. வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியவுடன் மகேந்தியும் நானுமாக சிறீலங்கா அரசின் மேற்படி செய்திகளையும், வெளிநாட்டிலிருக்கும் வேளையில் மகேந்தியுடனான எமது தொலைபேசித் தொடர்புகளையும் நகைச்சுவையுடனும், நெகிழ்ச்சியுடனும் நீண்ட நேரம் உரையாடிக்கொண்டதே அவனுடன் எனது கடைசிச் சந்திப்பாக நினைவில் பதிந்துள்ளது. சென்ற நினைவுகள் இன்றும் மாறாத பசுமையான நினைவுகள் ஆகிவிட்டன.

எமது மனங்களில் குறிப்பாக எனது மனதில் மகேந்தி எங்கிருந்தாலும் எந்த வேளையிலும் போராட்டத்தின் தளத்திலேயே நிற்பவன் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தான். அதற்குக் காரணமான சம்பவம் இவ்வேளையில் மனதை அழுத்தும் நினைவாக நிற்கின்றது.

1990களின் ஆரம்ப கட்டத்தில், எமது மக்களையும் எம் எல்லோரது நெஞ்சையும் பதற வைக்கும் உள் துரோகத்தை நாம் சந்தித்திருந்தோம். தலைவர் அவர்கள் தனது போராட்ட வரலாற்றில் தாண்டிவந்த உட் துரோகங்கள் அதிகம். ஆனாலும் எமது காலத்தில், ஆயிரக்கணக்கான போராளிகளாக போராட்டம் விரிவு பெற்றுவிட்ட வேளையில் சந்தித்த இப்பிரச்சினையால் நாம் எல்லோரும் நிலைகுலைந்துதான் போனோம்.

புலனாய்வு பற்றியதும், உட் துரோகம் பற்றியதுமான விரிவான பார்வை எமக்கு இல்லாமல் இருந்த நேரம் அது. நல்லவர் கெட்டவர் என பகுத்துப் பார்க்க முடியாத குழப்பம் சூழ்ந்த நேரம். தலைவர் அவர்களையும் எமது போராட்டத்தையும் பாதுகாத்துவிட வேண்டும் என்ற முனைப்பில் ஒரு பக்க முடிவாக அல்லாமல் பலபக்க முடிவாக உட் துரோகத்தைக் கையாண்டு கொண்டு இருந்த நேரம் அது.

அந்த குழப்பமான நேரத்தில் மகேந்தியும் விசாரணைக்கு உள்ளாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. மகேந்தியும் விசாரிக்கப்பட்டான். நான் இதில் விபரிக்க விரும்பாத அளவிற்கு கடுமையாகவே விசாரணையை மகேந்தி சந்திக்க வேண்டி வந்துவிட்டது. “கடுமையான சூழலது” அந்த நிலையிலிருந்தும் மகேந்தி மீண்டு வந்தான். கடுமையான சூழலைச் சந்தித்து மீண்டு வந்தபோதும் அவன் உறுதி குலையாத போராளியாக மீண்டு வந்தான்.

சாதாரணமான மனிதனுக்குப் போராட்டத்திலிருந்து ஒதுங்கு வதற்கு சாதாரணமான காரணங்களே போதுமானதாக இருப் பதைக்கண்டுள்ளோம். ஆனால் மகேந்திக்கு போராட்டத்தி லிருந்து விலகிச் செல்வதற்கு நிறையக் காரணங்கள் இருந்தன. ஆனாலும் அவனும் அவனது குடும்பத்தினரும் தலைவர் மீது வைத்திருந்த பற்றும் நம்பிக்கையும் அவனை இந்தப் போராட் டத்துடன் இறுகப் பிணைத்து வைத்திருந்தது.

கடுமையான சூழலைத் தாண்டி வந்தும் குழம்பாமல் இருந்தமை மகேந்தி உறுதியான போராளி என்பதைக் காட்டி நின் றது. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது மனதில் பாரச்சுமையை ஏற்றும் விடயம் என்னவென்றால், மகேந்தி எம்மை அதன் பின்னர் எல்லாச் சந்தர்ப்பத்திலும் சிரித்த முகத்துடன் எதிர் கொண்டதுதான். அவனுக்கு முன்னால் நாம் சங்கடப்பட்டு நின்ற வேளையில் எல்லாம், அவன் எம்மைச் சங்கடப்படுத்திவிடக் கூடாது என்ற நோக்குடன் கவனமாகப் பழகுவான்.

எங்களைச் சந்திப்பதிலோ எங்களுடன் அன்பாகப் பழகுவதிலோ அவன் பின்நிற்பதே இல்லை. எம்முடனான உரையாடல்களின் போது அவன் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்து விடயங்களை எமக்கு நினைவூட்டும் வகையிலான எந்த ஒரு சொல்தானும் வெளிவந்துவிடாது நடந்துகொள்வான். அவன் மட்டுமல்ல அவனைச் சார்ந்த உறவுகள் கூட எம்மைச் சங்கடப்படுத்தும் வகையிலான எந்தவொரு வெளிப்பாட்டையும் காட்டியதே இல்லை. மகேந்தி திட்டமிட்டு கவனமாகத்தான் எம்முடன் அவனது தடுத்துவைப்புக் காலப்பகுதி பற்றிக் கதைப்பதைத் தவிர்க்கின்றானா? அல்லது அவனது இயல்பே அதுவாகிவிட்டதா? என நாம் மனதிற்குள் மலைத்து நிற்போம்.

கேந்தி ஒரு போராளி என்பதற்கு மேலாக இவ்விடயத்தில் மிக உயர்ந்த ஒரு மனிதனாக, ஒரு போராட்ட ஞானியாக தன்னை வெளிப்படுத்தினான் என்றே நினைக்கின்றேன். அவனது இந்தப் பண்பு இயல்பிலேயே வந்ததா? அல்லது தலைவர் மீதும் எமது விடுதலைப் போரின் மீதும் வைத்த பெரும் நம்பிக்கையில் விளைந்ததா? என்பது என்னால் விடை காண முடியாத கேள்வியாக இன்றும் தொடர்கின்றது.

மகேந்த ஒரு சிறந்த பொறுப்பாளராக, போராளியாக இருந்ததை விட மேற்கண்ட பண்பால் ஒரு ஞானியாக எம் மனங்களில் நீங்காத இடம்பெற்று வாழ்கின்றான். தமிழீழம் உள்ளவரை வாழ்வான்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

நினைவுப்பகிர்வு:
ச.பொட்டு
புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

தமிழர்கள் மீதான இனவழிப்பு தற்போது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பாக நீட்சி பெற்றுள்ளது

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

15.08.2025

தமிழ்த்தேசிய இனத்தின் மீது பேரினவாத இலங்கை அரசு கடந்த காலங்களில் மேற்கொண்ட இனவழிப்புச்செயற்பாடுகள் தற்போது, கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளாக நீட்சிபெற்றுக் காணப்படுவதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் இடைக்கட்டுச் சந்திப் பகுதியில் 14.08.2025 நேற்று இடம்பெற்ற செஞ்சோலை வளாகப் படுகொலை நினைவேந்தலில் பங்கேற்று கருத்துரையாற்றும் போது அவர் இந்தவிடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சோகமயமான ஒரு தருணத்திலே நாம் அனைவரும் ஒன்று கூடியிருக்கின்றோம்.

குறிப்பாக பிள்ளைகளை இழந்த பெற்றோர், சகோதரர்கள், உறவினருமாக கண்ணீர்சொரிந்து சோகத்தை வெளிப்படுத்தி கொடூர செஞ்சோலைப்படுகொலை நினைவுகளுடன் இருக்கின்றீர்கள். நாமும் அந்த கொடூர படுகொலையின் கனத்த அந்த நினைவுகளைச் சுமந்தவர்களாக இருக்கின்றோம்.

ஏற்கனவே நாம் குறித்த விமானத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் அஞ்சலிகளைச் செலுத்திவிட்டுத்தான் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளோம்.

உலகில் மிகக் கொடூரமான தாக்குதல்களை, படுகொலைகளை மேற்கொண்ட இராணுவங்களில் இலங்கை இராணுவமுமொன்றாகும்.

வெள்ளைச் சீருடையோடு கல்விகற்கச்சென்ற எமது பிள்ளைகளின் மீது விமானம் குண்டுமழைபொழிந்தது. எமது பிள்ளைகளின் வெள்ளைச் சீருடைகள் குருதியால் நனைந்து சிவப்புச் சீருடையாக மாறியிருந்தகோலம், உடல்கள் சிதறிக்கிடந்த நிலமை, இத்தகைய கெடூரமான சம்பவத்தை யாரும் மறந்துவிடமுடியாது.

இந்த கொடூரம் இடம்பெற்றும் 19ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் கதறி அழுது தமது சோகத்தை வெளிப்படுத்துகின்றபோது, இந்தக் கொடூர படுகொலை இன்றளவும் எந்த அளவிற்கு மனங்களில் தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றதென்பதை நன்கு உணரமுடிகின்றது. இது என்றுமே மறக்கமுடியாத ஆறாத வலியாகும்.

இலங்கை இராணுவம் கடந்த காலத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் வருடம் முழுவதும் தமிழ்இனப்படுகொலையை மேற்கொண்டது. அவ்வாறு இராணுவத்தால் தமிழினப்படுகொலை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளும்,ஆதாரங்களும் தற்போது தாயகப்பரப்பின் பல்வேறிடங்களிலுமிருந்தும் வெளிப்பட்டுவருகின்றன.

எமக்கான விடிவு கிடைக்கவேண்டுமென்ற நோக்குடனும், தமிழ்த்தேசிய இனமான நாங்கள் எம்மை நாமே ஆட்சிசெய்ய வேண்டுமென்ற நோக்குடனும் எமது தமிழர் தாயகத்தை வழிநடத்திக்கொண்டிருந்த எம்முடைய தலைவனின் விடுதலைப் போராட்டக் கட்டமைப்பை உலகநாடுகள் இணைந்து அழித்த வரலாறு உங்கள் அனைவருக்கும் தெரியும்.

தற்போது தமிழர்கள் நாங்கள் நலிவடைந்தவர்களாக, அடிமைகளாக இருக்கின்ற நிலைகள் காணப்படுகின்றன.

தற்போது தமிழர்தாயகத்தில் தமிழர்களுக்கு எதுவுமில்லையென்ற நிலையாகிவிட்டது. கடலிலே தொழில் செய்யமுடியாத நிலைமை, ஆறு மற்றும் குளங்களில் தொழில் செய்யமுடியாத நிலை, வயலில் தொழில் செய்யமுடியாதநிலையென எமது தமிழ் மக்கள் தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முடக்கப்பட்டுள்ளனர்.

எமது தமிழ்மக்களின் காணிகள் திட்டமிட்டவகையில் அபகரிக்கப்படுகின்ற நிலமைகள் காணப்படுகின்றன. நிலமில்லையேல் எமக்கு எதுவுமில்லை.

குறிப்பாக வனவளத் திணைக்களத்திடம் மாத்திரம் 432,486 ஏக்கர் காணிகள் காணப்படுகின்றன. ஆனால் விடுதலைப்புலிகளின் காலத்தில் 222,006 ஏக்கர் நிலங்களே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்தது. இந்நிலையில் கடந்த 2009ஆம் அண்டிற்குப் பிற்பாடு 02இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலங்களை வனவளத்திணைக்களம் அபகரித்துவைத்திருக்கின்றது.

இவ்வாறு அரசதிணைக்களங்களால் எமது தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தமிழர்கள் முடக்கப்படுகின்ற நிலையில் எமது மக்கள் பெருமளவானோர் தாயகப்பரப்பிலிருந்து புலம்பெயர்ந்து செல்கின்ற நிலமைகளும் காணப்படுகின்றன. இவ்வாறாக தாயகப்பரப்பில் தமிழர்களின் பெருக்கம் குறைவடைந்து செல்கின்ற நிலமைகளும் ஏற்படுகின்றன.

அந்தவகையில் கடந்தகாலத்தில் இலங்கை அரசால் தமிழ் இன அழிப்புக்கள் மேற்கெள்ளப்பட்டன. தற்போது தாயகப்பரப்பிலுள்ள எமது தமிழ்தேசிய இனத்தின்மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச்செயற்பாடுகளை இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

கடந்தகால அரசாங்கங்கள் மிகஅதிகளவில் ஆக்கிரமிப்பக்களையும், அபகரிப்புச் செயற்பாடுகளையும் தீவிரமாக மேற்கொண்டிருந்தன. தற்போதைய அரசும் அந்த நிலையிலிருந்து மாறுபட்ட ஒரு அரசாகத் தெரியவில்லை. எமது மக்களின் அபகரிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படுமெனக் கூறுகின்றார்களேதவிர விடுவிப்பதாகத் தெரியவில்லை.

அந்தவகையிலே தற்போது நாம் செஞ்சோலைப் படுகொலையில் உயிரிழந்தவர்களை அஞ்சலிப்பதற்கு கூடியிருக்கின்றோம். இத்தகைய படுகொலைகளைச் செய்தவர்களுக்கு இறைவனால் உரிய தீர்ப்புக்கிடைக்கும் என நம்புகின்றோம்.

குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ பேராதரவுடன் ஆட்சிப்பொறுப்பேற்று அந்த மக்களாலேயே துரத்தியடிக்மப்பட்ட வரலாறுகளை நாம் கண்டிருக்கின்றோம்.

எனவே தமிழ்த்தேசிய இனத்தின்மீது இனவழிப்பை மேற்கொண்ட, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை மேற்கொள்கின்றவர்கள் அதற்கு உரிய பொறுப்புக்கூறலைச் செய்கின்ற காலம் வரும். உரிய தீர்வுகிட்டும். அதற்காக நாம் அனைவரும் காத்திருப்போம்.

படுகொலைகளின்போதும், எமக்கான விடுதலைக்காகவும் போராடியவர்களுக்கும் தொடர்ந்தும் அஞ்சலிகளைச் செலுத்துவோம். என்றும் அவர்களை நினைந்திருப்போம் - என்றார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்!

15.08.2025

செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் வியாழக்கிழமை (14) நடைபெற்றது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப் படங்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் இருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட்

14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

மன்னாரில் 14ஆவது நாளாக தொடரும் போராட்டம்!

16.08.2025

மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் சனிக்கிழமை (16) 14 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு சனிக்கிழமை (16) ஆதரவு வழங்கும் வகையில் வங்காலை மற்றும் தலை மன்னார் கிராமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தலையில் கருப்பு பட்டி அணிந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

சனிக்கிழமை (16) காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இனப்படுகொலையாளர்களை பாதுகாப்பது தமிழ், முஸ்லிம் இன விரிசல்களை ஏற்படுத்தும்

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

17.08.2025

இனப்படுகொலையாளர்களுக்கு மேடை அமைத்துக் கொடுப் பதும், இனப்படுகொலையாளர்களை பாதுகாப்பதும் தமிழ்-முஸ்லிம் இன விரிசல்களையே ஏற்படுத்தும் என சமூக நீதிக் கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய் வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட் தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (17.08.2025) வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொடூர இனப்படுகொலைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக் கும் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கும் அதன் இனப்படுகொலையை ஆதரிக்கும் நேச நாடுகளுக்கு எதிராக வும் நேற்றுமுன்தினம் (15.08.2025) பாரிய ஆர்ப்பாட்டம் கொழும்பு பொரல்லை மலையன சுற்றுவட்டாரத்தில் ஆரம் பித்து கெம்பல் மைதானத்தில் நடந்த எதிர்ப்பு போராட்டம் எதிர்ப்பு கோசத்தோடு முடிவுக்கு வந்தது. இப்போராட்டம் இனப் படுகொலைக்கு முகம் கொடுத்து தொடர் இன அழிப்பிற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழர்களை முகம் சுழிக்க வைத் ததோடு ஆர்ப்பாட்டத்தில் இருந்து வெளியேறும் மனநிலையை உருவாக்கியமை வேதனைகுரியதே.

இலங்கையின் இனப்படுகொலைக்கு முழு மூச்சாக ஆதரவு தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்கள், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழர்களின் விடுதலை அமைப்பை பாசிச வாத அமைப்பு என்றும், தேசிய தலைவரை பாசிச வாதி எனவும் மேடை கட்டி பேசியவர்கள் கூட்ட முன் வரி சையை அலங்கரித்தோடு மேடை ஏறி வீர வசனம் பேசியமை மட்டுமல்ல நிகழ்வு ஆரம்பம் இலங்கை தேசியக்கொடி திரை யில் அசைந்தாட தேசிய கீதத்தோடு ஆரம்பமானது.

இலங்கையில் இன அழிப்பு, இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை என்பன தேசிய கொடியோடும் தேசிய கீதத்தோடும் நடத்தப்பட்ட தோடு அதன் வெற்றியின் அடையாளமாகவே சிங்கள பௌத்த பெரும் தேசிய வாதம் அதனை தம் அடையாளமாக கொண் டுள்ளது. பேரினவாதம் நிகழ்த்திய இனப்படுகொலைக்கு முழுமூச்சாக ஆதரவு தெரிவித்து படைக்கு தேவையானவர் களை கிராம புறத்தில் இருந்து திரட்டி கொடுத்து முள்ளிவாய்க் கால் இனபடுகொலையை பாதையில் பால் சோறு சமைத்து தேசிய வெற்றியாக கொண்டாட வைத்து மகிழ்ந்தவர்கள் பாலஸ்தீன மக்கள் முகம் கொடுக்கும் இனப்படுகொலைக்கு எதிரானவர்களாக இருப்பதாக காண்பிப்பது முஸ்லிம்களை தமது அரசியலுக்குள் இழுப்பதற்காகவே அன்றி வேறில்லை.

போராட்ட ஒழுங்கமைப்பினர் போராட்ட பேரணியில் இலங்கை யில் நடந்த இனப்படுகொலையினை தமது பதாதைகளிலோ கோசங்களிலோ வெளிவராத வகையில் திட்டமிட்டிருந்தனர். இது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளாத மனநிலை மட்டுமல்ல சிங்கள பௌத்தத்தையும் அதன் காவலர்களையும் இனப் படுகொலையாளர்களையும் பகைத்துக் கொள்ள விரும்பாத அரசியல் என்பதே உண்மை. அது மட்டும் அல்ல தமிழர்களின் இனப்படுகொலைக்கு எதிரான போராட்டத்தையும் அரசியல் அபிலாசைகளையும் மறுக்கும் செயலாகவுமே நாம் கருது கின்றோம்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு 1948 ல் கிடைத்த சுதந் திரம் இனப்படுகொலைக்கும், இன சுத்திகரிப்பிற்கும், இன அழிப்பிற்குமான சுதந்திரம் என்பது எமது அனுபவம். இன்று பாலஸ்தீனர்கள் சந்திக்கும் இனப்படுகொலைக்கு முன்னர் இந்த நூற்றாண்டு கண்ட மிகப்பெரும் இனப்படுகொலை முள்ளி வாய்க்காலில் நிகழ்ந்தது என்பதை முஸ்லிம் உறவுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ் ரேலை வழி நடத்தி இனப்படுகொலை புரியும் வல்லரசுகளை அன்று தமது அரசியலுக்காக இலங்கை சிங்கள பௌத்த பேரினவாதிகளை வழி நடத்தி பெரும் இனப்படுகொலையோடு ஆயுத யுத்தத்தை மௌனிக்கச் செய்து தமிழர்களை அரசியல் ரீதியில் அங்கவீனமாக்கினர். தொடர்ந்து தமிழர்களின் அர

சியலை அழிக்க பெரு முயற்சியை எடுத்துக் கொண்டிருக் கின்றனர்.

தமிழர்களை பொறுத்தவரையில் பாலஸ்தீனர்களின் சுதந்திர தேசம் தமிழர்களின் போராட்டத்திற்கான அங்கீகாரமாகும். அதேபோன்று தமிழர்களின் சுதந்திர தாயகம் பாலஸ்தீன மக் களின் சுதந்திர தாகத்திற்கான வெற்றியாகும். இத்தகைய அர சியலை மக்கள் மயப்படுத்தி போராட்டங்களை முன்னெடுத்தல் தமிழ் - முஸ்லிம் உறவை பலப்படுத்தும். மக்கள் விடுதலை போராட்டத்தில் மக்கள் அரசியலாகி மக்களைபெரும் சக்திகளாக கொண்டுவர வேண்டும்.

அதனை விடுத்து இனப்படுகொலையாளர்களுக்கு மேடை அமைத்துக் கொடுப்பதும், இனப்படுகொலையாளர்களை பாது காப்பதும் தமிழ் - முஸ்லிம் இன விரிசல்களையே ஏற்படுத்தும் என்பதையும் மிக கவலையோடு கூறுகின்றோம்.

தற்போதைய ஆட்சியாளர்கள் இதற்கு தமிழ் முஸ்லீம் மக்கள் தமக்கு முழுமையான ஆதரவளித்துள்ளனர் என கூறுவது தமிழ் முஸ்லிம் இன உறவுகளை பிரிக்கும் இன அழிப்பை தொடரும் கூற்றாகவே கொள்ளல் வேண்டும். புதிய அரசியல் உறவை பலப்படுத்தி இனப்படுகொலைக்கு எதிராக ஒருமித்த குரல் எழுப்புவது காலத்தின் அரசியல் தேவையுமாகும் என வலியுறுத்துகின்றோம்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண்; பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையார் வாழ்ந்து வளர்ந்த மண்

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

மன்னார் போராட்டத்தை ஆதரித்து ஒன்று திரண்ட மன்னார் முஸ்லிம் மக்கள்

16.08.2025

மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு உள்ளிட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் உறுதியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து 13 ஆவது நாளாக வெள்ளிக்கிழமை (15) போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மதியம் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர்.

வெள்ளிக்கிழமை(15) மதியம் நடைபெற்ற ஜும்மா தொழுகை நிறைவடைந்த நிலையில்,முஸ்லிம் மக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு குறித்த போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

மன்னார் நகர பிரதான சுற்றுவட்ட பகுதியில் 13 வது நாளாக மக்களினால் குறித்த போராட்டம் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் இடம் பெற்று வருகிறது.

அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பில் காற்றாலை செயற்திட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக ஜனாதிபதியினால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என போராட்டகாரர்கள் தெரிவித்துள்ள நிலையில் இன்றைய தினம் போராட்டம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் ஊடகவியலாளர் குமணனிடம் சுமார் நான்கரை மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர் விசாரணை

17.08.2025

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான கணபதிப்பிள்ளை குமணனை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமை (17) காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான கணபதிப்பிள்ளை குமணன் முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பொலிஸ் நிலையத்தில் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் விசாரணைக்காக சென்றார்.

விசாரணைக்காக அழைக்கப்பட்ட குமணன் சட்டத்தரணி நடராசா காண்டீபன் அவர்களுடன் அளம்பில் பொலிஸ் நிலையத்தில் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவில் விசாரணைக்காக சென்ற நிலையில் சுமார் பத்துமணியளவில் ஆரம்பித்த விசாரணை சுமார் நான்கரை மணித்தியாலங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது இதுவரை விசாரணைகள் முடிவடையவில்லை.

மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக – எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக – எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

செம்மணி – துண்டி முகாம் வரை கைதாகி சித்திரவதைகளில் உயிரிழந்தோர் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டனர்: பல முக்கிய சாட்சியங்களை வழங்குவேன் என்கிறார் மரணதண்டனைக்கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ!

17.08.2025

அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக, செம்மணிக்கு அப்பால் பல முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன் என்று அறிவித்துள்ள கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1996 களில் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டறியப்பட்டு, அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் 141 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், 1996களில் செம்மணி முகாம் துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரணதண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ முக்கிய வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவரது வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி வருமாறு:

“கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை மற்றும் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதனூடாக வெளிப்படுத்துகிறேன். கடந்த யூலை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு மேலதிகமாக, விடயங்களை யாழ் மக்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த தமிழ்மக்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இதனை வெளிப்படுத்துகிறேன்.

எனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கடந்த 3 ஆம் திகதியன்று “வீரகேசரி“ பத்திரிகையில் முதற்பக்கத்தில் வெளியானது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சகல விடயங்களும் உண்மையானவை என்பதை நான் யாழ் மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன்.

1998 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் வெளிப்படுத்தியபோது, அவை நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் கடவுளும், இயற்கையும் அவை உண்மை என்பதை நிரூபித்துள்ளன. 1998 ஆம் ஆண்டு எனக்கு மரணதண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கூற்று தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஊடாக சிறைச்சாலை அதிகாரியான நாமல் பண்டார என்ற அதிகாரி மூலம் எனக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார். அக்கடிதம் அமைச்சராலேயே எழுதப்பட்டிருந்தது. நான் மேல் நீதிமன்றத்தில் கூறிய விடயம் கோபத்தில் கூறப்பட்டது எனவும், அதனை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்தக் கடிதத்தை வாசித்ததன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அதனைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அந்த அதிகாரி, கடிதத்தை வாசித்துவிட்டுத் திருப்பித்தாருங்கள் என்றார். நான் அந்தக் கடிதத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கு மறுத்தபோது அவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் என்னை மிலேச்சத்தனமாகத் தாக்கிக் கொல்ல முற்பட்டனர். இருப்பினும் அங்கிருந்த ஏனைய சிறைக்கைதிகளின் தலையீட்டால் அம்முயற்சி தோல்வியடைந்தது. அவ்வதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்குத்தொடர்ந்திருந்தபோதிலும், அதற்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

1999 ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்தை போகம்பறை சிறைச்சாலையில் சந்தித்தபோது கடந்த யூலை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களை அவரிடம் கூறினேன். அப்போது அவர் என்னிடம் “பயப்படாமல் இருங்கள். ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று உங்களை விடுத்து செம்மணி வழக்கின் சாட்சியாளராக மாற்றுகிறேன்” எனக் குறிப்பிட்டார். 1999 ஆம் ஆண்டு இந்த செம்மணி மனிதப்புதைகுழியைக் காண்பிப்பதற்காகச் சென்றபோது எனது சார்பில் முன்னிலையாவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவதற்கு குமார் பொன்னம்பலத்துக்கு விமானவசதி வழங்கப்படவில்லை. அதன் பின்னர் அவர் திடீரெனப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மறைவை அடுத்து அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அனுப்பிவைக்கப்பட்ட இரங்கல் செய்தியில், குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட தினத்துக்கு முன்னைய தினத்துக்குரிய திகதியே இடப்பட்டிருந்தது. இவ்விடயம் அவ்வேளையில் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இதன்மூலம் குமார் பொன்னம்பலம் கொல்லப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி அந்த இரங்கல் செய்தியை எழுதியிருந்தார் என்பது தெளிவாகிறது.

1999 ஆம் ஆண்டு நான் மனிதப்புதைகுழிகள் உள்ள இடங்களைக் காட்டிக்கொடுத்த வேளையில், அவற்றைக் காட்டிக்கொடுக்கவேண்டாம் எனவும், ஜனாதிபதி எனக்கு மன்னிப்பு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டதன் காரணமாக சிலவற்றை மாத்திரம் காட்டிக்கொடுத்ததன் பின்னர், அதனைக் கைவிட்டுவிட்டேன். இவ்விடயம் தொடர்பில் மேலதிகமாக பல விடயங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.



யாழ்ப்பாணத்தில் செம்மணி மாத்திரமன்றி பலசேனா தலைமையகம் முதல் 1996 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்த முகாம்களில் சித்திரவதைக்கூடங்கள் நடாத்திச்செல்லப்பட்டமையை அன்றைய பாதுகாப்புச்செயலாளர் தொடக்கம் சந்திரிக்கா வரை அறிந்திருந்தனர் என்பதை நான் யாழ் மக்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன். அரியாலை 7 ஆவது இலங்கை இராணுவக் காலாட்படையினால் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சி3 முகாமின் 7 ஆவது இராணுவக் காலாட்படைக்கு உரிய சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டம் என அறியப்படும் பிரதேசத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு புதைக்கப்பட்டன. அது இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளுக்கு வெளியே இருந்த பிரதேசமாகும். அவ்வாறு சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் எனக்கு சரியாகத் தெரியாவிட்டாலும், அந்தப் பிரதேசம் (மணியம் தோட்டம்) எனக்கு நன்றாகத் தெரியும் என்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதற்கு மேலதிகமாக பிரதான கைதுகள் செம்மணியில் இடம்பெற்றதுடன், அங்கு கைதுசெய்யப்படமுடியாதவர்கள் ஏனைய சோதனைச்சாவடிகளில் கைதுசெய்யப்பட்டனர்.’

முத்தையன் கட்டு இளம் குடும்பஸ்தர் உயிரிழப்புக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை [?]

18.08.2025

ஒட்டுச்சுட்டான் - முத்துஐயன்கட்டு இளம் குடும்பஸ்தர் உயிரிழந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவ முகாமிற்குள் சில தரப்பினர் அனுமதியின்றி பிரவேசிக்க முற்பட்டமையே இந்த சம்பவத்துக்கான அடிப்படை காரணியாகும். இவ்வாறு உட்பிரவேசித்தவர்களில் ஒருவர் பிடிபட்ட நிலையில் அவர் அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபர் தொடர்பில் இதற்கு முன்னரும் அதாவது ஜனவரி 18ஆம் திகதி இதே முகாமிற்குள் நுழைந்து பொருட்களை திருடியமை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த தகவல் கிடைத்த பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கமைய இந்த மரணத்துக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை. பொலிசாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என்றார்.

www.sangathamil.ca

மன்னாரில் 15ஆவது நாளாகத் தொடரும் போராட்டம்

17.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (17) 15 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (17) ஆதரவு வழங்கும் வகையில் பள்ளிமுனை மற்றும் பெரிய கரிசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் மன்னாரைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களும் பங்கேற்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தலையில் கருப்பு பட்டி அணிந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இன்றைய போராட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களும் மத தலைவர்களும், அருட் சகோதரிகளும் ஒன்றிணைந்துள்ளனர்.

இன்றைய தினம் காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் நாடு தழுவிய போராட்டம்

17.08.2025

திருகோணமலை - முத்துநகர் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைக்கு அரசிடம் இருந்து சரியான பதில் கிடைக்கா விட்டால் விவசாயிகளை ஒன்றிணைத்து நாடுதழுவிய போராட்டத்தை முன்னெடுக்க தயாராக இருப்பதாக முத்துநகர் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முத்துநகர் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டுவந்த விவசாய காணிகளில் இருந்து விவசாயிகளை வெளியேற்றி அவற்றை சோலார் மின் திட்டத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமது காணிகளை தமது விவசாயத்திற்கு மீள வழங்குமாறு கோரியும் கடந்த வியாழக்கிழமை (14) ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக முத்துநகர் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்பின்னர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அதற்கான தீர்வை வழங்குவதாக விவசாயிகளுடனான கலந்துரையாடலின்போது அரச தரப்பில் இருந்து உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே குறித்த விவசாயிகள் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இது முத்துநகர் விவசாயிகளுக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல மாறாக இது விவசாய நிலங்களில் சோலாரை பூட்டி அவற்றை மலட்டு நிலங்களாக மாற்றுவதால் பாதிப்படைகின்ற விவசாயினதும், அரிசியை உணவாக உட்கொள்ளுகின்ற ஒவ்வொரு மனிதனுடைய பிரச்சினையுமாகும். நாங்கள் சோலார் மின் உற்பத்தி திட்டத்திற்கோ அல்லது நாட்டின் அபிவிருத்திக்கோ எதிரானவர்கள் அல்லர்.

மாறாக பொன் விளையும் பூமியான விவசாயம் மேற்கொள்ளுகின்ற பூமியில் சோலார் மின் திட்டத்திற்கான தொகுதிகளை பூட்டி அவற்றில் விவசாயத்தை மேற்கொள்ள விடாது அவற்றை மலட்டு நிலங்களாக மாற்றுவதையே நாங்கள் எதிர்க்கின் றோம். அருகில் உள்ள கரைச்சி நிலங்களை சோலார் திட்டத்திற்காக எடுத்துக் கொண்டு எமது நிலங்களை விவசாயம் செய்ய எம்மிடம் தாருங்கள் என்றே கேட்கின்றோம்.

இதேவேளை நீதிமன்ற உத்தரவுகள் அல்லது சட்ட சிக்கல் இல்லாத காணிகளில் விவசாயம் மேற்காள்ள முடியும் என்ற தீர்மானத்தினை 29.07.2025 அன்று மேற்கொண்டிருப்பதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா அவர்கள் அறிக்கை வெளியிட்டிருப்பதை ஊடகவாயிலாக அறிந்தோம். இருப்பினும் அது தொடர்பாக ஆவண ரீதியான எவ்வித உத்தரவாதமும் எமது விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

அத்துடன் எமது முத்துநகர் பகுதியில் 6க்கு மேற்பட்ட சோலார் கம்பனிகள் கால்பதிக்கவுள்ளதாக அறிகின்றோம். அதுமட்டுமல்லாமல் 352 விவசாயிகளையும் வெளியேற்றுவதற்கான சட்ட நடவடிக்கை இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் ஏனைய காணிகளில் இருந்தும் நாம் சட்டரீதியாக வெளியேற்றப்படுவோம் என்ற அச்சத்தில் இருக்கின்றோம்.

எமது 352 விவசாயிகளும் 800 ஏக்கரில் காலாகாலமாக விவசாயம் செய்து வருகின்றார்கள் அவற்றை எமக்கு வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இந்நிலையில் இது வரை நீதிமன்ற கட்டளையின் மூலம் வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்றுக் காணியும், ஏனையவர்கள் அச்சம் இன்றி விவசாயம் மேற்கொள்ள சட்ட ரீதியான ஆவணம் ஒன்றையும் வழங்க பிரதி அமைச்சர் ஆவணை செய்ய வேண்டும்.

எமது நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்க்கா விட்டால் இலங்கை முழுவதும் உள்ள விவசாயிகளை ஒன்று திரட்டி பாரிய போராட்டத்தை நடாத்தி அரச இயந்திரத்தை முடிக்குவதற்கும் நாம் தயாராக இருகின்றோம்.

கடந்த கால அரசாங்கமும் விவசாயிகளின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாது செயற்பட்டதனாலேயே பாரிய பின்னடைவை எதிர்கொண்டது என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். எனினும் இந்த அரசாங்கத்தை நாங்களே கொண்டு வந்திருக்கின்றோம். எனவே எமது கோரிக்கைகளுக்கு அவர்கள் செவிமடுப்பார்கள் என முழுமையாக நம்புகின்றோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மன்னாரில் 16ஆவது நாளாக தொடரும் போராட்டம் செல்வநகர் கிராம மக்கள் பங்கேற்பு

18.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை (18) 16 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு இன்றைய தினம்

ஆதரவு வழங்கும் வகையில் செல்வநகர் கிராம மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின்

கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இன்று மாலை இடம் பெறவுள்ள விசேட சந்திப்பின் போது ஜனாதிபதி மன்னார் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வடக்கு கிழக்கு ஹர்த்தால் தோல்வியில் நிறைவு (?)

18.08.2025

இலங்கை தமிழரசுக் கட்சியினால் அழைப்பு விடுக்கப்பட்டதற்கு அமைய, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு சில பகுதிகளில் இன்றைய நாள அரை நாள் ஹர்த்தால் என்ற நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்றைய நாள் முழுவதும் நிர்வாக போராட்டத்திற்கு முன்னதாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் இன்று முற்பகல் வேளையில் மாத்திரம் நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு அறிவித்தார்.

பலரின் நன்மை கருதி இந்த தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

எவ்வாறாயினும் இன்றைய நாள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் வழமைபோலவே தமது நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவ பிரசன்னம் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கண்டித்து இந்த நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய, சில பகுதிகளில் மாத்திரம் வர்த்தக நிலையங்கள் சில மணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் பொது போக்குவரத்து என்பன வழமைபோலவே இயங்கின. இந்தநிலையில், கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட போதிலும், பெரும்பாலான செயற்பாடுகள் வழமைப்போன்றும் முன்னெடுக்கப்பட்டன.

நல்லூரில் கண்ணீரை வரவழைத்த தண்ணீரின் கதை நாடகம் தொடரும் நீர்க்கண்காட்சி

19.08.2025

நல்லூர் முருகன் ஆலய திருவிழாவை முன்னிட்டு 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப் பொருளில் வடக்கின் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்த WASPAR & Young Water Professionals முயற்சியில் நீர்வள சபை, நீர்ப்பாசண திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ் மாநகர சபை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ் இந்துக்கல்லூரி மற்றும் பல தன்னார்வலர் அமைப்புகளின் கூட்டு முயற்சியாக வடமாகாண நீர்வளம் பேணுதற்கான பேராய்வுச் செயற்திட்டத்தின் இரண்டாவது நீர்வளக் கண்காட்சி வெள்ளிக்கிழமை (15) மாலை நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் அமைந்துள்ள நெசவுக் கைத்தொழிற் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை (24) வரை இடம்பெறவுள்ளது.

நீர்வளக் கண்காட்சியின் ஒரு கட்டமாக ஊருணி ஆற்றுகைக் களத்தில் பல்வேறு ஆற்றுகை நிகழ்வுகளும், கலந்துரையாடல்களும் தினமும் மாலை வேளையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திங்கட்கிழமை (18) மாலை செம்முகம் ஆற்றுகைக் குழுவின் "தண்ணீரின் கதை" நாடக ஆற்றுகை இடம்பெற்றது. நிலத்தடி நீரை மட்டும் நம்பியிருக்கும் யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் போனால் என்னவாகும் என்பதனை சித்தரிக்கும் வகையில் நாடகம் உயிர்ப்புள்ளதாக இருந்தது. பார்வையாளர்களை கண்ணீரில் நனைய வைத்த நாடகத்தின் பின் பலரது அனுபவ பகிர்வுகளும் உருக்கமாக அமைந்திருந்தன.

நீர்வளக் கண்காட்சியின் ஐந்தாம் நாளான செவ்வாய்க்கிழமை (19) ஆற்றுகை நிகழ்வாக பாடல் நிகழ்வுகளும், "கேணி: நீர் மரபுரிமைக் கட்டுமானங்களைக் காக்க வேண்டிச் சில முன்வைப்புகள்" என்கிற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஆய்வாளருமான அகிலன் பாக்கியநாதன் அவர்களின் கருத்துரையும் உரையாடலும் இடம் பெறும்.

நிலத்தடி நீரும் எமது பிரதேச நிலக்கட்டமைப்பு மற்றும் வழுக்கையாறு திட்ட மாதிரிகளின் கண்காட்சிகள், விஞ்ஞான விளக்கங்கள், ஆய்வு முடிவுகள், விளையாட்டுகள், புதிர்ப்போட்டிகளில் பங்கேற்கும் சிறார்களுக்கான ஏராளமான பரிசுப் பொருட்களுடன் நிலத்தடி நீரை பக்குவமாக பாதுகாக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை இக்கண்காட்சி ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 17ஆவது நாளாக தொடரும் போராட்டம்

19.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் செவ்வாய்க்கிழமை (19) 17 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வரு கின்ற நிலையில் குறித்த போராட்டத்தில் பல்வேறு கிரா மங்களை சேர்ந்த மக்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன் னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகை யில் பனங்கட்டிக்கொட்டு , ஜிம் பிரவுன் நகர் , எமில் நகர், இத்திக் கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.

குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு குரல்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள் ளதோடு, ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரித்துள்ளனர்.

மண்டைதீவு மனிதப் புதைகுழிக்கு சாட்சியங்கள் உண்டு

வேலணை பிரதேச சபை உறுப்பினர் பிரகலாதன்

20.08.2025

1990களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிக ளைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதி களும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு பகுதி குறிப்பிட்ட சில கிணறுகளில் இருப்பதாகவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருப்பதாகவும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் பிரகலாதன் கூறியதுடன் இந்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் இன்று புதன்கிழமை (20) தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் காலை 10.00 மணிக்கு சபையின் சபா மண்ட பத்தில் நடைபெற்றது.

இதன்போதே இவ்வாறு வலியுதுத்தினார்.

மேலும் செம்மணி புதைகுழி விவகாரம் பூதாகரமாக இருக்கும் இன்றைய சூழலில் வேலணை பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு நடைபெற்றதாக கூறப்படும் இந்த புதைகுழியையும் அகழ்வதற்கு அப்பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேச சபையாக இருப்பதால் அதை வலுயுறுத்தவே இந்த விவகாரம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது என்றும் கூறினார்.

இது குறித்து சபையில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த மனிதப் புதைகுழி விவகாரம் காலத்துக்கு காலம் தேர்தல் அரசியல் பேசும் பொருளாக இருப்பதால் இது தொடர்பிலான உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

குற்றவாழிகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வும் பரிகாரமும் வழங்குவது அவசியம் என்றும் உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், பார்த்தீபன், மற்றும் கருணாகரன் நாவலன் ஆகியோர் வலியு றுத்தியிருந்தனர்.

www.sangathamil.ca

தமிழீழம் கேட்டு போராடிய இனம் இன்று காற்றாலையைத் தடுக்கப் போராடும் நிலை

பா. அரியநேந்திரன்

20.08.2025

"எமது நிலம் எமக்கு வேண்டும்" என தமிழீழம் கேட்டு, அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் தொடர்ந்து 76 வருடங்களாகப் போராடியும் போராடிக்கொண்டுள்ள தமிழ் இனம், தற்போது மன்னார் காற்றாலையைத் தடுக்கக் கோரியும் இதே சுலோகத்தை முன்நிறுத்தி "எமது நிலம் எமக்கு வேண்டும்" எனப் போராடும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கில் உள்ள தமிழர்களின் நிலைமை, எல்லா விடயத்திற்கும் போராடியே ஆளும் தரப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியவர்களாக எமது வாழ்க்கை முறை மாறிவிட்டது. கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, வடகிழக்கில் இருந்து தெரிவான ஆளும் தரப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், இனம் சார்ந்தோ, நிலம் சார்ந்தோ, ஆக்கிரமிப்பு சார்ந்தோ குரல் கொடுக்க முடியாத பேசா மடந்தைகளாக உள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், மன்னார் தீவுப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மற்றும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் குறித்து தொடர்ந்து சர்ச்சை நிலவி வருகின்றது.

இலங்கை மின்சார வாரியத்திற்குச் சொந்தமான 30 காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், மேலும் சில காற்றாலைக் கோபுரங்கள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன. அத்துடன், இந்தியாவின் அதானி நிறுவனம் மன்னார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த சூழ் நிலையில், அந்தத் திட்டத்திலிருந்து தாம் வெளியேறுவதாக அண்மையில் அறிவித்திருந்தது.

மன்னாரில் அமைக்கப்படவுள்ள இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலைப் பண்ணை, மன்னார் தீவின் தெற்குக் கரையில் அமைந்துள்ள மன்னார் காற்றாலை மின்வலுப் பண்ணையாகும். முதலாவது படியாக, 100 மெகாவாட் காற்றாலை மின்சக்தி வளர்ச்சி செய்யப்படும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அங்குள்ள மக்களின் விருப்பம், புவியியல் இயற்கைச் சூழல், காலநிலை என்பவற்றைக் கணக்கில் எடுத்து, மன்னார் மாவட்ட மக்களின் ஆதரவு இன்றி இந்தத் திட்டம் ஏற்படுவதை முழுமையாக மக்கள் எதிர்க்கின்றனர்.

இது தொடர்பாக, மன்னார் மாவட்ட மக்களின் கருத்து: "மன்னார் தீவில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள காற்றாலைகளால் நாம் பல்வேறு இன்னல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம். வெள்ளத்தால் பெண்களின் வீட்டுத் தோட்டங்கள் நாசமடைந்து போனது. அபிவிருத்தித் திட்டங்கள் எமது சமூக, பொருளாதார, மனித உரிமைகளைப் பாதிக்கும் விதத்தில் இருக்கின்றன" எனக் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

ஐக்கிய நாடுகள் புலம்பெயர் உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பான பேரவையின் பிரதான நாடாக இலங்கை விளங்குகிறது. இதற்கான காரணம், ஆண்டுதோறும் 30க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து 250க்கும் அதிகமான பறவை இனங்கள் இலங்கைக்குப் புலம்பெயர்வதனாலாகும். வருடந்தோறும் இலங்கைக்கு 15 இலட்சம் பறவைகள் வருவதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் பிரதேசத்திற்கு மாத்திரம் 10 இலட்சம் பறவைகள் வருகை தருகின்றன.

இவ்வாறு வருகின்ற பறவைகளின் பயணப் பாதையும் இருப்பிடங்களும் பாதிப்படைவதாகவும், காற்றாலைகளின் இயக்கத்தால் பறவைகள் உயிரிழப்பதாகவும், சூழலியல் நீதிக்கான நிலையத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்தியா வின் அதானி நிறுவனத்தின் திட்டத்தில் பறவைகளுக்கான தாழ்வாரப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், அவை பெயரளவிலானதுமட்டுமே.

பொதுமக்கள் ஏன் எதிர்க்கின்றனர். என் பதை ஆராயப்பட வேண்டும். "அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்த வேண்டும்" என்பது அவர்களின் கோரிக்கை. இலங்கையின் மீன்பிடித் தொழில், பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கைக் காற்றின் வலு முதலானவற்றிற்குப் பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது. மன்னார் பல பொருளாதார வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசம்.

இந்த நிலையில், ஏகபோக இராட்சத பன்னாட்டுக் கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத் தன்மையாலும், அழிவை எதிர்நோக்கி உள்ளது மன்னார் தீவு.

ஏற்கனவே உள்ள காற்றாலைகளால்: மீன் கரைக்கு வருவது குறைந்துவிட்டது. மீன் இனப்பெருக்கம் குன்றிவிட்டது. காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்பட்ட மாறுதல்கள், வடிகால் அமைப்பை மாற்றி வெள்ளப் பெருக்கையும், நிலத்தடி நீர் உவர்ப்புத்தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

காற்றாலைகளின் இரைச்சலால், மன்னாருக்கு வரும் வலசைப் பறவைகளின் வருகையைத் தடுக்கவும், பாதையை மாற்றவும் அவை காற்றாடிகளால் இறக்கும் நிலையையும் ஏற் படுத்தியுள்ளது. மக்களின் வாழ்விலும், காற்றாலைகளின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட், தோரியம் போன்ற கனிம வளங்கள், இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவத் தேவைகளுக்காக உலக நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. இதில் முதலீடு செய்வது பெரும் இலாபம் தரும் என்பதால், பன்னாட்டு நிறுவனங்கள் முண்டியடிக்கின்றன. எனவே, மன்னாரில் நடைபெற இருக்கும் இந்த அகழ்வாராய்ச்சி, மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்துவிடும் அளவிற்கு ஆபத்தானது. இந்தக் காற்றாலை மற்றும் கனிம அகழ்வு, நாட்டின் தேவைக்கான

தன்றி, பன்னாட்டுக் கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். இத்தனை காரணங்களும் உண்மையானவை. இதை உணராமல், எங்கள் நிலத்தின் வளங்களை அழிக்கவும், எதிர்காலத்தில் மன்னார் தீவின் இயற்கை எழிலைச் சூறையாடவும் இந்த நாசகாரக் காற்றாலைத் திட்டம் வழிவகுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

மன்னாரில் ஆரம்பித்த போராட்டம், வவுனியாவில் மனிதச் சங்கிலிப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்கள், அரசியல் வாதிகளுக்கு அப்பால், மதத் தலைவர்களும் இதைத் தடுக்கப் போராடும் நிலையைக் காண முடிகிறது.

"தமிழீழம் கேட்டு அகிம்சையாகவும், ஆயுதமாகவும் போராடி அதைப் பெறவில்லை. இப்போது, தாயக மண்ணில் நடக்கும் அபகரிப்பு, வளங்களை அழிக்கும் நடவடிக்கை, திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான நீதி வேண்டிய போராட்டங்கள் என, தொடர்கதையாகவே இப்போது தினமும் மாறிவிட்டது."

தனிமனித இறப்பு: கடந்த வாரம் முல்லைத் தீவு முத்தையன் கட்டு குளத்தில் இராணுவம் கொலை செய்ததாகக் கூறி, எதிர்வரும் 18ம் தேதி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் வடகிழக்கு சார்ந்து முன்னெடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, எதற்கும் ஏதோ ஒரு கவன ஈர்ப்புப் போராட்டமே வாழ்க்கையாக மாறியுள்ளது. வடகிழக்கில் தமிழர்கள் போராடியே சகல விடயங்களுக்கும் தீர்வைப் பெற வேண்டும் என்ற நிலைமையே உள்ளதே தவிர, ஆட்சியாளர்களுடன் பேசி எதையும் தீர்க்க முடியாத நிலை, கடந்த 16 வருடங்களாகத் தொடர்வதையே, தற்போதைய மன்னார் காற்றாலையைத் தடுக்கும் போராட்டமும் வெளிப்படுத்தியுள்ளது.

அதற்கு நல்ல உதாரணம்: போராடியதால் தான் தற்போது மன்னார் காற்றாலை அமைக்கும் பணி ஒருமாதம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

21.08.2025

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழக கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

நல்லூர் ஆலய மகோற்சவம் கடந்த 29ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக மகோற்சவ திருவிழாக்கள் மிக சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

அந்நிலையில் இன்றைய நாள் வியாழக்கிழமை காலை 06.15 மணியளவில் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று , ஆறுமுக பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார்.

தேர் திருவிழாவில் புலம்பெயர்நாடுகள் , மற்றும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள்

கலந்து கொண்டு ஆறுமுக பெருமானின் அருட்காட்சியை கண்டுகளித்தனர்.

தேர் திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதஷ்டை, அடியழித்தல், கற்பூர சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் என தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

நாளைய தினம் வெள்ளிக்கிழமை காலை 06.15 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று, தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அதனை தொடர்ந்து மாலை 04.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று . கொடியிறக்கம் நடைபெறும்.

மன்னாரில் புதிய காற்றாலை மின் திட்டங்கள் தேவையில்லை

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

21.05.2025

மன்னாரில் 'தம்பபவனி' காற்றாலைத் திட்டம் உள்ள நிலையில் இனி மன்னார் தீவுக்கு பிறிதொரு காற்றாலைத் திட்டம் தேவையில்லை. மன்னார்த் தீவில் மீண்டும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை நிறுவினால் மன்னார்த் தீவில் வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்று மன்னார் மாவட்ட மக்கள் கருதுகிறார்கள். மக்களின் நிலைப்பாடு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) நடைபெற்ற உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் நிரமாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

சிறிய அளவிலான நிலப்பரப்பினைக் கொண்ட மன்னார்த்தீவில் மீண்டும் காற்றாலைத் திட்டங்களை ஏற்படுத்தினால் அங்கு மக்கள் வாழமுடியாத நிலை ஏற்படுமென்பது அங்குள்ள மக்களின் அபிப்பிராயம். எனவே மன்னார்தீவு மக்களின் அபிப்பிராயங்களைக் கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும். மன்னார்த்தீவின் தெற்குக்கரையில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 'தம்பபவனி' எனும் காற்றாலைத்திட்டமே போதும் இனி மன்னார்த்தீவினுள் காற்றாலைத் திட்டம் தேவையில்லை

மன்னார் மக்கள் இன்றோடு (நேற்று) தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். மன்னார்த்தீவில் காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்களை அமைக்கக்கூடாதென வலியுறுத்தியே அவர்களால் இவ்வாறு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தவிடயம் தொடர்பாக இம்மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம். அதற்கமைய இந்தக்காற்றாலைத்திட்டத்தை ஒருமாதகாலத்திற்கு இடைநிறுத்தி வைப்பதெனவும், இத்திட்டம்தொடர்பில் உரியதரப்பினர் மக்களிடம் அபிப்பிராயங்களைப் பெறவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஏற்கனவே மன்னார்த்தீவின் தெற்கு கரையில் கடந்த 2020ஆம் ஆண்டு 'தம்பபவனி' எனும் பெயரில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்கி இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்சக்திப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதனைவிட மன்னார் தீவிற்குவெளியேயும் வங்காலை மற்றும் நறுவிலிக்குளம் ஆகிய பகுதிகளிலும் 6 காற்றாலை மின்உற்பத்திக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நாட்டின் பொருளாதாரத்திற்கும், நாட்டின் மின்சாரத்தேவைக்குமாக ஏற்கனவே தம்மால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதே மன்னார்த்தீவு மக்களின் அபிப்பிராயம். அத்தோடு சிறிய அளவிலான நிலப்பரப்பைக்கொண்ட மன்னார்த்தீவில் மீண்டும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை நிறுவினால் மன்னார்த்தீவில் வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுமென்பதும் அம்மக்களின் அபிப்பிராயமாகவுள்ளது. எனவே இந்தவிடயத்தில் மன்னார்தீவு மக்களின் இந்த அபிப்பிராயங்களைக் கருத்திலெடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றேன் என்றார்.

மன்னாரில் காற்றாலை அமைத்தல், கனிம மணல் அகழ்வுக்கு எதிராக தொடரும் போராட்டம்

21.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிம மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக தொடர்ந்து வரும் கவனயீர்ப்பு போராட்டம் 19ஆவது நாளாக இன்றும் (21) சுழற்சி முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த போராட்டம், மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் இடம் பெற்று வருகிறது.

இந்த போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க உறுப்பினர்கள் மற்றும் மன்னார் முச்சக்கரவண்டி சங்கத்தினர் ஆதரவு வழங்குவதோடு, அவர்கள் போராட்டத்திலும் கலந்துகொண்டனர்.

இதில் மக்கள், "மனிதர்களைக் கொன்றுவிட்டு மின்சாரம் எதற்கு?", "காற்றாலை உற்பத்தி எம் கண்ணீரின் கதை சொல்லும்" போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக செயற்படுத்தப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிம மணல் அகழ்வு ஆகியவற்றை முழுமையாக நிறுத்தும் வரை இந்த ஆர்ப்பாட்டம் தொடரும் என, அதில் பங்கேற்றுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இன்றைய நாள் நடத்தப்பட்ட இப்போராட்டத்தின்போது வெளிநாட்டு பிரஜை ஒருவர் கலந்துகொண்டு மக்களின் போராட்டம் தொடர்பாக கேட்டறிந்தார்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து, மன்னார் நகர சுற்றுவட்ட பகுதி யில் இருந்து மாவட்ட செயலகம் வரை ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது.

www.sangathamil.ca

சத்துருக்கொண்டான் தமிழினப் படுகொலை நினைவாக மட்டக்களப்பு மாநகர சபை அமர்வில் அகவணக்கம் நிகழ்வு

22.08.2025

மட்டக்களப்பு மாநகர சபை அமர்வில் சத்துருக்கொண்டான் தமிழினப் படுகொலை புதைகுழி தோண்டப்பட வேண்டும் என பிரேரணை கொண்டுவரப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் இந்த படுகொலையின் 35வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி சபையில் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 3வது மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை (21) மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர் தயாளன் கௌரி, சத்துருக்கொண்டான் படுகொலைக்கு நீதி கோரி, புதைகுழி தோண்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரேரணை ஒன்றை கொண்டு வந்து முன்வைத்தார்.

அந்த பிரேரணையின்படி,

1990.9.9 அன்று இடம்பெற்ற சத்துருக்கொண்டான் படுகொலை என்பது இந்த மாவட்டத்தில் பாரிய தமிழினப் படுகொலை நடந்தேறியது. குறிப்பாக யுத்த காலப்பகுதிகளிலே எங்களுடைய மாவட்டத்தில் அப்போது இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. அந்த பகுதியில் பனிச்சையடி, திராய்மடு, பிள்ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண்டான் கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து நகரில் தஞ்சமடைந்து முகாம்களில் தங்கியிருந்தனர்.

இவர்கள் பகலில் தமது கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று வந்த நிலையில், 1990-9-9 அன்று மாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அங்கிருந்த சிறியோர் தொடக்கம் முதியோர் வரை 186 பேரை ஒன்றுகூடல் என தெரிவித்து சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று, அங்கே, இராணுவத்தினருடன் ஊர்காவல் படையினர் இணைந்து இராணுவ முகாமின் தளபதி வர்ணகுலசூரிய என்பவரின் தலைமையில் துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இந்த படுகொலையின் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் பாலகிட்ணன் தலைமையில் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை குழுவிற்கு தப்பி வந்தவர் உட்பட உயிரிழந்தவர்களின் உறவுகள் பலர் சாட்சியங்கள் அளித்து, இந்த படுகொலை நிரூபிக்கப்பட்ட படுகொலையாக காணப்பட்டது.

இந்த படுகொலை இடம்பெற்று, எதிர்வரும் மாதம் 9ஆம் திகதி 35 ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில், இந்த படுகொலைக்கான நீதி இதுவரை மறுக்கப்பட்டது. இருந்தபோதும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொரு வருடமும் நினைவேந்தலை நினைவுகூர அமைக்கப்பட்ட நினைவேந்தல் தூபிக்கு வரும்போது பொலிசார், இராணுவத்தினர் சுற்றிவளைத்து அச்சுறுத்தல் விடுக்கின்றனர். அந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது.

இருந்தபோதும் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி தற்போது செம்மணி புதைகுழி மற்றும் ஊழல் மோசடிகளை அழிப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளதை நாங்கள் வரவேற்கிறோம் அதேபோல் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு வந்து செம்மணிக்குச் சென்று இந்த படுகொலைகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தீர்மானிக்கப்பட வேண்டும் என அறிக்கை விடுத்தார்.

ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பல விடயங்களை செய்வதாக தெரிவித்தார். இருந்தபோதும் இந்த படுகொலையில் நானும் இறந்திருக்க வேண்டியவள். அப்போது எனக்கு 4 வயது. அன்றைய தினம் எனது பெற்றோர் சுற்றி

வளைப்பில் முதல் ஒருசில மணித்தியாலத்துக்கு முன்னர் நாங்கள் அங்கிருந்து வெளியேறி நகரிலுள்ள நலன்புரி முகாமிற்கு சென்றுவிட்டதால் தப்பிக்கொண்டேன்.

எனவே, உண்மை ஒருநாளும் உறங்காது. செம்மணி புதைகுழி இன்று தோண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோல் சத்துருக்கொண்டான் படுகொலை செய்யப்பட்ட அப்போதைய இராணுவ முகாம் இருந்த இடம் தோண்டப்பட வேண்டும் என்ற இந்த தீர்மானம் எமது உறுப்பினர்களின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்டு இந்த தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர், ஐ.நா மனித உரிமை ஆணையம், அனுப்பப்பட்டு நீதி கிடைக்க வேண்டும் என பிரேரணையை முன்வைத்தார்.

இந்த பிரேரணைக்கு சபையில் இருந்த முழு உறுப்பினரது ஆதரவு வழங்கப்பட்டு, சத்துருக்கொண்டான் படுகொலை 35 ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு படுகொலை செய் யப்பட்டவர்களுக்கு அனைவரும் எழுந்து நின்று, இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தினர்.

பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் நீக்கப்பட வேண்டும்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜி. ஸ்ரீநேசன்

22.07.2025

பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் நீக்கப்பட வேண்டும். இந்த சட்டம் இலங்கை அரசுக்கு கேவலத்தை, அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனநாயக நாடா என்று கேள்வியெழுப்படுகிறது. இளைஞர்கள் ஆயத மேந்துவதற்கு இந்த சட்டம் தூண்டியுள்ளது. அத்துடன் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாட பயங்கரவாத தடைச்சட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. ஜே.ஆர் ஜயவர்தன கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதன் பெருமையை பெற்றுக்கொள்ளுங்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (22) நடைபெற்ற அமர்வின்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பற்றி மிகவும் முக்கியமான தருணத்தில் தான் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபை ஒத்திவைப்பு விவாதத்தை கொண்டு வந்துள்ளார். 1948ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற சுதந்திரத்தை அனைத்து இன மக்களும் அனுபவித்துள்ளார்களா என்ற கேள்வியெழுந்தள்ளது. இந்த நாடு சுமார் 50 ஆண்டுகாலமாக பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டம் ஆகியவற்றால் ஆளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன 1979 ஆம் ஆண்டு 6 மாத காலத்தை வரையறுத்து தற்காலிக ஏற்பாடாக கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டம் இன்றளவில் நடைமுறையில் உள்ளது. ஜனநாயக நாட்டை பயங்கரவாத சட்டம் 50 ஆண்டு காலமாக ஆள்வது என்றால் அதன் விளைவுகளை சிந்தித்துப் பாருங்கள்.

அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்களையும் ஏனையவர்களையும் குற்றவாளிகளாக்கும் சட்டமாகவே பயங்கரவாத தடைச்சட்டம் காணப்படுகிறது. கடத்தல், காணாமலாக்குதல், புதைகுழிகளில் புதைத்தல் போன்ற கொடூர செயல்களுக்கு இந்த பயங்கரவாத தடைச்சட்டம் உதவியுள்ளது. இந்த சட்டத்தால் கைது செய்யப்பட்டவர்களுக்கு கொடூர சித்திரவதைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைகீழாக தொங்கவிடப்பட்டு, செத்தல் மிளகாயை நெருப்பில் போட்டு வெளிவரும் புகையை சுவாசிக்க செய்து ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டதாக குட்டிமணி, ஜெகன், தங்கதுரை மற்றும் நடேசன் ஆகியோர் நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

கொடூர சித்திரவதைகள் ஊடாக பெற்றுக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலம் ஊடாக பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளன. அப்பாவி இளைஞர்கள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பல சித்திரவதைகள் அங்கு இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு சாட்சியங்களாக பலர் இன்றும் வாழ்கிறார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் நீக்கப்பட வேண்டும். இந்த சட்டம் இலங்கை அரசுக்கு கேவலத்தை, அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனநாயக நாடா என்று கேள்வியெழுப்படுகிறது. இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு இந்த சட்டம் தூண்டியுள்ளது. அத்துடன் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாட பயங்கரவாத தடைச்சட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் பிரதான மூன்று உறுப்பினர்கள் கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று எம்முடன் இணைந்து குரல் கொடுத்தார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக கொண்டு வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் பயங்கரமானது என்றும் குறிப்பிட்டார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரிலான சட்டங்கள் இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பயங்கரமானது என்றே குறிப்பிட வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் இலங்கை குடியாட்சி நாடா என்று கேள்வியெழுப்பப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கினோம் என்ற பெருமையை பெற்றுக் கொள்ளுங்கள்.

ஊடக அடக்குமுறை பற்றி குறிப்பிட வேண்டும். கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். ஐயாதுரை நடேசன் என்ற ஊடகவியலாளர் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டார். முறையான விசாரணைகளை மேற்கொண்டால் பல விடயங்கள் வெளிவரும். சிவராம், சுகிர்தராஜா ஆகியோர் விவகாரம் குறித்தும் முறையாக ஆராய வேண்டும் என்றார்.

www.sangathamil.ca

தமிழ் ஊடகவியலாளர் குமணனை அச்சுறுத்தாதே... அநுர அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து சிறீலங்காவின் தலைநகரில் போராட்டம்

22.08.2025

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து சிறீலங்கா பாராளுமன்ற சுற்று வட்டத்துக்கு முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் மற்றும் இளம் ஊடகவியலாளர் சங்கம் என்பன ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தது.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கடந்த 17ஆம் திகதி அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சுமார் 7 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இதனை கண்டித்தும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசாங்கத்தின் அடக்குமுறையை கண்டித்தும் இப்போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டார்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழரின் தாகம் தமிழீழம் தான்; சூழ்நிலைகாரணமாகவே தமிழர்கள் சமஷ்டியைக் கோருகின்றனர்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

22.08.2025

தமிழ்மக்கள் தமிழீழத்தை அடைவதற்கே விரும்புகின்றனர். தற்போதுள்ள சூழ்நிலைகாரணமாகவே சமஷ்டியை எமது தமிழ் மக்கள கோருகின்றார்கள் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் 22.08.2025இன்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் தமிழ்மக்கள் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கோரவில்லை எனகுறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இந்நிலையில் அதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதனின் இக்கருத்தைக் கண்டித்ததுடன், மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இறுதியாக இங்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எமது மக்கள் தமிழீழம் வேண்டுமென்றே கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் வன்னி மாவட்டத்தைச் சார்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிகமகும் பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் எமது தமிழ் மக்கள் தனிநாட்டையோ, சம்ஷ்டித் தீர்வினையோ கேட்கவில்லை எனத் தவறான கருத்தினை இங்கே பதிவுசெய்துள்ளார்.

அவரிடம் யாரும் தனிநாட்டையோ, சமஷ்ட்டியையோ கேட்கவில்லை எனவும் குறிப்பிட்டுப் பேசினார். தமிழ் மக்கள்யாரும் அவரிடம் கேட்கமாட்டார்கள் அரசாங்கத்திடமே கேட்பார்கள். எமது மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனைப் பற்றியும், அவருடைய செயற்பாடுகள் தொடர்பிலும் நன்கு அறிவார்கள் எனவே அவரிடம்போய் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கேட்கமாட்டார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஒரு விடயத்தை இங்கு அழுத்தமாக கூறிவைக்கவிரும்புகின்றேன். எமது தமிழ்மக்கள் எப்போதும் கேட்பது தமிழ் ஈழத்தைத்தான். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலைகாரணமாகவே தமிழ் மக்கள் சமஷ்டியைக் கோருகின்றனர். அவ்வாறிருக்க இங்கு வந்து பிழையான கருத்துக்களை பதிவுசெய்வதை ஒரு போதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார்.

சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்துக்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான – கௌரவமான வாழ்வில் காதல்கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

நீண்டகால இனப்பிரச்சினையில் தெளிவான நடவடிக்கை அநுர அரசு எடுக்க வேண்டும்

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

22.08.2025

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை நிறைவு செய்ய வுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற் கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி வெளிப்படையாக குறிப்பிடவில்லை. கடந்த கால ஆட் சியாளர்களை போன்று தற்போதைய ஜனாதிபதியும் செயற்பட கூடாது. கடந்த தீர்வு திட்டங்களை மக்கள் விடுதலை முன் னணி தான் எதிர்த்தது. எதிர்த்தவர்களே தீர்வு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே காத்திரமான நடவடிக்கைகளை பகிரங் கமாக அறிவியுங்கள். பேச்சுவார்த்தையின் ஊடாக தீர்வு காண தயாராகவே உள்ளோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் வலியுறுத் தினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (22) நடைபெற்ற அமர் வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன் வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணையை கொண்டு வந்துள் ளேன். இலங்கையில் வாழும் சுதேசிய இனத்தவர்களான தமிழ் தேசிய மக்கள் நீண்டகாலம் எதிர்கொண்டு வரும் அன் றாட பிரச்சினைகள் தொடர்பில் இப்பிரேரணையை முன்வைக் கிறேன்.

தேசிய இனப்பிரச்சினைக்கு கௌரவமான நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை எட்டுவதற்கும், அதிகார பகிர்வுக் கான பேச்சுவார்த்தை கதவுகளை திறப்பதற்கும், கடந்த எட்டு ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச் சட்டம் ஊடாக கைதுகளும், ஊடகவியலாளர்கள் மற்றும் சுயா தீன செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மலை யக மக்கள் எதிர்கொள்ளும் காணி, வீட்டுரிமைக்கான கடந்த கால தீர்வு முயற்சிகள் இன்றும். இழுபறிநிலையில் உள்ளன. இந்த பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு கிடைக்க வில்லை.

இந்த நாட்டில் தமிழ் தேசிய இனம், சிங்கள தேசிய இனம் என்று இரண்டு தேசிய இனங்கள் உள்ளன. தேசிய இனங்களுக் கிடையிலான நீண்டகால பிரச்சினைகள் சுமார் 80 ஆண்டு காலமாக நிலைத்திருக்கின்றன. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்மாதிரியான நடவடிக்கைகள் ஏதும் இது வரையில் எடுக்கப்படவில்லை. 1957 ஆம் ஆண்டு பண்டா செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி - செல்வா ஒப்பந்தமும் இந்த நாட் டில் கிழித்தெறியப்பட்டன. இவை அடிப்படை தீர்வாக முன்வைக் கப்படவில்லை.

தமிழ் அரசியல் தலைவர்கள் நீதியான முறையில் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கைகள், பிரேரணைகள் கிடப்பில் போடப்பட்டன. ஒரு அரசியல் தீர்வுக்கான முக்கிய அடித்தளத்தையிட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு 38 ஆண்டுகளை கடந்துள்ளது. இருப்பினும் இந்த ஒப்பந்தம் படுக் கையில் கிடக்கும் நோயாளி போன்றே இன்றும் உள்ளது. எவ் வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அரசியல் தீர்வுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்த மான இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்றும் இழுபறி நிலை யில் உள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சியில் மங்கள முனசிங்க தெரிவுகுழு யோசனைகள் முன் வைக்கப்பட்டன. இந்த யோசனைகள் பேசப்பட்ட காலத்தில் எவ் வித தீர்வுகளும் எடுக்கப்படவில்லை.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை இந்திய ஒப்பந்தம், மங்கள முனசிங்க தெரிவுக்குழு யோசனைகள் உட்பட அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995-1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட தீர்வு ஆலோசனைகளின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் பாராளுமன்றத்துக்கு சட்டமூலமாக தீர்வு ஆலொசனை யாக "பிராந்திய கூட்டு" சமர்ப்பிக்கப்பட்டது. இதுவும் காலவோட் டத்தில் மறக்கடிக்கப்பட்டது. சிங்கள தலைவர்கள் இந்த திட்டங்களை கடுமையாக எதிர்த்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலப்பகுதியில் ஒஸ்லோ மற்றும் டோக்கியோவில் வெளியிடப்பட்ட பிரகடனங்கள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக் கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு, பல்லின நிபுணர் குழு அதிகார பகிர்வுக்கு 13 பிளஸ் என்பதை வலியுறுத்தின.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தை நிறைவு செய் யவுள்ள நிலையில் 80 ஆண்டுகள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் எவ்வித நடவடிக் கைகளையும் மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் 7 தடவைகள் விசேட உரையாற்றியுள்ளார்.

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மூலோபாயம் மற்றும் அதற்கான ஆரம்பக்கட்ட நட வடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி வெளிப்படையாக குறிப்பிடவில்லை.

ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தாய் கட்சி கடந்த காலங்களில் பாரிய போராட்டங்களை எதிர்கொண்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் 62 ஆயிரம் பேர் உயிரிழந் துள்ளார்கள். ஆகவே போராட்டங்களின் விளைவுகளை அவர்கள் நன்கு அறிவார்கள்.

இந்த சித்திரவதைகளை நாங்களும் எதிர்கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக பாரிய போராட்டத்தில் ஈடு பட்டார்கள். இழப்புக்கள் மாத்திரமே மிகுதியாகின. யுத்தம் முடி வடைந்ததன் பின்னரும் தமிழ் மக்களின் உடல்கள் பல்வேறு இடங்களில் கண்டறியப்படுகின்றன. தேசிய விடுதலைக்காக ஆயுதமேந்திய போராட்டம் .ஜனநாயக போராட்டங்கள், அர சியல் போராட்டங்கள் ஆயுத முனையில் நசுக்கப்பட்டதால் எம்மக்கள் ஆயுதமேந்தினார்கள்.

இதனை சுட்டிக்காட்டி மேதகு பிரபாகரன் "ஜே.ஆர் ஜயவர்தன சரியான பௌத்தராக செயற்பட்டிருந்தால் நாங்கள் ஆயுதமேந் தும் நிலை ஏற்பட்டிருக்காது" என்று குறிப்பிட்டிருந்தார். 1952 ஆம் ஆண்டு எமது தமிழ் தலைவர்கள் காலி முகத்திடலில் அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்ட போது இராணுவம், பொலிஸ் மற்றும் குண்டர்களை கொண்டு எமது தலைவர்கள் தாக்கப்பட்டார்கள்.

இதன் பின்னரே எமது அறவழி போராட்டங்கள் நசுக்கப்பட்டன. நாங்கள் உங்களிடம் சவா ல்விடவில்லை. ஏட்டிக்குப் போட்டியாக செயற்படவில்லை. எம்மை சமமாக கொண்டு அரசியல் தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

தேசிய இனத்துடனான அடையாளத்துடன் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறோம். இந்த நாட்டில் பூர்வீக மாக தமி ழர்கள் வாழ்ந்துள்ளார்கள். இயக்கர், நாகர்கள் வாழ்ந்துள்

ளார்கள். நாங்கள் இறையான்மையுடன் வாழ்ந்துள்ளோம். இந்த இறையான்மை சிங்கள வல்லாதிக்கத்தில் இன்றும் உள்ளது. இனப்பிரச்சினைக்கு தீர்வினையே நாங்கள் கோருகி றோம். ஒன்றுப்பட்ட, தூய்மையான மற்றும் வளமான இலங் கையை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ் வாறாயின் ஏன் எம்மையும் தேசிய இனமாக இணைத்து பிரச் சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுக்க வில்லை.

இலங்கை முன்னேற்றமடைய வேண்டுமாயின் அச்சமின்றிய வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். சமாதானத் துக்கான கதவுகளை திறங்கள். கலந்துரையாடுவதற்கு தமிழ் தலைமைகள் தயாராகவுள்ளோம். எம் மக்களை யார் கொன்று குவித்தார்களோ, அவர்களிடமே விசாரணைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. குற்றம் புரிந்தவர்களே நீதிபதிகளாக இருக்கையில் எவ்வாறு உள்ளக பொறிமுறை ஊடாக நீதி கிடைக்கும்.

யாழ்ப்பாணம் செம்மணியில் கண்டுப்பிடிக்கப்படும் மனித எலும் புகூடுகள் தமிழர்களுடையது என்பது உறுதியாகியுள்ளது. இயற்கை என்றும் தவறு விடுவதில்லை. இந்த சித்துப்பாத்தி எலும்புகூடுகளை இயற்கையே காட்டிக்கொடுத்தது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு பல கடிதங்களை அனுப்பி வைத்துள் ளேன். இந்த கடிதங்களை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தின் செயற்பாடுகள், அடக் குமுறைகள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துரைத்துள்ளேன். அண்மையில் முத்தையன்கட்டு பகுதி யில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மனி தர்கள் தவறிழைக்கலாம். ஆனால் அடித்து கொலை செய் வதற்கு இராணுவத்துக்கு யார் அனுமதியளித்தது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடன் தீர்வு காண வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட போதும் எதிர்ப்பு தெரிவித்தீர்கள், 2000 ஆம் ஆண்டு வடக்குகிழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததும் நீங்கள் வடக்கு கிழக்கை பிரித்தீர்கள். ஆகவே பிரச்சினைகள் உங்களிடம் உள்ளது. கடந்த கால தீர்வுகளை இல்லாதொழிக்க மக்கள் விடுதலை முன்னின்று செயற்பட்டது. ஆகவே தற்போது புதிய முகம் கொண்டுள்ளீர்கள். ஆகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுங்கள்.

வரலாறு மீண்டும் ஒரு அரிய வாய்ப்பினை உங்களுக்கு வழங் கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் விட்ட தவறை இந்த ஜனாதிபதி புரியமாட்டார் என்று எண்ணுகிறோம். கடந்த கால தலைவர்களை இந்த மண் மந்தை போன்று தற்போதைய ஜனாதிபதியையும் எவரும் மறக்க கூடாது.

ஆகவே வரலாற்றில் ஒரு அடையாளமாக அரசியல் தீர்வு காணுங்கள், காத்திரமான நடவடிக்கைகளை எடுங்கள். தீர்வு திட்டங்கள் என்னவென்பதை அறிவியுங்கள். இந்த பிரேரணை ஊடாக ஒரு புதிய வழி பிறக்கும் என்று கருதுகிறேன் என்றார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

அரசாங்கம் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

22.08.2025

அரசாங்கம் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல. அது தொடர்பில் கலந்துரையாடல் என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கூறும் வரையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அரசாங்கம் வித்தியாசமானது என்ற அடிப்படை நம்பிக்கை யாவது வளர்க்க தொடங்குங்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (22) நடைபெற்ற அமர்வின் போது வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

இலங்கை தமிழரசுக் கட்சியானது 1949ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து சமஷ்டி என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வரும் கட்சியாகும். ஆனால் இந்தப் பிரேரணையில் தமிழரின் இனப்பிரச்சினக்கான தீர்வு தொடர்பான சமஷ்டி என்ற கருத்து வலியுறுத்தப்படவில்லை.

அண்மைக்காலமாக தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளதாகவே எங்களின் குற்றச்சாட்டு உள்ளது.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவ்வாறான குற்றச்சாட்டை குறிப்பிடக்கூடியவர் அல்ல. எனினும் இந்தப் பிரேரணையானது அந்தக் கொள்கையை தவிர்த்திருப்பது எங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கின்றது.

கடந்த தேர்தலில் சமஷ்டிக்கும் மற்றும் பொறுப்புக்கூறலில் சர்வதேச விசாரணைக்காகவே ஆணையை பெற்றது. ஆனால் சர்வதேச விசாரணையும் இந்தப் பிரேரணையில் தவிர்க்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை கொடுக்கின்றது.

ஏன் இதனை குறிப்பிடுகின்றேன் என்றால் இந்த அரசாங்கம் பக்கச்சார்பற்ற விசாரணையை நாங்கள் செய்வோம் என்றே கூறுகின்றது. கடந்த 70 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தின்படி இலங்கையின் இனப்பிரச்சினை இனவாதத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்று அரசாங்கமே கூறுகின்றது. அப்படியெனில் கடந்த 76 வருடங்களாக இயங்கிய அரச கட்டமைப்பில் தமிழர்கள் நம்பிக்கை வைக்க முடியுமா?

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் கடந்த வாரத்தில் குமணன் என்ற ஊடகவியலாளர் அழைக்கப்பட்டு அவரிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இராணுவம் கொலைகளை செய்கின்றது.

இந்த அரசாங்கத்திலேயே இது நடக்கின்றது. இந்த அரசாங்கம் அந்த மனோநிலையில் இல்லை என்று கூறினாலும் அது நடப்பதற்கான காரணங்கள் உள்ளன.

அந்த மாற்றங்களை செய்வதற்கு இந்த அரசாங்கம் நேர்மையாக செயற்பட தயாராக இருந்தாலும் இந்த அரசாங்கம் நிரந்தரமாக இங்கிருக்கப் போவதில்லை. ஜனநாயகத்தை கடைபிடிக்கும் அரசாங்கமாக இருந்தால் அரசாங்கம் மாறும். இருந்தவர்கள் இனவாதிகள் என்று இவர்களே கூறுகின்றனர்.

கடந்த 76 வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு எப்படி கிடைக்கும். ஜே.வி.பி அல்லது என்.பி.பியை நிரந்தரமாக ஆட்சியில் வைப்பதன் ஊடாக மட்டுமே அதனை செய்யலாம்.

தமிழ் மக்கள் கண்மூடிக்கொண்டு அவர்களுக்கு வாக்களித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதா தீர்வு. தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைக்காதா? யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு இனவாதம் பாயாது, பயங்கரவாத தடைச் சட்டம் பாயாது என்ற பாதுகாப்பு அவசியமல்லவா.

எமது தேச அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்றால் அந்த தேச அடையாளத்தை அங்கீகரித்து நாங்களும் இந்த தேசத்தில் நிரந்தரமானவர்கள் என்பதனை அங்கீகரிப்பதில் என்ன தவறு உள்ளது. எனது சொந்த வீட்டில் என்னுடைய பிரச்சினையை கையாழுவதில் என்ன பிரச்சினை உள்ளது.

நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றோம். ஏன் அனை மறுக்கின்றீர்கள். உங்களின் வாயால் அந்த வாக்குறுதியை வழங்காமல் இருக்கின்றீர்கள். இதனை இந்த அரசாங்கம் செய்வதற்கு தயாராக இல்லை.

கடந்த 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயன்படுத்திய அதே சொற்பதற்களை இந்த அரசாங்கம் பயன்படுத்த முடியாது. ஆனால் அதுதான் இன்னும் நடக்கின்றது. இங்கு தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதில் என்ன தவறு?

தமிழ் மக்களுக்கு தமது உரித்த இடத்தில் அங்கீகாரத்தை வழங்கி அவர்கள் ஆளக்கூடியதை உறுதிப்படுத்துவதில் என்ன பிரச்சினை உள்ளது. நாங்கள் வேறுபட்டவர்கள் என்பதை அங்கீகரிப்பதில் என்ன பிரச்சினை. இதன்மூலம் ஒற்றுமையை உருவாக்காதா? கடந்த 76 வருடங்களாக இலங்கையர்கள் என்ற போர்வையில் சிங்கள பௌத்தம் மட்டுமே ஆட்சி செய்தது.

நிரந்தர பெரும்பான்மை இனத்தின் நலன்களை மட்டும் கடைபிடித்த வரலாறுதான் உண்டு. இதனை நீங்கள் 5 வருடங்களில் மாற்ற முடியாது. நீங்கள் எத்தனை வருடங்கள் இருந்தாலும் ஜனநாயக ரீதியில் ஒருநாளில் உங்களின் ஆட்சி விழத்தான் போகின்றது.

வருகின்றவர்கள் பழையபடி நடந்துகொண்டால் தமிழ் மக்களின் நிலைமை என்ன? இதனை அரசியலமைப்பின் ஊடாக அங்கீகரிக்க கோருவது இனவாதமா? இது தவறா?

தென்னிலங்கை மக்கள் கடந்த 76 வருடங்களாக நடந்த அரசியலை கைவிட்டுள்ளனர். அதனால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். அந்த நிமிடத்தை நாங்கள் கைவிடக்கூடாது. இது திரும்பவும் வரப்போவதில்லை. உங்களுக்கு அந்த சந்தர்ப்பம் உண்டு. உங்களை முற்றிலும் வித்தியாசமான தரப்பாக சிங்கள மக்கள் பார்க்கின்றனர்.

இவ்வளவு காலங்களிலும் இனவாதிகள் என்று நீங்களே குறிப்பிடுபவர்கள் கடந்த காலங்களில் செய்தவை அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துவதில் சிங்கள மக்கள் உள்ளனர்.

இதனால் உங்களுக்கு ஒரு கடமை உள்ளது. அதாவது தமிழ் மக்கள் கூறும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

நீங்கள் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை நீங்கள் கூற வேண்டும். அந்த விவாதத்தை வெளிப்படையாக நடத்தலாம் என்று நீங்கள் கூறலாம். 76 வருடங்களாக சிங்கள மக்களுக்கு கூறிய பொய்களை இன்றும் நீங்கள் திருத்தாமல் இருக்கின்றீர்கள்.

இங்கேதான் எங்களுக்கு சந்தேகங்கள் எழுகின்றன. ஒற்றையாட்சித்தான் விருப்பம் என்று நீங்கள் கூறினாலும் தமிழர்கள் கூறும் சமஷ்டி பிரிவினை இல்லை. உலகததில் முன்னேறியுள்ள நாடுகள் கடைபிடிக்கின்ற கொள்கை அதனையும் நாங்கள் விவாதிக்கலாம் பேசலாம் என்ற உண்மையை கூறுங்கள்.

இப்போது நீங்கள் உண்மையில் திருந்திவிட்டீர்கள். உங்களுடைய அரசாங்கம் மற்றையவர்கள் போலல்ல. நீங்கள் வித்தியாசமானவர்கள் என்ற அடிப்படை நம்பிக்கையாவது வளரத் தொடங்கும். அதுவரையிலும் அந்த நம்பிக்கை வருவது என்பது மிகவும் கடினமான விடயமே என்றார்.



சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

காணி, பொலிஸ் அதிகாரங்களை எப்போது மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்போகின்றீர்கள்?

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

23.08.2025

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெனவும் தொன்றுதொட்டு தமிழர் வாழ்ந்துவந்த நிலப்பரப்பெனவும் குறிப்பிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இணைந்த வடகிழக்கில் சமஸ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வையே நெடுங்காலமாக வலியுறுத்திவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அதிகாரப்பகிர்வு நோக்குடன் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை இவ்வரசு முழுமையாக எப்போது நடைமுறைப்படுத்தப்போகின்றதெனவும், காவல்துறை மற்றும் நில உரிமைகளை மாகாணசபைகளுக்கு எப்போது இவ்வரசு வழங்கப்போகிறதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் 23.08.2025 நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பேரவையை தலைமை தாங்கும் கௌரவ உறுப்பினர் அவர்களே, காலனித்துவ ஆட்சியானது ஒற்றையாட்சி அரசியலை இத்தீவிலே கையளித்த நாள் தொடக்கம் இன்று வரை தமிழ் இனத்தின் பண்புகள் பல்வேறு வழிகளில் சிதைக்கப்பட்டு தொடர்ந்தும் தேசிய இருப்புக்காக, நிலையான அரசியல் தீர்வுக்காக காலவெளியில் பல வடிவங்களில் தமிழர்களாகிய நாம் போராடி வருகிறோம்.

2009 இற்கு முன்னர் இராணுவ வல்லாளுகையாலும் போருக்குப் பின்னர் கட்டமைக்கப்பட்ட நுட்பங்கள் கொண்ட மெல்லாளுகையாலும் தமிழர் மீதான அடக்குமுறைகளை, அதிகாரப் பறிப்புகளை தமிழர் தாயகப்பரப்புகளில் இத்தீவின் அரசுகள் தொடர்ந்தும் மேற்கொண்டு, பௌத்த சிங்கள சாயத்தை தீவு முழுவதும் பரப்ப எத்தனித்துக்கொண்டே இருக்கிறது.

எண்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது அரசியல், பொருளாதார, கலாசார உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, நீளும் இந்த காலவெளியில் தீவிலுள்ள பன்முகத்தன்மையை நிலைநிறுத்த இன்றுவரையான இத்தீவின் அரசுகள் முயலவில்லை. ஒற்றுமைக்கான எத்தனிப்புகள் இழுத்தடிப்புகளாகின்றன.

இனக்கலவரங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் கட்டமைக்கப்பட்ட வழியில் தமிழினத்தின் பண்புக்கூறுகள் அழிக்கப்படுவதற்கும் எதிராக தொடர்ந்தும் நாம் போராடிக்கொண்டே வருகிறோம்.

கடந்து வந்த அரசுகள் நிலம் வழியாக இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைத்தன.

பௌத்தர்கள் இல்லாத வாழிடங்களில், தனியார் காணிகளை கையகப்படுத்தி, சைவ ஆலய முற்றங்களை கையகப்படுத்தி, நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பௌத்த மத அடையாளங்களை நிறுவின.

அபிவிருத்தியின் போர்வையில் பல்வேறு திட்டங்களின் ஊடாக தமிழர் காணிகள் கையகப்படுத்தப்பட்டு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறாக தமிழர் தாயகப்பரப்பில் தமிழரின் பெரும்பான்மை கட்டமைக்கப்பட்டு சிதைக்கப்படுகின்றது.

போருக்குப் பின்னரும் அதிகளவான இராணுவம் வடகிழக்கில் நிலைகொள்கிறது. இன்று வரை ஆயிரக்கணக்கான ஏக்கர் தமிழர் காணி, இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ளது. முல்லைத்தீவில் மட்டும் எமது மக்களுக்குச் சொந்தமான 5 இலட்சம் ஏக்கர் காணிகள் வரையில் அபகரிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாது உள்ளன. அதற்கான ஆதாரமும் என்னிடத்திலுண்டு. சமச்சீரற்ற முறையிலான வடகிழக்கின் இராணுவக் குவிப்பு தீவின் நல்லிணக்கத்தைத் தடுக்கிறது. தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் வாழ முடியாமல் தவிக்கின்றனர். மக்களின் நிலங்களை உடனடியாக திருப்பி வழங்க வேண்டியதும் வடகிழக்கில் அதிகரித்த இராணுவப்பிரசன்னத்தை உடனடியாக அகற்றுவதும் இவ்வரசின் கடன்.

வடகிழக்கு தமிழர் தாயகம். தொன்றுதொட்டு தமிழர் வாழ்ந்து வந்த நிலப்பரப்பு. இணைந்த வடகிழக்கில் சமஸ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வை வலியுறுத்தியே எங்கள் அரசியலை நெடுங்காலமாக இம்மண்ணில் தொடர்கிறோம். 13ஆவது திருத்தச்சட்டத்தை இவ்வரசு முழுமையாக எப்போது நடை

முறைப்படுத்தப்போகிறது? காவல்துறை மற்றும் நில உரிமைகளை மாகாணசபைகளுக்கு எப்போது இவ்வரசு வழங்கப் போகிறது?

அபிவிருத்தியில் வடக்கும் கிழக்கும் இன்றளவும் பின்னடைவிலேயே உள்ளது. மிகவும் கடைசி நிலை மாவட்டங்களாகவே முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்கள் காணப்படுகின்றன. சமத்துவ அடிப்படையிலான அபிவிருத்தியை நிலைநிறுத்தவேண்டுமாயின் அபிவிருத்தி நிலைகள் சமநிலை அடையப்படும் வரை நிதி ஒதுக்கீடுகளை இங்கு பெருக்கிக்கொள்ளவேண்டும்.

அதிகஸ்ட பாடசாலைகள், கஸ்ட மருத்துவமனைகள், தீயணைப்புப்பிரிவுகள் இன்மை, பல்கலைக்கழக வளாகங்கள் இன்மை, வறுமையில் முதலிடம், ஒப்பீட்டளவில் சுற்றுலாவில் 1% இனையேனும் அடைந்திராத கடைநிலை என்று பல வழிகளிலும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட மாவட்டங்களாக மன்னார், முல்லைத்தீவு அடங்கலான வடகிழக்கு மாவட்டங்கள் உள்ளன.

போருக்குப்பின்னர் ஒன்றரை தசாப்தம் கடந்தும் வடகிழக்கு, தீவில் சமப்படாதநிலையில் உள்ளது. இவற்றை சீர்செய்யும் பொருட்டு பொருளாதார மேம்பாட்டு அதிகார சபையை நிறுவும் வகையில் கொள்கை அளவில் ஒரு மேம்பாட்டை உடன் கொண்டு வாருங்கள் என வலியுறுத்துகிறேன் - என்றார்.

ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து "நீதியின் ஓலம்" கையொப்பப் போராட்டம் இன்று யாழ். செம்மணியில் ஆரம்பம்

23.08.2025

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தியே இந்த "நீதியின் ஓலம்" எனும் கையொப்பப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த போராட்டம் இன்று காலை 10.00 மணியளவில் மாணவி கிருசாந்தி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய செம்மணி பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த உறவுகளை நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு நினைவுச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தி ஆரம்பமான குறித்த நிகழ்வில் நிகழ்வின் வடக்கின் ஏற்பாடுக் குழு இணைப்பாளர் ஜெயசித்திரா போராட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கையெழுத்து பெறும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்படும் இந்தக் கையொப்பப் போராட்டத்தினூடாக இது வரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

1996இல் அரியாலையில் காணமல்போன சகலரையும் 07ஆம் இராணுவக் காலாட்படை உயரதிகாரிகளே கைதுசெய்தனர்

மரண தண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ

24.08.2025

யாழ். அரியாலையில் 'சம்பத்' எனும் பெயரில் குறிப்பிடத்தக் களவு காலம் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டிலே அரியாலை பிரதேசத்தில் காணாமல்போன சகல நபர்களும் 07 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைதுசெய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவேன் என கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அத்தோடு இவ்விடயங்கள் தொடர்பில் சத்தியக்கடதாசி வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர்பில் இவ்விடயங்களை முன்வைக்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அரியாலையில் பணியாற்றிய சோமரத்ன ராஜபக்ஷ எனும் நான், அப்பகுதிவாழ் மக்களால் 'சம்பத்' என்ற பெயரிலேயே அறியப்பட்டேன். அப்பகுதியில் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டளவில் அரியாலை பிரதேசத்தில் காணாமல்போன சகல நபர்களும் 07 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைதுசெய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதற்கு நான் தயாராக இருப்பதுடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நான் இவ்விடயங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுமாறும், இவற்றை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும், அண்மையில் கண்டறியப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் சுமார் 150 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் 1996 ஆம் ஆண்டளவில் செம்மணி முகாம் - துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ செய்திருக்கும் முக்கிய வெளிப்படுத்தல்களின் இரண்டாம் பகுதி வருமாறு:

1996 ஆம் ஆண்டளவில் யாழ். கைதடி பகுதியைச்சேர்ந்த இரண்டு பெண்கள் (அவர்களது பாதுகாப்புக்கருதி பெயர்கள் வெளியிடப்படவில்லை) செம்மணியில் கைதுசெய்யப்பட்டு, அன்றைய தினம் இரவு 07 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். இருப்பினும் அவர்கள் இருவரும் கொல்லப்படாத வகையில், செம்மணி சோதனைச்சாவடிக்கு அழைத்துச்சென்று, அங்கிருந்து அவர்களை விடுவிப்பதற்கு நான் உதவினேன்.

அதேபோன்று அரியாலை பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு பெண்ணையும் (பாதுகாப்புக்கருதி பெயர் குறிப்பிடப்படவில்லை) நான் தலையிட்டு விடுவித்தேன். இவ்வாறு என்னால் காப்பாற்றப்பட்டவர்கள் இப்போது எங்கேனும் இருப்பார்களாயின், அவர்கள் முன்வந்து அந்த உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமன்றி அரியாலையைச் சேர்ந்த ஆண் ஒருவர் (பாதுகாப்புக்கருதி பெயர் குறிப்பிடப்படவில்லை) சுண்டி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்திலும் நான் தலையிட்டு, அவரை விடுவித்தேன்.

அக்காலப்பகுதியில் அரியாலையில் பணியாற்றிய சோமரத்ன ராஜபக்ஷ எனும் நான், அப்பகுதிவாழ் மக்களால் 'சம்பத்' என்ற பெயரிலேயே அறியப்பட்டேன். அப்பகுதியில் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டளவில் அரியாலை பிரதேசத்தில் காணாமல்போன சகல நபர்களும் 07 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைதுசெய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதற்கு நான் தயாராக இருப்பதுடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நான் இவ்விடயங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுமாறும், இவற்றை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் சத்தியக்கடதாசி வழங்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

சிறீலங்கா இராணுவ பிரசன்னத்திற்கு எதிராக பருத்தித்துறையில் கவனயீர்ப்பு போராட்டம்!

25.08.2025

சிறீலங்கா இராணுவ பிரசன்னம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பருத்தித்துறையில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் அலுவலகத்துக்கு தனியார் ஒருவரினால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணி. பருத்தித்துறை நீதிமன்றத்துக்கான காணி. பருத்தித்துறை நகரசபைக்கு சொந்தமான காணி. பருத்தித்துறை பிரதேச.நோ.கூ.சங்கத்துக்கு சொந்தமான காணிகளை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகத்துக்கு முன்னால் இராணுவமுகாம் பருத்தித்துறை வெளிச்சவீட்டினை ஆக்கிரமித்து கடற்படையும் முகாம் அமைந்துள்ள காணிகளை விடுவிக்ககோரி இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பருத்தித்துறை துறைமுகத்தடியில் இருந்து காலை 8:30 மணியளவில் பேரணியை ஆரம்பித்து, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் வரை சென்று அங்கு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பருத்தித்துறை நகரை மீட்போம் எனும் தொனிப்பொருளில் இந்த பேரணி மற்றும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

நீண்ட காலமாக இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறை தபால் அலுவலகத்தை விடுவிக்க வேண்டும், பருத்தித்துறை நகரின் வரலாற்று சிறப்புமிக்க வெளிச்ச வீட்டில் இருக்கும் இராணுவத்தினர் வெளியேற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றவர்களால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்வுகள் உடனடியாக கிடைக்காத பட்சத்தில் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மன்னன் மாவீரன் பண்டார வன்னியன் முல்லைத்தீவு கோட்டையைக் கைப்பற்றி வெற்றி பெற்ற 222 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பெயர்ப்பலகை திரை நீக்கம்

25.08.2025

தமிழ் மன்னன் மாவீரன் பண்டார வன்னியன், முல்லைத்தீவு கோட்டையை கைப்பற்றி வெற்றி பெற்ற 222 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப் பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த முல்லைத்தீவு கோட்டை, அந்நியப் படையெடுப்புகளை எதிர்த்து வீரமுடன் போராடிய தேசிய வீரர் பண்டார வன்னியன் தலைமையிலான படைகளால் 1803 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இந்நிகழ்வு இடம்பெற்று 222 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இன்றய நாள் மாவட்ட செயலாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மேற்படி பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) திரு.சி. குணபாலன் , மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) திரு.ஜெயகாந், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திரு. சற்குணேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ஜி.ஜெயரஞ்சினி உட்பட மாவட்ட செயலக அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலக வளாகத்தில் தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படும் முல்லைத்தீவு கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டை ஆகும். 1715 ஆம் ஆண்டில் மரத்தாலும் மர வேலிகளாலும் இக்கோட்டை நிறுவப்பட்டது. 1721 ஆம் ஆண்டில் நாற்பக்கல் வடிவில் இக்கோட்டை ஒல்லாந்தரால் கட்டப் பட்டது.

பின்னர், பிரித்தானியரால் இக்கோட்டை 1795 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டது. 25 ஆகஸ்ட் 1803 இல் பண்டார வன்னியனால் இக்கோட்டை கைப்பற்றப்பட்டு இடிக்கப்பட்டது. குறிப்பிடத் தக்கது.

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

இராணுவப் பிடியிலுள்ள நிலத்தினை விடுவிப்பதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை!

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

25.08.2025

மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிப்பதில் போதிய ஆர்வம் கொள்ளவில்லை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றச்சாட்டினார்.

பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் போல் டக்கிளஸின் அழைப்பில், இராணுவத்தினரை பொது இடங்களில் இருந்து அகற்றுவதற்கான போராட்டம் பருத்தித்துறை நகரில் இடம் பெற்றது. இப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவுறுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எம்மை மீண்டும் மீண்டும் ஏமாற்றி வருகின்றன.

மக்களின் நிலம் மக்களுக்குச் சொந்தமானது என்ற தேர்தல் பிரச்சாரத்துடன் ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கமும் தமிழ் மக்கள் விடயத்தில் எந்த உத்தரவாதத்தினையும் நிறைவேற்றவில்லை.

பலாலியில் வீதியை விடுவித்துவிட்டு நடமாடும் சுதந்திரத்திற்கு தடை போடுகின்றனர். அங்கு மக்களின் நடமாடும் சுதந்திரத்தின் மீது மட்டுப்பாடுகளை விதித்து அறிவித்தல் செய்தவர்கள் இராணுவத்தினர்.

ஆகவே இராணுவத்திற்கு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கான சட்டங்களை இயற்றுவதற்கான உத்தியோகப்பற்றற்ற அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கிற்கு வெளியே உரிய வர்த்தமானி அறிவித்தல்கள் வாயிலாகவே உயர்பாதுகாப்பு வலய மட்டுப்பாடுகள் உள்ளன. எனினும் வடக்குக் கிழக்கில் தமிழர் பூர்வீக நிலங்களில் இராணுவச் சட்டங்களும் அணுகுமுறைகளும் காணப்படுகின்றன.

நாங்கள் வெளிப்படையாகவே எமது நிலம் எமக்கு வேண்டும் இராணுவமே வெளியேறு என்கின்றோம். எவ்வித நியாயப்பாடுகளும் இன்றி தமிழ் மக்களின் தனியார் காணிகளிலும் நிர்வாகம் சார்ந்த மற்றும் பொதுத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களிலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

தையிட்டி உள்ளிட்ட காணிகளின் மக்கள் வீதியில் போராடுகின்றபோதும் அவற்றுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. எனவே தாமதம் இன்றி இராணுவத்தினரை வெளியேற்றி தமிழ் மக்களின் வாழ்வுரிமையை உறுப்படுத்த வேண்டும் என்றார்.

யாழ். செம்மணியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள்...!

25.08.2025

யாழ். செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் இன்று (25) முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், கடந்த 06 ஆம் திகதி வரையில் 32 நாட்கள் முன்னெடுக்ககப்பட்ட நிலையில், பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் 33 ஆவது நாளான இன்றைய நாள் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் ஆரம்பமானது.

ஏற்கனவே இருந்த அகழ்வு தளங்களை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாளை (26) பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை கடந்த 06 ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 150 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவை முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, மேலும் அகழ்வு பணிகள் முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் அதற்கான நடவடிக்

கைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ள நிலையில் அதற்கான பாதீடுகளை தயாரிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

செம்மணி புதைகுழியின் சூத்திரதாரிகளில் ஒருவரான பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தனவை இராணுவ தலைமையகப் பணிப்பாளராக அநுரா குமார திஸநாயக்க அரசு நியமித்திருக்கின்றது

25.08.2025

செம்மணி புதைகுழி சூத்திரதாரிகளில் ஒருவரான பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தனவை (Sachindra Wijesiriwardane- இராணுவ இலக்கம் 62421) இராணுவ தலைமையக Directorate of Movement யின் 34 வது பணிப்பாளராக திரு அனுரா குமார திஸநாயக்க நியமித்திருக்கின்றார்.

செம்மணி புதைகுழி தொடர்பாக மார்ச் 13, 2000 அன்று, கைது செய்யப்பட்ட பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன யாழ்ப்பாண நீதிமன்றந்தால் (வழக்கு எண் B 28/99) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

அதாவது செம்மணி புதைகுழி மற்றும் பாலியல் வன்கொடுமைகள், கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் என லலித் ஹேவா (61834), சசிக பெரேரா (62188), யடகம (63088) ஆகியோரோடு சசிந்திர விஜேசிரிவர்தனவும் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டு இருந்தார்.

ஆனால் அதே ஆண்டு யூலை 06 அன்று கொழும்பில் மேல் முறையீடு செய்ததன் ஊடக (H.C.B.A. 29/2000) பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன உட்பட்டோருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் செம்மணி புதைகுழி வழக்கையும் முற்று முழுமையாகவே முடக்கபட்டிருந்தது.

குறிப்பாக கிரிஷாந்தி படுகொழுலை தண்டனை கைதி சோமரத்தின ராஜபக்சே அடையாளம் காட்டிய இராணுவ அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன செம்மணியில் பணியாற்றிய பொது லெப்டினன்ட் தர அதிகாரியாக பணியிலிருந்தார்.

செம்மணியில் குற்ற செயல்களில் ஈடுபட்ட இலகு காலாட் படைப் பிரிவை சேர்ந்த பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன கைது செய்யப்பட்ட போது கப்டன் தர அதிகாரியாக பணியிலிருந்தார்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் அதிகாரியாக நீண்டகாலம் பணியாற்றிய பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன பனகொட இராணுவ முகாமிலும் பணியில் இருந்ததாக சொல்லப்படு கின்றது.

விசேடமாக 2017 ஆம் ஆண்டு லெப்டினணட் கேணல் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டு இருந்தார் (Effect from 03.05.2011).

அதே போல 2022 ஆம் ஆண்டு கேணல் தர அதிகாரியாக (Effect from 22.11.2018) பதவி உயர்வு பெற்று இருந்தார்.

இது மாத்திரமின்றி கடந்த ஆண்டு பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன அவர்களை பிரிகேடியர் தர நிலைக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு இருந்தார் (Effect from 03.05.2021).

அன்மையில் செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான நீதிமன்ற அமர்வில் பாதிக்கப்பட்டோர் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகளில் ஒருவரான திரு சுமந்திரன் அவர்கள் பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன உட்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்ட வழக்கை (B 28/99) மீண்டும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை முன்வைத்திருந்தார்.

அதே போல பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன உட்பட அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள் வெளிநாடு தப்பி செல்வதை தடுக்க வேண்டும் என கோரிக்கையையும் முன்வைத்திருந்தார்.

ஆனால் ஜேவிபி ஆட்சியாளர்கள் ஒருபுறம் செம்மணி புதைகுழிக்கு நீதி பெற்று தருவதாக வாக்குறுதி அளித்திருக்கும் சம நேரத்தில் மறுபுறம் பிரதான கோரமான செம்மணி புதைகுழியின் பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தனவை இராணுவ தலைமையகத்தில் உயர் பதவியில் நியமித்திருக்கின்றார்கள்.

சட்டம் எல்லோருக்கும் சமன் என பேசும் ஜேவிபி முற்றிலும் எம்மை பேயராக கருதி பேயாட்சி செய்ய முற்படுகின்றார்கள்.

நன்றி: இனமொன்றின் குரல்

மன்னாரில் 23ஆவது நாளாக தொடரும் போராட்டம்

26.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை (25) 23 வது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இசைமாலை தாழ்வு கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஒன்று திறண்டு ஆதரவை வழங்கியுள்ளனர்.

25ஆம் திகதி திங்கட்கிழமை காலை மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் இசைமாலை தாழ்வு கிராம பெண்கள் அமைப்பு உள்ளடங்களாக இசைமாலை தாழ்வு கிராமத்தை சேர்ந்த அனேகமானோர் வருகை தந்து கலந்து கொண்டு தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டம் இன்றைய தினம் திங்கட்கிழமை 23 ஆவது நாளாகவும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த போராட்டமானது காலத்தின் தேவை கருதி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில்,குறித்த போராட்டத்தின் உண்மை நிலையை அறிந்து கொண்டு தாம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும்,தொடர்ந்தும் தமது ஆதரவு இப்போராட்ட குழுவிற்கு கிடைக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

சம்பூர் பகுதியில்மனித எச்சங்களை ஸ்கான் இயந்திரம் கொண்டு ஆய்வு செய்வதற்காக செலவுத் திட்ட வரைவு நீதி மன்றில் சமர்ப்பிப்பு

26.08.2025

சம்பூர் பகுதியில் மேலதிக மனித எச்சங்கள் தொடர்பில் ஸ்கான் இயந்திரம் கொண்டு ஆய்வு செய்வதற்காக சம்பூர் பொலிசாரினால் இன்று செவ்வாய்க்கிழமை (26) செலவுத் திட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டதுடன், மாகாண மேல் நீதிமன்ற அனுமதியுடன் மேலதிக நடவடிக்கைக்காக குறித்த வழக்கானது செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

திருகோணமலை சம்பூர் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட விடயம் தொடர்பான வழக்கானது மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி. தஸ்னீம் பௌசான் முன்னிலையில் இன்றைய தினம் விசாரனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த பகுதியில் மேலதிக மனித எச்சங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சம்பூர் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் உத்திதேச செலவுத் திட்ட வரைவு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திடம் இருக்கின்ற ஜி.பி.ஆர் என்ற ஸ்கான் இயந்திரத்தை கொண்டு குறித்த பகுதியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்வதற்காக சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக காணாமல் போனோர் அலுவலகத்தினால் ஒப்பமிடப்பட்டு குறித்த உத்தேச பட்ஜட் ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

குறித்த செலவுத் திட்ட வரைவு ஆனது மூதூர் மாவட்ட நீதிமன்ற கட்டளையுடன் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மாகாண மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்காக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி குறித்த வழக்கானது தவணையிடப்பட்டுள்ளதாகவும் காணாமல் போனோர் அலுவலகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி எம்.எம்.நஸ்லீம் தெரிவித்தார்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் MAG என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி

அகற்றுவதற்கான அகழ்வுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த யூலை மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் இருந்து சிதைந்த மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதன் பின்னர் மிதிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முத்தையன்கட்டு இளைஞனின் சாவுக்கு காரணமான 04 சிறீலங்கா இராணுவத்தினருக்கு பிணை!

26.08.2025

முத்தையன்கட்டு இளைஞனின் மரணம் தொடர்பான வழக்குடன் தொடர்புடைய நான்கு சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இன்று செவ்வாய்க்கிழமை (26) பிணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு பகுதியில் மர்மமான முறையில் குளக்கரையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் ஒட்டிசுட்டான் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது இன்றைய நாள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 19.08.2025 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட இளைஞன் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகியுள்ள நிலையில் குறித்த வழக்கு 26.08.2025 ம் திகதிக்கு திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணை இன்று (26) முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி எம்.எச். மஹ்ரூஸ் தலைமையில் எடுத்து கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது சட்டத்தரணி கெங்காதரன் தலைமையிலான நான்கு சட்டத்தரணிகள் உயிரிழந்த பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்காக நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

தொடர்ந்து இராணுவத்தினருக்கான பிணை கோரிக்கை இராணுவத்தரப்பு சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் கடும் நிபந்தனைகளின் பின்னர் குறித்த நான்கு இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு இராணுவத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியிலான இரண்டு சரீரப்பிணையில் பிணை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் 30.09.2025 அன்று திகதியிடப்பட்டுள்ளது.

www.sangathamil.ca

யாழ். அரியாலை சித்துப்பாத்தியில் புதிதாக அடையாளப் படுத்தப்பட்ட 16 எலும்புக்கூட்டுத் தொகுதிகள்

26.08.2025

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று (25) ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று (26) இரண்டாம் நாளாகவும் முன்னெடுக் கப்பட்டது.

அதன் போது, ஏற்கனவே அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாய்வு தளங்களை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கை களின் போது புதிதாக 16 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றினை சுத்தம் செய்யப்பட்டுள்ளது. அவற்றினை அகழ்ந்து எடுக்கும் பணிகள் தொடர்ந்து முன் னெடுக்கப்பட்டு வருகிறது.

அவற்றில் சிறுவர்களுடைய என சந்தேகிப்படும் எலும்புக்கூட்டு தொகுதிகளும், ஆடையை ஒத்த துணியும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணி களுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இன்று (26) 34 ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணியில் 16 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை கட்டம் கட்டமாக 42 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 150 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவை முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது.ந

இந்நிலையில் இன்று புதிதாக 16 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச் சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

மன்னார் முள்ளிக்குளத்திலிருந்து கடற்படையினர் வெளியேறி மக்கள் மீள்குடியேற்றப்படுவது எப்போது?

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

26.08.2025

மன்னார் முசலி, பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக் குளத்தில் மக்களின் காணிகளையும், வீடுகளையும் அபகரித் துள்ள கடற்படையினர் அங்கிருந்து வெளியேறி, முள்ளிக்குளம் கிராமமக்கள் எப்போது மீள்குடியேற்றப்படுவார்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனன கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயத்தில் தம்மால் ஆலோசனை பெறு வதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சிடமிருந்து ஆலொ சனை கிடைக்கப்பெற்றவுடன் இந்தவிடயத்தில் தம்மால் நட வடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கடற்படையினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 26.08.2025இன்று இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம்தொடர்பில் நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

முசலி பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்களை மீளக்குடியேற்றுவதுதொடர்பில் தீர்க்கமான முடிவு தேவை.

முள்ளிக்குளம் கிராமமக்களை அவர்களுடைய சொந்த இடத் தில் மீளக்குடியேற்றுவது எப்போது?

தற்போது முள்ளிக்குளத்தில் மக்களின் காணிகளிலும், வீடு களிலும் அத்துமீறித் தங்கியுள்ளனர்.

எனவே மக்களின் காணிகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் கடற் படையினர் வெளியேறவேண்டும். ஆகவே எப்போது கடற்படை யினர் அங்கிருந்து வெளியேறுவார்கள் என்பதுதொடர்பில் பதிலளிக்கவேண்டும்.

இந்தவிடயம்தொடர்பில் இக்கூட்டத்தில் சரியானதொரு முடி வெடுக்கப்படவேண்டும்.

முள்ளிக்குளம் கிராம மக்களை குடியேற்றும் நோக்கமுள்ளதா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டுமென நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது வலியுறுத்தப் பட்டது.

இந்நிலையில் கடற்படையினர் இதன்போது கருத்துத் தெரி விக்கையில்,

இதுதொடர்பாக ஆலோசனை பெறுவதற்கான கடிதம் ஏற் கனவே பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய பதில்கிடைத்தவுடன் உரியநடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுமெனவ கடற்படைத் தரப்பினரால் தெரிவிக்கப் பட்டது.

மேலும் இவ்வாறு கடற்படையினரால் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியை தம்மிடம் கை யளித்தால் தாம் அதுதொடர்பில் கவனஞ்செலுத்துவதாக பிரதி அமைச்சரும் மன்னார்மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப் புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவினால் இதன் போது தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். ஊர்காவற்துறை தொடாக்கம் மண்டைதீவு வரை படுகொலையானவர்களின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல்

26.08.2025

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை தொடக்கம் மண்டைதீவு வரை படுகொலை செய்யப்பட்டவர்களின் 35 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்றைய நாள் செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக ஊர்காவற்துறை பகுதியில் மாலை ஆரம்பமான நிகழ்வுகளை தொடர்ந்து, அராலி சந்தி, மண்கும்பான் பிள்ளை யார் கோவிலடி ஆகிய இடங்களில் நிகழ்வுகள் இடம்பெற்று, இரவு மண்டைதீவில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மண்டைதீவு பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களை மண்டைதீவு முதலாம் வட்டாரம் பகுதியில் உள்ள கிணறொன் றில் போடப்பட்டதாக கூறப்படும் பகுதியில் நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

மூடப்பட்ட கிணற்றுக்கு முன்பாக பிரதான ஈகைச்சுடர் ஏற்றப் பட்டதை தொடர்ந்து, கிணற்றை சுற்றி சுடர் ஏற்றப்பட்டு, மூடப் பட்ட கிணற்றின் மேல் மலர் தூவி வணக்கம் செலுத் தப்பட்டது.

அதனை தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்டவர்களில் இரு வரின் உருவ படங்கள் அவ்விடத்தில் வைக்கப்பட்டு , மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது

தமிழருக்கான நீதியை மறுப்பதற்குமான முன்னேற்பாடே ரணிலின் கைது!

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

27.08.2025

சர்வதேசத்தின் நீதி கண்களில் மண்ணைத் தூவவும், தமிழருக்கான நீதியை மறுப்பதற்கும் ஒரு முன்னேற்பாடான செயற்பாடாகவே முன்னாள் ஜனாதிபதியை கைது செய்துள்ளதாகத் தோன்றுகிறது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று (27) வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“சட்டம், நீதி அனைவருக்கும் சமம். இதில் பதவி, தகுதி, சமூக நிலை பார்க்கப்பட மாட்டாது. குற்றம் புரிந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு சட்டத்திற்கேற்ப தண்டிக்கப்படுவார்கள். இதில் நாம் பின்வாங்க மாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான அனுரகுமார திசாநாயக்க தேசிய பிக்குகள் பேரவை கூட்டத்தில் நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் போர் குற்ற விசாரணை நடைபெறும் குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என ஏற்கனவே கூறியிருந்தமையை நினைக்கும்போது சட்டம், நீதி தொடர்பில் அவரின் இரட்டை நாக்கு நிலைப்பாட்டையும், அரசியல் சித்து விளையாட்டையும் வெளிபடுத்துகிறது. மனுதர்ம சட்டத்தின்படி, இதுவும் குற்றமே. இதுவும் தண்டிக்கப்பட வேண்டியதே.

பௌத்த தர்மத்தின்படி, பிக்குகள் என்போர் பதவி, தகுதி, சமூக நிலை, சொத்து, சுகம் அனைத்தையும் கடந்தவர்கள். சமூகத்தின் அடிப்பட்ட மக்களின் வாழ்வியலோடு பயணிப்பதன் அடையாளமாகவே பிச்சை பாத்திரம் ஏந்தி வாழ்விற்கு முன்னுதாரணம் காட்டுகின்றார்கள். அத்தகையவர்கள் அரச கட்டமைப்பினால் பாதிக்கப்பட்டு சட்டம், நீதி சமம் மறுக்கப்பட்ட ஓய்வுக்காக குரல் கொடுக்க முன்வருவதோடு அதற்கு ஜனாதிபதிக்கும் அவர் இயக்கும் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்குமாறு கேட்கின்றோம்.

சிங்கள பௌத்த படையினருக்கு ஒரு நீதி, அவர்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒரு நீதி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை மாற்றுவதன் மூலமே சட்ட சமத்துவத்தை அனுபவிக்க முடியும். அம்மாற்றத்திற்கு குரல் கொடுக்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

வடக்கில் தையிட்டியில் படையினர் தனியார் காணியை பலவந்தமாக ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடம் அமைத்து, அதனை விகாரையாக்கி வழிபாடு நடத்துவது சட்டத்தின் சமநிலை அவலத்தை நிரூபித்துக் காட்டுகிறது. ஆக்கிரமிப்பு பௌத்தத்தை பாதுகாக்க, அங்கு பிக்கு ஒருவரையும் நியமித்து வழிபாடு எனும் போர்வையில் தமிழர்களின் மனதில், வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதந்தோறும் சட்டவிரோத கூட்டத்தை கூட்டுவது எந்த சட்டத்தின் கீழ் நியாயமாகும். இதனை பிக்குகள் பேரவை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறி காணி பறிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றமையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

அதிகார துஷ்பிரயோகம், ஊழல், மக்கள் பணம் சூறையாடல் தண்டனைக்குரிய குற்றமாக தேசிய மக்கள் சக்தியினர் தினந்தினம் பாராயணம் பாடுவது கேட்கின்றது. அதன் ஓர் அங்கமாக முன்னாள் ஜனாதிபதியை கைது செய்து சிறைச்சாலைக்குள் தள்ளி வழக்கு தொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே. அதே போன்று வடக்கில் தையிட்டில் அமைந்துள்ள தீர்த்த விகாரையும் அதிகார துஷ்பிரயோகம், பணம் கையாடல், தமிழ் சிந்தனை மக்களுக்கு இடையிலே சமய முரண்பாடு தோற்றுவித்தல் என்பதை அடையாளப்படுத்துகிறது. ஆனால், அது தொடர்பில் இதுவரை ஜனாதிபதி எந்த வகையிலும் ஆக்கப்பூர்வமான, சட்ட ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பது ஏன் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதற்காகவா அல்லது சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள் படையினர் என்பதற்காகவா? இந்த இரட்டை நிலைப்பாட்டிலிருந்து ஜனாதிபதி வெளிவர வேண்டும். தேசிய மக்கள் சக்தி மாற்றத்தினை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

பாரிய இனப்படுகொலையோடு முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த யுத்தத்தின்போது படையினர் தமிழர்களுக்கு எதிராக மனித குலம் ஏற்காத குற்றமும் சர்வதேச போரியல் விதிமுறைகளையும் மீறி இனப் படுகொலையில் ஈடுபட்டனர் என்பதை சர்வதேசமும் அறிந்ததே.

இலங்கையில் படுகொலை நிகழ்ந்தது என்பதற்கு செம்மணி உட்பட வட கிழக்கில் காணப்படும் சமூக புதைகுழிகள் சாட்சியாக எழுந்துள்ளன. அதுமட்டுமன்றி, தம் அன்புறவுகளை இறுதி யுத்தத்தின்போது படையினரிடம் கையளித்துவிட்டு அவர்கள் திரும்ப வராத நிலையில் தொடர் போராட்டம் நடாத்திக்கொண்டிருகின்றனர். காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கேட்டு சர்வதேசத்தின் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கின்றபோது சர்வதேசத்தின் நீதி கண்களில் மண்ணைத் தூவவும், தமிழருக்கான நீதியை மறுப்பதற்கும் ஒரு முன்னேற்பாடான செயற்பாடாகவே முன்னாள் ஜனாதிபதியின் கைது அமைந்துள்ளதாகத் தோன்றுகின்றது.

நாட்டின் சட்டத்துறையும் நீதியும் தகுதி, பதவி நிலை பாராது செயற்படுகிறது எனக் கூறி இலங்கை நாட்டை பிணை எடுக்கவும் குற்றமிழைத்த பாதுகாப்பு படையினருக்கு எதிராக உள்நாட்டு விசாரணை நடாத்த சந்தர்ப்பம் தாருங்கள். எம் மீது நம்பிக்கை வையுங்கள் எனக் கூறவே அவசர அவசரமாக ரணிலின் கதை நடைபெற்றதோ எனவும் சந்தேகம் கொள்கின்றோம். ஏனெனில் இக்கைது ஜெனீவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரை அண்மித்தே நடந்துள்ளது.

மேலும், ரணில் வெளிநாட்டில் செலவழித்த அரச பணம் மிக சொற்பமே. அதற்கு தண்டனை கொடுப்பது அநீதியானது. ஆனால், பட்டலந்த வதை முகாம், மத்திய வங்கி பணமோசடி தொடர்பில் வழக்கு தொடருங்கள். நாம் அதற்கு ஆதரவளிப்போம் எனக் கூறி ஏழை மக்களை வீதியில் இறக்க ஒன்றுகூடிய அரசியல் போர்க் குற்றங்கள் தொடர்பில் தமிழர்கள் கேட்கும் சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிப்பார்களா? அத்தகைய குரல் எங்கும் எழவில்லை, எழப்போவதுமில்லை. ஏனெனில், ஒன்று வர்க்க அரசியல். இன்னொன்று, சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்.

ஒரு நாட்டில் சட்டம், நீதி என்பன இனம், மொழி, சமயம் சார்ந்ததாக இருக்குமெனில், அங்கு இருள் கவ்வும் என்பது உண்மை. இலங்கையைப் பொறுத்தளவில் நாட்டின் அரசியல் யாப்பு இனம், சமயம், மொழி சார்ந்ததாகவும் அரச கட்டமைப்புகள் அதன் காவலாக திகழும்போது சமத்துவத்தை மக்கள் அனுபவிக்க முடியாது. அதனை மாற்ற முனையாது.

சட்டம் அனைவருக்கும் சமம் என்பவர்கள் அரசியல் நாடகவாதிகளே. கடந்த 75 ஆண்டுகளாக இன அழிவும் இனப் படுகொலையும் இடம்பெற, யாப்பு ரீதியிலான அரசியல் பாதுகாப்பு இன்மையே காரணமாகும். அதனை முதுகெலும்பு இல்லா அரசியல்வாதிகள் நரி பரம்பரையினரே. அனைத்து மக்களின் இன, சமய, மொழி, கலை கலாசார, பண்பாட்டு அடையாளங்களையும் தனித்துவத்தையும் பாதுகாக்கும் போதே நாட்டில் நீதியும் சட்டமும் சமத்துவமாக அமையும். அதற்கு முற்போக்கு சிந்தனை கொண்ட மக்கள் சக்தி எழுச்சி ஒன்று மட்டுமே வழிவகுக்கும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி புதைகுழியில் மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

27.08.2025

செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இன்று மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இதுவரை 169 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதில் 158 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 35வது நாளாக இன்றும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 177 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்!

28.08.2025

யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 177 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

இதில் 164 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் யாழ்ப்பாணம் 36வது நீத வான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண் காணிப்பில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அகழ்வுப் பணிகள் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோம தேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரை யாளர்கள் மற்றும் தொல்லியல் துறை மாணவர்களின் பங் களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

முதலாவதாக அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்ச்சியில் புதிதாக 9 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், மொத்தம் 164 எலும்புக்கூடுகள் முழமை யாக மீட்கப்பட்டுள்ளன.

தம்பிலுவில் மயானத்தில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுப்பு

10.08.2025

கருணா - பிள்ளையான் குழு முக்கியஸ்தர் இனிய பாரதியின் மற்றொரு சகாவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் வியாழக் கிழமை (28) அன்று மாலை அம்பாறை மாவட்டம் திருக் கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் மயானத்தை அண்டிய பகுதிகளில் மீண்டும் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி தெசீபா ரஜீபன் முன்னிலையில் ஜேசிபி இயந்திரம் மூலம் அடையாளம் காணப்பட்ட பல இடங்கள் தோண்டப்பட்டு வருகின்றன.

கடந்த 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து கருணா-பிள்ளையான் அணியின் முக்கியஸ்தரான இனிய பாரதியின் முக்கிய சகாவாக செயற்பட்ட அம்பாறை மாவட்ட காரைதீவு பகுதியை சேர்ந்த சந்தேக நபர் குறித்த பகுதிக்கு கைவிலங் கிடப்பட்டு அழைத்து வரப்பட்டிருந்தார்.அவர் கடந்த காலங் களில் திருக்கோவில் பகுதியில் தனியார் தொலைத் தொடர்பு சிம் விற்பனை முகவராக செயற்பட்ட அருளானந்தன் சீலன் என்ப வரை கடத்தி படுகொலை செய்து குறித்த இடத்தில் புதைத்திருப் பதாக அரசு சாட்சியாக மாறி குற்றப்புலனாய்வு பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இதன் போது குறித்த பிரதேசத்தை சுற்றி பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உட்பட பயங்கரவாத புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் தடயவியல் பொலிஸார் என பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

ஏற்கனவே கடந்த மாதம் யூலை (31) அன்று தனியார் தொலைத்தொடர்பு சிம் விற்பனை முகவராக செயற்பட்ட அரு ளானந்தன் சீலன் என்பவரை கடத்தி படுகொலை செய்து குறித்த பொது மைதானத்தில் புதைத்திருப்பதாக அரச சாட்சியாக மாறி அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிபதி ஏ.சி றிஸ்வான் மேற்பார்வையில் கடந்த 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து கருணா-பிள்ளையான் அணியின் முக்கியஸ்தரான இனிய பாரதியின் முக்கிய சகாவாக செயற்பட்ட அனோசியஸ் சுரேஷ் கண்ணா எனப்படும் யூட் எனும் சந்தேக நபர் குறித்த பொது மயானத்திற்கு கைவிலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட் டிருந்தனர்.

எனினும் குறித்த நபர் வாக்கு மூலத்திற்கமைய திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட பொது மயானத்தில் தேடுதல் மற்றும் தோண்டப்பட்ட பின்னர் எதுவும் கிடைக்காத காரணத்தினால் குறித்த செயற்பாடுகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் மற்றுமொருவரின் வாக்கு மூலத்திற்கமைய இன்று மற்றொரு இடமான தம்பிலுவில் மயானத்தை அண்டிய பகுதிகளில் மீண்டும் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா. செல்கின்றது “நீதியின் ஓலம்”

28.08.2025

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் “நீதியின் ஓலம்” ஐ.நா. வுக்கு செல்லவுள்ளதாக தாயகச் செயலணி அமைப்பின் வடக்கிற்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்தார்.

ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து “நீதியின் ஓலம்” கை யொப்பப் போராட்டம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு கிழக்கில் ஆரம்பமானது.

குறிப்பாக இப்போராட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படு கொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணத்தின் செம் மணியில் ஆரம்பமாகி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட நீதியின் ஓலம்” எனும், கையொப்பப் போராட்டம் வியாழக்கிழமை நிறைவுக்கு வந்தது.

குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கின் பல்வேறு பிரதேசங் களில் மக்களின் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன.

எழுமாறாக பெறப்பட குறித்த கையொப்ப போராட்டத்தில் சுமார் 130 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கையொப்பமிட்டிருந்தனர்.

முன்பதாக கடந்த ஐந்து நாட்களாக தமிழர் தாயகமெங்கும் முன் னெடுக்கப்பட்ட இந்த கையொப்பப் போராட்டத்தினூடாக இது வரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனி தப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என இந்த போராட்டம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் 26ஆவது நாளாக தொடரும் போராட்டம்

28.08.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்றைய தினம் வியாழன் (28) 26 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விடத்தல் தீவு மாதர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆதரவை வழங்கியுள்ளனர்.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகின்ற போராட்டம் இன்றைய தினம் (28) வியாழன் 26 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் விடத்தல் தீவு மாதர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

யாழ். போராட்டத்துக்கு ஆதரவாக ஊர்திப் பவனி

29.08.2025

சர்வதேச நீதி கோரி யாழில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு ஆதரவாக ஊர்திப் பவனி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான, சனிக்கிழமை (30) வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் செம்மணியில் இப் போராட்டம் நடைபெறவுள்ளது. இப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் யாழிலிருந்து ஊர்திப் பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபியில் நினவு வணக்கம் செலுத்தி அங்கிருந்து இந்த ஊர்திப் பவனி ஆரம்பமாகியது.

இவ் ஊர்திப் பவனி பல்வேறு இடங்களுக்கும் சென்று போராட்டம் நடைபெறும் செம்மணியை சனிக்கிழமை (29) காலை வந்தடையும்.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

29.08.2025

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இன்று மேலும் 10 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இதுவரை 187 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதில் 174 மனித எலும் புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - செம்மணி - அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 37வது நாளாக இன்றும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கிறது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

செம்மணி உண்மைகள்: இனப்படுகொலையாளி வாயால் உடையும் பேரினவாத சிறீலங்கா நடத்திய தமிழின அழிப்பு

29.08.2025

இருபத்தொன்பது ஆண்டுகளாக சிறையின் இருண்ட சுவர்களுக்குள் மறைக்கப்பட்டிருந்த உண்மைகள், இன்று ஒரு குற்றவாளியின் வாயிலாகவே வெளிவந்து, இலங்கை தேசத்தின் மனசாட்சியையும், சர்வதேச சமூகத்தின் மெத்தனத்தையும் ஒருங்கே உலுக்குகிறது. கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, “சர்வதேச விசாரணைக்கு நான் தயார்” என்று ஜனாதிபதிக்கு எழுதியிருக்கும் கடிதம், ஒரு தனிப்பட்ட மன்னிப்புக் கோரிக்கை அல்ல் அது, செம்மணி என்பது ஒரு திட்டமிட்ட படுகொலைக்களம் என்பதற்கான மறுக்க முடியாத ஒப்புதல் வாக்குமூலம்.

இந்தக் கடிதம், தமிழ் மக்கள் தசாப்தங்களாக அழுது புலம்பிச் சொல்லிவந்த உண்மைகளுக்கு, ஒரு சிங்கள இராணுவத்தினனே முத்திரை குத்தியிருக்கும் வரலாற்றுத் தருணமாகும்.

புதைக்கப்பட்டது கிருஷாந்தியின் உடல் மட்டுமல்ல் சிங்கள அரசு நடத்திய தமிழின அழிப்பும் தான்

“நான் கிருஷாந்தியைக் கொல்லவில்லை; ஆனால், கப்டன் லலித் ஹேவாகேயின் உத்தரவின் பேரில், சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் உடல்களை செம்மணியில் புதைத்தேன்” என்பதே சோமரத்னவின் வாக்குமூலத்தின் சாரம். இது, சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் புனையும் “விடுதலைப் புலிகளே புதைத்தார்கள்” என்ற புனைகதையின் முகத்திரையைக் கிழித்தெறிகிறது.

7ஆம் காலணி இராணுவத் தலைமையகத்திற்கு சந்தேகத்தின் பேரில் கொண்டு செல்லப்படும் தமிழர்கள், சித்திரவதை செய்யப்பட்டு, பிணங்களாக செம்மணிக்குக் கொண்டுவரப்பட்டு, புதைக்கப்பட்டனர் என்ற அவரது கூற்று, செம்மணி என்பது ஒரு தனிப்பட்ட வக்கிரத்தின் விளைவல்ல, அது ஒரு அரச இயந்திரத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட ‘கொலை செய்து புதைக்கும்’ (Kill and Dump) ஒரு தொடர் நடவடிக்கை என்பதை உறுதிப்படுத்துகிறது. இன்று செம்மணியில் தோண்டப்படும் 122 எலும்புக் கூடுகளுக்கும், சோமரத்ன குறிப்பிடும் 300க்கும் மேற்பட்ட உடல்களுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதை எந்தவொரு நேர்மையான விசாரணையும் எளிதில் நிரூபித்துவிடும்.

பலியாடுகளும், பாதுகாக்கப்பட்ட தளபதிகளும்: உடைக்கப்படும் சங்கிலித் தொடர்

“கடந்தகால அரசாங்கங்கள் இராணுவ உயரதிகாரிகளைப் பாதுகாத்துக்கொண்டு, கீழ்மட்ட வீரர்களைத் தண்டித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றின” என்ற சோமரத்னவின் குற்றச்சாட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் காலம் காலமாகச் சொல்லிவரும் உண்மையாகும். ஒரு கப்டனின் உத்தரவின் பேரில் கொலைகளும், புதைகுழிகளும் நடந்தேறின என்றால், அந்தக் கப்டனுக்கு உத்தரவிட்டது யார்? இந்த அதிகாரச் சங்கிலி எங்கு சென்று முடிகிறது?

லலித் ஹேவாகே உள்ளிட்ட உயரதிகாரிகள் கைது செய்யப்பட்டு, 6 மாதங்களில் மர்மமான முறையில் விடுதலையானதும், அவர்களின் வழக்குகள் காணாமல் போனதும், இலங்கையின் நீதித்துறை இராணுவத்தின் முன் மண்டியிடுவதை மீண்டும் ஒருமுறை காட்டுகிறது. சோமரத்ன போன்ற கீழ்மட்ட சிப்பாய்களைப் பலிகொடுத்து, உண்மையான சூத்திரதாரிகளைக் காப்பாற்றும் இந்த நயவஞ்சக நாடகத்தை, இன்று சோமரத்னவின் கடிதமே அம்பலப்படுத்தியுள்ளது.

இனியும் தாமதிக்காதே: சர்வதேச விசாரணையே ஒரே வழி

இந்த விவகாரத்தின் உச்சபட்ச முரண்நகை என்னவென்றால், இலங்கை அரசின் உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கையிழந்து, ஒரு தண்டனைக் கைதியே இன்று சர்வதேச விசாரணையைக் கோருவதுதான். இலங்கையின் நீதி அமைப்பால் உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாது என்பதற்கு இதைவிட சிறந்த சாட்சி தேவையில்லை.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், “தாங்கள் யாரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் அற்றவர்கள்” என்பதை நிரூபிக்க ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. சோமரத்னவின் வாக்குமூலத்தை ஒரு தொடக்கப் புள்ளியாகக் கொண்டு, உண்மையான சுயாதீனமான, சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடனான ஒரு விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இந்தக் கடிதம், குமார் பொன்னம்பலம் போன்ற நீதிக்காகப் போராடிப் படுகொலை செய்யப்பட்டவர்களின் தியாகத்தையும் நினைவூட்டுகிறது. சோமரத்னவின் சாட்சியம், வெறுமனே அவரது தண்டனையைக் குறைப்பதற்கான ஒரு பேரம் பேசும் கருவியாகப் பார்க்கப்படக்கூடாது. மாறாக, செம்மணியில் உறங்கும் நூற்றுக்கணக்கான ஆன்மாக்களுக்கும், அவர்களுக்காகக் காத்திருக்கும் உறவுகளுக்கும் நீதியைப் பெற்றுத் தரும் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகப் பார்க்கப்பட வேண்டும்.

உண்மைகளை வெளிப்படுத்தத் தயாராக இருக்கும் உயிருள்ள சாட்சிகளும், மண்ணுக்குள் இருந்து வெளிவரும் உயிரற்ற சாட்சியங்களும் கைகோக்கும் இந்தத் தருணத்தை, தமிழ் மக்களும், சர்வதேச சமூகமும் தவறவிடக்கூடாது. இது நீதிக்கான இறுதிப் போராட்டத்தின் ஆரம்பமாக இருக்கட்டும்.

கேப்பாப்புலவு மக்களின் காணியை கோரிய சிறீலங்கா விமானப்படை; கடுமையான எதிர்ப்பு வெளியிட்ட ரவிகரன் எம்.பி.

29.08.2025

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் அமைந்துள்ள 0.5ஹெக்டயர் மக்களின் விவசாயக்காணிகளை தமது தேவைக்கென கேப்பாப்புலவு விமானப்படையினர் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியைக் கோரியிருந்தனர்.

இந்நிலையில் கேப்பாப்பிலவில் ஏற்கனவே படையினரால் மக்களின் காணிகள் பல அபகரிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், விமானப்படையினரின் இக்கோரிக்கைக்கு தமது கடுமையான எதிர்ப்பினையும் வெளியிட்டிருந்தார்.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர் களது கடுமையான எதிர்ப்பினையடுத்து விமானப்படை யினருக்கு காணி வழங்கப்படுவதில்லை என 29.08.2025 இன்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

படையினரால் ஏற்கனவே ஆக்கிரமித்திருந்த குறித்த காணி விடுவிப்புச் செய்யப்பட்ட நிலையில், அக்காணியில் மக்கள் விவ சாய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். அந்தக்காணி யினை விமானப்படை தமக்குத் தருமாறு மீண்டும் கோருவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

அத்தோடு இன்னும் 190 ஏக்கர் அளவில் மக்களுக்குரிய காணிகள் கேப்பாப்பிலவில் விடுவிக்கப்படவேண்டியுள்ளது. இந் நிலையில் தமது காணிகளை விடுவிக்கவேண்டுமென கேப் பாப்புலவு மக்கள் தொடர்ந்து போராடியும், கோரிக்கைகளை முன்வைத்தும் வருகின்றனர்.

இவ்வாறிருக்க மீண்டு விமானப்படையினர் விடுவிக்கப்பட்ட மக்களின் காணியினை மீண்டும் கோருவது வேடிக்கையாகவுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரைத் தசாப்தகாலத்திற்கு மேலாகியுள்ள நிலையில் மக்களின் காணிகளை அபகரித்து இங்கிருந்துகொண்டு விமானப்படையினர் யாருடன் யுத்தம் செய்யப்போகின்றனர்.

எனவே கேப்பாப்புலவு மக்களின் விவசாயக் காணிகளை விமானப்படைக்கு வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாதென இதன்போது தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் நாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களது கடுமையான எதிர்ப்பினையடுத்து விமானப்படையினருக்கு காணி வழங்குவதில்லை என முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். செம்மணி புதைகுழியுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் வி.டி.எஸ். பெரேரா

09.08.2025

"யாழ்ப்பாண மாவட்ட ஜேவிபி பாராளமன்ற உறுப்பினர் திரு இளங்குமரனுடன் மேடை பகிர்ந்து கொண்டிருக்கும் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் வி.டி.எஸ். பெரேரா செம்மணி புதைகுழியுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரியாவார்.

மேஜர் ஜெனரல் விசிதகமகே டில்ஷான் சஷிக பெரேரா (Visidagamage Dilshan Sashika Perera–இராணுவ அடையாள இலக்கம் 62188) என அடையாளப்படுத்தப்படும் இவர் லலித் ஹேவா (62188), யடகம (63088), சசிந்திர விஜேசிரிவர்தன (62421) ஆகியோர் சகிதம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அதிகாரி ஆவர்.

ஜேவிபி அதிகாரத்திற்கு வந்த பின் இராணுவத்தின் 52 வது காலாட் படைப்பிரிவின் 31 வது தளபதியாக இவர் நியமிக்கப்பட்டு இருந்தார்.

விசேடமாக கடந்த ஆண்டு வி.டி.எஸ். பெரேரா அவர்கள் மேஜர் ஜெனரல் தர நிலைக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தார் (With effect from 03rd May, 2024).

2021 ஆம் ஆண்டு வி.டி.எஸ். பெரேரா அவர்கள் பிரிகேடியர் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டு இருந்தார் (With effect from 03rd November, 2018).

அதே போல கடந்த ஏப்ரல் மாதத்துடன் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கின்றார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு மகஜர்!

30.08.2025

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப் பொறிமுறையே வேண்டும் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் நிறைவில் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர் ஐ. நா.மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகருக்கான மகஜர் ஒன்றை ஐ.நா. வின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கையளித்தனர்.

அந்த மகஜரில் உள்நாட்டு விசாரணை பொறிமுறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப் பொறிமுறையைக் கோருகின்றோம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

"இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம், உலகளவில் அதிக எண்ணிக்கையிலான காணாமல் போனவர்களைக் கொண்ட ஒரு நாட்டில் நீதிக்கான எங்கள் போராட்டத்தில் உறுதியாக இருந்து வருகிறோம்'. 'இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், நீதியை நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகத்தை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறோம்'.

'வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது உலகளவில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் முழு மக்களுக்கும் எதிரான ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகிறது' என்றும் குறித்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல்கள் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள சமூகங்களை இலக்கு வைத்து இன ஒடுக்குமுறையின் கருவியாக மாறியுள்ளன. பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் நயவஞ்சகமான ஆயுதமாகும்.

இது முழு சமூகத்திற்கும் நீண்டகால துயரத்தையும் உளவியல் சித்திரவதைகளையும் ஏற்படுத்துகிறது என்றும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஈழத்தைப் பொறுத்தவரையில், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் முள்ளிவாய்க்காலில் ஆரம்பிக்கவில்லை.

எமது உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டே இலங்கை அரசானது ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இன ஒடுக்குமுறைக் கருவியாக இதனை பாவித்து வந்துள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உச்சக்கட்டத்தை அடைந்த இலங்கையின் இனப்படுகொலைப் போரின் இறுதிக் கட்டத்தில், 146,679 பேர் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்,

அவர்களது உறவினர்களால் இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் 21,000 க்கும் மேற்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டு பலவந்தமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் ஒரு திட்டமிட்ட தந்திரோபாயமாக இலங்கையால் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் நிகழ்த்தப்பட்டுள்ளது என்றும் குறித்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது அவர்களின் திட்டமிட்ட இனவழிப்புக்கு கணிசமாக பங்களித்துள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில், 59க்கும் மேற்பட்ட குழந்தைகள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன் பின்னர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என சர்வதேசத்திடம் நீதி வேண்டி தொடர்ந்து போராடி வருகிறோம்.

இனப்படுகொலையை வரையறுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசை திருப்திப்படுத்துவதும் கால அவகாசம் கொடுப்பதும் எமது மக்களுக்கு ஆழ்ந்த வேதனையை அளிக்கின்றது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழர் உரிமைப் போராட்டத்தின் போது, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்கள் உட்பட சரணடைந்தவர்களின் கதி என்ன என்பதை இலங்கை அரசு வெளிப்படுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து மிக விரைவாக சர்வதேச விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் 350க்கு மேற்பட்ட உறவினர்கள் நீதிக்காக போராடும் போது, தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என அறியாமலேயே இறந்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும். அங்கு 28 சிறுவர்களின் என்புக் கூடுகள் உட்பட 376 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இலங்கையில் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாக தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் செம்மணி சித்துப்பாத்தி புதைகுழி பதிவாகியுள்ளது. வருகின்ற 8ம் திகதி தொடங்கவுள்ள ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உறவுகளுக்கு சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடாக உண்மை கண்டறியப்பட்ட பதில் விரைந்து வழங்குவதுடன், பாதிக்கப்பட்டோரின் சாட்சியங்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டமிட்ட இனப்படுகொலை மேற்கொண்ட இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்தி விசாரணையை ஆரம்பிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும் உறுப்பு நாடுகளையும் கோருகின்றோம் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வட தமிழீழம் - யாழ். கேணல் கிட்டுப்பூங்காவில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மாபெரும் போராட்டம்ம்!

30.08.2025

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாளில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கேணல் கிட்டுப்பூங்கா முன்றத்திலிருந்து செம்மணி நோக்கி பேரணி ஆரம்பமாகியுள்ளது.

இப்போராட்டமானது உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக் கிறோம், தமிழினவழிப்புக்கும் வலிந்து காணாமல் ஆக்கப் படுதலுக்கும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையைக் கோரி வட கிழக்கில் சனிக்கிழமை (30) முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொது அமைப்புக்களும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஒட்டுமொத்த தமிழ்க் கட்சிகளும் இப் போராட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவை வழங்கி கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செம்மணியில் இன்றும் ஒன்றன் மேல் ஒன்றாக மேலும் ஒரு எலும்புக்கூட்டுத் தொகுதி அடையாளம் காணாப்பட்டுள்ளது

30.08.2025

செம்மணி மனித புதைகுழியில் ஒன்றன் மேல் ஒன்றாக காணப்படும் இரண்டு எலும்பு கூட்டு தொகுதிகள் இன்றைய நாள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இன்றைய தினம் சனிக்கிழமை காலை முதல் மாலை வரையில் முன் னெடுக்கப்பட்டது. அதன் போது ஒன்றன் மேல் ஒன்றாக இரு எழும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு , அதனை சுற்றப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த இரு எலும்புக்கூடுகளும் நாளைய ஞாயிற்றுக்கிழமை முற்றாக அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை ஒரு எலும் புக்கூட்டின் நெஞ்சு பகுதியில் மற்றைய எலும்பு கூட்டின் தலை பகுதி காணக்கூடியவாறு அடையாளம் காணப்பட்ட எலும்பு கூட்டு தொகுதி சுற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் இன்றைய நாள் சனிக்கிழமை மாலை அவற்றை அகழ்ந்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, கடந்த சில நாட்களுக்கு முன்னான அகழ்வு பணிகளின் போதும் பின்னி பிணைந்த நிலையில் இரு எலும் புக்கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

அந்த வகையில் ஒன்றன் மேல் ஒன்றாக இது வரையில் மூன்று சந்தர்ப்பங்களில் 06 எலும்பு கூட்டு தொகுதிகள் மீட்கப் பட்டுள்ளன.

தென் தமிழீழம் – மட்டு கல்லடிப் பாலத்திலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மாபெரும் போராட்டம்

30.08.2025

தென் தமிழீழம்: அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் மக்கள் ஒன்றிணைந்து, சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு ஆர்ப்பாட்ட மொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் இன்று சனிக்கிழமை 30) மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமாகி காந்திபூங்கா வரை இடம் பெற்று அங்கு ஐக்கிய நாடுகளுக்கு கையளிப்பதற்கான மகஜர் வாசிக்கப்பட்டு நிறைவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஊர்திப் பவனிகள் இடம்பெற்றதுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை அவர்களது உறவினர்கள் ஏந்தியிருந்தனர்.

செம்மணி மனிதப்புதைகுழிகள் தமிழின அழிப்புக்கு சான்று என்றும் சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் வட, தென் தமிழீழத்தில் இருந்து சிறீலங்கா

இராணுவத்தை வெளியேற்றுமாறும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிநாத், சிறிநேசன், கோடீஸ்வரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன கருணாகரன், அரியநேத்திரன், பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள், மாநகர சபை முதல்வர்கள் உள்ளிட்ட பொது மக்கள் கலந்துகொண்டனர்.

செம்மணியில் புதிதாக 10 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது: 197 எலும்புக்கூட்டுத் தொகுதிகளாக அதிகரிப்பு

30.08.2025

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இன்றைய நாள் சனிக்கிழமை 06 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன் றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப் பட்ட நிலையில் இன்றைய நாள் சனிக்கிழமை ஆறாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணி களுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இன்றைய தினம் வியாழக்கிழமை 38 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை கட்டம் கட்டமாக இதுவரையில் 47 நாட்கள் முன் னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, இன்றைய நாள் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதியுடன் 06 எலும் புக்கூட்டு தொகுதியுடன் இதுவரையில் 181 எலும்பு கூட்டு தொகு திகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 197 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

திருகோணமலையில் முத்து நகர் விவசாயிகள் ஐவரையும் விடுதலை செய்யக் கோரி கவனயீர்ப்பு போராட்டம்

30.08.2025

திருகோணமலை சீனக்குடா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முத்து நகர் விவசாயிகள் ஐவரையும் விடுதலை செய்யக் கோரி கவனயீர்ப்பு போராட்டம் சனிக்கிழமை (30) சீனக் குடா பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

முத்து நகர் பகுதி விவசாய காணியில் தனியார் நிறுவனத்தினர் பெகோ இயந்திரம் மூலமாக (27) சூரிய மின் சக்தி திட்டம் தொடர்பான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முற்பட்ட வேலையில் அங்கு குறித்த விவசாயிகள் சென்று தடுத்து நிறுத்த முற்பட்ட வேலையில் வாய்த் தகராறு ஆரம்பமானதுடன் பின்னர் கலவரமாகி தனியார் நிறுவன ஊழியர்கள் பொல்லால் விவசாயிகளை தாக்கியுள்ளனர்

இதனை தொடர்ந்து சீனக் குடா பொலிசாரினால் ஐந்து விவசாயிகள் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் எதிர் வரும் 04ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த விவசாயிகளை விடுதலை செய்ய கோரியும் பெகோ இயந்திர சாந்தவை கைது செய்யக் கோரியும் இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

முத்துநகர் விவசாயிகளை தாக்கிய அரசாங்க குண்டர்களை கைது செய், அநியாயமாய் சிறையில் அடைக்கப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய், நிறுவனங்களுக்கு வழங்கிய விவசாய நிலங்களை விவசாயிகளுக்கு திருப்பிக் கொடு, திருகோணமலையின் வளங்கள் சூரையாடப்படுவதை நிறுத்து, எங்கள் காணிகளை எங்களுக்கு கொடு, கம்பனிகளுக்கு இலாபம் எங்களுக்கு நடுத்தெரு, போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

பல போராட்டங்களை நடாத்தி எங்களுக்கு அழுத்து போய் விட்டது ஜனாதிபதி செயலகத்தில் இம் மாதம் 30 ம் திகதிக்குள் தீர்வு தருவோம். அது போன்று பிரதியமைச்சர் மாவட்ட ஒருக்கிணைப்பு குழு கூட்டத்தில் கூறியது எதுவும் நடக்கவில்லை .

பெகோ சாந்த அடியாட்களுடன் ஏழு பேர் வந்து எங்கள் விவசாயிகளை தாக்கினர் பொல்லால் அடித்து தாக்கிய பெகோ சாந்த குழுவினரே.

ஆனால் எங்களை கைது செய்து சிறையில் அடைத்து விட்டார்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ய சென்ற போது மதியம் 2.30 மணி தொடக்கம் மாலை ஆறுமணி வரை காத்திருந்தும் புகாரை ஏற்காது கைது செய்தும் வீடு தேடி வந்தும் கைது செய்தார்கள் பொலிசார் என்பது நடுநிலையாக இவ் விடத்தில் செயற்பட்டிருக்க வேண்டும்.

நடுராத்திரியில் பொலிசார் வீடு வீடாக சென்று கழிப்பறை வரை

நித்திரையில் கைது செய்துள்ளார்கள். இலஞ்ச ஊழலை ஒழிப்போம் என்று கூறுபவர்கள் எங்கே அநியாயமாக கைது செய்த அப்பாவி விவசாயிகளை உடன் விடுதலை செய்யுங்கள்.

விவசாயிகளை தாக்கியவர்கள் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை எனவும் கேள்வி எழுப்பிய அவர்கள் மேலும் தெரிவித்ததாவது ஏழை விவசாயிகளை ஏமாற்றி ஆட்சி நடாத்துகிறார்கள் ஆட்சிக்கு வரு முன் இவர்கள் என்ன கூறினார்கள் தனியார் நிறுவனங்களுக்கு எமது வளங்களை விற்க மாட்டோம் என வாயால் வடை சுட்டவர்கள் இப்போது தாரை வார்க்கின்றனர்.

விவசாயிகளை பாதுகாப்போம் என கூறி மக்களை ஏமாற்றியுள்ளனர். முத்து நகர் விவசாயிகளை விற்று பிழைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் 355 விவசாய குடும்பங்களை வீதியில் நிற்க வைத்துள்ளனர் இம் மக்கள் ஜனாதிபதி செயலகம் வரை போராடியுள்ளனர் ஐக்கிய நாடுகள் வரை சென்று தொடர்ந்தும் போராடுவோம்.

அப்பாவி விவசாயிகள் ஐந்து பேரை சிறையில் அடைத்துள்ளனர் நாம் உயிரை கொடுத்தாவது போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றனர்.

இலங்கையின் ஆறாவது பெரிய மனிதப் புதைகுழியான கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருட்கள் அடையாளம் காணப்பட்டனவா?

31.08.2025

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிச் சூடு அல்லது வெடிப்பு காயங்களால் உயிரிழந்த ஐம்பதுக்கும் மேற்பட்டோரின் எலும்புகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய மூடப்பட்ட, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருட்களின் அடையாளத்தை வெளிப்படுத்த எவரும் முன்வரவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இலங்கையின் ஆறாவது பெரிய மனித புதைகுழியான கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மீட்கப்பட்ட பிற பொருட்களை அடையாளம் காண்பதற்கான பத்திரிகை விளம்பரத்தை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) வெளியிட்டு மூன்று வாரங்கள் ஆவதாக, வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரண வி. எஸ். நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

எனினும், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருட்களின் அடையாளத்தை வெளிப்படுத்த எவரும் முன்வந்ததாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என சட்டத்தரணி மேலும் தெரிவிக்கின்றார்.

“நபர்களை அடையாளம் காணும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டு மூன்று வாரங்கள் ஆகின்றன. இதற்கு கால அவகாசம் போதுமானதல்ல என்பதால் OMP அலுவலகம் இன்று நீதிமன்றத்தில் தொடர்புடைய அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. இது தொடர்பாக எங்களுக்கும் எந்த தகவலும் கிடைக்கவில்லை.”

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட பிற பொருட்களின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய தகவல்கள் இருந்தால், அச்சமின்றி முன்வருமாறு அழைப்பு விடுத்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், அவ்வாறு முன்வருபவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனவும் வலியுறுத்தினார்.

ஒகஸ்ட் 3ஆம் திகதி OMP அலுவலகம் பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரம் சரியான முறையில் மக்களைச் சென்றடைந்திருக்கும் என்ற நம்பிக்கை உள்ளதா? என, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், பத்திரிகை விளம்பரம் உடனடியாக மக்களைச் சென்றடையவில்லை என சுட்டிக்காட்டினார்.

“இது மக்களைச் சென்றடைந்ததா என்பதை மக்களிடம் கேட்டுதான் அறிய முடியும். ஏனெனில் பத்திரிகை விளம்பரங்கள் உடனடியாக மக்களைச் சென்றடைவதில்லை.”

தாம் பட்டியலிட்டுள்ள பிற பொருட்கள் பற்றிய தகவல் அறிந்தவர்கள், 2025 செப்டம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக தமது பிரதான காரியாலயம் அல்லது பிராந்திய காரியாலயங்களுக்கு வருமாறு, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஒகஸ்ட் 3, 2025 அன்று வெளியிட்ட பத்திரிகை விளம்பரத்தில் மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 30 மனித எலும்புகளுடன் தொடர்புடைய பிற பொருட்களின் பட்டியல் விளம்பரத்தில் வெளியிடப்பட்டது.

கொக்குத்தொடுவாய் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட சடலங்கள் 90களின் நடுப்பகுதியில் புதைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுடையது என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் 2024 மார்ச் மாதம் கையளித்த இடைக்கால அறிக்கையில் தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ குறிப்பிட்டிருந்தார்.

தடவியல் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ

தலைமையிலான குழு, மார்ச் 22, 2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட உடல்கள் 1994 மற்றும் 1996 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை எனவும், சடலங்கள் முறையாக புதைக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழக்கும் முன்னர் துப்பாக்கிச் சண்டையை எதிர்கொண்டிருந்ததாகவும் அறிக்கையின் அனுமானம் வெளியிடப்பட்டிருந்தது.

யூலை 15, 2024 அன்று அகழ்வு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 52 உடல்களில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் துப்பாக்கிச் சூடு அல்லது வெடிப்பு காயங்களால் உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் கனகசபாபதி வாசுதேவவின் தனது அறிக்கையில் அனுமானம் வெளியிட்டிருந்தார்.

2023 ஆம் ஆண்டு யூன் மாத இறுதியில், கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்திலிருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில், நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைத் துண்டுகள் வெளிப்பட்டன. குழாய்களை அமைப்பதற்காக நிலத்தை தோண்டிக் கொண்டிருந்த போது, மனித உடல் பாகங்கள்

செம்மணியில் இதுவரை 209 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம்; 191 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுப்பு

31.08.2025

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இன்று (31) புதிதாக 12 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டு அவை சுத்தம் செய்யப்பட்டு 10 மனித எச்சங்கள் அகழ்ந்து எடுக்கபட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இன்று 39 ஆவது நாளாக அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

இதுவரையில் 209 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டு 191 எலும்பு கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து

எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எயார் கனடா விமானச் சேவை முழு அளவில் இடையூறு!

16.08.2025

கனடாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான எயார் கனடா நிறுவனத்தின் விமான சேவைகள் முழு அளவில் இடையூறு எற்பட்டுள்ளது.

விமான சேவை நிறுவனத்தின் 10,000-க்கும் மேற்பட்ட விமானப் பணியாளர்கள் இன்று அதிகாலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால், அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எட்டப்படாததால், உலகளவில் ஆயிரக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தம் எட்டப்படாததால் வேலைநிறுத்தம் தொடங்கியதாக கனேடிய பொது ஊழியர் தொழிற்சங்கத்தின் (CUPE) பேச்சாளர் ஹக் பவுலியோட், உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து, விமான நிறுவனம் தனது விமானப் போக்குவரத்து சேவைகளை நிறுத்துவதாக அறிவித்தது.

இதேவேளை, எயார் கனடா, பணியாளர்களை விமான நிலையங்களில் இருந்து தடுக்கும் “லாக்அவுட்” உத்தியை அறிவித்தது.

இந்த நிறுத்தம் தினமும் 130,000 பயணிகளை பாதிக்கும், இதில் 25,000 கனடியர்கள் வெளிநாடுகளில் பாதிக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக அடிப்படையில் இணக்கப்பாடு எட்டப்பட்டாலும், முழு செயல்பாடுகளை மீண்டும் தொடங்க ஒரு வாரம் ஆகலாம் என

எயார் கனடாவின் தலைமை இயக்க அதிகாரி மார்க் நாஸர் தெரிவித்தார்.

கனடாவில் வீட்டு விற்பனையில் ஏற்பட்டுள்ள மாற்றம்

16.08.2025

கனடாவில் வீட்டு விற்பனையில் சாதக மாற்றம் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கனடிய வீட்டுமனை ஒன்றியம் (CREA) வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த2025 யூலையில் வீடு விற்பனை கடந்த ஆண்டை விட 6.6% உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதங்களில் மந்தமாக இருந்த வீட்டுச் சந்தை மீண்டும் உயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த யூலையில் மொத்தம் 45,973 வீடுகள் விற்கப்பட்டன, இது 2024 யூலையில் 43,122 காணப்பட்டது.

கடந்த யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் விற்பனையானது 3.8% உயர்வடைந்துள்ளது. கடந்த மாதம் தொடர்ச்சியாக நான்காவது மாதமாக வீடு விற்பனை அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

குறிப்பாக ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் வீட்டு விற்பனை

யானது 33.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

எயார் கனடா விமானப்பணியாளர் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது

17.08.2025

ஊதியம் தொடர்பில் ஏயார் கனடா நிறுவனத்துக்கும் பணியாளர் யூனியனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளை வாக பணியாளர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

சனிக்கிழமை ஏயார் கனடா நிறுவனத்தின் விமானப் பணியாளர்கள் 10,000க்கும் அதிகமானோர் ஊதியம் தொடர்பிலான கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து தங்கள் வேலைநிறுத்தத்தைத் துவங்கினார்கள்.

வேலைநிறுத்தத்தால், நாளொன்றிற்கு 130,000 பயணிகள் பாதிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில், ஏயார் கனடா நிறுவனத்துக்கும் பணியாளர் யூனியனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளதாகவும், அதைத்தொடர்ந்து விமான சேவை துவங்க இருப்பதாகவும் ஏயார் கனடா நிறுவனம் தற்போது அறிவித்துள்ளது.

இன்று, அதாவது, ஆகத்து மாதம் 19ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மாலையே விமான சேவைகள் துவங்க இருப்பதாகவும் ஏயார் கனடா நிறுவனம் தெரிவித்துள்ளது.

என்றாலும், விமான சேவை முழுவீச்சில் இயங்க ஏழு முதல் 10 நாட்கள் ஆகலாம் என்றும் கூறியுள்ள ஏர் கனடா நிறுவனம், இந்த காலகட்டத்தில் சில விமானங்கள் ரத்து செய்யப்படக்கூடும்

என்றும் தெரிவித்துள்ளது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒன்ராரியோ அரசும் – ரொரான்ரோ மாநகர சபையும் இணைந்து போக்குவரத்து தடங்களுக்கு அருகில் அதிக வீடுகள் உருவாக்கத் திட்டம்!

20.08.2025

ஒன்ராரியோ அரசும் ரொரான்ரோ மாநகர சபையும் இணைந்து பேருந்து, தொடரி நிலையங்கள் மற்றும் நிலக்கீழ் வழித்தடங்களுக்கு அருகில் அதிக வீடுகளைக் கட்டவுள்ளன. இத்திட்டம் 120 போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில், குறிப்பாக ஸ்காபரோப் பகுதிகளில், உயரமான, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதனடிப்படையில் ரொரான்ரோவில் வரும் 25 ஆண்டுகளில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான புதிய வீடுகள் அமைக்கப்படலாம். இதனால் குடியிருப்பாளர்கள், புதிதாகக் குடியேறுபவர்கள் மற்றும் இளையோர், கல்விக்கூடங்களுக்கும் வேலைத் தளங்களுக்கும் அருகில் வசிக்க வழியேற்படும்.

இதுபற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறுகையில், “போக்குவரத்தின் முக்கியத்துவத்தையும், அதுவே மக்களை அவர்கள் இல்லங்களிலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுடன் இணைப்பதற்கு இன்றியமையாதது என்பதையும் எமது அரசு அறிந்துள்ளது” என்றார்.

ஸ்காபரோவிலுள்ள முக்கிய போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளால் பொதுமக்கள் பயனடைவர். ஸ்காபரோ நிலக்கீழ் வழித்தட நீட்டிப்பில் மூன்று புதிய நிலையங்கள் அமையவுள்ளன. அவையாவன: லோரன்ஸ் கிழக்கு, ஸ்காபரோ மத்தி, மற்றும் ஷெப்பேட் கிழக்கு. இத்திட்டத்தினூடாக பயண நேரம் குறைவடைவதுடன் குடியிருப்புக்கு அருகிலேயே வேலைவாய்ப்புகளையும் கடைகள், வணிகங்கள் போன்றவற்றையும் உருவாக்க உதவும்.

இக்குடியிருப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டங்கள், எதிர்

காலத்தில் ஸ்காபரோவை வலுவானதும் குறைந்த செலவுடைய அனைத்துடனும் இணைந்த சமூகமாகவும் மாற்ற வல்லன.

எயார் கனடா விமானச்சேவை நிறுவனம் தனது பயணிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதாக அறிவிப்பு

21.08.2025

எயார் கனடா விமான சேவை நிறுவனம் தனது பயணிகளுக்கு நட்டஈடு வழங்குவதாக அறிவித்துள்ளது.

விமானப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ஹோட்டல், உணவு, தரைவழி போக்குவரத்து மற்றும் பிற செலவுகளை ஈடு செய்ய உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பில், ஆகஸ்ட் 15 முதல் 23 வரை இடம்பெற்ற தொழிற்சங்கப் போராட்டத்தினால் பயணங்கள் நிறுத்தம் செய்யப்பட்ட அல்லது தாமதமான வாடிக்கையாளர்களுக்கு “நியாயமான” தங்குமிடம் மற்றும் ஏனைய செலவுகளை எயார் கனடா ஈடு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத் திட்டங்கள் பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களிடமும் நாங்கள் மனமார்ந்த மன்னிப்பு கோருவதாக அறிவித்துள்ளது.

மேலும் பயணத்தின் போது தவிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்,” என எயார் கனடா தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீடு கோரிக்கைகள் ரசீதுகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனடாவில் உணவுப் பொருட்களின் விலைகள் உடனடியாக குறையும் சாத்தியங்கள் இல்லை

26.08.2025

கனடாவில் உணவுப் பொருட்களின் விலைகள் உடனடியாக குறையும் சாத்தியங்கள் கிடையாது என பொருளியல் நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

2025 செப்டம்பர் 1 முதல், அமெரிக்கப் பொருட்களுக்கு கனடா விதித்திருந்த 25% எதிர்-வரிகள் (Counter-Tariffs) நீக்கப்படவுள்ளன.

எனினும், உணவுப் பொருட்களின் விலைகள் உடனடியாகக் குறையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைகள் உடனே குறையாது, ஆனால் விரைவில் குறையும் எனவும் சில வாரங்களில் விலைகள் குறையும் எனவும் குவெல்ஃப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைக் வான் மாசோவ் தெரிவித்துள்ளார்.

காய்கறிகள், பழங்கள், காப்பி, தேநீர், மாவு, சர்க்கரை, பாஸ்தா, ஆரஞ்சுப் பழச்சாறு போன்றவை விலை குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்ட ஆயுட்காலம் கொண்ட உணவுப் பொருட்களின் விலை குறைவது கால தாமதமாகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வரும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலை முதலில் குறையக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சாக்லேட், பிட்னட் பட்டர், கேச்சப், மசாலா, பல் துவைக்கும் மருந்து, பாட்டில் தண்ணீர், காகிதத் துடைப்பான் போன்றவை - விலை குறைய அதிக நாட்கள் எடுக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

முறியடிக்க முயற் சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் சுங்க வரிகளால் கனடா பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம்

30.08.2025

கனடாவின் பொருளாதாரம், இரண்டாம் காலாண்டில் 1.6% வீழ்ச்சியடைந்ததாக கனடா புள்ளிவிபரத் துறை (StatCan) தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய சுங்க வரிகள் காரணமாக ஏற்றுமதி மற்றும் முதலீடுகள் கடுமையாக குறைந்தது இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. முதலாம் காலாண்டில் 2% வளர்ச்சி பதிவான நிலையில், இரண்டாம் காலாண்டில் அதிரடியாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கார், எஃகு, அலுமினியம் ஏற்றுமதிகள் 25% வரை சரிந்துள்ளன. தொழில்துறை இயந்திரங்கள் மற்றும் உபகரண ஏற்றுமதிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மூலதன முதலீடுகள் 9.4% குறைந்துள்ளன் இது 2016க்கு பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சி எனக் கூறப்படுகிறது. கனடாவின் எதிர் சுங்க வரி நடவடிக்கைகள் காரணமாக இறக்குமதியும் சரிந்துள்ளது.

டிரம்ப் விதித்த சுங்க வரிகள் கனடா வளர்ச்சியை மட்டுப்படுத்துவதாக பொருளாதார நிபுணர்கள், எச்சரித்துள்ளனர்.

வரும் செப்டம்பர் 17ஆம் திகதி வட்டி விகித முடிவை எடுக்கும் கனடா மத்திய வங்கி, இந்த புள்ளிவிபரங்களை கவனமாக ஆய்வு செய்யவுள்ளது.

தமிழக செய்திகள்

இராமேசுவரக் கடற்தொழிலாளர்களின் போராட்டம் தொடர்கிறது...

20.08.2025

எல்லைத் தாண்டி கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு கடற்தொழிலாளர்களை விடுவிக்க கோரி 8வது நாளாக இன்றும் (19) இராமேசுவர கடற் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், இன்று மாலை 4 மணியளவில் இராமேசு வரத்தில் இருந்து புறப்படும் தாம்பரம் விரைவு இரயிலை தங்கச்சிமடத்தில் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது, தங்கச்சிமடத்தில் 859 பொலிசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்கள் விடயத்தில் மத்திய அரசு அசமந்த போக்கை காட்டுவதாக போராட்டத்தில் ஈடுபட்டோர் குற்றம் சுமத் தினர். அத்துடன், இன்று வரை முன்னெடுத்துள்ள போராட்டங் களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் அனைத்து கடற்றொழிலாளர் களையும், ஒன்றிணைத்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக் கும் பாரியளவான போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரத்தில் 20 இடங்களில எண்ணெய் கிணறுகளை அமைக்க ஓஎன்ஜிசிக்கு அனுமதி

24.08.2025

இராமநாதபுரம் மாவட்டத்தில், 20 இடங்களில் ஹைட்ரோ கார்பன் சோதனை கிணறுகளை அமைக்க மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்த தகவல் ஓஎன்ஜிசி இணைய தளத்தில் வெளியாகி யுள்ளது.

மத்திய அரசின் புதிய எண்ணெய் எடுப்பு கொள்கை அடிப்படை யில், ஓஎன்ஜிசி நிறுவனம் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட பகுதிகளை உள்ளடக்கி 1403.41 சதுர கிலோமீட்டர் பகுதியில் ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதி பெற்றிருந்தது.

அதன்படி, எண்ணெய் மற்றும் எரிவாயு எடுக்கும் பணியின் முதல் கட்டமாக, ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தனிச் சியம், பேய்குளம், கீழசெல்வனூர், கே.வேப்பங்குளம், பூக் குளம், சடயநேரி, கீழச்சிறுபோது, வல்லக்குளம், பனையடி ஏந்தல், காடம்பாடி, நல்லிருக்கை, அரியக்குடி, காவனூர், காமன்கோட்டை, சிறுவயல், ஆழமலந்தல், சீனங்குடி அழகர் தேவன் கோட்டை, அடந்தனார் கோட்டை, ஏ.மணக்குடி உள் ளிட்ட பகுதிகளில் 20 சோதனை ஹைட்ரோ கார்பன் கிண றுகளை ரூ.675 கோடி செலவு செய்து தோண்ட திட்டமிட்டது.

இந்த கிணறுகளை தோண்ட அனுமதி கோரி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓஎன்ஜிசி நிறுவனம் கடந்த 2023 அக்டோபரில் விண்ணப்பித்திருந்தது.

மனுவை ஆய்வு செய்த மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், 20 இடங்களில் சோதனை கிணறு அமைக்க ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய இராணுவம்
ஒரு கையை பின்னால் கட்டியபடி போராடியது என இந்தியா கூறுவது கேலிக்கூத்தானது. ஒரு கையைப் பின்னால் கட்டியபடி இந்திய இராணுவம் எமது மக்கள் மீது இத்தகைய கொடுமைகளைச் செய்தார்கள் என்றால். இரு கைகளாலும் எத்தகைய அட்டூழியங்களைப் புரிந்திருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

தமிழ் நாட்டு மீனவர்களின் படகுகளை மீட்க யாழ். வந்த தமிழ் நாட்டு கடற்தொழிலாளர்கள் நாடு திரும்பினர்

26.08.2025

இலங்கையில் உள்ள தமது படகுகளை நேரில் பார்வையிட்டு, அதனை மீட்டு செல்வது தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த 14 பேர் கொண்ட குழுவினர் நேற்றைய நாள் மாலையே யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழகம் திரும்பினர்.

கடந்த 2022 - 2023ஆம் ஆண்டு கால பகுதிகளில் , இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றத்தில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகள் மயிலிட்டி மீன் பிடி துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வழக்கு விசாரணைகள் நிறைவுற்று, நீதிமன்றினால், படகுகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை மீண்டும் தமிழ்நாட்டுக்கு எடுத்து செல்வதில் சிக்கல் நிலைமைகள் காணப்பட்டமையால் , அது தொடர்பில் படகு உரிமையாளர்கள், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்திடம் தமது படகுகளை தம்மிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இருந்தனர்.

இந்நிலையில், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு கடந்த வாரம் படகுகளை படகின் உரிமையாளர்கள் மீட்டு இந்தியாவிற்கு எடுத்து செல்ல அனுமதி அளித்தனர்.

அதனை அடுத்து, நேற்றைய நாள் திங்கட்கிழமை இராமேசுவரம் மீன் பிடித்துறைமுகத்தில் இருந்து இராமேசுவரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க தலைவர் ஜேசுராஜா தலைமையில் படகு உரிமையாளர்கள் உள்ளிட்ட 14 பேர் கொண்ட குழு விசைப்படகு ஒன்றில் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

அவர்களை இலங்கை - இந்திய கடல் எல்லையில் வைத்து, இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்று, காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்து சென்று , அங்கிருந்து அவர்களின் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மயிலிட்டி மீன் பிடி துறைமுகத்திற்கு அழைத்து சென்றனர்.

அங்கு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட ஏழு படகுகளையும் மகிழ்ச்சியுடன் பார்வையிட்டு, அவற்றின் தரங்களை பரிசோதித்த பின்னர் அவற்றினை பிறிதொரு படகு மூலம் கட்டி இழுத்து தமிழ் நாடு கொண்டு செல்ல முடிவெடுத்த நிலையில், அதற்கான ஏற்பாடுகளை செய்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என தீர்மானித்து , நேற்றைய நாள் மாலையே அவர்கள் படகு மூலம் தமிழ் நாடு திரும்பினர்.

அதேவேளை, இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 124 படகுகள் மயிலிட்டி துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் 07 படகுகளே விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்களின் படகுகள் மயிலிட்டி மீன் பிடித்துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால், அப்பகுதி மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், அதனால் குறித்த படகுகளை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

கடலில் உடல்நலக்குறைவால் பாதிக்கப்படும் மீனவர்களை காப்பாற்ற கடல் நோயாளர் ஊர்தி [ஆம்புலன்ஸ்] அவசியம்

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் சவுமியா சுவாமிநாதன்

30.08.2025

கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது உடல்நலக்குறைவால் பாதிக்கப்படும் மீனவர்களைக் காப்பாற்ற கடல் நோயாளர் ஊர்தி (ஆம்புலன்ஸ்) சேவையை ஏற்படுத்த வேண்டும் என்று எம். எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். இந்திய கடலோரப் பகுதிகளுக்கான பல்வகை ஆபத்து சேவைகள் குறித்த கருத்தரங்கம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன தலைவர் சவுமியா சுவாமிநாதன் பங்கேற்று பேசியதாவது: மீனவர்கள் நலன் காக்க எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் 'மீனவ நண்பன்' என்ற ஸ்மார்ட் போன் செயலியை உருவாக்கி இருக்கிறோம். அதில் வானிலை நிலவரம், காற்று வீசும் திசை, வேகம், மீன்கள் அதிகமாக இருக்கும் இடங்கள் போன்ற தகவல்களை வழங்கி வருகிறோம்.

மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கும்போது, மாரடைப்பு போன்ற பல்வேறு உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. அப்போது அவர்களைக் காப்பாற்ற முடியாமல் உயிரிழப்பு நேரிடுகிறது. நிலப் பகுதிகளில் அரசு சார்பில் நோயாளர் ஊர்திச் சேவை உள்ளது. அதேபோல், கடல் ஆம்புலன்ஸ் சேவையை அவசியம் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர் லெப்டினென்ட் ஜெனரல் சையது அடா ஹஸ்னயின் பேசும்போது, "பேரிடர் தொடர்பான முன்னெச்சரிக்கைகளை வழங்க 'SACHAT' என்ற செயலி பயன்பாட்டில் உள்ளது. இது ஸ்மார்ட் போனை சைலன்ட் மோடில் வைத்திருந்தாலும், முன்னெச்சரிக்கை தகவல் வரும்போது, அபாய ஒலியை எழுப்பும்" என்றார்.

'இன்காய்ஸ்' நிறுவன இயக்குநர் பாலகிருஷ்ண நாயர் பேசும் போது, "இந்நிறுவனம், வானிலை ஆய்வு மையத்துடன் இணைந்து சுனாமி, இராட்சத கடல் அலை தொடர்பான முன்னெச்சரிக்கைகளை வழங்கி வருகிறது. அந்தமான் பகுதியில் கடலுக்கடியில் 270 கிமீ ஆழத்தில் கேபிளை பதித்து, நில நடுக்கம், சுனாமி போன்ற முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் பெற முடிகிறது.

முன்னெச்சரிக்கை தகவல்களை மேலும் வலுப்படுத்த, பல்வேறு துறையினரை ஒருங்கிணைத்து வருகிறோம்" என்றார். மத்திய அரசின் பத்திரிகை தகவல் பணியக தென் மண்டலத் தலைவர் பழனிசாமி, என்ஐஓடி இயக்குநர் பாலாஜி இராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

உலக செய்திகள்

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக் அதிபர் ட்ரம்ப – ரஷ்ய அதிபர் புட்டின் பேச்சுவார்த்தை!

15.08.2025

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ட்ரம்பும் ரஷ்ய அதிபர் புதினும் 3 மணி நேரம் விரிவான பேச்சு வார்த்தை நடத்தினர்.

கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போரில் உக்ரைனின் 22 சதவீத பகுதிகளை ரஷ்யா கைப்பற்றி உள்ளது. கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப், இருநாடுகள் இடையிலான போரை நிறுத்த முயற்சி செய்து வருகிறார்.

இதுதொடர்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் அதிபர் ட்ரம்ப் 4 முறை தொலைபேசியில் ஆலோசனை நடத்தி உள்ளார். இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம், ஆங்கரேஜ் நகரில் உள்ள இராணுவ தளத்தில் அமெரிக்கா, ரஷ்ய அதிபர்கள் நேற்று நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தினர். ஆங்கரேஜ் விமான தளத்தில் தரையிறங்கிய அதிபர் புதினை, அதிபர் ட்ரம்ப் வரவேற்று அழைத்துச் சென்றார். அப்போது வானில் அமெரிக்காவின் பி2, எப்22 ரக போர் விமானங்கள் பறந்து புதினுக்கு வரவேற்பு அளித்தன. பின்னர் இரு தலைவர்களும் 3 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பிறகு இருவரும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தனர்.

அதிபர் புதின் கூறியதாவது, உக்ரைனை எங்களுடைய சகோதர நாடாகவே கருதுகிறோம். இரு நாடுகளின் வேர்களும் ஒன்று. ஆனால் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதால் போர் மூண்டது. இது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.

இன்றைய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது. உக்ரைனில் அமைதி திரும்ப புதிய பாதை திறந்திருக்கிறது. உக்ரைனும் ஐரோப்பிய நாடுகளும் கலந்தாலோசித்து நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

ரஷ்யா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒத்துழைப்பை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. இன்றைய தின பேச்சுவார்த்தையில் பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டு உள்ளன. இதன் மூலம் உக்ரைன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அதோடு அமெரிக்கா, ரஷ்யா இடையிலான உறவும் மேம்படும். உக்ரைன் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறு புதின் பேசினார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியதாவது, இன்றைய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது. குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் எவ்வித ஒப்பந்தமும் கையெழுத்தாகவில்லை. உக்ரைன் விவகாரம் தொடர்பாக அந்த நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி, நேட்டோ நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

அதிபர் புதினுடன் எனக்கு நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. ரஷ்யா குறித்து எதிர்மறையான தகவல்கள் பரப்பப்படுகின்றன. அவை அனைத்தும் வெறும் வதந்திகள். உக்ரைன் போரை நாங்கள் நிறுத்தப் போகிறோம். இதுதொடர்பாக விரைவில் நாங்கள் மீண்டும் சந்தித்துப் பேசுவோம். இவ்வாறு அதிபர் ட்ரம்ப் பேசினார்.

இதைத் தொடர்ந்து அதிபர் புதின் கூறும்போது, "அடுத்த முறை ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் சந்தித்துப் பேசலாம்" என்று தெரிவித்தார். இதை ட்ரம்ப் ஏற்றுக் கொண்டார். உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆகஸ்ட் 18-ம் தேதி அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் செல்கிறார். அப்போது அதிபர் டொனால்டு ட்ரம்பை அவர் சந்தித்து பேச உள்ளார்.

சிறீலங்கா சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப சட்ட கட்டமைப்புகளை செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

ஐக்கிய நாடுகள் சபை

16.08.2025

சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப சட்ட கட்டமைப்புகளை ஏற்றுக் கொள்வதற்கும், செயல்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று சிறீலங்கா தொடர்பான பரிந்துரை அறிக்கையில், ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

போர் மற்றும் மோதல் சூழலில் பதிவாகிய பாலியல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, பாலியல் வன்முறை குற்றங்களுக்கு பொறுப்புக் கூறலை உறுதி செய்யவும், நிலைமாறுகால நீதி செயல்முறைகளைக் கொண்ட நாடுகளின் அதிகாரிகளிடம் இதற்கான கோரிக்கை விடுப்பதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மோதல் தொடர்பான பாலியல் வன்கொடுமையால் பிறந்தவர்கள் உட்பட, உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, உருமாறும் இழப்பீடுகள் மற்றும் நிவாரணங்களை மேம்படுத்துவதற்கு, போதுமான நிதியை ஒதுக்குமாறு சர்வதேச சமூகத்திடம், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் அவதானிக்கப்பட்ட பேர்க்கால பாலியல் துஷ்பிரயோக வன்முறை சம்பவங்களை அடிப்படையாக் கொண்டு பொதுச் செயலாளரால் விசேட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையில், பாதுகாப்புப் படையினரால் தமிழர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் 2024 ஆம் ஆண்டு விசேட அறிக்கையில் பதிவாகியிருந்தமையை பொதுச் செயலாளர் தனது புதிய அறிக்கையில் நினைவுப்படுத்தியுள்ளார்.

இந்தநிலையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் தொடர்ச்சியான தாமதம் காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் ஊடாக, இலங்கையின் வடக்கு பகுதியில் உளவியல் ரீதியான ஆதரவை வழங்குவதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும், தமக்கு ஏற்பட்ட களங்கம் காரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் அதில் பங்கேற்கத் தயங்கியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திடம் தீர்வில்லையா?

சிறீலங்காவின் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ

16.08.2025

தற்போதைய அரசாங்கம் 'வலிந்து காணாமலாக்கப்படல்' என்ற வார்த்தையைக்கூடப் பயன்படுத்துவதில்லை. இந்த அரசாங்கத்தினாலேயே இதற்குத் தீர்வைப் பெற்றுத்தரமுடியாவிடின், வேறு எந்த அரசாங்கத்தில் இதனைச் செய்யமுடியும்? என்று தெற்கைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான பிரிட்டோ பெர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவரகெதர மற்றும் எம்.எப்.எம்.பஸீர் ஆகியோர் எழுதிய 'செம்மணி' எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும், அதனைத்தொடர்ந்து 'இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் மனிதப்புதைகுழிகள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர் சங்கத்தினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துரைத்த காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ மேலும் கூறியதாவது:

வடக்கில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட அட்டூழியங்கள் தொடர்பில் தென்பகுதி மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் இப்புத்தகத்தை வெளியிட்டமைக்கு முதலில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனை இடைநடுவில் கைவிடாமல், தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லுங்கள்.

நாட்டில் மீண்டும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெறாதிருக்கவேண்டுமாயின், முதலாவதாகக் கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும்.

இவ்விடயத்தில் தெற்கில் கொந்தளிப்பு ஏற்படாமல் வடக்குக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியம் மிகக்குறைவு. ஏனெனில் நாம் கடந்தகாலங்களில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்தோம். அவ்வாறிருந்தும்கூட 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்கள் கோட்டாபயவுக்கே வாக்களித்தனர்.

நாமறிந்தவரை தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுன கிளர்ச்சியின்போது பெரும் எண்ணிக்கையானோர் மிகமோசமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

சிங்களமொழியைப் பேசக்கூடியவர்கள் வாழும் தெற்கின் நிலைவரம் இவ்வாறிருக்கையில், வடக்கில் என்னவெல்லாம் நடந்திருக்கக்கூடும்? எனவே இதுபற்றிய தெளிவூட்டலை சகல தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தி, இதற்கான நீதியை சகலரதும் கோரிக்கையாக மாற்றவேண்டும்.

ஜே.வி.பி கிளர்ச்சியின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எம்முடன் பேரணியாக நடந்தார். ஆனால் வடக்கில் பலர் கொல்லப்படுவதற்கு அவரே காரணமாக இருந்தார். அதே போன்று ரணில் விக்ரமசிங்கவும் சித்திரவதைக்கூடங்களை நடாத்தினர்.

ஆனால் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அவர் இணையனுசரணை வழங்கினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய அரசாங்கம் 'வலிந்து காணாமலாக்கப்படல்' என்ற வார்த்தையைக்கூடப் பயன்படுத்துவதில்லை. இந்த அரசாங்கத்தினாலேயே இதற்குத் தீர்வைப் பெற்றுத்தரமுடியாவிடின், வேறு எந்த அரசாங்கத்தில் இதனைச் செய்யமுடியும்? எனக் கேள்வி எழுப்பினார்.

சிறீலங்காவில் மாறாத கட்டமைப்பு மீறல்கள்: பொறுப்புக்கூறல் பொறிமுறையின் அவசியத்தை உணர்த்துகிறது

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி

17.08.2025

இலங்கையில் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கட்டமைப்பு ரீதியான காரணிகள் இன்றும் தொடர்வதை ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய மனித உரிமைகள் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த ஒரு கவலைக்குரிய சித்திரத்தை முன்வைப்பதுடன், சர்வதேச சமூகம் ஏன் சிறீலங்கா விடயத்தில் தனது கண்காணிப்பைத் தளர்த்தக்கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கை மணியாகவும் உள்ளது.

ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் என்பது தற்காலிகப் பிரச்சினைகள் அல்ல மாறாக, அவை நாட்டின் நிர்வாக, சட்ட மற்றும் பாதுகாப்பு இயந்திரங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள நீண்டகாலப் பிரச்சினைகளாகும். சர்வதேச கண்டனங்கள் இருந்தபோதிலும், தன்னிச்சையான கைதுகளுக்கும், சித்திரவதைகளுக்கும் வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது நம்பகரமான விசாரணைகள் இன்றி, அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் நீடிக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்தகால மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகள் இல்லாமை மற்றும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் தோல்வியடைந்தமை என்பன சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் குறிப்பிடும் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் என்பது, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும் ஒரு சர்வதேசப் பொறிமுறையாகும். சிறீலங்கா இத்தகைய சர்வதேசப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து, நாட்டின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம் சுமத்துகிறது.

ஆகவே, எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் சிறீலங்காவுக்கு எதிரான ஒரு புதிய தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை மேலும் வலுப்படுத்தவும், அதன் ஆயட்காலத்தை நீடிக்கவும் சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை வலுப்படுத்துகிறது.

சிறீலங்காவின் கட்டமைப்பு மாறாத வரை, சர்வதேசத்தின் கண்காணிப்பும் தளரக்கூடாது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வாஷிங்டனில் சந்திப்பு

17.08.2025

அமெரிக்க அதிபர் ட்ரம்பும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினும் அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம், ஆங்கரேஜ் நகரில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

அப்போது ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை நிறுத்துவது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, அதிபர் டொனால்டு ட்ரம்பை வாஷிங்டனில் இன்று சந்தித்துப் பேசுகிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வோன் டெர் லியென், ஜெர்மனி பிரதமர் பிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், இத்தாலி பிரதமர் மெலோனி ஆகியோரும் ஜெலன்ஸ்கியோடு இணைந்து அதிபர் ட்ரம்பை சந்திப்பார்கள் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து உக்ரைன் வட்டாரங்கள் கூறியதாவது: உக்ரைனின் டோன்ஸ்க் பகுதியில் சுமார் 70 சதவீத நிலப்பரப்பை ரஷ்யா கைப்பற்றி உள்ளது.

அந்த பிராந்தியம் முழுவதையும் ரஷ்யா சொந்தம் கொண்டாடுகிறது. போரை நிறுத்த டோன்ஸ்க் பகுதியை முழுமையாக ரஷ்யாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந்த நாட்டு அதிபர் புதின் கூறியுள்ளார். இதற்கு ஈடாக ரஷ்யா வசம் உள்ள மிகச் சிறிய பகுதியை உக்ரைனுக்கு வழங்க அவர் முன்வந்துள்ளார்.

இராணுவ ரீதியாக டோன்ஸ்க் பகுதி மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது. இந்த பகுதியில் அரிய வகை தனிமங்கள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன. எனவே டோன்ஸ்க் பகுதியை விட்டுக் கொடுக்க முடியாது.

உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் ஓரணியில் உள்ளன. எனவே உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியோடு இணைந்து ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் அமெரிக்க அதிபர் ட்ரம்பை சந்தித்துப் பேச உள்ளனர். நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணையக்கூடாது என்று அதிபர் புதின் நிபந்தனை விதித்துள்ளார். இதுவும் ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனை. இதுதொடர்பாக அதிபர் ட்ரம்புடன் விரிவாக விவாதிக்கப்படும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொறுப்புக்கூறலுக்கான அர்த்தமுள்ள நகர்வுகளை சிறீலங்கா ஜனாதிபதி அநுர அரசாங்கம் முன்னெடுக்கவில்லை!

மனித உரிமைகள் கண்காணிப்பகம்

20.08.2025

சிறீலங்கா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது முதல் 'நல்லிணக்கம்' தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்தகாலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மிக மோசமான சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், நம்பகரமான உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறை எதுவும் அமுலில் இல்லாத நிலையில் நீதியை அடைந்துகொள்வதற்குப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை விடயத்தில் பேரவைக்கும், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் இரு வருடங்களுக்குப் புதுப்பிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிபீடமேறி சுமார் ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருக்கின்ற போதிலும், கரிசனைக்குரிய முக்கிய மனித உரிமைகள் விவகாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது. அதேபோன்று மிகப்பாரதூரமான அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைப் பொறுத்தமட்டில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு இன்னமும் தொடர்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரை நாட்டுக்கு வருகை தருமாறு கடந்த யூன் மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அழைப்புவிடுத்திருந்தது. இருப்பினும் உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்வதிலும், பொருளாதார சவால்களை எதிர்கொள்வதிலும் தாம் கொண்டிருக்கும் கடப்பாடு குறித்து ஜனாதிபதி உரையாடினாரே தவிர, பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிப்பதற்குத் தவறியிருந்தார்.

அதேவேளை உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் நாட்டுக்கு வருகைதந்திருந்தபோது, இலங்கையில் தொடரும் 'தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு' எனும் பொறி குறித்து எச்சரித்ததுடன் நீதியை நிலைநாட்டப்படாமையானது வலுவான சமாதானத்தில் சீர்குலைவை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் தடையேற்படுத்தியதன் மூலம் பாதிக்கப்பட்டோரின் துன்பத்தை மேலும் ஆழப்படுத்தின. அவ்வரசாங்கங்கள் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தவறியதன் காரணமாக உண்மை, நீதி மற்றும் இழப்பீடு வழங்கலை உறுதிப்படுத்தவேண்டிய நிலை மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்பட்டது. அதுமாத்திரமன்றி நீண்ட காலக் காத்திருப்பும், அக்காலப்பகுதியில் முகங்கொடுத்த கசப்பான அனுபவங்களும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உள்ளகக் கட்டமைப்புக்களிலும், பொறிமுறைகளிலும் நம்பிக்கை இழப்பதற்கு வழிகோலியிருக்கின்றன. எனவே தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தொடரும் ஒடுக்குமுறை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது முதல் 'நல்லிணக்கம்' தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்தகாலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும். அத்தோடு ஜனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வேறுபட்டவகையில் பொதுக் குற்றவியல் தாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய செயன்முறை அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், நாடளாவிய ரீதியில் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை அனுமதிக்கவேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை மறுசீரமைக்கவோ அல்லது பதிலீடு செய்யவோ வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

காசா நகரில் இசுரவேல் இராணுவம் இன அழிப்பு தாக்குதலை தொடங்கியது!

21.08.2025

காசா நகரில் தரைவழி இனவழிப்பு நடவடிக்கைகளை இசுரவேல் தொடங்கியுள்ளது, இதனால் அப்பகுதியில் மீதமுள்ள பொதுமக்கள் தெற்கே தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இராணுவம் 60,000 ரிசர்வ் வீரர்களை அழைக்கும் என்றும் அது கூறியுள்ளது.

பொதுமக்கள் மேலும் உயிரிழப்புகளைத் தடுக்க ஐ.நா.வும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

வியாழக்கிழமை காலை காசா நகரில் இசுரவேல் தனது தரைவழி நடவடிக்கைகளைத் தொடங்கியதால் , காசா நகரில் தஞ்சம் புகுந்திருந்த இலட்சக்கணக்கான பொதுமக்கள் வெளியேறி தெற்கு காசாவில் தஞ்சம் அடைய உத்தரவிடப்பட்டனர்.

காசா நகரத்தின் மீதான தாக்குதலின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும், முதல் கட்டங்களையும் நாங்கள் தொடங்கி விட்டோம், ஏற்கனவே ஐ.டி.எஃப் படைகள் காசா நகரத்தின் புற நகர்ப் பகுதியைக் கைப்பற்றியுள்ளன என்று இசுரவேலின் இராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் எஃபி டெஃப்ரின் கூறினார்.

காசா நகர தரைவழி நடவடிக்கைக்கு முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், ஏற்கனவே அங்கு பொதுமக்களைப் பாதிக்கும் பல மனிதாபிமான நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, உடனடியாக போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார்.

காசாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை எட்டுவது மிக முக்கியம், அத்தகைய நடவடிக்கையால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் அழிவைத் தவிர்க்க, ஜப்பானில் நடந்த ஒரு மாநாட்டில் குட்டெரெஸ் கூறினார்.

காசா மருத்துவ மனை மீது தாக்குதல்; 5 ஊடகவியலாளர்கள் உட்பட 20 பேர் பலி

25.08.2025

இசுரவேலிய படையினர் காசா மருத்துவமனையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட இருபது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையின் நான்காம் மாடி மீது இரண்டு ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அல்ஜசீரா, றொய்டர்ஸ் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களைச் சேர்ந்த ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 2023ம் ஆண்டு முதல் காசாவில் சுமார் 273 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இசுரவேலியப் படையினரால் காசாவில் ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்படுவதனை பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, பத்திரிகையாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படவில்லை என இசுரவேல் இராணுவம் அறிவித்துள்ளது.

காசாவில் 22 மாதங்களாக நடந்து வரும் இசுரவேலின் கொடூரமான போரில், 62,000-க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள். இசுரவேலின் பிரதமர் நெதன்யாகு மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் ஆகியோருக்கு போர்க்குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் வழங்கியுள்ளது.

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தோல்வி!

புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள்

21.08.2025

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அடைந்திருக்கும் தோல்வி, அக்கட்டமைப்பின்மீது தமிழ்ச்சமூகம் நம்பிக்கை இழப்பதற்கு வழிகோலியிருப்பதாகச் பேரவையின் உறுப்புநாடுகளிடம் கூட்டாக சுட்டிக்காட்டியுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், தமிழர் தாயகப்பகுதிகளில் உள்ள சகல மனிதப்புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆதரவளிக்குமாறு வேண்டுகோள்விடுத்துள்ளன.

இலங்கை விவகாரத்தில் செயற்படவேண்டிய விதம் மற்றும் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கோரிக்கைகளை உள்ளடக்கி அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களான உலகளாவிய தமிழ் அமைப்புக்களின் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் பேரவை, இலங்கை தமிழ்ச்சங்கம், ஒன்றிணைந்த தமிழ் அமெரிக்கர் அரசியல் நடவடிக்கைக்குழு மற்றும் உலகத் தமிழ் அமைப்பு என்பன இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிகள், உறுப்புநாடுகள் மற்றும் அவதானிப்பு நாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்குறிப்பிட்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இலங்கை அரசு தொடர்ச்சியாக நிராகரித்து வருவது குறித்து அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அவ்வமைப்புக்கள், முள்ளிவாய்க்கால் இனவழிப்பு இடம்பெற்று 16 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில் ஆக்கபூர்வமானதொரு பொறுப்புக்கூறல் செயன்முறையை உறுதிப்படுத்துவதில் பேரவை தோல்வியடைந்திருப்பது பற்றிக்கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அத்தோடு இவ்விடயத்தில் பேரவையின் தோல்வியானது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தமிழ்ச்சமூகம் நம்பிக்கை இழப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகவும் அவ்வமைப்புக்கள் விசனம் வெளியிட்டுள்ளன.

அதேபோன்று அண்மையில் யாழ். செம்மணி சித்துபாத்தியில் அடையாளங்காணப்பட்ட மனிதப்புதைகுழியில் 140க்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இது குறித்து சர்வதேச தடயவியல் விசாரணைகள் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் என அக்கடிதத்தில் மேற்படி புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அதேவேளை தமிழ்மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினையான சுயநிர்ணய உரிமை விவகாரம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்திருப்பதாகவும், நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பூரணத்துவமடையாத காலனித்துவ நீக்க செயன்முறை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைசார் கோட்பாட்டை உறுதிப்படுத்துவதற்குத் தவறிவிட்டதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழர் தாயகப்பகுதிகளில் உள்ள சகல மனிதப்புதைகுழிகள் தொடர்பாகவும் சர்வதேச தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் ஊடாக இலங்கை தொடர்பில் விசேட தீர்ப்பாயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குப் பரிந்துரைத்தல், தமிழர் தாயக விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் 4 ஆவது குழுவிடம் பாரப்படுத்துவதற்குப் பரிந்துரைத்தல், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் ஐ.நாவின் மேற்பார்வையுடன்கூடிய சுயாதீன பொதுசன வாக்கெடுப்புக்கு வசதியேற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை உறுப்புநாடுகள் முன்னெடுக்கவேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் வேலையின்மை எண்ணிக்கை 3 மில்லியனாக உயர்வு!

31.08.2025

ஜேர்மனியில் கடந்த 10 ஆண்டுகளில் முதல்முறையாக வேலையின்மை எண்ணிக்கை மில்லியனை கடந்துள்ளது.

2025 ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 46,000 பேர் வேலை இழந்துள்ளனர்.

இதனால் ஜேர்மனியில் மொத்த வேலை இழந்தோர் எண்ணிக்கை 3.025 மில்லியனாக உயர்ந்துள்ளது.

இது பெரும்பாலும் கோடை விடுமுறை காலத்தில் நிறுவனங்கள் ஆட்கள் சேர்க்கும் வேகத்தை குறைத்ததாலும், கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் பொருளாதார மந்தத்தாலும் ஏற்பட்டுள்ளதாக, ஜேர்மனியின் வேலைவாய்ப்பு முகமை தலைவர் ஆண்ட்ரியா நாஹ்லெஸ் (Andrea Nahles) தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் பொருளாதாரம் 2025 இரண்டாம் காலாண்டில் 0.3 சதவீதம் குறைந்துள்ளது. ஏற்றுமதி மற்றும் முதலீடுகள் குறைவாக இருப்பதும் வளர்ச்சியை பாதித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், வேலை இழந்தோர் எண்ணிக்கை 1.53 இலட்சம் அதிகமாகியுள்ளது.

தொழிலாளர் சந்தை இன்னும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாக ஜேர்மனியின் ifo Institute தெரிவித்துள்ளது. குறிப்பாக சேவை துறையில் வேலை வாய்ப்பு குறைந்துள்ளது.

EY consultancy நிறுவனத்தின் அறிக்கையின்படி, கடந்த ஒரு ஆண்டில் ஜேர்மனியின் தொழில்துறையில் 1.14 இலட்சம் வேலைகள் குறைந்துள்ளன, இதில் கார் துறையில் மட்டும் 51,000 பேர் வேலையை இழந்துள்ளனர்.

இருப்பினும், திறமையான பணியாளர்களை கண்டுபிடிக்க நிறு

வனங்கள் இன்னும் சிரமப்படுகின்றன. ifo Institute-ன் மற்றோரு ஆய்வில், 28.1 சதவீத நிறுவனங்கள் திறமையான பணியாளர்களை சேர்க்க முடியாமல் இருப்பதாக தெரிவித்துள்ளன.

மக்கள்தொகை மாற்றம் காரணமாக திறமையான தொழிலாளர் பற்றாக்குறை நீண்ட காலத்திற்கு மேலும் மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது; சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது; இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

மக்கள் சமூகம் விழிப்படையும்போது விடுதலை சாத்தியமாகிறது

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படை யாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுட னும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகு சன அரங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தன மான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின் றன. மக்களிட மிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காகவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நடவடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது விழிப்புடன் இருக்க வேண்டுமென மக்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் விழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞைபெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்குகொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது. மக்கள் மத்தியில் விரக்தியும் சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்டசக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசியல் உண்மையை விடுதலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக்கையைத் தளர்த்தி, விடுதலைப் பற்றை மழுங்கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

(தேசியத் தலைவரின் “எனது மக்களின் விடு தலைக்காக”… கருத்துத் தொகுப்பு நூலி லிருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்

HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ
25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com

K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

நீ எங்கள் வானத்துச் சூரியன்

நீ காற்றாயும், மழையாயும்
வருவாயாம்
எங்களின் மண்ணுக்கு
பாட்டி சொல்லிச்சு

நீ எங்களின் மண்ணுக்கு
புயலாய் வீசினாயாம்

தூரத்தில் வான்வெளிப்பரப்பில்
மின்னலாய்த் தோன்றும் – உன்
புன்னகையை
அம்மா, எங்களுக்குக் காட்டினாள்

நிலவெனச் சுடரும்
முகமும் உனக்கு
பறையெழுப்பும்
நாதத்துக்குள்
உனது பெயரின் உச்சாடனம்
எங்களின் கிராமத்தில்
பல பேரின தூக்கத்தைக் கலைக்கிறது.

விசையுற, விசையுற
விசையுற சுழலும்
வரமுனக்கு தந்தது யார்?
உன் கதையை
ஊரார் சொல்லுகையில்
எங்களுக்கும் நெருப்பெரிகிறது.

நீ எங்கள்
வானத்துச் சூரியனுமாம்
எங்கள் குடிசை முகட்டுக்குள்ளான
ஒளிப் பொட்டுச் சிந்துகையில்
உன் வதனம்
உன் சுடர்க் கைப்பற்ற
என் தம்பியும்
நானுமாய் சண்டையிடுவோம்.

வானத்தில் இருந்து
நட்சத்திரங்களாயும்
பூமிக்கு அழகு சேர்ப்பீர்களா?

நீங்கள் எங்களின் வானத்தில் இருந்து
பூமிக்கு அழகு ஊட்டுகையில்
எங்களுக்கு சிறக்கை முளைக்கும்!
எங்களுக்கு சிறக்கை முளைக்கும்!
விண்ணை அளாவும்
விண்ணை அளாவும்
விசையுடன் எழுவோம்

விண்ணை அளாவும்
விசையுடன் எழுதலே
புவி முழுதலாம் பரவிய
எம் மின மனிதர் இயல்பென ஆகுக.

சுபாஸ்

வெற்றிலைக்கேணி, புல்லாவெளி நேரடிச் சண்டை (14.07.1991–05.08.1991)

கடல் வழியாக தரையிறக்கம்

1991.07.14ஆம் திகதி மாலை வெற்றிலைக்கேணி கடற் கரையில் இராணுவத்தை இறக்கி, எதிரி ஒரு புதிய போர் முனையைத் திறந்துவைத்தான். ஆனையிறவு தளம்மீதான தாக்குதல் தொடங்கப்பட்ட மறுநாளிலிருந்தே வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் எதிரிப்படைக் கப்பல்கள் நங்கூரமிடத் தொடங்கிவிட்டன.

14ஆம் திகதி மாலை 5:00 மணியளவில் வெற்றிலைக்கேணி சந்தியை அண்மித்திருந்த கடற்கரையை நோக்கி சுமார் பத்து விசைப்படகுகளில் இராணுவத்தினர் கரையிறங்கமுயன்றனர். இந்தப் படகுகள் கடலில் வைத்தே தாக்கப்பட்டன. இதில் இரண்டு படகுகள் பாரிய சேதமடைந்ததுடன் மற்றைய படகு களும் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளாயின. இந்த நிலையில் சேதமடைந்த படகுகள் இரண்டையும் மீட்ட படி வந்த படகுகள் எல்லாம் கப்பலுக்கே திரும்பிச் சென்று விட்டன.

சிறிதுநேரத்தின் பின்பு மீண்டும் ஒரு தரையிறக்க முயற்சி நடந்தது. முதல் தரையிறக்கப்பட முயன்ற இடத்திலிருந்து கட் டைக்காட்டுப் பக்கத்தை நோக்கி சுமார் ஒரு கிமீ தொலைவை குறியாகக் கொண்டு 15 விசைப்படகுகளில் வந்து இராணுவத் தினர் தரையிறங்கினர்.

தரையிறங்கிய இராணுவமும், கடற்கரைக்காவலில் ஈடுபட்ட புலிவீரர்களும் கைக்கெட்டும் தூரத்தில் நின்று சமர் புரிந்தனர். இந்த முதல் நாள் சண்டையிலேயே வெற்றிலைக்கேணி –

கட்டைக்காட்டுப் போர்முனைக்குப் பொறுப்பாக இருந்த லெப். கேணல் சூட்டி வீரமரணமடைந்தார்.

கடற்கரையில் சண்டை நடைபெற்ற அதேசமயம் தொடர்ந்தும் படகுகள் மூலம் படையினர் இறக்கப்பட்டனர். இத்தனை எதிர்ப் பையும் தரையிறக்கப்பட்ட இடத்தில் நின்ற எண்ணிக்கையில் மிகக்குறைந்த போராளிகள் சந்திக்கவேண்டியிருந்தது.

இந்த நிலையில் தரையிறக்கப்பட்ட இடத்திற்கு இரு மருங்கிலும் நின்ற எமது அணிகள தரையிறக்கப்பட்ட இடத்தை நோக்கி வந்து இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டனர். சண்டை தீவிர மாக நடந்தது. இராணுவம் தனது பலத்தை ஒரு முனைக்குள் குவித்து பலத்ததாக்குதலைத் தொடுத்ததால், வீர மரண மடைந்த எமது தோழர்கள் பலரது உடல்களை எம்மால் எடுக் கமுடியாது போய் விட்டது. அன்று இரவிரவா கவே கவச வாகனங்களும் தரையிறக்கப்பட்டு இராணுவத்தின் நிலைகள் பலப்படுத்தப்பட்டன.

அன்றிரவே அப்பகுதிக்குள் நுழைந்த எமது அணியொன்று தரையிறக்கப்பட்ட படைகளின் தற்காலிக தலைமையகம் மீது ஒரு தாக்குதலை நடாத்தியது. அந்தத் தாக்குதலில் தரை யிறங்கிய படைகளின் தளபதியாக இருந்த அதிகாரி ஒருவர் உட்பட பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். பின்னர் சிறீலங்கா அரசும் கொல்லப்பட்ட அந்த இராணுவ அதிகாரிலெப்



கேணல் அஞ்சலோ பீரிஸ் என அறிவித்தது.

இந்தத் தாக்குதலை நடாத்திய புலிகள் அணிக்கு மேஜர் யாசின் தலைமைதங்கிச் சென்றார். பாலலியில் நடந்த சண்டை ஒன்றில் இவர் தனது ஒரு கையை இழந்திருந்தார் என்பது

குறிப்பிடத்தக்கது.

இவரைப்பற்றி யாழ் மாவட்டத் தளபதி தினேஸ் கூறினார்.

ஆனையிறவுச் சண்டை தொடங்கப்போகிறது என்றவுடன் யாசின் என்னிடம் வந்து தானும் சமர்க் களத்துக்குச் செல்லப் போவதாக வற்புறுத்திக் கொண்டிருந்தார். அவரது நச்சரிப் பைத் தாங்கமுடியாது நான் சொன்னேன் ”உனக்கு ஒரு கை இல்லை. இந்தநிலையில் நீ சண்டைக்குப் போய் என்ன செய்யப் போகின் றாய். உன்னாலை முடியுமென்றால் அந்த இளனியை இலக்கு வைத்து அடித்து வீழ்த்து. அதன் பிறகு களத்துக்குப் போறதைப் பற்றி முடிவெடுப்பம்” என்றேன்.

நான் சொன்னதுதான் தாமதம் அருகில் நின்ற போராளியிட மிருந்து ஜி3ரக துப்பாக்கியை வாங்கி நான் குறிப்பிட்ட அந்த இளனியை இலக்குவைத்து அடித்து வீழ்த்தினார் என்னால் பதில் கூற முடியவில்லை. சண்டைக்குச் செல்லும் அனுமதியை வழங்கினேன்” எனத் தளபதி தினேஸ் அவரைப்பற்றி நினைவு கூர்ந்தார்.

மேஜர் யாசின் அடுத்தநாள் நடந்த சண்டையொன்றில் வீர மரணமடைந்து வி ட் டார் என்பது குறிப்பிடத் தக்கது.

தளத்தை நோக்கிய நகர்வும் எதிர்த்தாக்குதலும்

தரையிறக்கப்பட்டு இரண்டாம்நாள் அதாவது 15ஆம் திகதி பி.ப 2:30 மணியளவில் இராணுவம் ஆனையிறவுத் தளத்தை நோக்கி தனது நகர்வைத் தொடக்கியது. அன்று இருள்சூழும் வேளை வரை நடந்த சண்டையில் சுமார் 200 யார் தூரத்தை இராணுவம் நடந்து கடந்தது. அப்போது நாம் நின்ற இடத்துக்குப் பின்னால் ஒருபெரிய வெளியும் அதன் பின்னால் மரங்கள் பற்றைகள் கொண்ட இடமும் இருந்தது. எனவே அந்த வெளிக்குள் எதிரியைச் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டு வெளிக்கு அப்பால் இருந்த இடத்தில் எமது அரண்களை அமைக்கத்தொடங்கினோம்.

அன்றிரவே கடற்கரையின் பல்வேறு இடங்களிலும நின்ற எமது அணிகளை ஒருங்கே திரட்டி முன்னேறிவரும் இராணுவ அணிகளைத் தடுக்க எம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தோம்.

16ம் திகதி காலை 6:30 மணியளவில் பத்திற்கும் மேற்பட்ட கவச வாகனங்களுடன் இராணுவம் நகரமுனைந்தது. அப்போது நாம் தொடுத்த எதிர்த்தாக்குதலில் ஒரு "பவள்" கவச வாகனம் முற்றாக எரிந்து நாசமானது. இதைத் தொடர்ந்து இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு நகராது நின்றது. மீண்டும் பி.ப 2:30 மணியளவில் முன் நோக்கி நகரத் தொடங்கியது.

அன்று மாலை வரை நடந்த சண்டையில் மேலும் மூன்று கவசவாகனங்கள் நாசமாக்கப்பட்டன. அன்றைய முழு நாள் சண்டையில் மட்டும் இரண்டு பவள், இரண்டு சலாடின் ஆகிய நான்கு கவசவாகனங்களை நாசப்படுத்தினோம்.

17ஆம், 18ஆம் திகதிகளிலும் சண்டை தீவிரமாக நடந்தது. ஒவ்வொருநாளும் சிலநூறு யார் தூரம்வரைதான் இராணுவத்தால் முன்னேறிவர முடிந்தது.

19ஆம் திகதி நடந்த சண்டையில் தளபதி தினேஸ் காயமடைகின்றார். அதன் பின்னர் தளபதி பால்ராஜ் வெற்றிலைக்கேணி – புல்லாவெளிச் சண்டைக்குத் தலைமை தாங்குகிறார். முன்னர் லெப். கேணல் சூட்டியின் தலைமையில் இப்பகுதியில் போரிட்டுக்கொண்டிருந்த எமது படை அணிக்கு தளபதி சுரேஸ் தலைமை தாங்கினார். இவர் முன்னர் யாழ். கோட்டை முகாம் முற்றுகைக்குப்பொறுப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் இப்போர் முனையில் பணியாற்றிக்கொண்டிருந்த மகளிர் படை அணியின் தலைமையை மகளிர்படைப் பிரிவின் துணைத்தளபதி ராதா பொறுப்பேற்கின்றார்.

மீண்டும் 20ஆம் திகதி பி.ப 3:00 மணிக்கு சண்டை தொடங்குகின்றது. இப்போது புல்லாவெளி சந்தியை இலக்காகக் கொண்டே இராணுவத்தினது நகர்வு முயற்சி இருந்தது. சண்டையின் தீவிரம அதிகரிக்க அதிகரிக்க கவசவாகனங்களின் பாவனையையும் எதிரி அதிகரித்தான். சுமார் 100 கவச வாகனங்கள் சண்டையின் இந்தக்கட்டத்தில் பயன்படுத்தப்படத் தொடங்கிவிட்டது. அத்துடன் மிக உயரத்தில் இருந்த நிலையிலும் விமானங்கள் குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தன இராணுவம் புல்லாவெளியை வந்தடைந்ததும் சண்டை அதன் உச்சக்கட்டத்திற்கே சென்றது. இதனால் ஆனையிறவு தளத்தைச் சூழநின்ற எமது அணிகள் பல புல்லாவெளி சண்டைக் களத் துக் கு அனுப் பி வைக கப் பட் டுக் கொ ண்டிருந்தன.

ஆ.க. வெ. இராணுவ நடவடிக்கையின்போது, பயன்படுத்தப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கி உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில்

இதேசமயம் வெற்றிலைக்கேணியிலிருந்து, புல்லாவெளி வரை சுமார் 4 கி. மீ தூரத்துக்கு நீண்டு சங்கிலித்தொடராகக்கிடந்த இராணுவ அணியை ஊடறுத்து ஒரு தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டோம். அந்தத் தாக்குதல்மூலம் இராணுவ சங்கிலியை உடைத்து இராணுவத்துக்கு பெருமளவு உயிர்ச் சேதத்தை உண்டுபண்ணுவதுடன் நகர்வையும் குழப்பத்துக்குள்ளாக்க முயன்றோம்.

தகர்த்தெறிந்து நுழைதல் முறையிலான தாக்குதல்

அதன்படி 21 ஆம் திகதி மாலை 5:00 மணியளவில் முள்ளியானில் இருந்த இராணுவச் சங்கிலி மீது "தகர்த்தெறிந்து நுழைதல்" முறையிலான ஒரு அதிரடித்தாக்குதலை நடாத்தினோம் இந்தத் தாக்குதலை எமது தளபதிகளில் ஒருவரான திரு. சொர்ணம் தலைமைதாங்கி நடாத்தினார். இந்தத்தாக்குதல் வெற்றிகரமாக நடந்ததுடன் பெருமளவு ஆயுதங்களையும், வெடிப் பொருட்களையும் கைப்பற்றியிருந்தோம். இந்தத் தாக்குதலில் 90 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களில் 31 இராணுவத்தினது சடலங்களை நாம் எடுத்ததுடன் ஒரு இராணுவ வீரனும் கைது செய்யப்பட்டிருத்தான். வெற்றிலைக்கேணி – புல்லாவெளி போர்முனையில் ஒரே சமயத்தில் எதிரி சந்தித்த மிகப்பெரிய இழப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிரடியைத் தொடர்ந்து இராணுவத்தினது நகர்வு மந்த கதிக்கு சென்றுவிட்டது. இராணுவம் தனது போர்வீரர்களின் எண்ணிக்கையை பல்மடங்காக அதிகரித்தது. சேதமடைந்த அணிகளைப் போர்முனையிலிருந்து அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக புதிய அணிகளை சண்டைக்களத்துக்குக் கொண்டு வந்தது. புலிகளிடமிருந்து வரும் எதிர்ப்புகளை தணிக்க அளவுக்கதிகமான வெடிமருந்துகளைப் பயன் படுத்தத்தொடங்கியது.

22ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரை இராணுவத்தால் ஒரு பெரிய நகர்வை நடாத்த முடியாமலிருந்தது. 27ஆம் திகதி மீண்டுமொரு கவசவாகனத்தை அது இழந்திருந்தது. பின்னர் தனது படைபலத்தை சீராக்கிவிட்டு மீண்டும் 28ஆம் திகதி ஒரு படைநகர்வைச் செய்தது. அன்று காலை 9:00 மணிக்கு கவச வாகனங்கள் சகிதம் ஆனையிறவை நோக்கி தகரத்தொடங்கியது இந்தச் சண்டை பி.ப 5:30 வரை நீடித்தது. ஆனால் இராணுவத்தால் 500 யார் தூரம் வரைதான் முன்னேற முடிந்தது. இப்போது புல்லாவெளி சந்திக்கு அருகில் அதாவது வாடியடியிலிருந்து சுமார் 600 யார் தூரத்தில் இராணுவம் நிலைகொண்டிருந்தது.

கடல் வழியாக துருப்புக்கள் இறக்கப்படுவதும், காயம்டைந்த சிப்பாய்கள் மற்றும் சிதைந்த இராணுவ அணிகள் ஏற்றப்படுவதுமாக வெற்றிலைக்கேணி கடல் 24 மணிநேரமும் இராணுவப் படகுகளினால் நிறைந்து காணப்பட்டது.

29ஆம் திகதி பி.ப 1:00 மணிக்கு மீண்டும் சண்டை ஆரம்பமானது. அன்றைய தினம் எமது நிலைகளுக்குல்ளே கவச வாகனங்கள் புகுந்து தாக்கின. இந்தநிலையில்கைகலப்பைப் போன்று சண்டை நடந்தது இந்தச் சண்டையில் இரண்டு "பவள்" கவசவாகனங்களை நாசமாக்கினோம். அதே சமயம் எமது அணிகளும் சிலநூறு மீற்றர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

முறியடிக்கப்பட்ட வாடியடிச்சந்தி நோக்கிய நகர்வு

30ஆம் திகதி இராணுவம் இரு முனைகளுக் கூடான நகர்வொன்றை செய்யமுயன்றது. வாடியடிச் சந்திப்பக்கமாக ஒரு முயற்சியும் ஆனையிறவு கடனீரேரிப்பக்கமாக மற்ற முயற்சியையும் செய்தது.

வாடியடிச் சந்தியை அடைந்துவிட்டால் அங்கிருந்து இயக்கச்சியூடாக இராணுவம் ஆனையிறவு செல்வது சுலபமாகிவிடும். எனவே வாடியடிச் சந்தியைப் பாதுகாப்பதற்கு எமது அணிகள் போராடின. சண்டை தீவிரமடைய எமது அணிகளுக்கு உதவியாக பல புலிவீரர்கள் வெட்ட வெளியையும் பொருட்படுத்தாது வாடியடிச் சந்திக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் போகும் வழியிலேயே விமானக்குண்டு வீச்சுக்கோ அல்லது எறிகணைத் தாக்குதலுக்கோ ஆளானார்கள்.

இருந்தும் புலிகளுக்கே உரித்தான உறுதியுடன் எமது அணிகள் சண்டையைத் தொடர்ந்தன. இச் சந்தர்ப்பத்தில் இப்பகுதியில் போரிட்டுக்கொண்டிருந்த எமது படையணி ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் போரிட தளபதி ஜெயம் நியமிக்கப்பட்டார்.

இப்பகுதியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த பெண் போராளிகளுக்கு தலைமை வகித்த மகளிர் படையணியின் துணைத் தளபதி தனபதி ராதா கூறினார்…,

"காயமடைந்த, வீரமரணமடைந்த போராளிகளது இடத்தை நிரப்பி தொடர்ந்தும் போரிடுவதற்காக 30 போராளி அல்லது 50 களைக் கொண்ட அணிகளை அவ்வப்போது சண்டை முனைக்கு அழைத்தோம் – ஆனால் குறித்த இவ் அணிகள் சண்டைமுனைக்கு வரும் வழியிலேயே எறிகணைத் தாக்குதலால் அல்லது விமானக்குண்டுகளினால் 5 அல்லது 6 பேரை



இழக்கின்றது. காயமடைந்த இவர்களை பாதுகாப்பான இடத்திற்கு சேர்ப்பித்து மருத்துவ வசதி செய்வதற்காக மேலும் திற்கு 5 அல்லது 10 போராளிகள் தேவைப்படுகின்றனர். இந்த நிலையில் 30 போராளிகள் அனுப்பப்பட்ட குறித்த சண்டை முனைக்கு 15அல்லது 20 போராளிகள்தான் சென்றடைகின்றார்கள்.

இது தொடர்ந்தும் அம் முனையில் ஆள்பற்றாக்குறையையே ஏற்படுத்துகின்றது.

சண்டை முடியும் நாள்வரை இந்தச் சிக்கலை நாம் எதிர் கொண்டபடியே இருந்தோம்…” என தளபதி ராதா கூறினார்.

30ஆம் திகதியன்று சண்டை மாலைவரை தீவிரமாக நடந்தது. வாடியடிச் சத்தியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவ அணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனால் கடனீரேரிப் பக்கமாக முன்னே செல்ல முயன்ற அணிகள் சிலநூறு யார் தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன.

31ஆம் திகதி பெரிய அளவில் அளவில் சண்டை நடைபெறவில்லை. பின்னர் மீண்டும், 1ஆம். 2ஆம் திதிகளில் சண்டை தீவிர மடைந்தது. இராணுவம் தனது கவசவாகன பலத்தை நீரிணைப்கதியெங்கும் பயன்படுத்தியது. நீரிணை அருகால் நகர்ந்த துருப்புக்கள் எமது போராளிகளின் எதிர்ப்புக்களைச் சந்தித்தபடி ஆனையிறவு தளத்தின் ஒரு பகுதியா தடைமுகாமை காவல் காத்துநிற்கும் எமது காவல் அரண்களுக்கு அருஇல் வந்துவிட்டன. இப்போது இருமனைகளிலிருந்தும் எமது அரண்கள். எறிகணைகளால் தாக்கப்பட்டன. முன்னேறி வந்த இராணுவம் ஒருபுறமும், ஆனையிறவுத்தளத்திலிருந்த இராணுவம் மறுபுற முமாக தாக்குதலைத் தொடுத்தது.



படையினரின் தள நுழைவு

3ஆம் திகதி எமது காவல் அரண்களிலே கடும் சண்டை தொடங்கியது. அன்று காலை தொடங்கிய சண்டை மாலை வரை நீடித்தது.

இராணுவம் சில மணி நேரத்துள் தளத்துக்குள் சென்றுவிடும் என்று தெரிந்திருந்தும் இறுதிவரை எமது போராவிகள் சளைக் காது போரிட்டனர். இது எதிரியைப்பிரமிப்படையச் செய்தி ருக்கும்.

3ஆம் திகதி மாலை தடை முகாமின் பின்பகுதியூடாக ஒருபகுதி இராணுவம் ஆனையிறவுத் தளத்தினுள் புகுந்து கொண்டது. இராணுவம் உள் நுழைந்த நீரிணைவழியாக வாகனங்கள் உட்செல்ல முடியாது.

எனவே அடுத்தநாள் 4ஆம் திகதி பி.ப 1:00 மணியளவில் மீண் டும் சண்டை தொடங்கியது. இந்தச் சண்டை தடைமுகாமி லிருந்து ஆனையிறவு – இயக்கச்சி பிரதான பாதையில் சுமார் 1. கி. மீ தூரத்தை கைப்பற்றுவதையே நோக்கமாகக் கொண் டிருந்தது. அப்போது தான் அவர்களது வாகனங்களை ஆனையிறவு தளத்துக்குள் கொண்டுசெல்ல முடியும். அதன்படி மாலையே அந்தப்பாதையை கைப்பற்றிய இராணுவம் அங் கிருந்து ஆனையிறவுத் தலத்துடன் ஒரு இணைப்பை ஏற் படுத்திக் கொண்டுவிட்டது.

இதேவேளை அன்றுவிடியற் காலை (5ஆம் திகதி அதிகாலை) புல்லாவெளியில் வைத்து இராணுவ தொடர் சங்கிலி மீது மீண்டும் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தினோம். இதில் 43 புலி வீரர்கள் வீரமரணமடைந்தார்கள். இத்தாக்குதல் நாம் எதிர்பார்த்த வெற்றியைத் தேடித்தரவில்லை. இத்துடன் வெற்றிலைக்கேணி – புல்லாவெளி நேரடிச் சண்டை தணிந்து விடுகின்றது.

இதன்பின்னர் தளத்தில் தென் பகுதியில் சண்டை தொடங்குகின்றது. நாம் முன்னரே கைப்பற்றிவைத்திருந்த உல்லாச விடுதி முகாமை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் சண்டை தீவிரமடைந்தது. 7ஆம், 8ஆம் திகதிகளில் உல்லாச விடுதிமீது ஒரு தீவிர தாக்குதலை இராணுவம் தொடுத்தது. பல இராணுவத்தினரை இழந்து 8ஆம் திகதி மாலை உல்லாச விடுதி முகாமை மீளவும் இராணுவம் மேலும் ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறி கைப்பற்றிக் கொண்டது.

9ஆம் திகதியுடன் ஆனையிறவுச்சமர் முடிவுக்குவருகின்றது. அங்கேயே தனது நிலைகளை அமைத்து இச்செய்தி எழுதப்படும் வரை நிலைகொண்டிருக்கின்றது.

அதேசமயம் வெற்றிலைக்கேணிக் கடற்கரையிலிருந்து ஆனையிறவுத் தளம்வரை தொடர் சங்கிலிபோன்று நிலைகொண்டிருந்த இராணுவம் அத்தொடர் சங்கிலியை முழுமையாகவே எடுத்து விட்டு வெற்றிலைக்கேணியில் ஒருபெரிய முகாமை அமைத்து வைத்திருக்கின்றது.

- விடுதலைப்புலிகள் (ஆவணி — புரட்டாதி 1991)

You too U.N.?

SRI LANKAN CONTRIBUTION TO
UNITED NATIONS PEACEKEEPING OPERATIONS

தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

09.09.1990 சத்துருக்கொண்டான் இனப்படுகொலை

மட்டக்களப்பு நகரிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் வடக்குத் திசையில் சத்துருக் கொண்டான் கிராமம் அமைந்துள்ளது. சத்துருக் கொண்டான் எல்லைக் கிராமங்களாக திராய் மடு, அரசையடி போன்ற கிராமங்கள் அமைந் துள்ளன. சிறிய குளத்தின் கீழ் வயல் நிலங் களை உள்ளடக்கி இக்கிராமம் அமைந் துள்ளது.

1990களின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து சத் துருக்கொண்டானில் பாரிய இராணுவ முகா மினை சிறீலங்கா இராணுவத்தினர் அமைத் தார்கள். இதனால் மக்கள் இடம்பெயர்ந்து பாட சாலைகளிலும், கோயில்களிலும் பொது இடங் களிலும் தஞ்சமடைந்தார்கள். இவ்வாறு தஞ்சமடைந்த மக்களை மீண்டும் அவர்களின் வீடுகளில் சென்று குடியமருமாறு இராணுவத் தினர் கூறியதனைத் தொடர்ந்து, மக்கள் தங் களின் வீடுகளில் குடியமர்ந்தார்கள். இரா ணுவத்தின் கூற்றை நம்பிய தத்தமது வீடு களில் வசிக்க வந்த மக்களனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் எண்பத்தைந்து பேர் பெண்கள். இவர்களை முகாமிலிருந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பாலி யல் வல்லுறவிற்குற்படுத்திபின், அவர்களின் மார்பகங்கள், கை, கால் போன்றவற்றினை வெட்டி மிக மோசமான முறையிற் சித்திர வதை செய்து படுகொலை செய்தார்கள். கைது செய்யப்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட அறு

பத்தெட்டுச் சிறுவர்களையும் மோசமான சித் திரவதைகளின் பின் சுட்டுக்கொலை செய் ததுடன், பதினேழு பேரளவிலான ஆண் களின் அங்கங்களை வெட்டிச் சித்திரவதை செய்து படுகொலை செய்தார்கள். மொத்தமாக இருநூற்றைந்து பேர் இச்சத்துருக்கொண்டான் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர் களில் இருபத்தொரு வயதான கந்தசாமி கிருஸ்ணகுமார் மட்டுமே காயங்களுடன் தப்பி வந்து சம்பவத்தினை வெளிப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் அமைப்பு சம்பவத்தினை வெளிப்படுத்தியது. ஆனால் இராணுவத்தினர் இவ்வாறு ஒரு சம் பவம் நடைபெறவில்லை எனத் தெரிவித் ததுடன், மக்கள் அமைப்பின் தலைவரான அருணகிரிநாதன் அவர்களை மிரட்டி இவ் வாறான சம்பவம் ஒன்று நடைபெறவில்லை என எழுத்து மூலம் பொய் அறிக்கையினைத் தருமாறு வற்புறுத்தினர். இதனையடுத்து மக்கள் அமைப்பின் தலைவர் தனது பதவியி னைத் துறந்தார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.நாகம்மா - வீட்டுப்பணி - 26
02. இ.தீபா - 10
03. இ.ஜெகதீசன் - 10
04. ஜி.குமுதினி - 12
05. ஜி.நேசம்மா - 25
06. ஜி.தேவராசி - 27
07. ஜி.சந்திரியா - 19
08. ஜி.சீனித்தம்பி - 70
09. ஜி.வனிதா - 12
10. ஈ.ஜீவநாதன் - 30
11. யு.மரியமுத்து - வீட்டுப்பணி - 33
12. யு.கோபிக்கண்ணன் - 12
13. யி.சீனித்தம்பி - -
14. உ.காளிமுத்து - சுயதொழில் - 55
15. உமைத்தம்பி - 70
16. நல்லையா இரமச்சந்திரன் - சுயதொழில் - 44
17. க.நல்லையா - சுயதொழில் - 72

19. கந்தன் இளையதம்பி - 55
20. கமலா - 09
21. கணபதிப்பிள்ளை தங்கமுத்து - சுய தொழில் - 46
22. பி.கந்தசாமி - 29
23. பி.கமலநாதன் - 09
24. பி.கவிதா - 12
25. பி.தமேந்தினி - 04
26. பி.ஆச்சிமுத்து - 76
27. பி.பொன்னம்மா - 70
28. பி.சந்தனம் - 37
29. பி.சிறிலட்சுமி - 18
30. பி.வினோதினி - 12
31. பி.வசந்தி - 23
32. பிரபா - 02
33. ரி.டிலானி - 05
34. ரி.நந்தினி - 16
35. ரி.நாதன் - 12
36. ரி.நாகேஸ்வரி - 37
37. ரி.நிதர்சினி - 12
38. ரி.குகன் - 10
39. ரி.கிருபாகரன் - 03
40. ரி.கண்மணி - 32
41. ரி.கண்ணன் - 25
42. ரி.பூபாலப்பிள்ளை - 65
43. ரி.பரம்சோதி - 37
44. ரி.பிரதீபன் - 05
45. ரி.தில்லையம்மா - 63
46. ரி.மகாலட்சுமி - 31
47. ரி.மலை - 55
48. ரி.ஜெயக்காந்தன் - 10
49. ரி.ஜெகன் - 09
50. ரி.மோகனச்சந்திரன் - 27
51. ரி.செல்வா - 07
52. ரி.சிறி - 28
53. ரி.விஜயகுமார் (குமரன்) - 08
54. ரி.விஜயலட்சுமி - 29
55. ரி.வசந்தி - 01
56. ரி.ராசேந்திரன் - 04
57. ஐ.முருகன் - 65
58. வை.தங்கம்மா - 38
59. வைரமுத்து அற்புதவடிவேல் - சுய தொழில் - 46
60. த.கணபதிப்பிள்ளை - 50
61. தம்பிப்பிள்ளை 72
62. தம்பிஜயா கிருபைரத்தினம் - சுயதொழில் - 50
63. ம.செல்வநாயகம் - 55
64. மு.ராமையா - 70
65. ஆர்.கமலராஜ் - 11
66. ஆர்.நேசம்மா - 62
67. ஆர்.சுதாகரன் - 10
68. ஆர்.விஜி - 08
69. ஆர்.வசந்தி - 15
70. அழகையா நாகரெட்ணம் - வீட்டுப்பணி - 16
71. அழகையா மஞ்சுளா - வீட்டுப்பணி - 14
72. அழகையா சௌந்திரராஜன் - மாணவர் - 12
73. ஜெ.விஜயலட்சுமி - 10
74. ஜெ.ரமணி - 02
75. கே.மூத்ததம்பி - 79
76. கே.இளையதம்பி - 55
77. கே.ஈழன் - 15
78. கே.நாகரட்ணம் - 40
79. கே.நல்லையா - 72
80. கே.நல்லம்மா – 66
81. கே.கரிகரன் - 08
82. கே.கதிர்காமத்தம்பி - 75
83. கே.கதிர்காமத்தம்பி - 68
84. கே.குமுதா - 23
85. கே.கமலன் - 06
86. கே.கீதா - 12
87. கே.கிருஸ்ணபிள்ளை - 14
88. கே.கண்ணன் - 10
89. கே.பாக்கியம் - 46
90. கே.தாரணி - 04
91. கே.தம்பையா - 65
92. கே.தங்கம்மா - வீட்டுப்பணி - 75
93. கே.தங்கவேல் 26
94. கே.அரசம்மா - 60
95. கே.நேசம்மா - 48
96. கே.சதீஸ் - 04
97. கே.சியாமளா - 13
98. கே.சின்னமுத்து - 66
99. கே.சிவதர்சன் - 05
100. கே.சவுந்தரம் - 38
101. கே.விமலா - 02
102. கே.வசிகலா - 13
103. கே.ராசாத்தி - 12
104. கே.ரமேஸ்கரன் - 07
105. பெரியதம்பி சுயதொழில் 75
106. தேவி - 32
107. செபஸ்லின் செல்வநாயகம் - கூலித் தொழில் - 45
108. வேணுராஜ் - 25
109. லெட்சுமி - சுயதொழில் - 48
110. ஞா.சௌந்தரராயன் - 26
111. சாந்திமதி - தனியார்தொழில் - 20
112. சாமித்தம்பி அழகையா - கூலித்தொழில் - 34
113. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை - சுய தொழில் - 68
114. சீனி கோபால் - 57
115. சித்திராதேவி - 29
116. சிவதர்சினி - 04
117. வி.நல்லையா - 27
118. வி.பூமணி - 45
119. வி.யோகிவடிவேல் - மாணவர் - 06
120. வி.சர்மிளா - மாணவர் - 08
121. வி.சாந்திமதி - 20
122. வி.லட்சுமி - 48
123. இரட்ணராஜா ருக்தி - 06
124. ஏ.ஜீவா - 15
125. எ.உமைத்தம்பி - 70
126. ஏ.நவரட்ணம் - 45
127. ஏ.மஞ்சுளா - 18
128. ஏ.ஆத்தப்பிள்ளை - 72
129. ஏ.அழகையா - 10
130. ஏ.அருள் - 09
131. ஏ.பொன்னுத்துரை - 62
132. ஏ.சுதா - 09
133. ஏ.சீத்தா - 18
134. எஸ்.இந்திராணி - 10
135. எஸ்.ஜீவமலர் - 25
136. எஸ்.நாகதேசி - 12
137. எஸ்.நிர்மலா - 13
138. எஸ்.நல்லையா - 45
139. எஸ்.கந்தசாமி - 29
140. எஸ்.காசிபதியர் - 60
141. எஸ்.கஜேந்தினி - 02
142. எஸ்.கவிதா - 09
143. எஸ்.குணரட்ணம் - 33
144. எஸ்.பாலிப்போடி - 62
145. எஸ்.பிரியா - 03 மாதம்
146. எஸ்.புண்ணியமூர்த்தி - 13
147. எஸ்.தங்கம்மா - 57
148. எஸ்.தங்கேஸ்வரி - 24
149. எஸ்.தவகுணேஸ்வரன் - 25
150. எஸ்.மகேஸ்வரி - 28
151. எஸ்.மலர் - 09
152. எஸ்.அழகையா - 50
153. எஸ்.யோகராசா - 14
154. எஸ்.நேசம் - 52
155. எஸ்.பொன்னம்பலம் - 55
156. எஸ்.பொன்னம்மா - 24
157. எஸ்.தெய்வானை - 45
158. எஸ்.செல்வராசா - 31
159. எஸ்.ஞானேஸ்வரி - 38
160. எஸ்.சபாபதிப்பிள்ளை - 70
161. எஸ்.சுரேஸ் - 02
162. எஸ்.சரோசாதேவி - 28
163. எஸ்.சின்னப்பிள்ளை - 35
164. எஸ்.சின்னத்தம்பி - 27
165. எஸ்.சீவரத்தினம் - 12
166. எஸ்.வடிவேல் - 65
167. எஸ்.விஜயன் - 01
168. எஸ்.வினோதரன் - 05
169. எஸ்.வள்ளிப்பிள்ளை - 75
170. எஸ்.ராசலிங்கம் - 58
171. எஸ்.ரவீந்திரன் - 21
172. எய்.நாகரெட்ணம் - சுயதொழில் - 45
173. எய்.சுதா - மாணவர் - 09
174. என்.இராசம்மா - 70
175. என்.குமுதினி - 18
176. என்.பாக்கியம் - 66
177. என்.பாலாத்தை - 70
178. என்.பிரேமா - 18
179. என்.பிரதீபன் - 05
180. என்.தர்சினி - 06
181. என்.தீபன் - 09
182. என்.ஜெகன் - 12
183. என்.சொர்ணம்மா - 44
184. என்.வேணுதாஸ் - 03 மாதம்
185. என்.வேணுராஜ் - 04 மாதம்
186. என்.ஞானரத்தினம் - 32
187. என்.சித்திராதேவி - 22
188. என்.சிவதர்சன் - 25
189. எம்.பாக்கியம் - வீட்டுப்பணி - 53
190. எம்.பரமேஸ்வரி - 32
191. எம்.சைலயா - 07
192. எம்.வைரமுத்து - 55
193. எம்.துளசி - 04
194. எம்.பெரியதம்பி - 75
195. எம்.தேவகி - 25
196. எம்.சுபோசினி - 12
197. எம்.சிவஞானம் - 35
198. எம்.விஜயன் - 19
199. எம்.ராசா – 24

கொண்டுசெல்லப்பட்ட இருபத்து மூன்று இளைஞர்களும் கடும் சித்திரவதைகளினால் உயிரிழந்தார்கள். 12.09.1990 அன்று சித்திரவதையினால் உயிரிழந்த அனைவரது உடல்களையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரே குழியினுள் போட்டுப் புதைத்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி செல்வராசா - 30
02 கனகசூரியர் கோபாலசிங்கம் - 28
03 கனகரத்தினம் தங்கவேல் - 19
04 கந்தப்போடி புஸ்பராசா - 23
05 காசிப்பிள்ளை சிவகுமார் - 31
06 குழந்தைவேல் பொன்னுத்துரை - 26
07 குலசேகரம் செல்வநாயகம் - 26
08 கணபதிப்பிள்ளை நேசதுரை - 22
09 குணரத்தினம் முரளிதரன் - 21
10 குணரத்தினம் சுதாகரன் - 23
11 துரையப்பா நடேசன் - 23
12 தம்பிமுத்து பாக்கியராசா - 27
13 தம்பிராசா விவேகானந்தன் - 22
14 மயில்வாகனம் பரமேஸ்வரன் - 27
15 ஆறுமுகம் நடேசன் - 29
16 வெள்ளைப்பொடி தவராசா - 23
17 ஞானப்பிரகாசம் யூவானில் - 22
18 சதாசிவம் தங்கத்துரை - 23
19 சிவநாதபிள்ளை தங்கத்துரை - 23
20 வீரக்குட்டி தங்கவேல் - 27
21 வரதராசன் வரதீஸ்வரன் - 20
22 இராசமாணிக்கம் தியாகராசா - 23
23 ஏகாம்பரம் தமிழ்வாணன் - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

[redacted]

வந்தாறுமூலைப்படுகொலை
05,23.09.1990

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் வந்தாறு மூலைக் கிராமதத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இலங் கையிலுள்ள பதின்மூன்று பல்கலைக்கழகங் களில் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒன் றாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மூவா யிரம் மாணவர்கள் வரை ஆண்டு தோறும் கல்வி கற்கிறார்கள்.

இவர்களில் ஏறக்குறைய ஐநூறு முதல் எழு நூறு வரையான பட்டதாரிகள் ஆண்டு தோறும் வெளியேறுகின்றார்கள். இப்பல் கலைக்கழகத்தில் கலை, வர்த்தகம், முகா மைத்துவம், விஞ்ஞானம், பௌதீகவியல், கணினி, இசை, நடனம் போன்ற பல்வேறு துறைகள் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப் படுகின்றன.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மட்டக் களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொது மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகப் பொதுமக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தார்கள்.

உலகத்தில் பல்கலைக்கழகங்கள், வைத்திய சாலைகள் பாடசாலைகள் வணக்கத்தலங்கள் போன்றவற்றில் பொதுமக்கள் தங்களைப் பாது காப்பதற்காகச் தஞ்சமடைவது வழக்கமாகும்.

அவ்வாறே கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பொதுமக்கள் தஞ்சமடைந்தனர். 05.09.1990 அன்று சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிலிருந்து பெருந்தொகையான இராணு வத்தினர் வாகனங்களில் பல்கலைக் கழகத் திற்கு வந்து பல்கலைக்கழகத்தில் அகதிக ளாகத் தஞ்சமடைந்திருந்த இளைஞர்களில் 158 பேரைக் கைதுசெய்து கைகள், கால்கள் கட்டி இராணுவ வாகனங்களில் ஏற்றி, எல்லை யோரக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று, துப்பாக்கிகளால் சுட்டும், ஏனைய கூரிய ஆயு தங்களினால் தாக்கிப் படுகொலை செய்தனர்.

23.09.1990 இல் மீண்டும் கிழக்குப் பல் கலைக்கழகத்திற்கு வந்த இராணுவத்தினர் அங்கு தஞ்சமடைந்திருந்த 16 பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்று, முதல் நாள் போன்றே இவர்களையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது உயிர் களைப் பாதுகாப்பதற்காக தமது வீடுகள், சொத் துக்கள் உட்பட அனைத்து உடமைகளையும் இழந்து மூன்றுவேளை உணவினை ஒழுங் காக உண்ண முடியாமல் அகதிகளாக இருந்த பொதுமக்களில் இருநூற்றி இருபத்தாறு பேர் இராணுவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அத்துடன், பலர் காணாமல் போனார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி பாக்கியநாதன் - தொழிலாளி - 22
02. இராசையா ஜெயநாதன் தொழிலாளி 35
03. இராசையா டேவிட் - சாரதி - 34
04. இராசதுரை கனகசபை - கடற்தொழில் - 18
05. நாகராசா ரகுநந்தன் - தொழிலாளி - 27
06. நடராசா ஜோச்ஸ்ரான்லி - அரசஊத்தி யோகத்தர் - 39
07. நடேசன் சுப்பிரமணியம் - சுயதொழில் - 29
08. நவரத்தினம் பிரியதர்சினி - 5
09. நல்லதம்பி மகேந்திரன் - தொழிலாளி - 28
10. நல்லதம்பி நாகராசா - சுயதொழில் - 25
11. கந்தையா கதிரவேல் - தொழிலாளி - 20
12. கந்தையா தவராசா - தொழிலாளி - 18
13. கந்தையா ஆனந்தரெட்ணம் - கடற் தொழில் - 28
14. கந்தையா செல்வராசா - தொழிலாளி - 28
15. கந்தப்போடி ஜெயசீலன் - தொழிலாளி - 19
16. கந்தப்போடி செல்வராசா - தொழிலாளி - 45
17. கந்தசாமி நவரெட்ணம் - சுயதொழில் - 19
18. கந்தசாமி சிறிஸ்கந்தராசா - சுயதொழில் - 24
19. கதிராமப்போடி பரமேஸ்வரி - வீட்டுப்பணி - 31
20. கணேசன் தியாகராசா - தொழிலாளி - 24
21. கிருஸ்ணப்பிள்ளை முருகேசு - தொழி லாளி - 24
22. கருணாகரன் அருணாசலம் - தொழி லாளி - 29
23. கணபதிப்பிள்ளை தங்கத்துரை - சுய தொழில் - 25
24. கணபதிப்பிள்ளை முருகையா - தொழி லாளி - 18
25. பூபாலப்பிள்ளை தெய்வேந்திரமூர்த்தி - அரசஊழியர் - 33
26. பஞ்சாசரம் நடராசா - தொழிலாளி - 25
27. வைரமுத்து புஸ்பராசா - சுயதொழில் - 40
28. வைரமுத்து தர்மலிங்கம் - சுயதொழில் - 60
29. தாமோதிரம் வள்ளிப்பிள்ளை - விவசாயம் - 77
30. தம்பிஜயா ஜெகன் - தொழிலற்றோர் - 11
31. தம்பியப்பா வினாயகமூர்த்தி - சாரதி - 26
32. தம்பிமுத்து பீதாம்பரம் மாணவா் 18
33. மார்க்கண்டு மகேந்திரன் - தனியார் தொழில் - 19
34. மாமாங்கம் சண்முகநாதன் - கடற் தொழில் - 18
35. மாரியப்பா தமிழ்செல்வன் - மாணவர் - 15
36. முத்தையா கந்தசாமி - மாணவர் - 19
37. முத்துப்பிள்ளை தருமலிங்கம் - தொழி லாளி - 69
38. மூத்ததம்பி சின்னமுத்து - தொழிலற்றோர் - 70
39. முத்துலிங்கம் மோகனசுந்தரம் - கடற் தொழில் - 27
40. மகேந்திராஜா சிலக்சனா - தொழிலற் றோர் - 6
41. அமிர்தலிங்கம் ஜெயசங்கர் - சுயதொழில் - 36
42. அழகிப்போடி குமார் - மாணவர் - 21
43. அழகையா யோகராசா - தொழிலாளி - 19
44. அருமைத்துரை விமலன் - தொழிலாளி - 18
45. அருமைத்துரை இன்பம் - சுயதொழில் - 18
46. அருணாச்சலம் சின்னத்தம்பி - கடற் தொழில் - 44
47. ஆறுமுகம் கந்தலிங்கம் - சுயதொழில் - 30
48. ஆறுமுகம் கிருபாமூர்த்தி - தொழிலாளி - 26
49. ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை - தொழி லாளி - 22
50. ஆறுமுகம் விவேகானந்தன் - தனியார் தொழில் - 29
51. அல்போன்ஸ் நெல்சன் - மாணவர் - 18
52. ஜோசப் சுந்தரலிங்கம் - தொழிலாளி - 33
53. ஜோசப் சிவகுமார் - தொழிலாளி - 16
54. கே.கனேஸ்வரி - தனியார்தொழில் - 26
55. கே.சீதேவி - தொழிலற்றோர் - 5
56. கோ.மகேந்திரன் - சுயதொழில் - 27
57. சோமலிங்கம் வாசகன் - அரசஊழியர் - 70
58. செல்லையா உதயநாதன் - விவசாயம் - 28
59. செல்லையா சுப்பிரமணியம் - சுயதொழில் - 59
60. செல்வராசா உதயகுமார் - சுயதொழில் - 31
61. செல்வராசா நவரெத்தினம் - தொழிலாளி - 27
62. வெள்ளைச்சாமி கண்ணையா - விவ சாயம் - 45
63. வேலுப்பிள்ளை பாக்கியராசா - சுய தொழில் - 32
64. வேலுப்பிள்ளை யோகன் - சுயதொழில் - 30
65. வேலுப்பிள்ளை ராசு - தொழிலாளி - 22
66. ஞானமூர்த்தி கதிர்காமத்தம்பி - தனியார் தொழில் - 20
67. சுப்பையா பாலசுப்பிரமணியம் - சுய தொழில் - 40
68. சுப்பையா எட்மன் - சுயதொழில் - 19
69. சதாசிவம் குபேரன் - சுயதொழில் - 19
70. சி.சரோசாதேவி - தனியார்தொழில் - 25
71. சின்னப்பு யோகராசா - சுயதொழில் - 28
72. சின்னத்துரை புஸ்பராசா - கடற்தொழில் - 22
73. சின்னத்தம்பி யோனாஸ் - சுயதொழில் - 35
74. சின்னராசா ராஜேந்திரம் - மாணவர் - 23
75. சீனித்தம்பி பிள்ளைநாயகம் - தொழிலாளி - 22
76. சித்திரவேல் சதாநந்தகுமார் - மாணவர் - 16
77. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் - அரச ஊழியர் - 40
78. சிவகுரு நடராசா - சுயதொழில் - 37
79. சிவசுப்பிரமணியம் கிருபாகரன் - மாணவர் - 21
80. சிவலிங்கம் செல்லத்தம்பி - சுயதொழில் - 21
81. சண்முகம் செல்வரெத்தினம் - மாணவர் - 6
82. வீரக்குட்டி பாலகப்பொடி - தொழிலாளி - 55
83. எ.காசுபதி - தொழிலாளி - 74

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இந்துமதி - மாணவர் - 15
02. புலேந்திரன் சாந்தமேரி - கடற்தொழில் - 04
03. தம்பியப்பா குழந்தைவேல் - சுயதொழில் - 25
04. தங்கராசா பிரபானந்தராசா - சுயதொழில் - 27
05. சீ.சம்புரணநாதன் - சுயதொழில் - 27
06. சித்திரவேல் மணிமேகலை - தொழி லாளி - 18

இச்சம்பவத்தில் காணாமல்போனவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராஜேஸ்வரி ரஞ்சன் - தொழிலாளி - 27
02 இராசநாயகம் சிவலோகநாயகி - அரச ஊழியர் - 17
03. ந. கிருபாகரன் - தொழிலாளி - 22
04. கந்தையா முத்துவடிவேல் - தொழிலாளி - 17
05. குட்டியாண்டி இராமசாமி - மாணவர் - 22
06. தம்பியப்பா சகாயராசா - தொழிலாளி - 25
07. மாடசாமி சங்கர் - மாணவர் - 22
08. செல்வநாயகம் ஜெயராசா - விவசாயம் - 21
09. சா.வினோராஜ் - மாணவர் - 22
10. சாமுவேல் யோகேந்திரன் - தொழிலாளி - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

கைதடி கிருசாந்தி படுகொலை 07.09.1996

கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்

யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடிக் கிராமம் அமைந்துள்ளது. யாழ் நகரப் பகுதியிலிருந்து கிழக்குப் புறமாக யாழ். - கண்டி வீதி வழியாக ஏறக்குறைய ஐந்து மைல் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.

கைதடிச் சந்தியிலிருந்து வடக்குப் புறமாக இருநூறு யார் தூரத்தில் கிருசாந்தியின் வாழ்விடம் உள்ளது. இயற்கை எழில் கொண்டதும், பெரும்பகுதி விவசாயப் பகுதியாகவுமுள்ள கைதடிக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குமாரசாமி இராசம்மா தம்பதியினர் பிரசாந்தி, கிருசாந்தி, பிரணவன் ஆகிய மூன்று பிள்ளைகளோடு தமது வாழ்க்கையினை நடத்தி வந்தார்கள்.

தந்தையார் குமாரசாமி 1984 தை மாதம் காலமானதும், தாயின் அரவணைப்பிற் பிள்ளைகள் வாழ்ந்து வந்தார்கள். தந்தையின் இழப்பின் பின் மூத்த புதல்வி பிரசாந்தி க.பொ.த உயர்தரம் வரை கல்விகற்று, உயர்கல்வி கற்பதற்கு வசதிகளற்று உறவினர்களின் உதவியுடன் கொழும்பில் சிறிது காலம் தங்கியிருந்து கணினிக் கல்வி கற்றுப் பின்னர் வெளிநாடு செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்து வெளிநாடு சென்றார்.

குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது மகளான கிருசாந்தி யாழ். சுண்டுக்குளி

மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தார். கல்விப் படிப்பில் க.பொ.த சாதாரண பிரிவில் திறமை சித்தியடைந்ததும், க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று வந்தார். இளைய மகன் பிரணவன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் சாதாரண பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தார்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் கல்வி பயின்று வந்த கிருசாந்தி முதல் நாள் நடந்த இரசாயனவியற் பாடத்தினை திறம்பட எழுதியிருந்தார். இப் பாடத்திற்குரிய பெறுபேறு முதல் தரம் எனப் பின்னர் தெரியவந்தது. 07.09.1996 அன்று நடந்த இரண்டாவது பாடம் இராசாயனவியல் பகுதி ஒன்று பரீட்சையை எழுதியிருந்தார்.

அன்றையதினம் தனது உற்ற நண்பி ஜனாநந்தினி கணநாதனின் மரணச் சடங்கிற்குச் சென்று விட்டு மதியம் 01:30 மணியளவில் கண்டி வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார் அவ்வேளை செம்மணி வெளியருகில் யாழ் நகரை வரவேற்கும் வரவேற்பு வளைவு அமைந்துள்ள இடத்தில் காவலரணிலிருந்த இராணுவத்தினர் கிருசாந்தியை வழிமறித்து நாற்பத்தைந்து நிமிடங்களாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

கிருசாந்தி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட உறவினர் தாயாரிடம் சென்று சம்பவத்தினைத் தெரியப்படுத்தியிருந்தார். மதியம் 02:30 மணியளவில் சம்பவத்தினைக் கேள்வியுற்ற தாயார் இராசம்மா அயலவரான கிருபாமூர்த்தியின் உதவியுடன் சம்பவ இடத்தினை நோக்கி விரைந்தார். இதன் பின்னர் தமது படிப்பினை முடித்து வீடு திரும்பிய கிருசாந்தியின் தம்பியார் பிரணவனும் சம்பவத்தினை அறிந்து தயாருக்குப் பின்னால் சென்றார். தாயார் இராசம்மா குமாரசாமி, இளைய சகோதரன் பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட கிருசாந்தியைக் காணவில்லை. செம்மணி வீதியில் அமைந் திருந்த இராணுவ காவலரணிற் கேட்டபோது தாங்கள் யாரையும் கைது செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்கள். இதைத் தொடர்ந்து தாயார் சுண்டுக்குளி பாடசாலை மற்றும் மரணச் சடங்கு நிகழ்ந்த ஜனாநந்தினி கணநாதன் வீட்டிற்கு சென்று விசாரித்தபோது, கிருசாந்தி வந்து போனதாகக் கூறினார்கள். மீண்டும் தாயார் கிருசாந்தி தடுத்து வைக்கப் பட்டு விசாரிதத் இடமான செம்மணிப் பகுதிக் காவலரணில் கடமையிலிருந்த படையினரிடம் விசாரிக்கச் சென்ற பின்னர் இவர்களும் காணாமற்போனார்கள்.

1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்குடா முழுவதையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்த பின்னர் மாலை 6மணியுடன் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்தது. இவ்வாறான நெருக்குவாரங்களிற்

கிருசாந்தி குமாரசாமி

குள் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இதனால் 07.09.1996 அன்றைய தினம் கிருசாந்தியைத் தேடிச் சென்ற தாயார், தம்பியார், அயலவர் ஆகியோர் மாலை நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. ஆயினும் ஊரடங்கு உத்தரவால் உறவினர்களால் உடனடியாக விசாரிக்க முடியாதிருந்தது. மறுநாள் 08.09.1996 காலை கிருசாந்தி குடும்பத்தினரது உறவினர்களான ஆறுமுகநாதன், கோடீஸ்வரன் ஆகியோரும் கிருபா மூர்த்தியின் மனைவியான புவனேஸ்வரியும் தமது குடும்ப உறவினர்களைத் தேடி அதே இராணுவ முகாமிற்குச் சென்று விசாரித்த போது, அப்படி இங்கு யாரையும் கைது செய்யவில்லை எனத்தெரிவித்தார்கள். பின்னர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு, யாழ் காவற்றுறை நிலையம் போன்ற இடங்களில் முறைப்பாடுகள் செய்தார்கள். இருந்த போதும் அவர்களது மனம் கேட்காது மீண்டும் சம்பவம் நிகழ்ந்த செம்மணிக் காவலரணிலிருந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது "நாங்கள் யாரையும் கைது செய்யயவில்லை எனினும் மாலை நேரம் வந்து பாருங்கோ" என்றனர். இதைக்கேட்ட உறவினர்கள் கிருசாந்தி குடம்பத்தினருக்கு ஏற்பட்ட நிலை தமக்கும் ஏற்பட்டு விடுமோ எனப் பயந்து மாலைவேளை அங்கு செல்லவில்லை. தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக் குழு, காவற்றுறை நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தார்கள்.

உறவினர்கள் எடுத்த முயற்சியின் பயனாக சம்பவதினதத்திலிருந்து நாற்பத்தைந்தாம் நாள் இராணுவத்தின் ஐநூற்று இருபத்தோராம் பிரிகேட் படைப்பிரிவு அதிகாரிகள் உறவினர்களை விசாரணைக்காக அழைத்தார்கள். இதில் ஆறுமுகநாதன், புவனேஸ்வரி, கோடீஸ்வரன் ஆகியோர் சென்றிருந்தனர். விசாரணைகளில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்பட்ட இராணுவத்தினர் ஆறு பேரையும் அழைத்து விசாரித்தபோது, கிருசாந்தி குடும்பத்தினர் உயிருடன் இல்லை என்ற செய்தி உறவினர்களிடம் கூறப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு இராணுவத்தினரும் இரண்டு காவற்றுறையினரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தினையும், புதைகுழியையும் காட்டுவதாக ஒப்புக்கொண்டனர். யாழ். வரவேற்பு வளைவு அமைந்துள்ள பகுதியிலிருந்த செம்மணிக் காவலரணிலிருந்து நூறு யார் தூரத்தில் நாயன்மார்கட்டு வீதியிலுள்ள மதகு அருகில் புதைகுழி அமைந்திருந்தது. கிருசாந்தியும் தாயாரும் ஒரு புதைகுழியிலும், பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி இன்னொரு புதைகுழியிலுமாகக் கிடந்தனர். நான்கு அடி ஆழத்தில் உருக்குலைந்து, சிதைந்து, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டன. கிருசாந்தியின் தாயார் அணிந்த சேலை, மூக்குக்கண்ணாடி, செருப்பு என்பன ஒரு பொலித்தீன் பையில் புதைகுழியினுள் கிடந்தது.

கிருசாந்தி படையினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும் கழுத்துப் பகுதி கயிற்றினால் நெரித்துக் கொல்லப்பட்டிருந்தார். பின்பு, தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று, பின்னர்

கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அங்கு மரபணுப் பரிசோதனை யாவும் பூர்த்தியான பின்னர் அடக்கம் செய்யப்பட்டன. கிருசாந்தி குடும்பத்தினர், கிருபாமூர்த்தி ஆகியோரின் உயிரிழப்புத் தொடர்பான வழக்கு உறவினர்களால் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர் விசாரணைகள் மூன் சந்தேகத்தின் பேரிற் கைதுசெய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதன் பேரில் குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டார்கள்.

குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டவர்களில் ஒருவரான "லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச" கிருசாந்தி மற்றும் குடும்பத்தினர் மீதான தகவல்களை வழங்கியதுடன், மேலும் செம்மணிப் பகுதியில் அமைந்த வயல் நிலங்களில் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் இரவு நேரங்களில் கொண்டுசென்று புதைக்கப்பட்ட சடலங்களில் முன்நூறு, நாநூறு பேரது சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அடையாளப்படுத்த முடியுமெனவும் வாக்குமூலம் அளித்தார். இதன்மூலம் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பலரது நிலைகளை இப் புதைகுழிகளிலிருந்து அறிய முடிந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. குமாரசாமி இராசம்மா - உப அதிபர் - 59
02. குமாரசாமி கிருசாந்தி - மாணவி - 18
03. குமாரசாமி பிரணவன் - மாணவன் - 16
04. சிதம்பரம் கிருபாமூர்த்தி - எழுதுனர் - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

செம்மணிப் புதைகுழிகள் 1996

யாழ். குடாநாட்டில் 1996 நடுப்பகுதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியில் காணாமற்போனவர்களின் நிலை…? யாழ். மாவட்டத்தின் நல்லூர்ப் பிரதேசத்தில் அரியாலைக் கிராமம் அமைந்துள்ளது. அரியாலைக் கிராமத்திலுள்ள செம்மணிப் பகுதி யாழ் நகரத்திலிருந்து யாழ்.- கண்டி வீதி வழியாக ஏறக்குறைய நான்கு கிலோமீற்றர் தூரத்தில் யாழ் நகரை வரவேற்கும் வளைவுக்கல் பகுதியில் அமைந்துள்ளது.

1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதாக கூறி கடந்த காலங்களில் காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட தென்னிலங்கையிலுள்ள சூரியகந்த புதைகுழிகள் போன்ற புதைகுழிகளை விசாரணைக்குட்படுத்தியது.

1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தன.

அதனைத்தொடர்ந்து “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதற்கட்டமாக 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

1995இன் பிற்பகுதியில் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட “றிவிரெச” இராணுவ நடவடிக்கையினால் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் வலிகாமப் பிரதேசத்திலிருந்து ஓரிரு நாட்களில் செம்மணி வீதி, கோப்பாய் வீதி வழியாக யாழ் மாவட்டத்தின் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் யாழ். நகரத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். 1996 சித்திரை மாதம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளான தென்மராட்சி, வடமராடச்சி போன்ற பிரதேசங்களையும் இராணுவதத்தினர் கைப்பற்றினர் புலம் பெயர்ந்தவர்களும், வடமராட்சி, தென்மராட்சி மக்களுமாக யாழ் குடாநாட்டு மக்களில் ஐம்பது வீதமான மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல மிகுதி ஐம்பது வீதமானவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குட் சென்றார்கள். 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டு வந்தனர்.

“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான பாலியற் துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் யாழ்பாணத்தில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. யாழ். குடாவில் காணாமற்போன இளைஞர், யுவதிகளினது பெற்றோர்கள், உறவினர்கள் ஒன்று சேர்ந்து “கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்” என்ற அமைப்பை உருவாக்கி இன்றுவரை போராட்டம் நடத்தி வருகின்றனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தினாலும் சர்வதேச அழுத்தத்தினாலும் அன்றைய சனாதிபதி சந்திரிக்கா பண்டாராநாயக்கா குமாராதுங்க இராணுவத்தினராற் கைது செய்தபின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிகக் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட ஆணைக்குழுவினை அமைத்தார்.

1997இன் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பனாங்கொடை, பந்துல குணவர்த்தன ஆகிய இராணுவ உயரதிகாரிகளைக் கொண்ட குழு விசாரணையை மேற்கொண்டது. பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு மூன்று தடவைகள், நான்கு தடவைகளென மாறி மாறி விசாரணைகளை நடத்தியும் கைதானோர், காணாமற்போனவர் தொடர்பாக இன் றுவரை எந்தவிதமான இறுதியான தீர்வும் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை.

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழுந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச விசாரணையின் போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார்.

“யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும்” என்றார்.

1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்மணிப் புதைகுழிகள் வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக்கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல, மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங்கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட்டன. **இச் செம்மணிப்பகுதியில் அமைந்த அரியாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந்துள்ள பகுதி, செம்மணிவளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.**

முதற்தடவையாக புதைகுழி தோண்டும்போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் உட்பட்டோரினதென அடையாளங் காணப்பட்டது. இதன்போது சைவ மத அந்தணர் ஒருவர் சாளி மோட்டார்சைக்கிளுடன் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் முதல் கட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன்பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது. மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நடமாடியதை மக்கள் அவதானித்தார்கள். பின்னர் இரு வாரம் கழிந்த நிலையில இரண்டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்பமாகியது. ஆறு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணினுடையதும் மிகுதி ஆண்களினுடையவையென அடையாளங்காணப்பட்டன.

இத்துடன் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை இடைநிறுத்தினார்கள். இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



Chemmani Map



மந்துவில் படுகொலை 15.09.1999

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் மந்துவில் சந்தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்துவிற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலானவற்றை இங்கே பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவரென பலதரப்பட்டவர்களும் சந்திக்குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10.25 மணியளவில் விமானப் படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான்பரப்பினூடாக பறந்து வந்து மந்துவிற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடி நின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் சில அவ்விடத்திலும், வீதியிலும், பற்றைக்குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் சிதைந்த நிலையிலிருந்தன. படுகாயமடைந்திருந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தருமரங்கள், கால் நடைகள் போன்ற பல லட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது, "எனது கணவர் காணியில் கிடைக்கும் தேங்காய்களைக் கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டு வருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங்காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபீர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்

கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம். உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங்கி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறாவது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக்குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வேளை, 1985ம் ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதியன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின்நான்கு ஆண்டுகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசிக் கொன்றுள்ளனர்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னையா ஜெயபாலசிங்கம் - சுய தொழில் - 37
02. சண்முகம் கிருபாகரன் - தொழிலாளி - 22
03. சவிரி யோன் விவசாயம் - 52
04. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் - தொழிலற்றோர் - 70
05. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை - வீட்டுப் பணி - 43
06. ஜெயராமன் சந்திரகுமார் - தனியார் தொழில் - 20
07. அலன்றோஸ் கொண்டியூசியஸ் - கடற் தொழில் - 19
08. அந்தோனிப்பிள்ளை - தனியார்தொழில் -
09. ஆறுமுகம் ஜெயராமன் - 50
10. சின்னையா ஜெயபாலசிங்கம் - விவசாயம் - 37
11. பாக்கியநாதன் றீற்றம்மா - வீட்டுப்பணி - 56
12. தனராஜ் ஜெனோவி - வீட்டுப்பணி - 24
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை - கடற்தொழில் - 52
14. துரைசிங்கம் சபாநாயகம் - மாணவன் - 21
15. இராசநாயகம் உதயகுமார் - கடற்தொழில் - 20
16. இராசேந்திரம் சத்யகுமார் - தனியார் தொழில் -25
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன்- சுயதொழில் -33
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா - தொழிலாளி - 25
19. கனகசபை மிதிலா - வீட்டுப்பணி - 26
20. அன்ரனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் - வீட்டுப்பணி - 54
21. செல்லையா ஆறுமுகம் - 59
22. கணபதிப்பிள்ளை யோகராசா - 36
23. அன்ரனிதவராசா திரேசம்மா - 50
24. அன்ரனிலியோ மெல்றோஸ் - 24
25. சின்னத்தம்பி தம்பு - 55
26. ஜெயமஸ் ஜெயசங்கர் - 33
27. பத்மராசா ஜெனிற்றா - மாணவி - 15
28. சந்திரசேகரம் சயந்தினி - மாணவி - 12
29. தம்பையா சுப்ரமணியம் - விவசாயம் - 67

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூ.பேதுறுப்பிள்ளை - 80
02. இ.தனேஸ்வரி - 55
03. இ.மகேஸ்வரி - 55
04. நா.அருந்தவமலர் - 52
05. நாகலிங்கம் - 45
06. க.தங்கையா - 48
07. கனகையா - 43
08. கந்தையா நாகலிங்கம் - 35
09. கந்தையா வள்ளிப்பிள்ளை - 70
10. கதிரேசு தேவராசா - 39
11. கி.அன்னலட்சுமி - 61
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி - 51
13. குணசிங்கம் - 50
14. குணரத்தினம் நிறஞ்சன் - மாணவன் - 09
15. பால்ராஜ் பாசமலர் - 27
16. பாலசிங்கம் பால்ராஜ் - சுயதொழில் - 29
17. பத்மராஜா மதியமலர் - தொழிலாளி - 40
18. பி.மரியமலர் - 52
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா - 18
20. சைலன் குழந்தை 03
21. த.பாலசிங்கம் - 66
22. த.தனுசா - குழந்தை - 03
23. த.தேவராசா - 39
24. தி.தர்சினி மாணவி 17
25. தியாகராசா தர்சினி - மாணவி - 17
26. தியாகராசா செல்வராணி - 44
27. ம.தனராஜ் - 20
28. மயில்வாகனம் - 45
29. மகாலிங்கம் தனராஜா - 29
30. மரியநாயகம் - 48
31. முத்துசாமி - 48
32. முத்துசாமி கோழிமனசாமி - 48
33. அ.இருதயராசா - 20
34. அ.மரியசோபனா - 23
35. அ.விதுசன் - 35
36. அன்ரன் பெனடிற் - 51
37. அலன்றோஸ் மரியநாயகி - 40
38. ஜெ.ஜெயசங்கர் - 30
39. ஜெ.சரஸ்வதி - 50
40. ஜெயசங்கர் விமல்ராஜ் - மாணவி - 06
41. ஜெயராமு சரஸ்வதி - 50
42. ஜெயராமன் - 60
43. யோன் நான்சி - 19
44. கே.தவசீலன் - 19
45. கே.மேனகா மாணவன் 18
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி - 45
47. பொ.வள்ளிப்பிள்ளை - 90
48. பெர்னான்டோ அன்ரலிவின்சன் - 35
49. பெரியதம்பி நடராசா - கடற்தொழில் - 51
50. தெ.மரியமலர் - 68
51. சே.மரியம்மா - 68
52. சேதுப்பிள்ளை - 80
53. செல்லையா சந்திரசேகரம் - சுயதொழில் - 27
54. செல்லத்துரை மகேஸ்வரி - 46
55. ச.யோகராணி - 41
56. ச.லோகிதா - 15
57. ச.சர்மிலா - 23
58. சின்னத்தம்பி கந்தசாமி - 37
59. சீனியர் சிவநாதன் - 18
60. சிவகுரு சூரியமூர்த்தி - கடற்தொழில் - 33
61. சிவானந்தம் சுதாகரன் - 19
62. சிவநேசன் அழகேஸ்வரி - வீட்டுப்பணி - 29
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி - வீட்டுப் பணி - 21
64. சுசிதரன் சூட்டி - 29
65. சரஸ்வதி - 50
66. சற்குணன் யோகராணி - 41
67. ராஜா சஜீபன் - குழந்தை - 03

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

சிலாவத்துறைப் படுகொலை 02.09.2007

2007இல் சிறீலங்கா இராணுவத்தினரின் மன்னார் மீதான வலிந்த தாக்குதலின் விளைவாக சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த 13 குடிமக்களை ஏற்றிக்கொண்டு வான் ஒன்று சிறீலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவம் 2007 செப்ரெம்பர் 02ஆம் நாள் இடம் பெற்றது. இராணுவத்தின் மத்தியில் எற்பட்ட இம்மோதலின்போது கொல்லப்பட்ட பொது மக்களின் உடலம் இரண்டு நாட்களாக அகற்றப்படவில்லை. பழுதடைந்த உடலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவால் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரு தந்தை, தாய், 04 வயது மகனும் உள்ளடங்குவார்கள்.

இதிலிருந்து மூன்று வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 26ஆம் நாள் வணபிதா நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித் இவ்வாறானதொரு கிளைமோர்த்தாக்குதலில் இதற்கு அருகாமையிலுள்ள இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவர் அப்பொழுது தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தார். இதில் அவரது உதவியாளரும் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. யேசுதாசன் எலிசபெத் - 42
02. ஜெயராஜ் ஒஸ்கார் - 20
03. கிருக்ஷ்ணபாலன் - 25
04. மணியம் ஜெயராஜ் - 50
05. ஜோன்ஸ் -
06. நாகமுத்து சரோஜர - 60
07. புகேந்திரன்
08. புவி சுவேதா - 04
09. செல்வகுமார் - 24
10. செல்வகுமார் பிரின்ஸி, 25
11. செல்வராசா ராகுலன், 04

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பாடசாலை மீது சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சு – 09.09.2008

செவ்வாய்க்கிழமை அதிகாலையில் கரும் புலிகள் வன்னிக்கான இலங்கை கூட்டு நட வடிக்கை தலைமையகத்தை அழிப்பதில் ஈடுபட்டிருந்தபோது, வன்னியின் மேல் பறந்த சிறீலங்கா விமானப்படை (SLAF) குண்டு வீச்சு விமானங்கள், புதுக்குடியிருப்பு நக ரத்தை மூன்று முறை குண்டுவீச்சு நடத்தியது. ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் பள்ளியின் வளாகத்தில் குண்டுவீச்சு நடத்தினர், அங்கு முல்லைத்தீவு மண்டல கல்வி அலுவலகமும் அமைந்துள்ளது. இந்த தாக்குதலில் ஒரு வீடு, நான்கு கடைகள், ஒரு புத்தகக் கடை மற்றும் நகரத்தில் உள்ள ஒரு ஆலை ஆகியவை சேதமடைந்தன. ஒரு பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

திருமதி சுலோஜனா என அடையாளம் காணப்பட்ட 50 வயது பெண் காயமடைந்தார்.

பள்ளி வளாகத்திற்குள் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் பள்ளியின் முதல்வர்,

www.sangathamil.ca

JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free! ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203

The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

தொல்லியல் சுவடுகள்...

யாழ்ப்பாணப் பட்டினம்: பொங்கொலிநீர்ச் சிங்கைநகர் – பகுதி 2

(யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நகரிகம்)

யாழ்ப்பாணக் கோட்டைத் தொல்லியல் ஆய்வுகள்

யாழ்ப்பாணக் கோட்டை மேலாய்வுகள் 2011–12

2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தொல்லியல் திணைக்களம் நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் அழிவடைந்த யாழ்ப்பாணக் கோட்டையை மீள்புனரமைப்புச் செய்துவரும் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 62 ஏக்கர் பரப்பில் அமைந்த கோட்டையின் பெரும்பகுதி தொல்லியல் மேலாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அவற்றுள் அழிவடைந்த கிறிஸ்தவத் தேவாலயம், இராணி மாளிகை, ஆயுதக் களஞ்சியங்கள், பீரங்கித் தளங்கள், படைவீரர்களின் இருப்பிடங்கள், காவல் மையங்கள் என்பன அமைந்துள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளில் யாழ்ப்பாணத்திற்குப் போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் பல தொல்பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமாக ஆதிகால, இடைக்கால, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், பல்வேறு கால கட்டங்களைச் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு மட்பாண்டங்கள், சுடுமண்ணினாலான இந்துச் சிற்பங்கள், கருங்கல் மற்றும் சுண்ணாம்புக் கல்லிலாலான இந்த ஆலயங்களின் அழிபாடுகள் மற்றும் கலைவடிவங்கள், சமயச் சின்னங்கள், கல்வெட்டுகள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னரே தற்போதைய கோட்டைப் பிரதேசமும், அதன் சுற்றாடலும் புராதன குடியிருப்பு மையங்களாகவும், இந்து சமுத்திர கடல்சார் வாணிபத்தில் மேற்காசிய, தென்கிழக்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான வாணிப மையமாகவும் இருந்துள்ளதை உறுதி செய்கின்றன (புஷ்பரட்ணம், ப. 2023).

யாழ்ப்பாணக் கோட்டை: முதலாம் கட்ட அகழ்வாய்வுகள் 2011–12

அகழ்வாய்வு – 1

முதலாவது அகழ்வாய்வுக்குழி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் புஷ்பரட்ணத்தின் மேற்பார்வையில் நடைபெற்றது. கோட்டை வாசல் ஆரம்பிக்கும் இடத்திற்கும் கடற்கரைப் பக்கமாக உள்ள வீதிக்கும் இடையே 10×6 அடி நீள அகலத்தில் தோண்டப்பட்டது. 2.5 அடி ஆழம் வரை அகழ்ந்தபோது கடல் நீர் உள்ளே கசிந்துவர ஆரம்பித்தது. இந்தக் குழியில் மூன்று கலாசார மண் அடுக்குகளை அடையாளம் காண முடிந்தது. இந்த மூன்று அடுக்குகளிலும் பல்வேறு வடிவங்களில் அமைந்த பலதரப்பட்ட மட்பாண்ட ஓடுகள் கிடைத்தன. மூன்றாவது மேல் அடுக்கில் பெருமளவு பளிங்குபோல பளபளப்பானதும், பளபளப்பற்றதுமான சீன மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றோடு மனித எலும்புக்கூடுகளும் காணப்பட்டன.

இச் சீன மட்பாண்டங்களின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியாதலால் இவை போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வருவதற்கு 300 ஆண்டுகள் முன்னரே இந்த இடத்தை வந்தடைந்திருக்க வேண்டும். இந்தக் குழியை இயற்கை மண் மட்டம் வரை அகழ்ந்திட முடியாமையால், தொன்மையான சான்றுகளை வெளிக்கொணர முடியவில்லை (புஷ்பரட்ணம், 2021).

அகழ்வாய்வு – 2

இரண்டாவது அகழ்வாய்வு கோட்டையின் உட்பகுதியில் தொல்லியல் திணைக்கள உதவி ஆணையாளர் கலாநிதி நிமல் பெரேரா தலைமையில் நடைபெற்றது. ஆயுதக் களஞ்சிய அறைக்கு முன்னால் 6×6 அடி சதுர அடியில், இயற்கை மண்ணை அடையும் வரை அகழ்வு நடாத்தப்பட்டது. இந்தக் குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தொல்கலைப் பொருட்கள் அனைத்தும் கொழும்பு தொல்லியல் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்த அகழ்வின் அகழ்வாய்வறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.

முதலாவது அகழ்வாய்வுக் குழியில் கடல்நீர் கசிந்துவரும்வரை மேற்கொண்ட அகழ்வு.

Image Source - University of Jaffna

இன்றைய யாழ்ப்பாணக் கோட்டைக்குக் கீழே புதைந்து கிடக்கும் புராதன கட்டிடங்களைக் காட்டும் நிலத்தைத் துழைத்தெடுத்த ரேடார் படம்

Image Source - Dr Armin Schmidt & Dr P. Pushparatnam.

அகழ்வாய்வு – 3

மூன்றாவது அகழ்வாய்வுக் குழி ஐரோப்பியப் படைவீரர்கள் தங்கியிருந்த இராணுவக் குடியமைப்புக் கட்டடத்திற்கு முன்னால் நடாத்தப்பட்டது. இந்த அகழ்வு முன்கூட்டியே திட்டமிட்டதல்ல. இவ்விடத்தில் பிற தேவைக்காக 6×6 அடி நீள அகலத்தில் 7 அடி ஆழம் வரை குழி தோண்டியபோது வெளிவந்த அரிய தொல்லியல் கலைப்பொருட்கள் பின்னர் அவ்விடத்தில் தொல்லியல் அகழாய்வை மேற்கொள்ளக் காரணமாக அமைந்தன. ஆரம்ப அகழ்வு, இயந்திரத்தைக் கொண்டு நடத்தியபடியினால் கலாசார அடுக்குகள் குழம்பிய நிலையில் இருந்த போதிலும் நான்கு கலாசார அடுக்குகள் இனம் காணப்பட்டன.

குழியின் அடிப்பாகத்தில் கண்ட பலதரப்பட்ட ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், மற்ற வகை கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், ஆதி இரும்புக் காலத்தைய சிவப்பு மட்பாண்டங்கள் என்பன அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களை நிகர்த்த ஆதிக்குடியிருப்புகள் இந்த இடத்தில் இருந்ததை உறுதி செய்தன. அதற்கு அடுத்த இரண்டாவது அடுக்கில் கி.மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டிற்குரிய உரோம 'ரௌலெற்றெட்' மட்பாண்டங்களும், 'அம்போரா' சாடிகளும் காணப்பட்டன. அடுத்து கி.பி. முதலாம், இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளுக்குரிய உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. மூன்றாவது அடுக்கில் பலவகையான

பழைய சிறைச்சாலை ஆய்வுக்குழியின் அடிப்பகுதியில் காணப்பட்ட மட்பாண்டங்கள்

Image Source - Dr P. Pushparatnam.

இஸ்லாமிய, சீன பளபளப்பான கலன்கள், பீங்கான்கள், சீன, இஸ்லாமிய நாணயங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டன. நான்காவது அடுக்கில் யாழ்ப்பாண இராசதானிக்குரிய நாணயங்கள், ஐரோப்பிய நாணயங்கள், கட்டடங்களின் இடிபாடுகள் என்பன காணப்பட்டன (புஷ்பரட்ணம், ப. 2021: 13).

இந்த அகழ்வுகளில் கண்டெடுத்த தொல்பொருட்கள் பற்றி பின்னர் விரிவாகப் பேசப்படும்.

யாழ்ப்பாணக் கோட்டை: இரண்டாம் கட்ட அகழ்வாய்வுகள் 2017–18

பிரித்தானிய டர்ஹாம் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியரும், UNESCO தொல்லியல் நன்னெறிக் கோட்பாட்டின் தலைவருமான றொபின் கொனிங்ஹாம் யாழ்ப்பாணக் கோட்டை இரண்டாம் கட்ட அகழ்விற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரோடு இணைந்து இலங்கை அரசின் மத்திய கலாசார நிதிக் காப்பாளர் தரப்பில் பேராசிரியர் பிரிந்தா குணவர்த்தனா குழுவினர், பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பட்டதாரி மாணவர்கள் அனைவரும் இணைந்து இந்த அகழ்வாய்வில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

மனிதனில்லாத வானூர்தி வாகன மதிப்பீடு (Unmanned Aerial Vehicle Survey)

வானூர்தி வாகனத்தின் மூலம் எடுத்த படங்கள் வழியாக கோட்டை மதில்கள், மதிலினுள் அமைந்த உயர் மேடைகள் (Ramparts), அகழிகள், கோட்டையினுள் நிற்கும் கட்டடங்கள், கோட்டையைச் சுற்றிவர உள்ள சுற்றாடல்கள் ஆகியவற்றைக் கணிப்பிட முடிந்தது. கோட்டையின் வட மேற்கில் முந்தைய போர்த்துக்கேய கோட்டையின் மூன்று அரைவட்ட காவல் அரண்களைக் (Bastions) காண முடிந்தது. இக்காவல் அரண்கள் டச்சுக் கோட்டையுடன் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. இந்த வானூர்தி வாகனப் படங்களின் மதிப்பீடு, கோட்டையின் முழு வரைவையும், தற்போது நிற்கும் கட்டடங்கள், அதில் இருக்கும் சரியான இடத்தையும், கீழே தெரியும் தொல்லியல் உருவங்களுக்கும் அவற்றிற்கான தொடர்பையும் எடுத்துக் காட்டின (Davis, C.E. et al. 2017).

நிலத்தைத் துளைத்தெடுக்கும் ரேடர் மதிப்பீடு (Ground Penetrating Radar Survey)

நிலத்திற்குக் கீழே ரேடார் கருவி மூலம் எடுத்த படங்கள், அங்கிருக்கும் கட்டடங்களின் பரவலையும், அவை காணப்படும் ஆழத்தையும் கணிப்பிட உதவின. போர்த்துக்கேயர் கட்டிய மாதா கோயில், அதற்கும் முற்பட்ட பண்டகசாலை மற்றும் கட்டடங்களின் இடிபாடுகள் என்பன காணப்பட்டன. இவை நிலத்திற்குக் கீழிருக்கும் மரபுரிமை (Subsurface heritage) ஆதலால், இவற்றைப் பாதுகாக்கவேண்டியது முக்கியம் என உணரப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டையின் வரைநிலையிடத்தின் தொல்லியல் ரீதியிலான படிநிலை வளர்ச்சியை (Archaeological sequence) விஞ்ஞான முறையில் காலக்கணிப்புச் செய்வதற்கு இந்த மதிப்பீடு உதவியிருக்கிறது (Davis, C.E. et al. 2017).

அகழ்வாய்வுகள்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்த மையத்தின் மனிதக் குடியிருப்புகளின் வரலாற்றையும், இதன் படிமுறை வளர்ச்சி சார்ந்த நிரலொழுங்கையும் (Developmental Sequence) விளங்கிக் கொள்ளும் வகையிலே அகழ்வுக் குழிகள் அமைக்கப்பட்டன. ரேடர் மதிப்பீட்டைக் கொண்டு கோட்டைக்குள் மூன்று புள்ளிகள் உயிர்மைய இடங்களாகத் தெரிவு செய்யப்பட்டன. இக்குழிகள் அடுக்கியற் படிவாக்கக் கூறுகளாக, அவற்றின் தொன்மையும், காலவரன்முறை வளர்ச்சியும், இந்து சமுத்திர வர்த்தக வலைப் பின்னலில் இந்த மையத்தின் பங்கு விளங்குமாறும் அகழ்வு செய்ய முடிவெடுக்கப்பட்டது. இந்த ஆய்வில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி அறிவியல்பூர்வமாக அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதனால் இங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்களின் காலம், அவை தோற்றம் பெற்ற இடம், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான கணிப்பீடுகள் என்பன நம்பகத்தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன (Davis, C.E. et al. 2017, 2018, 2019).

பழைய சிறைச்சாலைக் குழி – ஆய்வுக்குழி 1

பழைய சிறைச்சாலை இருந்த இடத்தில் 2.5 × 2.0 மீட்டர் அளவில் இயற்கை மண்படை வரை தோண்டப்பட்ட குழியில் ஒன்பது வேறுபட்ட கலாசார மண்படை அடுக்குகள் இனம் காணப்பட்டன. அடியிலிருந்த இயற்கை மண் மட்டத்திலிருந்து மேல் நோக்கிய அடுக்கில், முதலில் அடியிலிருந்த இயற்கை மண்ணுடன் கலந்த ஆரம்பகால கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும் (Black and Red ware), அடுத்து பின்பெருங்கற்காலத்திற்குரிய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும் காணப்பட்டன. பின்பெருங்கற்காலத்தைய அடுக்கில் வட இந்திய சாம்பல்நிற மட்பாண்டங்கள் (Grey Ware) காணப்பட்டன. அடுத்து வட இந்திய பளபளத்த கறுப்பு மட்பாண்டங்கள் (Northern Black Polished Ware), ரௌலெற்றெட் மட்கலன்கள், அரிக்கமேடு வகை மட்பாண்டங்கள், ரோமாபுரி அரிற்றைன் வகை மட்பாண்டங்கள் (Arretine Ware), பளபளத்த சிவப்பு மட்பாண்டங்கள், சஸானிய இஸ்லாமிய கலன்கள், டற்சுன் சாடிகள், யூ-நீல கலன்கள் (Yue Green Ware), சீனப் பீங்கான்கள் மற்றும் மேல் மட்டங்களில் ஐரோப்பிய கலன்கள் என்பன கண்டெடுக்கப்பட்டன (Davis, C.E. et al. 2018, 2019).

ராணி மாளிகை அகழ்வாய்வு – ஆய்வுக்குழி 2

ராணிமாளிகையின் முற்றத்தில் 4.30 × 6.0 மீட்டர் அளவினதான குழி வெட்டப்பட்டது. இந்தக் குழியில் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டிற்குரிய கலன்களும், மட்பாண்டங்களும் காணப்பட்டன. இக்குழியினில் ஒரு மூலையில் தோண்டப்பட்ட உபகுழியில், ஐரோப்பியர் கால மட்பாண்டங்கள், பல கலாசார அடுக்குகளில் காணப்பட்டன (Davis, C.E. et al. 2018, 2019).



யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்ட மட்பாண்டங்களும் அவற்றின் Bar-code காலக்கணிப்பும்

Image Source - Dr Robin Coningham

குறூஸ் கேர்க் தேவாலயம் இருந்த இடத்தில் வட கிழக்குப் பகுதியில் 5×5 மீட்டர் அளவில் ஆறு சதுர வலைச்சட்ட நிலம் அளந்து குறிக்கப்பட்டது. சற்று தள்ளி இதே அளவினதான வலைச்சட்டம் பலகைகள் கொண்டு அமைக்கப்பட்டது. அகழ்வு செய்தபோது பெறப்பட்ட ஓடுகள், செங்கட்டிகள், கண்ணாடித் துண்டுகள், கலைப்பொருட்கள் என்பன அவை கண்டெடுக்கப்பட்ட சதுரங்களில், அவற்றை ஒத்த பலகைச் சதுரங்களில் வைக்கப்பட்டன. திரும்பவும் புனர் நிர்மாணிக்க நேரிட்டால்,

வடஇந்திய நிறம் பூசிய சாம்பல்நிற, மற்றும் பளபளப்பான கறுப்பு நிற மட்பாண்டத் துண்டுகள்

Image Source - Douglas Adams



யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த கிழக்குலக, மேற்குலக மட்பாண்டங்களின் தொகுதி

Image Source - Dr Robin Coningham 2018

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203

யாழ்ப்பாண அகழ்வாய்வில் கிடைத்த சோழர்கால மட்பாண்டங்கள்

Image Source - Dr P. Pushparatnam

Chola Inscription found at Jaffna Fort

யாழ்ப்பாணக் கோட்டையினுள் காணப்படும் சோழர்கால தமிழ் எழுத்துப் பொறிப்பு

Image Source - Dr P. Pushparatnam

உரோம ரௌலெற்றெட் மட்பாண்டங்கள்

Image Source - Dept. of History, University of Jaffna

உரோம மதுக்கலன்களான 'அம்போரா' சாடிகள்

Image Source - Dept. of History, University of Jaffna

அப்பொருட்களைக் கண்ட இடத்தை இலகுவாக இனம் காண முடியும் என்பதற்காக இம்முறை கையாளப்பட்டது (Davis, et al. 2017, 2018, 2019).

கோட்டைச் சுவர் மேடை அகழ்வாய்வு – ஆய்வுக்குழி 4

கோட்டைச் சுவர் மேற்குப்பக்க மேடையில் இருந்த குப்பை களையும், சிதைகூழங்களையும் நீக்கிய பின்னர் மேடையின் உள்முகத்தருகில் 2×1 மீட்டர் அளவான குழி வெட்டப்பட்டது. மேடைச் சுவரின் அடிப்பாகம் கோறல் கற்களும், சுண்ணாம்புக் கற்களும் கொண்டு சுண்ணப் பசையால் பொருத்தப்பட்டிருந் தது. மேலும் கீழே அகழ்ந்து செல்ல, பொழியப்பட்ட சுண்ணாம் புக்கற்களினால் அடித்தள மேடை அமைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இது கோட்டை அமைப்பின், முற்பட்ட ஒரு பகுதியாக இருந்திருக்கும் (Davis, et al. 2017, 2018, 2019).

தொல்லியலாய்வுகளில் கண்ட தொல்பொருட்கள்

அவைகளை உருவாக்கும் தொழில் திறனையும், முதன் முத லாக தென்னிந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக வந்த மக்கள் மூலமாக, அல்லது கந்தரோடையிலிருந்து கசிந்து வந்த பண் பாட்டு வழியாக இப்பிரதேச மக்கள் பெற்றிருக்க வேண்டும். இதைத் தொடர்ந்த இந்திய, கிரேக்க - உரோம, பாரசீக, இஸ் லாமிய, கிழக்காசிய தொல்பொருட்கள் ஐரோப்பியரின் வருகைக் காலம் வரை இப்பிரதேசம் தொடர்ச்சியாகக் குடியிருப்பில் இருந் ததை எடுத்துக்காட்டியது (Davis, Coningham et al. 2018).

வட இந்திய சாம்பல் நிற மட்கலன்களும், வட இந்திய பள பளப்பான கறுப்பு மட்பாண்டங்களும் (North Indian Grey Ware and Northern Black Polished Ware) கி.மு. 500 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ஆழ்கடல் வர்த்தக நடவடிக்கைகளை எடுத்துக்காட் டின. ரௌலெற்றெட் மட்பாண்டங்களும், அம்போரா சாடிகளும் கி.மு. 300 ஆம் ஆண்டிற்கும் கி.பி. 200 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டகால உரோம நெடுங்கடல் வர்த்தக நடவடிக் கைகளை எடுத்துரைத்தன. ஓம்பொலஸ் மட்கலன்களும் அதே

1970 ஆம் ஆண்டில் கந்தரோடையில் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தினர் மேற்கோண்ட அகழ் வாய்வுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கருவூலப் பொருட்களின் கதிரியக்கக் கரிம தேதிக் கணிப்புகளின்படி கி.மு. 1350 ஆம் ஆண்டுக் காலத்திலேயே பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களின் குடியிருப்புகள் கந்தரோடைப் பகுதியில் ஆரம்பமாகி யிருப்பதை ஏற்கனவே இத் தொடரின் நான்காம் இயலில் பார்த் தோம். இந்த ஆய்வுக்குழுவிற்குத் தலைமை தாங்கிய விமலா பெக்லி கந்தரோடைப் பண்பாடு தமிழகத்தின் இரும்புக்காலப் பெருங்கற்பண்பாட்டுடன் கொண்டிருந்த நெருங்கிய ஒற்றுமை யைச் சுட்டிக்காட்டி, கந்தரோடையில் வாழ்ந்த மக்கள் தமிழகத்தி லிருந்து புலம்பெயர்ந்து வந்திருக்கலாம், அல்லது கந்தரோடை யில் ஏற்கனவே வாழ்ந்த மக்கள் தமிழகத்துடன் நெருங்கிய கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருக்கலாம் எனக் குறிப்பிட் டிருந்தார் (Begley, V. 1973).

யாழ்ப்பாணத்தின் கோட்டைப் பிரதேசத்திலும், அதன் அயல்

அரேபிய மட்கலன்கள் மற்றும் வேறுவகை மட்பாண்டங்களுடன் கலந்து காணப்படுகின்றன

Image Source - Dept. of History, University of Jaffna

அரேபிய தகரப்பளிங்கு மட்பாண்டம்

Image Source - Dr P. Pushparatnam

யாழ்ப்பாண அகழ்வுகளில் கண்ட இஸ்லாமிய தங்க நாணயம்

Image Source - Dr P. Pushparatnam

சாங்ஷா வர்ணம் பூசிய சீன கற்கலன்

யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த பொருட் களைத் தவிர, மேலாய்வுகளிலும் பல முக்கியமான கருவூலப் பொருட்களும், புறப்பொருட்களும் பெறப்பட்டன. வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த அகழ்வாய்வுப் பொருட்கள், கதிரியக்கக் கரிம வயதுக்கணிப்பு (Radiocarbon dating) மற்றும் வெப் பேற்றுக் கதிரொளிவீச்சு காலக்கணிப்புகளுக்காக (Thermoluminescence dating) பிரித்தானியாவிற்கு அனுப் பிவைக்கப்பட்டன.

அகழ்வுகளில் அதிகமாகக் காணப்பட்ட, இலகுவாகத் தேதி கணிப்பிடக்கூடிய பொருட்கள் மட்பாண்டங்களாகும். பேரா சிரியர் றொபின் கொனிங்ஹாம் தனது குழுவினர் அகழ்வுகளில் கண்டெடுத்த மட்பாண்டங்கள் மற்றும் பேராசிரியர் புஷ்ப ரட்ணத்தின் குழுவினர் வெளிக்கொணர்ந்த மட்பாண்டங்கள் அனைத்தையும் தொகுத்து அவற்றின் காலங்களை வார்க் கோட்டு விவர விளக்கப்படமாகத் (Bar-code Chart) தயாரித்தார். இதில் 25 வகையான மட்பாண்டங்கள் அவற்றின் கால வரிசையில் பதிவு செய்யப்பட்டன.

இந்த மட்பாண்டங்களில் மிகப் பழமையானவை அடியில் கண்ட இயற்கை மண்ணுடன் கலந்து காணப்பட்ட பெருங்கற் பண்பாட்டு கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களாகும். இவற்றின் ஆரம்ப காலத்தை கி.மு. 700 ஆம் ஆண்டு என முதலில் கணிப் பிட்ட கொனிங்ஹாம் அதை மறுபரிசீலனை செய்து அதை கி.மு. சுமார் 1000 ஆண்டாகக் கணிப்பிட்டார். இதன் பிரகாரம் கி.மு. ஆயிரம் ஆண்டளவில் இப்பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புகள் ஆரம்பமாகியிருக்கிறது. பெருங்கற் பண்பாட்டின் ஓர் அங்கமான கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களையும், காலத்தைய கிரேக்க - உரோம வர்த்தகத்தை எடுத்துக்காட் டியது. தமிழகத்தின் சிவப்பு வர்ணம் பூசிய வெண்பாண்டம், பளபளப்பான சிவப்பு நிறம் கொண்ட மற்றும் சஸானிய - இஸ் லாமிய மட்பாண்டங்கள் மேற்காசிய நாடுகளுடனான (பார ஸீகம், ஈரான், ஈராக்) வர்த்தகத் தொடர்பை எடுத்துக்காட்டியது. யூ-பச்சை கலன்கள், டூஸன் கற்கலன்கள், மிங் பீங்கான்கள் என்பன கி.பி. 700 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1600 ஆம் ஆண்டு வரையிலான சீன வர்த்தகத்தைக் காண்பித்தது (Davis> Coningham et al. 2018).

கோட்டைப் பிரதேச பூர்வீகக் குடியிருப்புகள்

கோட்டைப் பிரதேசத்தினுள் இதுவரை நடைபெற்ற அகழ்வுகளி லிருந்து பெற்றுக்கொண்ட தொல்பொருட்களில் காணப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களை உபயோகித்த, பெருங்கற் பண்பாட்டைப் பேணிய, ஆதி இரும்புக்கால மக்கள் கோட்டைப் பிரதேசத்தில் கி.மு. 1000 ஆண்டுகாலத்தில் ஆரம்பித்து தொடர்ச்சியாக இப்பிரதேசத்திலே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பேராசிரியர் புஷ்பரட்ணம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி யாழ்ப் பாணக் கோட்டைக்கு மிகக் கிட்டிய தொலைவில் கிழக்கே அரி யாலை, பூம்புகார், தென்கிழக்கே மண்ணித்தலை, கல்முனை, தெற்கே சாட்டி, மேற்கே ஆனைக்கோட்டை ஆகிய இடங்களி லும் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய யாழ்ப்பாணத்தின் தொடக்ககால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத் துள்ளன (புஷ்பரட்ணம், ப. 2021). அன்றைய யாழ்ப்பாணப் பட்டினமான கோட்டைப் பிரதேசத்திலும் வாழ்ந்தவர்கள், அதே பெருங்கற் பண்பாட்டைப் பேணிய, அதே இனப்பிரிவைச் (Ethnic group) சேர்ந்த மக்கள் எனக் கொள்ளலாம்.

பகுதிகளான அரியாலை, பூம்புகார், மண்ணித்தலை, கல் முனை, சாட்டி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலும் வாழ்ந்த மக்களும் விமலா பெக்லியின் கருத்துப்படி தமிழகத்தி லிருந்து புலம்பெயர்ந்து வந்திருக்கலாம், அல்லது அவ்விடங் களில் ஏற்கனவே வாழ்ந்த மக்கள் தமிழகத்திலிருந்து வருகை தந்த இரும்புக்கால பெருங்கற் பண்பாட்டு அம்சங்களைக் கடைப்பிடித்திருக்கலாம். கந்தரோடையின் பெருங்கற் பண்பாட் டின் ஆரம்பகாலம் கி.மு. 1350 ஆம் ஆண்டாகவும், யாழ்ப் பாணக் கோட்டை மக்களின் பெருங்கற்பண்பாட்டுக் காலம் ஏறக் குறைய கி.மு. 1000 ஆம் ஆண்டாகவும் இருப்பதனால் இந்த 350 ஆண்டுகால இடைவெளியில் மக்கள் கந்தரோடையி லிருந்தும் இடம்பெயர்ந்து வந்திருக்கலாம். மேலும், யாழ்ப் பாணப் பட்டினமே கந்தரோடையின் முக்கியமான வர்த்தகத் துறையாக விளங்கி வந்திருப்பதை இனிவரும் சான்றுகள் எடுத்துக்காட்டும்.

புராதன யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசம் (யாழ்ப்பாணப் பட் டினம்) கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வாக்கிலே நகரமயமாக்கப் பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பிர தேசத்தில் நெல் விவசாயம் மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் காணப்படாமையால், இந்த மக்களுக்கான உணவு அருகி லிருக்கும் ஆனைக்கோட்டையிலிருந்தோ, அல்லது அரி யாலையிலிருந்தோ கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

இந்து மாகடல் வர்த்தக வலைப்பின்னல்
வட இந்திய வர்த்தகம்: கி.மு.1000 – கி.மு.100

யாழ்ப்பாண அகழ்வுகளில் கண்ட வட இந்திய சாம்பல்நிற

நீண்ட கழுத்தும், கூரான அடிப்பகுதியும் கொண்ட அம்போரா சாடிகள்

Image Source - Wikipedia

2011-2017 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பணக் கோட்டை அகழ்வுகளில் கண்ட உரோம நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam

சுத்திகரிக்கப்பட்ட மேலே காணப்படும் நாணயங்கில் ஒன்று

Image Source - Dr P. Pushparatnam

பளபளப்பான நீள்நிறச் சாடி

Image Source - British Museum

யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வாய்வுகளிலும், மேலாய்வுகளிலும் கண்ட வேல், இந்துக் கோயில்களின் செதுக்கப்பட்ட தூண், மற்றும் தாமரை வடிவம் பதித்த சுண்ணாம்புக்கல் பீடம்

Image Source - Dr P. Pushparatnam

மட்கலன்களும், வட இந்திய பளபளப்பான கறுப்பு மட்பாண்டங்களும் கி.மு. முதலாம் ஆயிரத்தாண்டில் நிலவிய வட இந்திய வர்த்தகத்தின் சான்றாக அமைகிறது. வட இந்திய நிற மடித்த சாம்பல் மட்பாண்டங்கள் (Painted Grey Ware) கி.மு. 1200 ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகி கி.மு. 600 ஆம் ஆண்டு வரை தயாரிப்பில் இருந்திருக்கின்றன. கி.மு. 600 ஆண்டுக் காலகட்டத்தில் சாம்பல் மட்பாண்டங்களின் தயாரிப்பு நிறுத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து பளபளப்பான கறுப்பு மட்பாண்டங்கள் (Northern Black Polished Ware) தயாரிக்கப்பட்டு வந்திருக்கின்றன (Adams, D.Q.1997: 310).

யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்ட தாய்த்தெய்வ சுடுமண் பட்டயம்

Image Source - Dept. of History, University of Jaffna

யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த வட இந்திய பளபளப்பான கறுப்பு மட்பாண்டங்களுக்கு கி.மு. 500 முதல் கி.மு. 100 ஆண்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபகால அகழ்வாய்வுகளும் காலக்கணிப்புகளும் அதன் தயாரிப்புக் காலத்தை மிகவும் முன்னால் தள்ளி வைத்திருக்கின்றன. பீகாரில் நாளந்தாவில் உள்ள யுயாஃபர்டியில் (Juafardih) கண்டெடுத்த வட இந்திய பளபளப்பான கறுப்பு மட்பாண்டத்தின் கதிரியக்கக் கரிமத் தகதி கி.மு. 1200 ஆம் ஆண்டாகும். அதுபோன்று அயோத்தியில் அகழ்ந்தெடுத்த பளபளப்பான கறுப்பு மட்பாண்டம் கதிரியக்கக் கரிமத் திகதி கி.மு. 1200-1000 ஆண்டைக் கொடுத்திருக்கிறது (Singh, Shankar 2017). யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த பளபளப்பான கறுப்பு மட்பாண்டத் துண்டுகளும் கதிரியக்க ஆய்வில் இத்தகைய பூர்வீகத் திகதிகளைத் தரலாம்.

2017 இல் யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த சீன நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam

1919 ஆம் ஆண்டில் கந்தரோடையில் ஆய்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் 35 வட இந்திய முத்திரை நாணயங்களைப் (அச்சுக்குத்திய நாணயங்கள்) பெற்றுக்கொண்டார். இவை கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்குரிய நாணயங்கள் என தனது தொல்லியல் அறிக்கையில் குறிப்பிடுகிறார் (Pieris, P. 1919: 46-47). கி.மு. 500 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே வட இந்திய - யாழ்ப்பாண வர்த்தகம் நடைபெற்று வந்தமைக்கு இந்த நாணயங்களும் ஒரு முக்கியமான ஆதாரங்களாகும்.

2011 இல் யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கண்டெடுத்த சீன நாணயம்

Image Source - Dr P. Pushparatnam

பச்சை நிறம் சிதறடித்த சீன வெண்பீங்கான்

நன்றி: எழுநா - சிவ. தியாகராஜா

இந்தியா - சீன மேம்படும் உறவும்! டிரம்பின் அதீத வரித் திணிப்பும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

11.08.2025

சீனாவும் இந்தியாவும் எதிரிகளாக அல்ல, கூட்டாளிகளாக இருக்க வேண்டும் என்று அண்மையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி (Wang Yi) கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான கலாச்சார மற்றும் பொருளாதார உறவுகள் பண்டைய காலங்களிலேயே இருந்து வந்துள்ளன. அத்துடன் பட்டுப் பாதையானது (Silk Road) இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான முக்கியமான வணிகப் பாதையாக மட்டும் செயல்படவில்லை. அதுவே இந்தியாவிலிருந்து கிழக்கு ஆசியாவுக்கு பௌத்த மதம் பரவுவதற்கும் அது உதவியாக இருந்ததென குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவும் சீனாவும் ஒருவரையொருவர் எதிரிகள் அல்லது அச்சுறுத்தல்கள் என்பதற்குப் பதிலாக கூட்டாளிகளாக பார்க்க வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கூறியுள்ளமையை இரு நாடுகளும் நட்புடன் பகிர்ந்து கொண்டுள்ளன.

சமீபத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்புக்கு பின்னர் இரு தரப்பு உறவுகள் இப்போது ஒத்துழைப்பை நோக்கி செல்கின்றன என்றும் கூறப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு லடாக்கில் உள்ள கால்வானில் நடைபெற்ற மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மோசமடைந்தன. அப்போது இருந்து உறவுகளை சுமூகமாக்க இந்தியாவும் சீனாவும் மெதுவாக வேலை செய்து வருகின்றன.

2020 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு தரப்பினருக்கும் இடையிலான நட்புறவு சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. சர்ச்சைக்குரிய இமயமலை எல்லைப் பகுதியான லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட கொடிய மோதல்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை முற்றிலுமாக முறித்துக் கொண்டன.

உறவும் எல்லைப் பிணக்கும் :

நீண்ட காலமாக இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவானது எல்லைப் பிணக்குகளால் சூழப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் 1962 ஆம் ஆண்டின் இந்திய சீனப் போர், 1967 ஆம் ஆண்டின் சோ லா மோதல் மற்றும் 1987 ஆம் ஆண்டின் இந்திய சீன எல்லைச் சண்டை ஆகிய மூன்று போர்கள் நடைபெற்றுள்ளன.

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இரண்டு நாடுகளும் சர்ச்சைக்குரிய பூட்டான்-சீன எல்லையில் டோக்லாம் என்ற இடத்தில் சிறு சண்டையில் ஈடுபட்டன. பல்வேறு யுத்தங்கள் காரணமாக இரு நாடுகளும் முரண்பாடுகளில் மூழ்கி இருந்தன.

எனினும் 1980 களின் பிற்பகுதி முதல் இருநாடுகளும் வெற்றிகரமாக தூதரக மற்றும் பொருளாதார உறவுகளை மீள் உருவாக்கியுள்ளன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும், 2008 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா உருவானது. இரண்டு நாடுகளும் அவற்றின் மூலோபாய மற்றும் பொருளாதார உறவுகளையும் விரிவாக்கம் செய்தன.

கடந்த சில ஆண்டுகளாக வர்த்தகம் தவிர பரஸ்பர ஆர்வமுள்ள மற்றய துறைகளிலும் இருநாடுகளும் சமீபகாலமாக ஒத்துழைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகம், காலநிலை மாற்றம் மற்றும் நிதி சார்ந்த உலக நாடுகளின் வரிசையின் சீர்திருத்தம் மற்றும் பிற பொதுவான ஆர்வமுடைய பகுதிகளை ஊக்குவிக்க ஒத்துழைத்து வருகின்றன.

அணு ஆயுத அண்டை நாடுகள்:

இந்தியாவும் சீனாவும் கடந்த உறவுகளில் ஒரு கடினமான கால கட்டத்தில் இருந்து முன்னேற முயற்சி செய்து வருகின்றன. வர்த்தகம் முதல் புனித யாத்திரைகள் மற்றும் நதி தரவு பகிர்வு வரை, பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள் குறித்து இரு நாடுகளும் இணைந்து விவாதித்து வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவின் எல்லைகளில் இப்போது ஸ்திரத்தன்மை மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதம் ஏந்திய அண்டை நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் ஒரு சீரிய மாற்றத்தை சமீபத்திய ஆண்டுகளில் காணக் கூடியதாக இருக்கிறது. சர்ச்சைக்குரிய இமயமலை எல்லையில் பதட்டங்களைத் தணிக்க ரோந்து ஏற்பாடுகளை ஏற்பாடு செய்வதில் இந்தியாவும் சீனாவும் கடந்த ஆண்டு அக்

டோபரில் ஒப்புக் கொண்டன.

அப்போதிருந்து, இரு தரப்பினரும் உறவுகளை இயல்பாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இதில் சீனா இந்த ஆண்டு திபெத் தன்னாட்சிப் பகுதியில் உள்ள முக்கிய இடங்களுக்கு இந்திய யாத்ரீகர்களைப் பார்வையிட அனுமதித்ததும் அடங்கும்.

மற்றோர் முன்னேற்றகரமான விடயமாக சீன சுற்றுலாப் பயணிகளுக்கான விசா சேவைகளையும் இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது. மேலும் நியமிக்கப்பட்ட பாஸ்கள் மூலம் எல்லை வர்த்தகத்தைத் திறப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமானங்கள் மீண்டும் தொடங்கும் என்றும் தகவல்கள் உள்ளன.

அமெரிக்க வரியும் சீன உறவும்:

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான இடைவெளி அதிகரித்தால் அது சீனா மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே பல பொருளாதார வல்லுநர்களின் கேள்வியாக உள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்பின் முதல் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுடனான நெருங்கிய உறவின் பலன்கள், இரண்டாம் ஆட்சிக் காலத்தில் வரிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களால் சில வழிகளில் சீனா பலனடையலாம் எனவும் கருதப்படுகிறது.

2024-25 நிதியாண்டில் இந்தியா மற்றும் சீனா இடையேயான வர்த்தகம் 127.71 பில்லியன் டாலராக இருந்தது. அதே வேளையில் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான வர்த்தகம் 132.21 பில்லியன் டாலராக இருந்தது.

இந்தியா மற்றும் சீனா இடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் பல்வேறு விவகாரங்கள் பற்றிய

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

அனு ஆயுதம் ஏந்திய இரு அண்டை நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் ஒரு சீரிய மாற்றத்தை சமீபத்திய ஆண்டுகளில் காணக் கூடியதாக இருக்கிறது. சர்ச்சைக்குரிய இமயமலை எல்லையில் பதட்டங்களைத் தணிக்க ரோந்து ஏற்பாடுகளை ஏற்பாடு செய்வதில் இந்தியாவும் சீனாவும் கடந்த ஆண்டு அக்டோபரில் ஒப்புக் கொண்டன.

இரு தரப்பினரும் உறவுகளை இயல்பாக்க பல்வேறு நடவடிக்-கைகளை எடுத்துள்ளனர். இதில் சீனா இந்த ஆண்டு திபெத் தன்னாட்சிப் பகுதியில் உள்ள முக்கிய இடங்களுக்கு இந்திய யாத்ரீகர்களைப் பார்வையிட அனுமதித்து உள்ளது.

கேள்விகள் தற்போதும் உள்ளன. எனினும், இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராக அமெரிக்காவே உள்ளது. அதே சமயம் சீனா உடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை கடந்த சில வருடங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சூழலில் அமெரிக்காவுக்கான மாற்றாக இந்தியாவுக்கு சீனா இருக்க முடியுமா என்கிற கேள்வி உள்ளது. ஆனால் அது எப்போதும் நடக்க வாய்ப்பில்லை என்றே கருதப்படுகிறது.

ஏனெனில் சீனா மற்றும் பாகிஸ்தான் இடையேயான நட்பில் எந்த விரிசலும் இருக்கப் போவதில்லை. சீனாவால் எப்போதும் அமெரிக்காவின் இடத்தை நிரப்ப முடியாது. இந்தியா தான் ஏற்றுக்கொண்டுள்ள பல அணி கொள்கை மூலம் சீனா உடனான தனது உறவுகளை மேம்படுத்த முயன்று வருகிறது என்பதே உண்மை ஆகும்.

குறையுமா சீன எதிர்ப்பு மனநிலை:

உக்ரேன் போர் தொடங்கிய பிறகு ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை இந்தியா அதிகரித்தது. இதனால் தற்போது அமெரிக்கா உடனான அதன் உறவுகளில் பதற்றத்தை உருவாக்கி வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை பாதித்துள்ளது.

சர்வதேச எரிபொருள் சந்தைகளை நிலையாக வைத்திருக்க முன்னைய பைடன் நிர்வாகம் தான் ரஷ்ய எண்ணெயை வாங்கச் சொல்லி தங்களிடம் வற்புறுத்தியதாக இந்தியா கூறுகிறது. ஆனால் உக்ரேனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் இயந்திரம் தொடர்ந்து இயங்க இந்தியா ஒரு காரணமாக இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

ஒருபுறம் அமெரிக்கா உடனான இந்தியாவின் வர்த்தக உறவுகளில் நிலையற்ற தன்மை நிலவி வருகிறது. மறுபுறம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவில் நேர் மறையான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதையும் பார்க்க முடிகிறது.

சீனாவாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி,

மக்களின் பொது உணர்வு யாருக்கு எதிராக உள்ளது எனப் பார்க்க வேண்டும். சீனாவுடன் நீண்ட கால எல்லை தகராறு இருந்து வருகிறது. ஆனால் டிரம்ப் மற்றும் மோதிக்கு இடையேயான நட்புக்கு அப்பாலும் ஒருதலைபட்சமான வரிவிதிப்பு இந்தியாவில் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் உள்ள அமெரிக்க எதிர்ப்பு சீன எதிர்ப்பை விட எந்த விதத்திலும் குறைவானது இல்லை. இந்தியா மீது ஐம்பது வீத வரிகளை விதித்தது போல இந்தியாவின் அண்டை நாடுகள் மீது வரிகளை அமெரிக்கீ விதிக்கவில்லை என்பது உண்மைதான்.

ஆனாலும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான நெருக்கம் அதிகரிப்பதறான பல காரணங்களில் அமெரிக்காவும் ஒன்று. கடந்த சில மாதங்களாக இருநாடுகளுக்கும் இடையே தொடர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தது. இந்தியாவின் முக்கிய வர்த்தக கூட்டாளியான சீனா பொருளாதார வளமிக்க நாடாக உள்ளது.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ ஆகஸ்ட் மாதத்தில் டெல்லிக்கு வந்திருந்தார். அப்போது இந்தியாவும் சீனாவும் ஒருவரையொருவர் எதிரிகள் அல்லது அச்சுறுத்தல்கள் எனப் பார்க்காமல் கூட்டாளிகளாக பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

வாங் யீ-ஐ சந்தித்த பிறகு இந்தியா மற்றும் சீனா இடையேயான நிலையான, நம்பத்தகுந்த மற்றும் ஆக்கப்பூர்வமான உறவுகள் பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது உலக அமைதி மற்றும் செழிப்புக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் என பிரதமர் மோடியும் தெரிவித்துள்ளமை இரு நாட்டு உறவுகள் வலுப்பெற பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.



www.sangathamil.ca

எங்களையும் வாழ விடுங்களேன்...

பிறந்து, தவழ்ந்து, (அ) எழுதிப்பழகிய மண்ணைப்பாடும் பறவைகளாய் சிறகடித்துத் திரிந்த ஊர் வயல்வெளிகளை, தோழிக ளோடு நீராடி மகிழ்ந்த நீரோடைகளை, எந்த ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியா மண்ணை எப்போது பார்ப்பேன் என்று அவள் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. அவள் அவசரத்திற்கு தடை போடுவது போல கொழும்பு மாநகரின் பெருந்தெருக்களில் அடிக்கடி தோன்றிய சிவப்பு சிக்னல் எரிச்சலை ஊட்டியது. பல திசைகளிலிருந்தும் கேட்கும் வாகன சமிஞ்ஞை ஒலிகள் போல காதுகளைச் செவிடாக்கின. எல்லோருக்கும் அவசரம்.

பச்சை சிக்னலுக்குக்காய் காத்திருந்த போது அவள் பார்வை முன்னால் சென்று கொண்டிருந்த கார் மீதுபதிகிறது. அதற்குள் இருந்த கணவனும் மனைவியும் கிடைத்த இடைவெளியை வீணாக்காமல் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். இயந்திரமயமான வாழ்க்கையில் குடும்பவிவகாரங்கள் பற்றிப் பேசநேரமில்லை. இப்படியான நேரங்களைப்பயன்படுத்தி கொள்கின்றார்கள் போலும். சில வருடங்களாய் அவளும் இந்த வாழ்க்கைதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றாள். புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அவள் சமாதான காலத்தில் தாயகத்தைப் பார்த்து விடுவோம் என்ற ஆவலில் போய்க கொண்டிருக்கிறாள். அவள் ஆவல் டிறபிக்லைற்றிற்குத் தெரியாவா போகிறது?

பாடசாலை முடிவடையும் நேரமாகையால், வழக்கமாகவே போக்குவரத்து அதிகமாய் இருக்கும். அந்த வீதியில் வாகனங்கள் நெருக்கியடித்துக்கொண்டிருந்தன. இந்த வாகனங்களின் சாரதிகள் போற்றப்படவேண்டிய பொறுமைசாலிகள் தான். இவர்களின் வாகனத்துக்கருகே நின்ற டொல்பின்னுக்குள்ளிருந்து சிரிப்பொலி எழவே திரும்பிப்பார்க்கிறாள். துன்பம் என்றால் என்ன வென்றுதெரியாத அந்த மாணவர்கள் உல்லா சமாய்ச்சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்தனர். காலில் செருப்பில்லாமல் பிஞ்சுப் பாதங்களில் கிரவற்கற்கள் குத்த பாடசாலை செல்லும் தமிழ் மாணவர்கள், காலையில் சாப்பிடாமல் கல்வி கற்கச்சென்ற பிள்ளை கிபிர்த்தாக்குதலில் கொல்லப்பட்டதால் விரக்தியடைந்த அம்மாக்கள், செந்திறமாகிய வெள்ளைச் சீருடைகள் அனைத்தும் அவள் கண் முன்னால் தோன்றின.

சிறுகதை

தமிழ் நிலா

“எங்கள் மாணவர்களையும் உங்கள் மாணவர்கள் போல் நிம்மதியாய் படிக்கவிடுங்களேன். அதிகமாய் உங்களிடம் நாம் கேட்கவில்லை.

எங்களின் பூக்களை கருகவிடாதீர்கள் என்றுதான் கேட்கின்றோம்”

அவள் மனம் யாரிடமோ கேட்டது. இந்த “றோட்டிலடிறபிக் கூடவா இருக்கு உள்றோட்டால போவம்.”

அவர்களிடமிருந்து பதில் வருமுன்னே ஓட்டுநர் வாகனத்தை திருப்பினார்.

“இந்த நகரத்தில உள்ள பணக்காரரின்ர வீடுகள் எல்லாம் இந்த இடத்திலநான் இருக்கு.”

ஓட்டுநரின் குரலைக்கேட்டவள் வீதியின் இருபக்கமும் இருந்த வீடுகளின் மீது பார் வையைச்செலுத்தினாள்.

அந்த ஆடம்பரமாளிகைகள் தங்கள் உரிமையாளரின் பொருளாதார நிலையைப்படம் பிடித்துக்காட்டிக் கொண்டிருத்தன. நெற்றி வியர்வை சிந்தி உழைத்து வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி, மிச்சம் பிடித்து தமிழன் கட்டிய வீடுகள் கற்குவியலாய் கிடக்கும் கோலம் மனக்கண்ணில் விரிந்தது. அப்பாவின் இரத்தமும் வியர்வையும் கலந்துகட்டிய வீட்டை விட்டு வந்து அம்மாவின் புடவைகளால் மறைப்புக்கட்டி வாழ்ந்த வாழ்க்கையை ஒரு கணம் நினைத்துப்பார்த்தாள். அந்தக்குடிசைகளிலாவது நிம்மதியாகவாழ விட்டார்களா பாவிகள். அடுத்தடுத்து எத்தனை இடப்பெயர்வுகள் அவள் மனம் கனத்தது.

“இந்த சமாதானக்காலமும் சிங்களவருக்குத்தான் நன்மையாக இருக்கும். எங்கடசனம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வாடுதுகள். உயர்பாதுகாப்பு வலயமோ என்னவோ எண்டு சொல்லிக்கொண்டு எங்கட சனத்த அதுகளின்ர வீடுகளில குடியிருக்க விடுறாங்களில்ல. எல்லாச்செய்தியளும் அதத்தானே சொல்லிக் கொண்டு இருக்கு”.

அவளின் மனநிலையைப் புரிந்துகொண்டது போல அவள் கணவனின் கூற்றும் அமைகிறது.

வாகன நெருக்கடிகளைத் தாண்டி போக்குவரத்து ஓரளவு குறைந்தது. வீதிக்கு வாகனம் வந்ததும் அதன் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. மழைமேகம் சூழ்ந்திருந்தது. சில்லென்று குளிர் காற்று முத்தில் அறைந்தது. இது அவளுக்கு மிகவும் பிடித்த ஒன்று இருமருங்கும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் பச்சைப்பசேலென்று அழகாய் காட்சியளித்தன. கண்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்த அக்காட்சி அவள் மனதைக் கொள்ளை கொண்டது.

வாகனம் அதிவேகமாய் விரைந்துகொண்டிருந்தது. ஐந்தரை மணிக்குபின் தடைமுகாமைத்தாண்ட முடியாதல்லவா? முட்கம்பித்தடைகளும், காவலரண்களும் இது தமிழர்களின் பிரதேசம் என்று பறைசாற்றின. ஆங்காங்கே மரங்களிற்கும் கீழ் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

“உங்கட ஆக்கள் அங்க உல்லாசமாய் வாழ்ந்துகெண்டிருக்கினம். ஆனா நீங்கள் அதையெல்லாம் விட்டுட்டு எங்கட நிம்மதியைக்கெடுக்கவந்திருக்கிறீங்கள். ஆற்றையோ சுயநலத்திற்காக நீங்கள் அநியாயமாச் சாகிறீங்கள்” சிப்பாய்களைப்பார்த்து அவள் முணுமுணுத்துக்கொள்கிறாள். எரிபொருள் நிரப்புவதற்காய் வாகனம் தரித்துநின்றது. “அக்கா அப்பின் வாங்குங்கோ பன்னி ரெண்டு பழம் நூறுரூபா” “அண்ணா ஒரேஞ் வாங்குங்கோ” நாலைந்து சிறுவர்கள் வாகனத்தைச்சுற்றி வளைத்துக்கொள்கிறார்கள் அவர்களின் பிஞ்சு முகங்களையும், கொஞ்சும் விழிகளையும் பார்த்தால் அப்பிள் சாப்பிட விரும்பாதவர்களையும் வாங்கத் தூண்டும். அந்தச்சிறுவர்களுக்காகவாவது பழம் வாங்கவேண்டுமென நினைத்தாள்.
“அம்மா அப்பிள் வேணும்” மகள் கேட்டபோது “என்னிடம் வாங்குங்கள், என்னிடம் வாங்குங்கள், என்று அவர்கள் விழிகள் கெஞ்சின. முண்டியடித்து கண்ணாடியை உடைத்து விடுவார்கள் போல இருந்தது. முந்திக்கொண்டவனிடம் பழத்தை வாங்கினாள். விற்று விட்ட சந்தோசத்தில் அவன் முகம் மலர்ந்தது. மற்றயவர்கள் ஏமாற்றத்துடன் அடுத்த வாகனத்தை நோக்கி ஓடினர். புத்தகம் சுமந்து பள்ளிசெல்லவேண்டிய வயதில் பழம் விற்று குடும்பத்தைக்காக்கும் அவர்களுக்காய் அவள் நெஞ்சம் அழுதது.

“இந்தப்பிள்ளையின்ர அப்பா சிறையில இருக்கிறாரோ அல்லது புதைகுழிக்கே அனுப்பீட்டாங்களோ! படிக்கவேண்டிய வயசில குடும்பத்தை சுமக்குதுகள். இதுகளின்ரகையை எதிர்பார்த்து எத்தனை உயிர்கள் காத்திருக்கின்றதோ!

எரிபொருள் நிரப்பியதும் வாகனம் தடைமுகாம் நோக்கி விரைகிறது. சிறிது தூரம் கழிந்ததும் எங்கும் இராணுவத்தலைகளே தெரிகின்றன.

விளையாடுபவர்களும், காவல் நிற்பவர்களும், வேலைசெய்பவர்களும், காவலரண் அமைப்பவர்களுமாய்க்காட்சியளித்தனர்.

“பொங்கு தமிழில சொன்னது போல நாங்கள் எங்கட வீடுகளுக்குப் போறதுக்கு நீங்கள் உங்கடவீடுகளுக்குப்போகவேணும். அப்பதான் நீங்களும் சந்தோசமா இருப்பீர்கள் நாங்களும் நிம்மதியாய் இருப்பம்.”

இராணுவத்தினரைப் பார்த்து அவள் எண்ணிக்கொண்டாள். தடைமுகாம் வந்துவிட்டது. இராணுவீரன் ஒருவன் யாரிடமோ எரிச்சலாய்க்கத்தினான். அவன் பேச்சில் எல்.ரீ.ரீ என்று அடிபடவே காதைக்கூர்மையாக்கினாள்.

“போ போ தமிழங்க எல்லாம் எல்.ரீ.ரீ தானே” “ஐ.சி. யைக் காட்டுவீங்களா” வேறொருவன் இவளிடம் கேட்டான். இவள் திகைத்துவிட்டாள்.

“அட சிறீலங்கா ஆமிக்காரன் இப்படிக்கதைக்க எப்ப பழகினவன். “இது சமாதான காலம் தானே. அதுதான் கொஞ்சம் மாறி இருக்கிறாங்கள். முன்னமெண்டா எங்கள் மனிசராய்க் கூட மதிக்கமாட்டாங்கள். எல்லாத்துக்கும் காரணம் எங்கட சகோதரர்கள் குடுத்த அடிதான்.

“ஏன் நீங்க எல்லாம் இயக்கத்தில சேந்தீங்க? நேற்று ஒரு பொண்ணு வந்தது. அது காலைக் குடுத்துட்டு இருக்கு. உங்களை எல்லாம் பார்த்து நம்மட ஆக்கள் மிச்சம் கவலைப்படுறாங்க.”

தடைமுகாம் தாண்டிச்செல்ல வந்த பெண்போராளிகளிடம் இராணுவவீரன் ஒருவன் கூறினான். “ஆகா! ஆடு நனையுது எண்டு ஓநாய் அழுதிச்சாம்.”

அவள் மனதுக்குள் சிரித்தாள்.

தடைமுகாம் தாண்டி வன்னி மண்ணுக்குள் நுழைகின்றார்கள். சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் உற்சாகத்தில் அவள் மனம் துள்ளிக்குதிக்கிறது. ஜேர்மனிக்குப் போகும் போது இருந்த கட்டடங்கள் எதையும் காணவில்லை. எது எந்த ஊர் என்று அடையாளம் காண கடினமாய் இருந்தது. இருமருங்கும் நின்ற மரங்களும் போரின் வடுக்களைத் தாங்கிநின்றன. ஓங்கி வளர்ந்துநிற்கும் தென்பகுதி தென்னந்தோப்புகளும் மரங்களும், இங்கே ரவைகளாலும், குண்டுகளாலும் உருக்குலைக்கப்பட்ட மரங்களும், மாறி மாறி கண்ணில் தோன்றின.

“இந்த மரங்களெல்லாம் சாதாரண மரங்களில்ல. இரத்தம் பாய்ச்சி வளர்க்கப்பட்ட மரங்கள். சிக்குறு சண்டையில் ஒவ்வொரு மாவீரனின்ர சாதனைகளையும் சாவுகளையும், நேரில பார்த்தமரங்கள் போராளிகளைக்காத்த மரங்கள் அந்த மிடுக்கோடு நிமிர்ந்து நிக்குதுகள்.

மண் அரண்களையும், இடிந்த காவலரண்களையும், பார்த்தபோது அவளுக்கு அவள் தம்பியின் ஞாபகம் வந்தது. அவள் தம்பி புளியங்குளச்சண்டையில் வீரச்சாவடைந்ததாய் அம்மா கடிதம் அனுப்பியிருந்தார்.

புல் விளைந்திருந்த நெல் வயல்களைப்பார்த்தபோது, தென்பகுதியில் பச்சைப்பசேலென காட்சியளித்த வயல்வெளிகள் அவள் நினைவுக்கு வந்தன. அந்த வயல்கள் மூன்று போகங்களும் விதைக்கப்படுகின்றன. ஆனால் இந்த வயல்கள் பல வருடங்களாய் விதைக்கப்படாதிருக்கவேணும்.

“நெல் விதைக்கும் எங்கள் வயல்களில் கண்ணி வெடி விதைத்தவர்களே! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? மனிதர்களின் அவலங்களைக் கண்டு சுகபோகம் துறந்த சித்தார்த்தனை வழிபடும் நீங்கள் உங்கள் இன் பத்திற்காய் எங்கள் வாழ்வை அழிக்கிறீர்கள். பௌத்தர்கள் எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் கருதி கருணையுடன் நடந்து கொள்வார்கள். என்று படித்திருக்கின்றேன். ஆனால் நீங்கள் முற்றிலும் மாறுபட்டவராய் இருக்கின்றீர்கள். எங்களையும் வாழவிடுங்கள். இல்லாவிட்டால் நீங்களும் வாழ மாட்டீர்கள்.

மாடிக்கட்டடங்களுடன் நிமிர்ந்து நின்ற பாடசாலை தலைகீழாய்க் கிடந்தது. மாணவர்கள் மரங்களின் கீழ்படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மேசை கதிரைகளைப் பார்த்தாள். இராணுவத்தினரின் எறிகணைப்பெட்டிகளும் வெற்றுக் கோதுகளும் கதிரை மேசையாய் பயன் பட்டுக்கொண்டிருந்தன.

“சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போல் எங்கடபிள்ளையள் தங்களை அளிக்கப்பயன்படுத்தப்பட்ட பொருட்களையே தங்களுக்கு உபயோகமானதாக மாற்றிக் கொண்டு உயர்ந்து நிற்கிறார்கள்.

அந்தப் பிஞ்சு முகங்களில் நம்பிக்கை ஒளிவீசிக் கொண்டிருந்தது. அவலத்தின் வரிசைப்படுத்தல்களைக்கண்டு சுகபோகம் துறந்தவர்கள் இருக்கிறார்கள். அவலத்தை தந்தவர்களுக்கே அதை திருபிக்கொடுப்பார்கள் என்று அவர்கள் கூறுவதுபோல இருந்தது.

அவர்களின் வாகனம் ஊர் நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அவள் மனம் அதற்கு முன்பு ஊர் போய்ச்சேர்ந்துவிட்டது.

நன்றி: ஈழநாதம் (வெள்ளிநாதம் 29.04-09.2003)

இலங்கை அரசிற்கான சர்வதேச விசாரணை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக அரசியல் மற்றும் சிவில் சமூக தரப்பினரரான் ஊடகச் சந்திப்பு!

21.08.2025

இலங்கை அரசிற்கான சர்வதேச விசாரணை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணைய நிரந்தர மற்றும் அவதானிப்பு நாடுகளின் அங்கத்துவர்களுக்கும் தமிழ் தரப்பில் இருந்து மற்றொரு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், மத தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள் என பலரது கையொப்பத்துடன் குறித்த கடிதம் அனுப்பபட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அரசியல் மற்றும் சிவில் சமூக தரப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அக்கடிதத்தில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 60 ஆவது அமர்வு - சிறீலங்கா அரசிற்கான பன்னாட்டு விசாரணையும் நடவடிக்கை பற்றி மிகத் தெளிவாக விடயங்களை வெளிப்படுத்தும் முகமாக எங்களால் எழுதப்படும் இந்தக் கடிதத்தை நீங்கள் இதற்கு முன் இதே விடயம் தொடர்பாக எழுதப்பட்ட கடிதங்களுடன் இணைத்தோ அல்லது தனித்தோ வாசிக்க முடியும் என்பதை தங்களின் கவனத்திற்குத் தருகிறோம்.

1. பன்னாட்டு விசாரணையை நிகழ்த்துவதற்காக 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா என்பதையும் அக்குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் கூடிய, பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவ வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம், 1948 இனப்படுகொலை வரைபின்படி முழுக் காலவரையறையையும் உள்ளடக்க வேண்டும்.

சிறீலங்காவின் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமது தாயகத்தில் ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் சுயாதீன நீதிப்பொறிமுறையின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என உலகப் புகழ்பெற்ற பன்னாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், இலங்கை அரசின் செயற்பாடுகள், முழு அளவிலோ அல்லது பகுதியளவிலேனும் ஈழத்தமிழரை அழிப் பதற்கான நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன் அவ்வழிப்புத் தொடர்பான எந்தவொரு விசாரணையும் நடைபெறாதவாறு நுட்பமாகத் தடை செய்துவருவதும் இனப்படுகொலை வரைபின் அகவிதி 2இன் படி இனப்படுகொலையாகும்.

1956 யூன் மாதம் சிறீலங்கா அரச ஆதரவுடன் சிங்களக் காடையர்களால் ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்லோயாப் படுகொலைகள் என அறியப்படும் முதலாவது பாரிய இனவழிப்பு நடைபெற்ற நாளிலிருந்து, தம்மீது நடைபெற்ற பன்னாட்டுக் குற்றங்களை விசாரிக்கும் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளிடம் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இப்பொறிமுறையின் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நீண்டநாளாகத் தொடரும் வேதனையினைத் தீர்க்கவும் காணாமலாக்கப்பட்டவர்களின் விதியை அறிந்துகொள்ளவும் முடியும்.

இந்த விசாரணையில் இலங்கை அரசின் பங்கு இருந்தால் அது பாரபட்சமானதாகும், ஏனெனில் இப்பன்னாட்டுக் குற்றங்களை நிகழ்த்தியவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் அரசும் அரசுடன் தொடர்புடையவர்களும் ஆகும்.

இலங்கை அரசு, எந்தவொரு வகையிலும் பன்னாட்டு விசாரணைக்கு எதிராகவே இருப்பதுடன் ஈழத் தமிழர்களின் மீது தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையினை நிகழ்த்தும் இடைவிடாத திட்டமிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஐ.நா. சாசனத்தின் அகவிதி 2(7)இல் குறிப்பிடும் “அரசிற்கிருக்கும் இறையாண்மையினை” இதற்கான பாதுகாப்புக் கவசமாக சிறீலங்கா பயன்படுத்தி வருகிறது.

ஆனால், இறையாண்மையைப் பன்னாட்டுக் குற்றங்களுக்கு எதிரான ஒரு கவசமாக பயன்படுத்த முடியாது என்பதே சட்ட ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உறுதி செய்யப்பட்டுள்ள நியதி ஆகும். இதனை, சிரியாவுக்கு விசாரணை செய்ய ஐ.நா. மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்திய விசாரணைக் குழு போன்ற ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆகியவை எடுத்த செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈழத் தமிழர்கள் பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுவோர் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்தும் இருக்கிறோம். இந்நம்பிக்கையின்படி பன்னாட்டு விசாரணையைக் கோருவதற்கு உரிமையும் எங்களுக்கு உள்ளது.

இவற்றினடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 60வது கூட்டத் தீர்மானம்,

(அ) ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க அதிகாரம் அளிக்க வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய பொறிமுறையை அமைக்க ஐ.நா. பொதுச் சபையிடம் கோரிக்கை விடுக்கும் விதமாக இருக்க வேண்டும்.

எனக் கவனமாக வலியுறுத்துகிறோம். இந்தப் பொறிமுறைக்கு 1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை வரைபின் கீழ் குற்றச் செயல்களின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் அதிகாரமும், சம்பந்தப்பட்ட முழு காலவரையறையையும் உள்ளடக்கும் அதிகாரமும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

2. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு சிறீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிக்க, இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் அகவிதி IXஇன் கீழ், முழுமையான காலவரையறையையும் உள்ளடக்கும் வகையில், சிறீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர், பார்வையாளர் நாடுகள், வழக்குத் தொடங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

சிறீலங்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சராக இந் நாட்டின் சனாதிபதி உள்ள நிலையில் சிறீலங்கா பாதுகாப்பு படைகள் செய்த போர் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் அரசின் முழுமையான ஒத்துழைப்பின்றி சாத்தியமற்றவை எனவும் அரசின் நேரடி பொறுப்புடனேயே நிகழ்ந்ததாகவும் சுயாதீனமாக அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இங்கு குறிப்பாக, ஐ.நா. பொதுச் செயலரின் நிபுணர் குழு (2011), இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரின் விசாரணை (OISL அறிக்கை, 2015), மற்றும் 2007இல் சித்திரவதைகளுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் பயணம் ஆகிய அறிக்கைகளைக் கருத்திற்கொண்டாலே இக்குற்றங்கள் அரச பின்புலத்தில் நிகழ்த்தப்பட்டதற்குப் போதுமான ஆதாரங்களை வழங்கியுள்ளன. இந்த உறுதியான ஆதாரத் தொகுப்பு, சிறீலங்காவிற்கு எதிராகப் பன்னாட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆதாரமாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இப்போது 16 ஆண்டுகள் கடந்தும், தங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலையின் உச்சத்தை இந்த உலகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததுடன், நுணுக்கமாக அவ் இனப்படுகொலையை மறுப்பதும், அமைதியாக இருப்பதன் மூலம் புறக்கணிப்பதும் சிறீலங்கா தொடர்ந்து மேற்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் செயல்களுக்கு உலகம் ஆதரவு அளிப்பதாகவே ஈழத் தமிழர்கள் உணர்ந்து வருகின்றனர்.

1948 இனப்படுகொலை வரைபின் அகவிதி IX இல் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கை அடிப்படையிலான அதிகாரப் பிரிவின் கீழ், அவ்வரைபில் பங்கேற்றிருக்கும் இரண்டு நாடுகளுள் ஒன்று, மற்றொரு நாடு மேற்கொள்ளும் மீறல்களைக் குற்றஞ்சாட்டி நேரடியாக வழக்குத் தொடங்கலாம். சிறீலங்கா 12 அக்டோபர் 1950 அன்று அவ்வரைபின் அகவிதி IX உட்பட அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு அவ்வரைபில் இணைந்துள்ளது. இதனால், UNHRC இன் எந்த ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடும், ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கான சிறீலங்கா அரசுப் பொறுப்பை நிரூபிக்க நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

எனவே, குறைந்தபட்சம் ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடு, ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான சிறீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிப்பதற்காக, இனப்படுகொலை வரைபில் அகவிதி IX கீழ், சிறீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.

3. இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளை மேற்பார்வை செய்வதற்காக, “மனிதப் புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான சர்வதேச நெறிமுறைகள் - போர்ன்மொத் நெறிமுறை” (The Bournemouth Protocol) கீழ் அதிகாரம் வழங்கப்பட்டு பன்னாட்டு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என வலியுறுத்தல்.

வலியுறுத்தல் 1-இன் பந்திகள் 3 மற்றும் 4-ஐ மேற்கோள் காட்டுகையில், சிறீலங்கா அரசின் ஆதரவோடு நடைபெறும் எந்தவொரு விசாரணையும் இயல்பாகவே பாகுபாடுடையதாக இருக்கும் என்பது தெளிவாகிறது. செம்மணி மனிதப் புதைகுழி, ஈழத் தமிழ் பொதுமக்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டதற்கான வெளிப்பட்ட சான்றாக திகழ்கிறது. எலும்புக் காவல்கள், பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள், இளம் குழந்தைகள் கூட இருந்ததை வெளிப்படுத்துகின்றன.

முப்படை மற்றும் காவல்துறையை உள்ளடக்கிய அரசின் ஆதரவுடன் செயல்பட்ட அமைப்புகள், ஈழத் தமிழ் பொதுமக்களை படுகொலை செய்து, இரகசியமாக புதைத்தன என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. அரசின் ஆதரவுடன் நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சமூகம் தங்களைப் பாதுகாக்க முயன்ற போதிலும், “உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” என்ற கோதாவில் ஈழத் தமிழ்மக்களின் மீது அழித்தொழிப்பு நடத்தப்பட்டது. செம்மணி மனிதப் புதைகுழியானது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தாண்டி, அடையாளம் காணப்பட்ட ஈழத்தமிழ் மக்

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

களைப் பகுதியளவிலேனும் அழிக்கத் திட்டமிட்ட நோக்கம் இருந்ததை வெளிப்படுத்தும் உறுதியான சான்றாகும். இது, ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது.

சிறீலங்காவின் நீதித்துறை வரலாற்றில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான ஆதாரங்கள் மறைக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. மொஹமட் தாஜுதீன் வழக்கு அவற்றில் ஒன்று. இத்தகைய அச்சுறுத்தும் முறை, உள்நாட்டு விசாரணைகளின் நேர்மையைப் பற்றித் தீவிரமான சந்தேகங்களை எழுப்புகிறது. இத்தகைய செயல்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்ற எந்த அறிகுறியும் இல்லை, மேலும் செம்மணி வழக்கும் அதே நிலையை சந்திக்கும் என்ற நியாயமான அச்சம் ஈழத்தமிழ் மக்களிடம் உள்ளது. ஊடக அறிக்கைகளின் படி 2023 செப்டம்பரில், சிறீலங்காவின் வடபகுதியான முல்லைத்தீவில் பணியாற்றிய ஒரு தமிழ் நீதிபதி, உயிரச்சுறுத்தல் மற்றும் கடுமையான மன அழுத்தம் காரணமாக, தனது பதவியை விடுத்து சிறீலங்காவை விட்டு வெளியேறினார். அவரின் ராஜினாமா, ஒரு தொல்பொருள் தள வழக்கை உள்ளடக்கிய சில நுணுக்கமான வழக்குகளுக்கான அழுத்தம் மற்றும் அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்டது. இது, இங்கு பாதுகாப்பின்மையையும் நீதித்துறையின் சுயாதீனமின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், செம்மணி மனிதப் புதைகுழி தளத்தில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியை மேற்பார்வை செய்து கண்காணிக்கவும், வழக்கு நடைமுறைகளில் பன்னாட்டுத் தலையீட்டை எளிதாக்கவும், “போர்ன்மொத் நெறிமுறை” (The Bournemouth Protocol) பிரேரிக்கும் அதிகாரத்துடன் கூடிய சுயாதீன நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்ற முன்மொழிவை, ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

4. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 60ஆவது தீர்மானத்தில், பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு வரைபுகளுக்கு முரணான தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் திருத்தச் சட்டங்கள் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதை நிறுத்துமாறு வலுவான அழைப்பைச் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

1983 ஆகஸ்ட் 8 அன்று இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட 6ஆவது திருத்தச் சட்டம், குமுகாய மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை (ICCPR - 23 மார்ச் 1976) ஐ வெளிப்படையாக மீறுகிறது. இது, சுயாட்சி அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் உரிமையை அமைதியான முறையில் வலியுறுத்துவதை குற்றமாக்குகிறது. இதன்மூலம் இவ்வரசியலமைப்புத்திருத்தமே பயங்கரவாதத் தடுப்பு சட்டதின் (PTA) முன்னோடியாகச் செயல்பட்டது. மேலும் இத்திருத்தமானது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவியை பறித்தும், அரசியல் கருத்தொன்றை மட்டும் கொண்டதற்காக கடுமையான குடியுரிமைத் தடைகளையும் விதித்தும் வருகிறது.

இந்த திருத்தச் சட்டம், அகவிதி 1இன் கீழ் ஈழத்தமிழ் மக்களுக்கு தங்கள் அரசியல் நிலையை சுதந்திரமாகத் தீர்மானிக்கும் உரிமையை மறுக்கிறது. அகவிதி 19இன் கீழ் பாதுகாக்கப்படும் ஜனநாயக கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குகிறது. அகவிதி 25 இன் கீழ் உறுதியளிக்கப்படும் அரசியல் பங்கேற்பைத் தடுக்கிறது. மேலும், அகவிதி 26 ஐ மீறி, ஒரேயொரு சமூகத்தை மட்டுமே குறிவைக்கிறது. இதனால், தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு ஜனநாயக வழிமுறைகளால் தீர்வு காணும் அனைத்து வாயில்களையும் மூடியதன் ஊடாக சிறீலங்காவின் பன்னாட்டுக் கடப்பாடுகளுக்கு முரணான கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளது.

இருப்பினும், சிறீலங்கா அரசு, இத்தகைய கொடூரமான நடவடிக்கைகளின் அடிப்படைக் காரணமான 6வது திருத்தச் சட்டத்தைத் தொடாமல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கு மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினைப் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கும் வழி திறந்தேயிருக்கின்றது. மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கான தெளிவான காலக்கெடு எதுவும் இல்லை. இதனால், பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது தொடர்ந்தும் அடக்குமுறை மற்றும் அச்சத்தின் கருவியாக இருந்து வருகிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்பு சட்ட நடைமுறையில், ஈழத் தமிழ் குமுகாய மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவம் கைப்பற்றிய நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அச்சத்தில் வாழ்கிறார்கள்.

2007 ஆம் ஆண்டின் இலங்கை ICCPR சட்டமும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமும் பன்னாட்டு ICCPR இன் கொள்கைகளை முழுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் நடைமுறைப்படுத்தாததால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றின் அமுலாக்கம் பெரும்பாலும் காவல்துறையின் கீழ் இருப்பதால், தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் உள்பட பல்வேறு சமூகங்களுக்கு எதிராக அச்சட்டங்கள் பிரயோகிக்கப்படும்போது பாகுபாடாகப் பொருள்கோருவதும் விளக்கமளிப்பதும் செயற்படுவதும் நிகழ்கிறது.

எனவே, ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் தீர்மானத்தில், 6வது திருத்தச் சட்டத்தை நிறுத்தவும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை ஒரு குறிப்பிட்ட மற்றும் அமுலாக்கக்கூடிய காலக்கெடுவில் நீக்கவும் சிறீலங்காவிற்குத் தெளிவான, உறுதியான கோரிக்கையைச் சேர்க்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்ட விதிகளை இன்னும் ஆபத்தான பிரிவுகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும் எந்தச் சட்ட முயற்சிகளையும் ரத்து செய்யவும் வலியுறத்த வேண்டும். மற்றும், 6வது திருத்தச் சட்டம் போன்ற, பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு உடன்பாடுகளுக்கு முரணான எந்தவொரு சட்டத்தினையோ அல்லது அரசியலமைப்பு திருத்தங்களையோ எதிர்காலத்தில் உருவாக்குவதைத் தடுக்க வேண்டும். மேலும், ஈழத் தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும், அமைதியான இணைந்த வாழ்வை அச்சுறுத்தும், மற்றும் நிலங்களை மறுபெயரிடல் அல்லது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கைப்பற்றும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நிறுத்துவதையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்

முடிவாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60ஆவது அமர்வு தனது தீர்மானத்தில் பின்வரும் நடவடிக்கைகளை சேர்க்குமாறு வலியுறுத்தப்படுகிறது:

1. 1948ஆம் ஆண்டு இனப்படுகொலைக் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் படி முழுக் கால அளவு அதிகாரத்தை உள்ளடக்கிய பணி ஆணையுடன், பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவுதல்.

2. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் தங்களின் கடமைகளின் படி, உறுப்புநாடுகள் மற்றும் - அல்லது பார்வையாளர் நாடுகள் சிறீலங்காவிந்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) வழக்குத் தொடங்குதல்.

3. செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீது சுயாதீன மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்ய போர்ன்மொத் நெறிமுறையை செயல்படுத்தக்கூடிய பன்னாட்டு நிபுணர் குழுவை அமைத்தல்.

4. பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டப் பொறுப்புகளுக்கு முரணான தற்போதைய அல்லது எதிர்கால சட்ட நடவடிக்கைகளின் இயற்றுதலை இடைநிறுத்தி, தடைசெய்தல் - என்றுள்ளது.

கடையடைப்பு: வெற்றியா தோல்வியா?

21.08.2025

தமது கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் உள்ளூராட்சி சபைகளை வைத்துக்கொண்டு கடையடைப்பை இலகுவாக அமுல்படுத்தலாம் என்று சுமந்திரன் சிந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை. அது முழுமையாகத் தோற்கவும் இல்லை; முழுமையாக வெற்றி பெறவும் இல்லை. குறிப்பாக மக்கள் அதிகமுடைய யாழ்ப்பாணத்தில் அது பெருமளவுக்குச் சொதப்பிவிட்டது. கிழக்கில் ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. வன்னியிலும் அது பாதி வெற்றி, பாதி தோல்வி என்ற நிலைமைதான்.

இப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்று சுமந்திரன் திட்டமிட்டு உழைத்தார். கடையடைப்பை எந்த விலை கொடுத்தாவது வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவரும் அவருடைய அணியும் சகல மாவட்டங்களிலும் கடுமையாக உழைத்தனர். வெற்றியைக் குறித்த சந்தேகங்கள் இருந்த காரணத்தாலும் விமர்சனங்களின் விளைவாகவும் கடையடைப்புக்கு நேர வரையறையையும் அறிவிக்க வேண்டிவந்தது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு கடையடைப்பு பூரண வெற்றி பெறத் தவறியது.

உண்மையில் இது தமிழரசுக் கட்சியின் அல்லது சுமந்திரனின் போராட்டம் அல்ல. முழுத் தமிழ் மக்களும் இனமாகப் போராட வேண்டிய விடயம் இது. முல்லைத்தீவில் இறந்த இளைஞர் யார்? அவர் இறப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது யார்? இதில் படைச் சிப்பாய்களுக்கும் அவருக்கும் இடையில் இருந்த உறவு என்ன? போன்ற விடயங்களைத் தனியாக ஆராயலாம். தமிழ்ப் பகுதிகளில் முகாமிட்டிருக்கும் படையினருக்கும் அந்த படை முகாம்களை அண்டியிருக்கும் பகுதிகளில் வாழும் ஒரு பகுதி குற்றவாளிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இது ஒருவகையில் குற்றப் பின்னணியைக் கொண்ட தொடர்புதான். தமிழ்ப் பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில குற்றவாளிகள் படைத்தரப்பினரோடு பல்வேறு வகையான உறவுகளைக் கொண்டிருக்கின்றார்கள். போதைப்பொருள் விநியோகம், பாலியல் தொழில், அரச சொத்துக்களைக் கள்ளமாக விற்பது போன்ற பல விடயங்கள் இதில் சம்பந்தப்படுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் போதைப்பொருள் வலைப் பின்னலும் இப்படிப்பட்டதுதான் என்ற குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார்கள்.

முல்லைத்தீவில் சம்பந்தப்பட்ட இளைஞர் வாழும் குடியிருப்பு ஜீவன் குடியிருப்பு என்று அழைக்கப்படுகிறது. வறிய அக்குடியிருப்பைச் சேர்ந்த ஒரு சிறு பகுதியினர் முத்தையன் கட்டுப் பகுதியிலுள்ள படை முகாமோடு தொடர்புகளை ஏற்கனவே வைத்திருக்கிறார்கள். இந்த தொடர்புகளின் விளைவாகத்தான் அந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இந்தக் குற்றப் பின்னணியை வைத்துக்கொண்டு இதில் அரசியல் இல்லை, அந்த இளைஞரின் மரணம் கொலை அல்ல, இதில் படையினர் குற்றவாளிகள் இல்லை, என்பது போன்ற விளக்கங்களை ஒரு பகுதி தமிழர்களும் தமிழர்களே எழுதி வருகிறார்கள். சுமந்திரனை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு அல்லது கடையடைப்பை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டும் ஒரு பகுதி அரசியற் செயற்பாட்டாலர்களும் அவ்வாறு எழுதி வருகிறார்கள். அது தவறு. அங்கே ஓர் அடிப்படை உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் ஒரு படை முகாம் இருந்த காரணத்தால்தான் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கே ஒரு படை முகாம் இருந்தமை என்பது தமிழ் நோக்கு நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கான ஒரு படை முகாம்தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. எனவே தமிழ்ப் பகுதிகளில் படையினரின் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் பார்த்தால் அங்கே அந்த முகாம் இருந்ததை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த முகாம் அங்கு இருந்தபடியால்தான் அந்தக் குற்றச்செயல் இடம்பெற்றது. எனவே அடிப்படைக் காரணம் படைப்பிரசன்னம்தான். தமிழ்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நோக்கத்துக்காக படையினர் நிலை கொண்டிருப்பதுதான்.

இந்த அடிப்படையில் பார்த்தால், அந்தப் படைப் பிரசன்னத்திற்கு எதிராக சுமந்திரன் அழைத்த போராட்டம் சரி. கடையடைப்பு என்று போராட்டம் சரியாக இல்லையா என்ற விவாதம் ஏற்கனவே தமிழ் அரசியல் பரப்பில் ஆழமாக நடந்திருக்கின்றது. கடையடைப்பு அல்லாத வேறு போராட்ட வடிவங்களை தமிழரசுக் கட்சி யோசித்திருக்கலாம். அப்படி யோசிப்பதற்கு தேவையான போராட்டப் பாரம்பரியம் அவர்களிடம் இல்லை என்று கூற முடியாது. 1950 களில் தந்தை செல்வாவின் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்த ஒரு கட்சி. அந்த சத்தியாகிரகத்தில் அடி வாங்கிய ஒரு கட்சி. ஆனால் அங்கிருந்து இன்று வரை கிட்டத்தட்ட 75 ஆண்டுகலின் பின்னரும் ஒரு புதிய போராட்ட வடிவத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பொருத்தமான காரணங்களுக்காக, பொருத்தமான விதங்களில் போராட வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அந்தக் கட்சியிடம் இல்லை என்பதால்தான் அவர்கள் நமத்துப் போன போராட்ட வடிவங்களைத் தெரிவு செய்கிறார்கள். அந்த அடிப்படையில் கடையடைப்பை விமர்சிக்கலாம். ஆனால் படைப் பிரசன்னத்துக்கு எதிராக நடந்த ஒரு போராட்டத்தை விமர்சிக்கத் தேவையில்லை.

அது தமிழரசுக் கட்சி, சுமந்திரன், சிவஞானம் மட்டுமல்ல ஏனைய எல்லாக் கட்சிகளும் இணைந்து போராடியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். அது முழுத் தமிழ் இனத்துக்குமான ஒரு போராட்டம். எனவே கட்சி கடந்து இனமாகத் திரண்டு நடத்தியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். ஆனால் அவ்வாறு கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை என்பதுதான் தமிழ் அரசியலில் உள்ள மிகப்பெரிய சாபக்கேடு.

கட்சி கடந்து இனமாகத் திரள முடியாத அளவுக்குத் தமிழ் அரசியல் பரப்பு தொடர்ந்து சிதறிக் காணப்படுகிறது. 16 ஆண்டுகளுக்குப் பின்னரும் குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை மேலும் நீர்த்துப்போகக் கூடிய ஆபத்துக்கள் அதிகமாகத் தெரியும் ஒரு அரசியல் சூழலில் கூட, தமிழ் மக்களால் ஒன்றாகத் திரண்டு, ஒரு இனமாக ஒரு முக்கிய விடயத்துக்கு எதிராகப் போராட முடியவில்லை.

படைப் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற ஒரு போராட்டத்தில் மட்டுமல்ல, சில கிழமைகளுக்கு முன் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுத வேண்டும் என்ற விடயத்திலும் அவ்வாறு தமிழ்த் தரப்பானது, கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை.

அந்தக் கடிதத்தை எழுத வேண்டும் என்று முதலில் தொடங்கியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். அந்தக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து அந்தக் கடிதத்தை எழுதிய பின் தமிழரசுக் கட்சியிடம் அதில் கையெழுத்திடுமாறு கேட்டன. அந்த கடிதத்தில் திருத்தங்கள் செய்வதாக இருந்தால் தமிழரசுக் கட்சி கேட்கும் திருத்தங்களைச் செய்வதற்குத் தாங்கள் தயாராக இருந்ததாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. கடிதத்தின் முதல் வரைவை தமிழரசுக் கட்சியின் பிரதானிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவிட்டு கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் பொறுத்திருந்ததாகவும் கஜேந்திரக்குமார் ஒர் ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடுவதில்லை என்ற முடிவை ஐந்து நாட்களின் பின் அறிவித்தது. அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். ஆனால் எல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான காரணம் உண்டு. அதுதான் ஏற்கனவே கூறப்பட்டது போல இந்த விடயம் இனமாக திரண்டு எதிர்கொள்ள வேண்டிய ஒன்று என்பது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒரு இனமாக நின்று, ஐநாவுக்கு, ஐநாவில் முடிவுகளை எடுக்கும் நாடுகளுக்கு, ஒரு செய்தியைக் கூற வேண்டிய இடம் அது. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை. அதற்குப் பெரும்பாலும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பு.

ஏனென்றால் தமிழரசுக் கட்சி தமது அரசியல் எதிரிகள் மீது மட்டுமல்ல தமிழ்ச் சிவில் சமூகங்கள் மீதும் ஒருவித வெறுப்போடு காணப்படுகிறது. இந்தக் கடிதம் எழுதும் நகர்வை முன்னெடுத்த சிவில் சமூகங்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சி ஒருவித ஒவ்வாமை உணர்வோடு காணப்படுகிறது. இந்த ஒவ்வாமை உணர்வு இப்பொழுதுதான் ஏற்பட்ட ஒன்று அல்ல. சிவில் சமூகங்கள் தனக்கு எதிராக செயல்படுவதாக தமிழரசுக் கட்சி நம்புகின்றது. சிவில் சமூகங்கள் தனது அரசியல் எதிரியாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துகின்றன என்றும் அது நம்புகின்றது. எனவே சிவில் சமூகங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் தன்னைப் பலவீனப்படுத்துவதற்கு என்று அக்கட்சி நம்புகின்றது.

தமிழ் மக்கள் பேரவையில் தொடங்கி தமிழ்ப் பொது வேட்பாளர் வரையிலும் சிவில் சமூகங்கள் தனது முதன்மையை சோதனைக்கு உள்ளாக்குவதாக தமிழரசுக் கட்சி பயப்படுகின்றது. அந்த அடிப்படையில்தான் ஐநாவிற்கு எழுதப்பட்ட கூட்டுக் கடிதத்திலும் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போட விரும்பவில்லை. இதை தமிழரசுக் கட்சியின் முடிவு என்றுகூடச் சொல்ல முடியாது. அது பெருமாளவிற்கு சுமந்திரனின் முடிவுதான். அந்த முடிவை அவர் சிவஞானத்தையும் வைத்துக் கொண்டு சொன்னார். அந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேறு சிந்தனைகளும் வேறு அபிப்பிராயங்களும் உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுடைய குரல் வெளியே ஒலிப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் சுமந்திரனின் பக்கம் நிற்கின்றார்கள் என்றிருந்தால் நடந்து முடிந்த கடையடைப்பு முழு வெற்றி பெற்றிருக்கும். ஏனென்றால் வடக்கு கிழக்கு தழுவிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரே கட்சி தமது கட்சிதான் என்று சுமந்திரன் அடிக்கடி கூறுவார். அப்படிப் பார்த்தால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு கடை அடைப்பை ஏன் முழுமையாக வெற்றிகரமாக நடத்த முடியவில்லை?

கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் கொண்டாடுவதாகத் தெரிகிறது. அது தவறு. அது கொண்டாடப்பட வேண்டிய விடயம் அல்ல. ஏனென்றால் ஒரு இனமாக சிந்தித்து, எல்லாருமாகச் சேர்ந்து போராட வேண்டிய ஒரு விடயம். கடையடைப்பு முழு வெற்றி பெறாததை வைத்து அரசாங்கம் தனது படைகளை விலக்கிக் கொள்ளாது என்று கூறப்படும் விளக்கம் குதர்க்கமானது. அதேசமயம் கடையடைப்பை சுமந்திரன் செய்கிறார் என்பதற்காக அவருடைய அரசியல் எதிரிகள் அது தோற்க வேண்டும் என்று பிராத்தித்ததோ அல்லது அது முழு வெற்றி பெறவில்லை என்பதை பார்த்து திருப்திபடுவதோ தமிழ் மக்கள் ஒரு இனமாகத் திரளமுடியாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகின்றது.

அதாவது கடந்த இரண்டு மாதங்களுக்குள் தமிழ் மக்கள் தாங்கள் ஒரு இனமாகத் திரள முடியாமல் சிதறிப் போய் இருக்கிறார்கள் என்பதனை இரண்டு தடவைகள் நிரூபித்திருக்கிறார்கள். இதை மேலும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், தமிழ் மக்கள் வெற்றி பெறத் தேவையான அடிப்படைத் தகுதியைப் பெறாத மக்களாகத் தொடர்ந்துமிருக்கிறார்கள் என்பதனை கடந்த இரண்டு மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் நிரூபித்து விட்டார்கள் என்றும் சொல்லலாமா ?

நன்றி: நிலாந்தன்

ஆசியில் ஈரான் தூதவர் நாடுகடத்தல்: விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகள்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

28.08.2025

மேற்குலக ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ள நிலையில், ஆசி அரசும் தனது பாலஸ்தீன தனயரசு நிலைப்பாட்டை தெளிவாக விளக்கி வருகிறது. ஆயினும் இஸ்ரேலிய அரசின் கடுங் கண்டனத்துக்கும் உள்ளாக வேண்டியுள்ளது.

பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த இருவாரங்களில் இஸ்ரேல் - அமெரிக்க அரசுகளால் தொடர் அரசியல் அழுத்தங்களை கன்பரா அரசு சந்திக்க வேண்டியிருந்தது.

கடந்த 2023 முதல் பாலஸ்தீன - இஸ்ரேல் இடையே போர் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த போரில் இதுவரை காசாவைச் சேர்ந்த 61 ஆயிரம் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த கோரமான போர் விவகாரத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் இஸ்ரேலை கடுமையாக விமர்சித்திருந்தார். மேலும் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை தெரிவித்திருந்தார். இதற்கு இஸ்ரேல் அரசும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தகுந்தது.

இந்நிலையில் இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் அழுத்தங்களை ஆசி அரசும் எதிர்கொண்டு வருகிறது. இதன் விளைவாகவே நீண்டகாலமாக ஈரானுடன் வர்த்தக உறவைப் பேணிய ஆசி அரசு தற்போது, ஈரான் தூதவர் வெளியேற்றுவது மாத்திரமன்றி, விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன.

ஈரான் தூதவர் வெளியேற்றம் :

ஈரானுக்கு எதிரான முக்கிய காரணங்களில் சிட்னி நகரத்தில் அமைந்திருந்த யூதர்களின் உணவகத்தின் மீது கடந்த வருடம் 2024 ஒக்டோபரிலும், மெல்பேர்ண் நகரத்தில் யூதக் கோயில்

மீது கடந்த 2024 டிசம்பரிலும், தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை, ஈரான் அரசுதான் இயக்கியுள்ளது என்பதற்கு போதுமான ஆதாரங்களை அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத் துறை திரட்டியுள்ளதாக, பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஈரானுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளும் முறிக்கப்படுவதாகவும், அத்துடன், அவுஸ்திரேலியாவுக்கான ஈரானின் தூதர் அஹமது சதேகி கட்டாயமாக வெளியேற்றப்படுவார் எனவும் கன்பரா அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ஈரான் நாட்டிலுள்ள அவுஸ்திரேலிய அதிகாரிகள் அனைவரும் தாயகம் திரும்புமாறும் ஆசி அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் நாட்டிலுள்ள அவுஸ்திரேலிய பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் ஈரான் அரசுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் முறித்துக் கொள்வதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. அத்துடன் ஈரானில் வசிக்கும் அவுஸ்திரேலியர்கள் கைது செய்யப்படலாம் எனவே உடனடியாக வெளியேறுங்கள் எனவும் ஆசி அரசு எச்சரித்துள்ளார்.

இருதரப்பு உறவுகளின் சூழல்:

ஈரானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான உறவுகள் ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை. ஆனால் இப்போது அவை விரிசல் நிலையை எட்டுவது போல் தெரிகிறது. சமீபத்திய ஆண்டுகளில், பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும் மனித உரிமைகளை மீறுவதாகவும் குற்றம் சாட்டி, கான்பரா ஈரான் மீது தடைகளை விதித்துள்ளது. அதிகரித்து வரும் உள்நாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில், தெஹ்ரானை நோக்கிய தனது உறுதியை நிரூபிக்க அவுஸ்திரேலியாவின் முயற்சியாக தூதரை வெளியேற்றும் முடிவு பார்க்கப்படுகிறது.

ஈரான் தூதரின் வெளியேற்றம், இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு அதன் மக்களின் எதிர்வினை குறித்த அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அச்சத்தின் தெளிவான வெளிப்பாடாகும் என்கிறார் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய ஆய்வுகள் பேராசிரியர் ஃபோட் இசாடி.

அண்மையில் பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் சிட்னியில் சாதனை எண்ணிக்கையை எட்டியுள்ளன. அவுஸ்திரேலியாவிலும் பாலஸ்தீன பிரச்சினை ஒரு பரபரப்பான விஷயமாக மாறியுள்ளது என்பது உண்மையாகும்.

புவிசார் அரசியலில் இந்த நெருக்கடி மேற்கத்திய நாடுகளுக்கும் மத்திய கிழக்குக்கும் இடையிலான உறவுகளை வகைப்படுத்தும் பலவீனமான இயக்கவியலை எடுத்துக்காட்டுகிறது.

அவுஸ்திரேலியா தனது சர்வதேச உறவுகளில் சமநிலையை பராமரிக்க முடியுமா, அல்லது தெஹ்ரானிடமிருந்து ஒரு உறுதியான விலகலை உடனடியாக எதிர் பார்க்க முடியாது.

புரட்சிகர பாதுகாப்பு படைக்கு தடை :

இன்னுமோர் அதிரடியாக, ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படைகளை தீவிரவாத அமைப்பாக அறிவிக்க அவுஸ்திரேலிய பிரதமர் அல்பானீஸ் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் கடந்த வருடம் இடம்பெற்ற யூத எதிர்ப்பு தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் ஈரானின் உளவு அமைப்பு இருந்துள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரு யூத எதிர்ப்பு தாக்குதல் மற்றும் இஸ்ரேலிய எதிர்ப்பு சம்பவங்களுக்கு ஈரான் காரணமாக இருந்துள்ளமையை அவுஸ்

திரேலிய உளவு பிரிவுகள் உறுதி செய்துள்ளன எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதன் காரணமாகவே அவுஸ்திரேலியாவில் உள்ள ஈரான் தூதுவரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரானில் உள்ள தூதரக செயற்பாடுகளை அவுஸ்திரேலியா அரசு இடை நிறுத்தவுள்ளது.

அவுஸ்திரேலிய குற்றச்சாட்டும் – தெஹ்ரானின் எதிர்வினையும்:

அவுஸ்திரேலிய குற்றச்சாட்டுகளும் தெஹ்ரானின் எதிர்வினையும் இருதரப்பு உறவுகளின் சூழல் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ஈரானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. பரஸ்பர குற்றச்சாட்டுகள் புவிசார் அரசியலில் தீவிரமான - கடுமையான நடவடிக்கைகளாக எழுந்துள்ளன.

இரு நாடுகளிடையே பதற்றம் தெளிவாகத் தெரிகிறது. மேலும் நிகழ்வுகள் விரைவான வேகத்தில் வெளிப்படுகின்றன. இதையெல்லாம் தூண்டியது யார் என்பதை பலரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இதன் பின்னணியில் இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் பங்களிப்பு இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அவுஸ்திரேலியாவில் பல கடுமையான நாசவேலைச் செயல்களுக்கு ஈரான் பொறுப்பு என்றும் கூறப்பட்டதற்கு எதிராக மறுபுறம், ஈரான் சும்மா நிற்கவில்லை. ஈரான் வெளியுறவு

பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த இருவாரங்களில் இஸ்ரேல் – அமெரிக்க அரசுகளால் தொடர் அரசியல் அழுத்தங்களை கன்பரா அரசு சந்திக்க வேண்டியிருந்தது. இதன் இன்னொரு விளைவாகவே ஆசி அரசு தற்போது, ஈரான் தூதவரை வெளியேற்றுகிறது. அது மாத்திரமன்றி விரிசலடையும் இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன

அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி ஆஸ்திரேலிய குற்றச்சாட்டுகளை "முற்றிலும் ஆதாரமற்றது" என்று அழைத்தார். இதனை பழிவாங்கும் நடவடிக்கைகள் என அழைத்தார்.

ஏற்கனவே சிக்கலான சூழலில், இந்த நடவடிக்கைகள் அவுஸ்திரேலியாவின் உள் அரசியல் முன்னேற்றங்களால், குறிப்பாக நாட்டில் நடந்த பெரிய பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக பகாயி பரிந்துரைத்தார்.

ஆனால் அவுஸ்திரேலிய உள்நாட்டு அரசியல் உண்மையில் சர்வதேச உறவுகளில் இவ்வளவு பெரிய தாக்கத்தை ஈரானிய விடயம் வலுவாக ஏற்படுத்த முனைந்துள்ளது.

2ம் உலகப்போரின் பின் வெளியேற்றம்:

அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு (ASIO), இஸ்ரேலிய மத நிறுவனங்கள் மீது குறிவைத்து தாக்குதல்களில் ஈரானின் புரட்சிகர காவல்படை (IRGC) ஈடுபட்டதாக தெரிவித்துள்ளது.

இவை அவுஸ்திரேலிய மண்ணில் ஒரு வெளிநாட்டு நாட்டால் திட்டமிடப்பட்ட அசாதாரணமான மற்றும் ஆபத்தான ஆக்கிரமிப்புச் செயல்கள் என்று ஆஸி அரசால் கூறப்படுகிறது.

இதன் விளைவாக ஈரானிய தூதர் அஹ்மத் சடேகி மற்றும் மூன்று தூதரக ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு உள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அவுஸ்திரேலியா ஒரு வெளிநாட்டு தூதரை வெளியேற்றுவது இதுவே முதல் முறை ஆகம்.

பாலஸ்தீனம் அங்கீகாரம் காரணமா ?

பாலஸ்தீனம் ஐநாவில் முழுமையாக அங்கீகரிக்கப்படும்

நிலைக்கு வந்துள்ளது. பல தசாப்த போராட்டங்களின் பின்னர் உலகமெங்கும் பாலஸ்தீன ஆதரவுக் குரல், ஒரு தேச அங்கீகாரமாக மாறி வருகிறது. மேற்குலக வரலாற்றில் பிரான்ஸின் முதல் அங்கீகார நகர்வு பாலஸ்தீன மக்களின் தேசக் கோரிக்கையை மற்றய சர்வதேச நாடுகளும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தம் மேற்குலக நாடுகளின் மேலாக இருந்தாலும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பாலஸ்தீன அங்கீகாரம் வலுப்பெற்று வருகிறது. இஸ்ரேலும் பாலஸ்தீனமும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என அமெரிக்கா கூறுகிறது. ஆனால் இதன் விளைவாக பாலஸ்தீனம் தனி நாடாவதைத் தடுக்கும் அதிகாரம் இஸ்ரேலுக்கு வழங்கப்படுவதுதான் இறுதியில் மிச்சம் என அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலின் காசா மீதான கொடும் போர் மனிதாபிமான கேள்விகளைத் தீவிரமாக உலகெங்கும் எழச் செய்துள்ளது. அண்மையில் பிரான்ஸ் முதல் ஜி 7 நாடாக, ஐநாவில் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்போம் எனத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடாவும் இதே முடிவை எடுத்துள்ளது. சீனா, ரஷ்யா ஆகியவை ஏற்கனவே தேசங்களாக அங்கீகரித்துள்ளன.

பாலஸ்தீன தனியரசை அவுஸ்திரேலிய அரசு அங்கீகரித்தன் பின்னர், கடந்த இருவாரங்களில் இஸ்ரேல் - அமெரிக்க அரசுகளால் தொடர் அரசியல் அழுத்தங்களை கன்பரா அரசு சந்திக்க வேண்டியிருந்தது.

இந்நிலையிலேயே இஸ்ரேலிய - அமெரிக்க உளவு அமைப்புகளின் அழுத்தங்களை ஆஸி அரசும் எதிர்கொண்டு வருகிறது. இதன் காரணமாகவே ஈரான் தூதவர் வெளியேற்றுவது மாத்திரமன்றி, இராஜதந்திர முரண்பாடுகளால் இருநாடுகளிலும் தூதுரகங்கள் மூடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதுச்சேரியில் தமிழ் மனித உரிமை நீதி பன்னாட்டு மாநாடு!

– நவீனன் –

27.08.2025

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளி, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (ATC), அமெரிக்கத் தமிழ் செயல் குழு (USTAG), ஆகியவற்றுடன் இணைந்து தமிழ் மனித உரிமை நீதி என்ற தலைப்பில் பன்னாட்டு மாநாடு 2025 செப்டம்பர் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வு ஜெனீவாவில் நடைபெற உள்ளது. இந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60வது அமர்வில் உலகத் தமிழர் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இலங்கையில் தொடரும் இராணுவ மயமாக்கல், தமிழர் சமூகத்தின் துயரமான நிலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த சூழலில், வரவிருக்கும் இலங்கை தீர்மானத்தில் பன்னாட்டு நீதித்துறை நடவடிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்பின் முடிவு மற்றும் தன்னாட்சிக்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் புகழ்பெற்ற அறிஞர்கள், கொள்கை அமைப்பாளர்கள், பண்பாட்டு தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பன்னாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்று, தமிழ் மரபு, இன்றைய நீதி சார்ந்த சவால்கள் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு குறித்து ஆழமான விவாதங்களில் ஈடுபடவுள்ளனர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதான உரைகள். ஆய்வுக் கட்டுரைகள், மாணவர் போட்டிகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் உலகத் தமிழர் அமைப்புகளுடன் கலந்துரையாடும் அமர்வுகள் இடம்பெறும்.

தொடக்க நாளான வெள்ளி, 5 செப்டம்பர் 2025இல் பாரத நாட்டியம் மற்றும் தமிழ் வாழ்த்துத் தொடக்கத்துடன் ஆரம்பமாகும். பின்னர் வரவேற்பு உரையை சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளித் தலைவர் பேராசிரியர் மு. கருணாநிதி வழங்குவார். மாநாட்டின் நோக்கவுரையை பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் வழங்குவார். கல்வி மற்றும் பண்பாட்டு துறைகளின் முக்கிய ஆளுமைகள் வாழ்த்துரை வழங்குவர். பேராசிரியர் கிளமெண்ட் சகாயராஜா லூர்து சிறப்புரை வழங்குவார்.

இந்நிகர்வின் முக்கிய விருந்தினர்களாக டாக்டர் ஆர்முகம் பார்சுராமன், முன்னாள் கல்வி, பண்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், மொரிசியஸ், திரு. டி.எம். பொனம்பலம், வழக்கறிஞர் மற்றும் தலைவர், முருகன் அறக்கட்டளை, மொரிசியஸ், திரு. ஆர். செல்வம், மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர். புதுச்சேரி, பேராசிரியர் ராஜன் நரசிங்கன், துணை அமைச்சர், மொரிசியஸ், அவர்களும் இணைந்து கொள்வர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பி. பிரகாஷ் பாபு தலைமை உரையை வழங்குவார். இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முன்னணி அறிஞர்கள் சிறப்புரை உரைகள் நிகழ்த்துவார்கள். முதல் நாள் ஆறு சிறப்பு அமர்வுகள் நடைபெறும். அவை தமிழ் மொழி, இலக்கியம். மனித உரிமைகள் மற்றும் நீதி சார்ந்த பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கும்.

இரண்டாம் நாள் சனி, 6 செப்டம்பர் 2025 அன்று பண்பாட்டு தொடக்க நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகும். சிறப்புரை மற்றும் இணை சிறப்பு அமர்வுகள் நடைபெறும். இதில் இந்திய மற்றும் பன்னாட்டு ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளை வழங்குவார்கள்.

பேராசிரியர் எஸ். ரவி, டீன், மனிதவியல் பள்ளி, மத்திய தமிழ் பல்கலைக்கழகம், திரு. கிருஷ்ணப்பிள்ளை இளங்கோ, தலைவர், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (யுவுஊ) ஆகியோர் இணைந்து கொள்வார்கள்.

பேராசிரியர் க. தரணிக்கராசு மாநாட்டில்நிறைவுரை ஆற்றுவார்.
பேராசிரியர் எஸ். சுடலைமுத்து, புல முதல்வர், சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பள்ளி, திரு. கதிரவன், ஆயுமு ஐனௌயை டுவன, நாமக்கல், பேராசிரியர் ராஜநீஷ் புட்டானி, பதிவாளர் (i/c), புதுச்சேரி பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல ஆய்வாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வர்.

இந்த பன்னாட்டு மாநாடு ஒரு முக்கியமான கல்வி மற்றும் பண்பாட்டு முயற்சியாகும். இதன் முக்கிய நோக்கங்களாக, தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தின் செழுமையை வெளிப்படுத்துதல்,மனித உரிமைகள் மற்றும் நீதி சார்ந்த இன்றைய சவால்களை முன்வைத்தல், உலகத் தமிழ் கல்வி மற்றும் பண்பாட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், அறிஞர்கள், மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு தங்கள் கருத்துகள் மற்றும் ஆய்வுகளை பகிரும் மேடையை வழங்குதல் என செயற்படுகிறது.

இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, மொரிசியஸ், ஆவுஸ்திரேலியா, பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அறிஞர்கள் பங்கேற்க இருப்பதால், இது உலகளாவிய தமிழ் அடையாளம் மற்றும் நீதி ஆதரவை கொண்டாடும் முக்கிய நிகழ்வாகும்.

www.sangathamil.ca

2026



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

செம்மணி மனிதப் புதைகுழிக்கு பன்னாட்டு நீதி விசாரணை தேவை: சோமரத்ன ராஜபக்சவும் அவ்விசாரணைகளில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

21.08.2025

யாழ்ப்பாணம் - செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு பன்னாட்டு நீதி விசாரணை தேவை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ என்னும் முன்னாள் இராணுவ லான்ஸ் கோப்ரல், இராணுவத்தின் படுகொலைச் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றுக்கு சாட்சியமளித்த பி 2899 என்னும் வழக்கினை தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்துவதுடன், பன்னாட்டு நீதி விசாரணைகளில் சோமரத்ன ராஜபக்ச இணைத்துக்கொள்ளப்படவேண்டும் எனவும் ரவிகரன் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பது தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலம் வழங்கவரும் மக்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அச்சுறுத்துவதை இதன்போது சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மேலும் இந்த செம்மணி கோரப்படுகொலையின் விசாரணைகள் மும்முரமடையும்போது குற்றமிழைத்த படையினர் நாட்டைவிட்டுத் தப்பியோட வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ரவிகரன், இவ்விடயத்தில் குற்றமிழைத்த தரப்பினர் நாட்டைவிட்டு தப்பிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் இன்று (21) உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயங்களை பற்றி பேசினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு பன்னாட்டு நீதி விசாரணை தேவை

செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் பன்னாட்டுக் கண்காணிப்பு அவசியம் என்பதை வலியுறுத்துவதுடன், பன்னாட்டு நிபுணத்துவம் பின்பற்றப்பட்டு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டுமெனவும் இந்த உயரிய சபையில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அத்தோடு செம்மணி அகழ்வாய்வுப் பணிகளுக்குரிய தொழில்நுட்பம் சார் நிபுணத்துவத்தை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்துவருவதாக பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள் இராஜாங்க செயலாளர் டேவிட் லமி அண்மையில் தெரிவித்துள்ளார். அவரின் இக்கருத்தினை வரவேற்பதுடன், அவருக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறாக இந்த செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் தமது நிபுணத்துவங்களை வழங்குவதற்கு முன்வரும் பன்னாடுகளுக்கு இந்த அரசாங்கம் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதுடன், அகழ்வாய்வில் அனைத்து விதமான பன்னாட்டு நிபுணத்துவங்களும் பின்பற்றப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு பன்னாட்டு தடயவியல் நிபுணர்களும், பன்னாட்டு மனித உரிமைகள் நிபுணர்களும் இந்த அகழ்வாய்வுகளில் பங்கேற்கவேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு சுயாதீனமானதும் நம்பிக்கைத்தன்மை மிக்க பன்னாட்டு நீதி விசாரணையை மேற்கொள்ளுமாறும் இவ்வுயரிய சபையினைக் கோருகின்றேன்.

குறிப்பாக தற்போது இந்த நாட்டில் பெரும்பேசுபொருளாக யாழ்ப்பாணம், செம்மணி, சிந்துபாத்தி மயானப் புதைகுழி விவகாரம் மாறியிருக்கின்றது. செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் இதுவரை இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் பரீட்சார்த்த அகழ்வுப் பணியாக 9 நாட்கள் இடம்பெற்று யூன் மாதம் 7ஆம் திகதியுடன் நிறைவடைந்திருந்தது.

அதனைத் தொடர்து இரண்டாங்கட்ட மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றால் 45 நாட்கள் அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த யூன் மாதம் 26ஆம் திகதி இரண்டாங்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இண்டாங்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் கடந்த யூலை 10ஆம் திகதி அகழ்வாய்வாளர்களின் ஓய்விற்காக இடைநிறுத்தப்பட்டு, கடந்த 21.07.2025ஆம் திகதியன்று மீள இரண்டாங்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் கடந்த 06.08. 2025 அன்று 32ஆவது நாளுடன் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அந்த வகையில் இதுவரை குறித்த செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து மொத்தம் 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 140 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அகழ்வாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் இந்த அகழ்வாய்வுகளில் ஈடுபடும் தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ கடந்த 14.08.2025அன்று நீதிமன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையில், அகழ்வாய்விற்கு இன்னும் குறைந்தது எட்டு வாரங்கள் தேவைப்படுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இதுவரை மேற்கொள்ளப்பட்ட குறித்த அகழ்வாய்வுகளில் பெண்கள், சிறார்கள், குழந்தைகள் என பலதரப்பட்டோருடைய எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், குழந்தைகள் பால் அருந்தும் போத்தல், சிறார்களின் விளையாட்டுப் பொம்மை, சிறுமிகளின் ஆடைகள், காலணிகள், கண்ணாடி வளையல்கள், பாடசாலைப் புத்தகப்பை என்பன சான்றுப் பொருட்களாக மீட்கப்பட்டிருந்தன. இவ்வாறான கொடூரங்களைக் காணும்போது நெஞ்சமெல்லாம் பதைபதைக்கின்றது. கண்களில் நீர்நிறைகின்றது.

மேலும் இதுவரை இனங்காணப்பட்ட 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 90 வீதத்திற்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டுப் புதைக்கப்பட்டவை என கடந்த 14ஆம் திகதி சட்ட வைத்திய அதிகாரியால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதன் மூலம் இங்கு பாரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன என்பதும், இந்தப் புதைகுழியில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென பல்வேறு தரப்பினரும் மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட விடயமும் தற்போது அம்பலமாகியிருக்கின்றது. வார்த்தைகளில் கூறிவிடமுடியாத கொடூரமான தமிழினப் படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என்பதற்கான மிக முக்கியமான ஆதாரமாகவே செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்க்க முடிகிறது.

வாக்குமூலம் வழங்குவோரை அச்சுறுத்தும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம்

செம்மணியில் எலும்புக்கூடுகளை அடை யாளம் காணும் பணி தொடர்பான விசாரணைகளில் வாக்கு மூலங்களை அளிக்கவரும் மக்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கடந்த 14ஆம் திகதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், கே.குருபரன், வி.மணிவண்ணன் ஆகியோரால் நீதிமன்றிலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்சுறுத்தி, சிரமத்திற்குள்ளாக்கி வாக்குமூலமளிக்கவரும் மக்களை அங்குவரவிடாமல் தடுக்கும் நோக்குடன் செயற்படும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இச்செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான அச்சுறுத்தல் செயற்பாடுகள் இனிமேல் இடம்பெறக்கூடாதெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

படுகொலைகளோடு தொடர்புடைய படையினர் தப்பிக்காமலிருக்க நடவடிக்கை தேவை

கடந்த 1999இல் யாழ்ப்பாணத்தில் காணாமல்போனோர் குறித்து விசாரிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில், கே.எச். கமிலஸ் பெர்னான்டோ, ஜெஸிமா ஸ்மாயில், சி.எம்.இக்பால் ஆகிய நால்வர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. குறித்த விசாரணைக் குழுவினால் 210 பக்கங்களைக் கொண்ட நீண்ட விசாரணை அறிக்கை கடந்த 2003 ஒக்டோபர் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையில் காணாமல்போனவர்களில் பெருமளவானோர் இராணுவத்தினால் கொல்லப்பட்டிருக்கலாமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், படுகொலையுடன் தொடர்புடைய இராணுவமுகாம்கள், இராணுவ அதிகாரிகள், இராணவத்தினரின் பெயர்களும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே இந்த மனிதப் புதைகுழி விசாரணைகள் மும்முரமாக இடம்பெறும்போது அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர் தப்பியோட வாய்ப்புள்ளது. ஆகவே அதற்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சோமரத்ன ராஜபக்ஷ பன்னாட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்

கடந்த 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணி இராணுவ சோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலைவழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உட்பட ஆறு இராணுவத்தினருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் கடந்த 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி மரண தண்டனை வழங்கியிருந்தது.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பையடுத்து, இராணுவ லான்ஸ்

கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 300 தொடக்கம் 400 வரையான மக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றில் சாட்சியமளித்ததற்கமைய அப்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், அதனைத் தொடர்ந்து செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் மீட்கப்பட்டிருந்தன. பின்னர் இந்த விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான வழக்கு விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ அப்போது நீதிமன்றிற்கு வழங்கிய சாட்சியத்தை ஆதாரப்படுத்தும் வகையில் தற்போது செம்மணியில் மனித எலும்புக்கூடுகள் மிக அதிகளவில் இனங்காணப்படுகின்றன. எனவே குறித்த வழக்கு மீள எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போதைய மனிதப்புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்தப்படவேண்டும். யாழ். நீதவான் நீதிமன்ற வழக்கேட்டிலிருந்து கொழும்பு நீதிமன்றுக்கு அனுப்பப்பட்ட பி2899 என்னும் வழக்கு மீளவும் யாழ்ப்பாணம் நீதிமன்றிற்கு பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக் கோருகின்றேன்.

இத்தகைய சூழலில் பன்னாட்டு விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் கடந்த 1996 காலப் பகுதியில் செம்மணி தொடக்கம் துண்டி இராணுவ முகாம் வரை இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல படுகொலைகள், பலசேனா தலைமையகம் முதல் இராணுவத்தால் சித்திரவதைக்கூடங்கள் நடாத்தப்பட்ட விதம் பற்றிய விபரங்கள், மணியம் தோட்டம் பகுதியிலுள்ள புதைகுழி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாக அண்மையில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அப்போதைய அரசதலைவர் சந்திரிக்கா அம்மையார், அப்போதைய பாதுகாப்புச் செயலர் உள்ளிட்ட தரப்பினரும் இத்தகைய வதைமுகாம்கள் தொடர்பில் அறிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலப்பகுதியில் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களாக 7ஆவது படைத்தலைமையகத்தின் புலனாய்வு அதிகாரிகளான கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன் துடுகல, லெப்டினன் உதயகுமார ஆகியோருடன் பொலிஸ் பரிசோதகர்களான அப்துல் ஹமீட் நஸார், சமரசிங்க ஆகியோரின் பெயர்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே இந்த செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழிக்கு விவகாரத்திற்கு தலையீடுகளற்ற சுயாதீன பன்னாட்டு நீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அந்த பன்னாட்டு நீதி விசாரணைகளில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் சாட்சியங்களும் பெறப்படவேண்டுமென இந்த உயரிய சபையைக் கோருகின்றேன்.

அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற பன்னாட்டு நீதி விசாரணைக்கு இந்த அரசானது தனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டுமெனவும் எமது பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக கேட்டுக்கொள்கின்றேன். பன்னாட்டு நீதி விசாரணை மாத்திரமே பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றத்தரும் ஒரே மார்க்கமாக அமையும்.

அதேவேளை செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வாய்வுப் பணிகளில் பன்னாட்டுப் பிரதிநிதிகளின் பங்குபற்றுதல், பன்னாட்டு கண்காணிப்புகள் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதுடன், பன்னாட்டு நிபுணத்துவங்கள் பின்பற்றப்பட்டு அகழ்வாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திற்கும் பன்னாட்டு நீதி விசாரணை தேவையென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

தூர் வார வேண்டிய குளங்கள்; தூர் வார வேண்டிய தமிழரசியல்

18.08.2025

சில நாட்களுக்கு முன் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியான நந்தகுமார் முகநூலில் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். கமநல சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பில், யாழ்ப்பாணத்தில், ஏறக்குறைய ஆயிரம் குளங்கள் உண்டு என்றும், அவை கடந்த இரண்டு வருடங்களாக தூர் வாரப்படவில்லை என்றும் அடுத்த பருவ மழைக்கு முன் அவற்றை தூர் வார வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கு வேண்டிய நிபுணத்துவ உதவிகளை வழங்குவதற்கு துறைசார் பொறியியலாளர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த அவர், பிரதேச சபைகளும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தன்னார்வலர்களும் குளங்களைத் தூர் வார்வதற்கு முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

குளங்களைப் பாதுகாப்பது என்பது தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்று பொறியியலாளர் சர்வா சர்வேந்திரன் கூறுகிறார். குளத்தைச் சுற்றி மருத, நெல்லி, நாவல். வேம்பு போன்ற மரங்களை வளர்த்த தமிழ் மக்கள் குளங்களுக்கு அருகே கடவுள் சிலைகளை வைத்து, குளத்துக்குப் புனிதத் தன்மையைக் கொடுத்து அதன்மூலம் குளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்கள் என்றும் அவர் கூறுகிறார். குளத்தை மாசாக்கினால் அது தெய்வக் குற்றம். என்று பயப்படுமளவுக்கு குளத்தையும் கோவிலையும் பிணைத்துப் பராமரிக்கும் ஒரு பாரம்பரியம் தமிழ் மக்களிடம் இருந்தது என்றும் அவர் கூறுகிறார். அவ்வாறான குளக்கரைக் கோவில்களில் தீர்த்தத் திருவிழா என்பது பெரும்பாலும் மழைக்காலத்துக்கு முன்பு ஆனி தொடக்கம் புரட்டாதி வரையிலுமான மாதங்களில் வரும். தீர்த்த திருவிழாவுக்காக குளங்கள் தூர் வாரப்படும். இது வருடா வருடம் குளங்கள் தூர் வாரப்படுவதனை உறுதி செய்யும். தீர்த்தத் திருவிழா என்பது குளங்களைத் தூர்வாரும் ஒரு பண்பாட்டு நடவடிக்கை என்ற பொருள்பட சர்வா கூறுகிறார்.

ஊர்கள் தோறும் குளங்களை பராமரிப்பதற்கான ஒரு வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த தமிழர்கள் இப்பொழுது அதே குளங்களை மூடத் தொடங்கி விட்டார்களா? குளங்களுக்கு அருகே காணப்பட்ட கோவில்கள் பெருத்துக் கொண்டே போகின்றன. கோவில்களைப் புனரமைப்பதற்காக கோடி கோடியாக காசு கொட்டப்படுகிறது. குளத்துக்காகக் கோவில் என்றிருந்த நிலைமாறி கோவிலுக்காகக் குளம் என்ற நிலை உருவாகிவிட்டது?

கடந்த வாரம் இப்பகுதியில் பாடசாலைகள் மூடப்படுவது பற்றி எழுதி இருந்தேன். பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னரே அதாவது நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய ஒரு கல்விச் சூழலை கட்டியெழுப்பிய பாடசாலைகள் திறக்கப்பட்ட ஒரு கால கட்டத்திலேயே குளங்கள் மூடப்பட்டன என்பதை அல்லது குளங்களை மூடுவது தொடர்பாக சிந்திக்கப்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அண்மையில் வெளியிடப்பட்ட கட்டடப்படக் கலைஞர் மயூரநாதனின் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு என்ற நூலில் அதுதொடர்பான தகவல்களைப் பெறமுடியும். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக குளங்களை மூடுவது தொடர்பான உரையாடல்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

1697இல் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் கட்டளைத் தளபதியாக இருந்த ஹென்றிக் ஸ்வார்டெக்ரூன் தனது வழிகாட்டல் குறிப்பில், நிலத்தைப் பெறுவதற்காகக், நகரப் பகுதியில், ஆதரவற்ற பிள்ளைகள் தங்கியிருந்த இல்லத்துக்குப் பின்புறமிருந்த குளமொன்றை மூடுவது குறித்து ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும் கோட்டைக்கு அருகே பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய மேட்டுப்பகுதிகளை வெட்டி அந்த மண்ணை அருகே இருந்த குளங்களை மூடுவதற்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தையும் முன்மொழிந்திருந்தார். அவருடைய முன்மொழிவுகள் அப்பொழுது ஏற்கப்படாவிட்டாலும் பின்னர் 1833-1867 வரையிலுமான காலப்பகுதிக்குள் அந்தக் குளம் மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அது தாராக் குளம் என்று அழைக்கப்பட்டது. 1863இல் திருக்குடும்பக் கன்னியர் மடத்தை விஸ்தரிப்பதற்காக மஞ்சள் கரைஞ்ச குளம் மூடப்பட்டிருக்கிறது. மேலும் பெயர் தெரியாத பல குளங்கள் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டுள்ளன. 1867ஆம் ஆண்டுக்கு முன்னர் மூடப்பட்ட குளங்கள் பற்றிய தகவல்களை கொலரா ஆணைக் குழுவின் அறிக்கையில் காணமுடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மஞ்சள் கரைச்ச குளம், குசவன் குளம் போன்ற குளங்கள் மூடப்பட்டன. கொலரா ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பட்டங்கட்டிக் குளம் மூடப்பட்டது. 1877இல் வைத்தியசாலை வீதியை அண்டிருந்த வண்ணான் குளம் மூடப்பட்டது... மேற்படி தகவல்களை மயூரநாதனின் நூலில் காணலாம்.

அதாவது காலனித்துவ காலத்தில் இருந்து இன்றுவரையிலும் யாழ் நகரப் பகுதியில் வெவ்வேறு நோக்கங்களுக்காக குளங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக மழைக் காலங்களில் வெள்ளம் நகரத்துள் தேங்கி நிற்கின்றது.

ஒருபுறம் பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்றன. இன்னொரு புறம் குளங்கள் மூடப்படுகின்றன. இப்படிப்பட்டதோர் பின்னணியில் குளங்களைத் தூர்வார வேண்டும் என்ற கோரிக்கை காலப் பொருத்தமானது; மகத்தானது.

புதிய பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் இது தொடர்பான விழிப்பை அதிகப்படுத்த வேண்டும். எல்லாப் பிரதேச சபைகளிலும் தூர்வார வேண்டிய குளங்களும், தூர்வார வேண்டிய வெள்ள வாய்க்கால்களும் உண்டு. அண்மையில் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தலைமையிலான குழுவினர் வழுக்கியாற்றின் தடங்களைப் பின்பற்றி ஒரு நீண்ட நடைப் பயணத்தை முன்னெடுத்தபொழுது அளவெட்டியில் பினாக்கைக் குளக்கரையில் தரித்து நின்று அப்பகுதி விவசாயிகளோடு உரையாடினார்கள். அதன்போது பினாக்கைக் குளத்தைச் சுற்றியுள்ள வயல்வெளிகளின் ஓரங்கள் குடியிருப்புகளாக மாறி வருவது மட்டுமல்ல குளத்துக்கு நீர் வரும் வாய்க்கால் ஓர் ஒழுங்கையாக மாற்றப்பட்டு விட்டதையும் கிராமவாசிகள் சுட்டிக் காட்டினார்கள். இவ்வாறு இப்பொழுது குளங்களுக்கு அருகே உள்ள அல்லது குளங்களை நோக்கி வரும் ஒரு பகுதி சிறிய வீதிகள் ஒரு காலம் குளத்துக்கு நீரைக் கொண்டு வரும் வாய்க்கால்களே என்று கிராமவாசிகள் கூறுகிறார்கள்.

புதிய உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னுள்ள பொறுப்புகளில் இதுவும் ஒன்று. குளங்களை நிலத்தடி நீரை ரீச்சார்ஜ் செய்வது. பயிர்பச்சைகளை விளைவிப்பது என்ற நோக்கு நிலைகளுக்கும் அப்பால் குளங்களையும், குளங்களைச் சுற்றியுள்ள சூழலையும் பொழுதுபோக்கு மையங்களாக மகிழ்ச்சி மையங்களாக மாற்றலாம்.

மணிவண்ணன் யாழ் நகர முதல்வராக இருந்த காலத்தில் ஆரிய குளத்தை அவ்வாறு சிந்தித்து மாற்றினார். எனினும் அப்பகுதி பொழுது போக்கிகளைக் கவரும் ஓரிடமாக இன்னமும் முழுவளர்ச்சி பெறவில்லை. ஆரியகுளம் இப்பொழுதும் பெருமளவுக்கு தனித்துவிடப்பட்டுள்ளது. அதற்கு அந்தக் குளம் அமைந்திருக்கும் அமைவிடம் ஒரு காரணமாக இருக்கலாம். அந்தக் குளத்தின் ஒரு பகுதி எல்லை பலாலி வீதி. அங்கேயும் எதிர்த் திசையில் நாக விகாரை. நாக விகாரைக்கு வருகின்ற சிங்கள மக்கள்கூட ஆரிய குளத்தைப் பெரிய அளவில் ரசிப்பதாகத் தெரியவில்லை. குளத்தின் ஏனைய இரண்டு எல்லைகள் மதில்களால் அடைக்கப்பட்டு இருக்கின்றன. குளத்தைச் சுற்றியுள்ள பகுதி இயற்கைக்குத் திறந்து விடப்பட்ட ஒரு பகுதியாக இல்லை. இதுபோன்ற பல காரணங்களினால் ஆரிய குளம் எதிர்பார்த்த அளவுக்கு மகிழ்ச்சி மையமாக வளர்ச்சி அடையவில்லை. பண்ணை கடற்கரையை நோக்கிவரும் அளவுக்கு, அல்லது பழைய பூங்காவில் ஒருமூலையில் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பூங்காவை நோக்கிவரும் அளவுக்கு, மக்கள் ஆரிய குளத்தை நோக்கி வரவில்லை. இதில் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு அருகே உள்ள குளம் ஒப்பீட்டளவில் சனப்புழக்கமாக உள்ளது. அதைச் சூழவுள்ள மரங்களும், வெளியும், இரவில் மங்கலான தெரு விளக்கின் ஒளியும் அதற்குக் கவர்ச்சியைக் கூட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் இடங்களில் உள்ள ஒரு பகுதி குளங்களுக்கு சாதி அடையாளம் உண்டு. நீர்வடியும் பள்ளமான பகுதிகளில் குடியேறும் ஒரு பகுதியினர் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஒரு காலம் யாழ்ப்பாணத்தில் சண்டியர்களை வாடகைக்கு எடுக்கும் பொழுது சில குறிப்பிட்ட குளங்களின் பெயர்களைச் செல்வார்கள். சில குற்றச் சம்பவங்களோடு குளங்களின் பெயர்களும் இணைக்கப்பட்டு உள்ளூரில் வாய்மொழிக் கதைகள் உண்டு. ஒரு பகுதி குளங்களைச் சுற்றியிருக்கும் இந்த சாதி அடையாளத்தை அகற்றி அவற்றை கவர்ச்சியான மகிழ்ச்சி மையங்களாக மாற்றும் விதத்தில் சிந்திக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான பா.அகிலன் கூறுவார், குளங்களை நினைவுக் குளங்களாக மாற்றலாம் என்று. அந்தந்த பகுதிகளில் இறந்த தியாகிகள், சமூகப் பெரியார்கள் போன்றவர்களின் பெயர்களைக் குளங்களுக்குச் சூட்டலாம். அல்லது குளங்களைச் சூழ உள்ள பகுதிகளில் இயற்கையை அழகாக்கி பூங்காக்களாகி அப்பகுதியை நினைவுப் பூங்காக்களாக பராமரிக்கலாம் என்றும் அவர் கூறுகிறார். அவை மகிழ்ச்சி மையங்களாகவும் இருக்கும்; வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு காவும் இடங்களாகவும் இருக்கும்; நினைவுகளை அனுஷ்டிக்கும் இடங்களாகவும் இருக்கும்.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் வளங்களையும் புலம்பெயர்ந்த தமிழர்களின் வளங்களையும் பயன்படுத்தி குளங்களை மையமாகக் கொண்டு பசுமைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்கள் நினைத்தால் தங்கள் தங்கள் ஊர்களில் குளங்களைத் தத்தெடுக்கலாம்.

எல்லா உள்ளூராட்சி சபைகளும் தங்களுக்கென்று சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும். பருவ காலங்கள் தோறும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குரிய திட்டங்களை வகுக்க வேண்டும். கமநல சேவைகள் திணைக்களம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. இதனால் அத்திணைக்களத்தின் கீழ்வரும் குளங்களைப் பராமரிப்பது தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் புதிய ஏற்பாடுகளைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கலாம். தமிழ் அரசியலே இப்பொழுது தூர்வார வேண்டிய நிலையில்தான் உள்ளது. ஒற்றுமையாகக் குளங்களைத் தூர் வாருவதில் இருந்தும் அதைத் தொடங்கலாம்.

நன்றி: நிலாந்தன்

www.sangathamil.ca

38ஆம் ஆண்டு வீரவணக்கம்

38th Year Veeravanakkam

24ஆம் ஆண்டு
வீரவணக்கம்
கேணல் சங்கர்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2001

ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

SEPT 26

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

ஈகைச்சுடர் Thileepan

லெப். கேணல் திலீபன்

இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963–26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

The thirst of Tigers is the Homeland of Tamileelam

கிழக்கில் தமிழர் இனவழிப்பின் ஆரம்பப் புள்ளி அம்பாறை வயலூர் கிராம படுகொலையின் 40ஆவது நினைவேந்தல்

23.08.2025

அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் வயலூர் கிராம தமிழ் மக்களை சிங்கள பேரினவாத அரசின் படையினர் நடத்திய தமிழ் இன அழிப்பின் ஆரம்ப மையப்புள்ளி என்பதுடன் இது ஒரு கிராமத்தையே கொடுமை!

அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் கிராமங்கள் சிங்கள ஆட்சி யாளர்களால் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் வாழ்ந்த இடமே இல் லாமல் போன வரிசையிலும் தமிழீழ போராட்ட வரலாற்றில் முதல் முதல் 1985 ஒகஸ்ட் 24 ம் திகதி விடுதலை இயக்கங் களுக்கும் சிங்கள பேரினவாத அரசுக்கும் இடையிலான சமா தான திம்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத் தில் அப்பாவி விவசாயிகள் 40 பேருக்கு மேல் படுகொலை செய் யப்பட்டு கிராமமே அழிக்கப்பட்டு வெளி உலகிற்கு வெளிவராது போன வரிசையிலும் தமிழர் இன அழிப்பின் ஆரம்ப புள்ளி வயலூர் கிராமம். என்பதுடன் இந்த இன அழிப்பின் 40 வருட நினைவு நாள் 24-8-2005 ஞாயிற்றுக்கிழமை. ஆகம்.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள சாகமத்திலிருந்து தெற்கு பக்கமாக 8 மையில் தொலைவில் வயலூர் கிராமம் 1972 ஆம் ஆண்டு காணியற்ற வறிய மக்கள் 200 குடம் பங்களை குடியமர்த்தப்பட்ட ஒரு கொலனியாக இருந்தது.

அரசாங்கம் அக்கால பகுதியில் செவ்வாய், வெள்ளிக் கிழமை களில் மரவள்ளிக் கிழங்கும், குரக்கனும் சாப்பிடுமாறும் உணவு விடுதிகளில் சோறு சமைக்க கூடாது என கேட்டுக் கொண்ட காலப்பகுதியில் இக்கிராமம் உணவு மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை அபிவிருத்திக்காக அதிமுக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற அரசாங்க த்தின் திட்டத்தின் கீழ் குடியமர்தப் பட்டது.

இக் கிராமத்தை அடைவதற்கு சாகமத்திலிருந்து காட்டு வழி பாதை மட்டும் உள்ளதுடன் நான்கு சக்கர உழவு இந்திரங்கள் மாட்டு வண்டிகள் என்பவை விவசாயத்துக்கான உள்ளீடு மற் றும் உற்பத்திகளை ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன அதேவேளை ஏழைகள் வழமையாக இத்தூரத்தை நடந்து சென்று வந்தனர்.

இவர்கள் தடிகள், களிமண், ஒலை புல்லுகளினால் தமது இருப் பிடங்களை அமைத்து குடியமர்தப்பட்ட இவர்களுக்கு சுத்தமான குடிநீர், கடைகள் என்பன இருக்கவில்லை இம் மக்கள் மலோரியா மற்றும் நீரிலான தொற்று நோய்களால் பாதிக்கப்பட் டதுடன் தமது வைத்திய சேவையை பூர்த்தி செய்ய 10 மையி லுக்கு அப்பால் அக்கரைப்பற்றுக்கு செல்ல வேண்டியிருந்தது.

இருந்தபோதும் தமது விவசாயமான சோளம், குரக்கன், மர வள்ளி போன்ற பயிர்களை பயிர் தொடர்ந்து செய்துவந்ததுடன் அவர்களது ஆடுகள், கோழிகளை நரிகள், சிறுத்தைகள், திருடிச் சென்ற அதேவேளை காட்டுப்பன்றிகள் பயிர்களையும் நாசம் செய்தன ஆயினும் அவர்கள் இத்தனை கஷ்டங்களுக்கு மத்தி யில் மகிழ்சியாக தொடர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய ஒரு சமூகம் தான் சிறீலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டது இந்த யுத்த நிறுத்தம் ஜே.ஆர்.ஜெய வர்த்தனாவின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜயவர்தனா தலைமை யிலான அரசாங்க குழுவும். (ரி.யு.எல்.எப்) தமிழர் விடுதலைக் கூட்டணியிலான விடுதலை இயக்கங்களான தமிழ்ழீழ விடுதலைப்புலிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ். ரெலோ ஆகிய 5 இயக்கங்களுக்கும் இடையிலான திம்புவில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த சமயம் இராணுவப் படைகள் வகை தொகையின்றி அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்தன.

1985ம் ஆண்டு 8ம் மாதம் 24 ம் திகதி அதிகாலைவேளை வய லூர் மக்கள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது இத்தாக்குதலில் 40 பேருக்கும் மேல் படுகொலை செய்யப்பட்டன இவ்வயலூரின் தாக்குதலில் விதவையாக்கப்பட்ட பெயர்குடிப்பிடாத 5 பிள்ளை களுக்கு தாயாரானவர் அவருக்கு 3 பெண் பிள்ளைகள் அவர் கூறும் பொழுது இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் எனது கணவர் கொல்லப்பட்டார்.

நாங்கள் வயலூரில் கிழங்கு, மாப்பொருட்களான மரக்கறி வகைகள். பழமரங்கள் செய்கைபண்ணி வாழ்ந்துவந்தோம் ஆனால் எங்களுக்கு சுத்தமான குடிநீர், கடைகள், பாடசாலை, வைத்தியசாலை இருக்கவில்லை 1985.8.24 திகதி அதி காலை 6 மணியிருக்கும் பொழுது நான் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன் திடீரென ஒரு தொகை மனி தர்கள் துப்பாகியுடன் எமது குடிசைகளை சுற்றி நின்று கொண் டிருப்பதை அவதானித்தேன் .

நான் பீதியடைந்து வந்தவர்களைக் கண்டு மிகப்பயத்தில் நடுங் கினேன் நான் பதற்றப் பட்டிருப்பதை கண்டுகொண்ட அவர்கள் என்னை நெருங்கி சிங்கள மொழியில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர் எனக்கு அவை விளங்கவில்லை அப் பொழுது எனது கணவர் வந்ததால் நட்புணர்வு சைகைகளை காட்டி நாங்கள் தண்ணீர் கொண்டுவரும் வாளியை எடுத்துக் கொண்டு தங்களுடன் வருமாறு கேட்டனர். எனது கணவரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

குடிசைகளுக்குள் புகுந்து அங்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் யாவரையும் வெளியில் கொண்டதுடன் வயோதிபர் நோயாளிகள் என்போரை அப்பால் செல்லுமாறு கூறினர் பின் உடல் ஆரோக்கியமான இளைஞர்கள் அனைவரையும் தம் மோடு அழைத்துச் சென்றனர் இதில் பெண்களும் அடங்குவர்.

அங்கிருந்து கிழக்கு திசையாகக் காட்டுப்பாதை வழியாக நாங்கள் நடந்தோம் இராணுவச் சிப்பாய் ஆண்களை அழைத்து தமது காலை ஆகாரத்திற்கு முகம் கழுவுவதற்கு நீர் கொண்டுவருமாறு கேட்டனர் அப்பொழுது காலை 8 மணி யிருக்கும் அவ்வாறே ஆண்கள் தண்ணீர் கொண்டுவந்ததும் சிப்பாய்கள் தமது காலை ஆகாரத்தை சாப்பிட்டனர். ஆனால் நாங்கள் பட்டினியாக இருந்தோம் ஒரு கோப்பை தேனீர் கூட கிடைக்கவில்லை அவர்கள் தமது காலை ஆகாரத்தை முடித் துக் கொண்டதும் எல்லோரையும் தம்மோடு வருமாறு கூறினர் ஆனால் எங்கே என்று கூறவில்லை.

அவர்கள். கட்டளைக்கு இணங்கி நாங்கள் காட்டுவழிபாதை ஊடாக சென்றோம் அப்பொழுது மற்றுமொரு இராணவு சிப் பாய்க் குழு ஒன்றை சந்தித்தோம் அக்குழுவிற்கு தலைமைதாங் கய உத்தியோகத்தர் ஆண்களுடன் பெண்களை அழைத்து வந்ததை பிழையெனக் கண்டுகொண்டார் இரண்டாது குழு தலைவர் பெண்களிடம் வந்து தமிழிலே பேசினார் அவர் கூறும் போது நீங்கள் ஆண்களுடன் வரவேண்டியதில்லை இராணுவ வீரர்கள் தமக்கு அறிமுகமற்ற பகுதியில் இருக்கின்றனர் எங்க ளுக்கு ஆண்கள் தேவை அந்த மரத்தின் கீழ் சென்று மதியம் வரை காத்திருங்கள் ஆண்கள் திரும்பிவருவார்கள் என்றார்.

நாங்கள் அந்த மரத்தின் கீழ் காத்திருந்தோம் அவர்கள் குமரன் குளத் திசையில் சென்று கொண்டிருந்தனர் ஆனால் ஆண்கள் திரும்பிவரவில்லை. சூரியகதிர்கள் தலையை சுட்டெரிந்தன எமது ஆண்கள் திரும்பிவரும் அறிகுறி எதுவும் தென்பட வில்லை வீட்டில் இருக்கும் எமது குழந்தைகளுக்காகவும் இரா ணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எமது ஆண்களுக்காக வும் உணவு சமைக்க வேண்டியிருந்தது எங்கள் குடிசைக ளுக்கு திரும்பிவந்து உணவு சமைப்பதில் ஈடுபட்டோம் அப் பொழுது கொலை செய்தி வந்தது.

இச் செய்தியை கொண்டுவந்தவர் உயிர் தப்பி வந்தவர் ஏனை யவர்கள் குமரன் குளப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு வீசப் பட்டு கிடக்கின்றனர் என கூறினார். இச் செய்தியை கேட்டு நாங்கள் அனைவரும் பாதுகாப்புக்காக உடுத்த உடையுடன் நடந்து சென்று திருக்கோவில், பனங்காடு, அக்கரைப்பற்று பிர தேசங்களில் உள்ள உறவினர்களிடம் தஞ்சம் புகுந்தோம். பின் படுகொலை செய்யப்பட்டவர்களை வயோதிபர்கள் அவ் இடத் துக்கு சென்று சடலங்களை பூர்விக கிராமத்துக்கு கொண்டு வந்து உரிய மரணச்சடங்குடன் புதைக்கப்பட்டனர். வயலூரில் எங்களின் சொத்துக்கள் யாவற்றையும் இழந்தோம்.

கே.வேலுப்பிள்ளை என்பவர் அவரது 2 மகன்களான குழந்தை வேல் ஜெயகாந்தன் (22), நாகலிங்கம்(22) மருமகன் சின்னவன் கந்தசாமி (30) அவரது மூத்த சகோதரன் தம்பிப் பிள்ளை மாமா ஆன ஏரம்பு ஆகியோரும் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

படுகொலையின் போது உயிர் தப்பிய வர்த்தகரான வைரமுத்து கனகசபை பின்பருமாறு கூறினார் "அடிக்கடி வியாபார நிமித்தம் வயலூருக்குச் செல்லும் நான் 23 ம் திகதி பிற்பகல் 2 மாடுகள் பூட்டிய மாட்டுவண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திருக் கோவிலில் உள்ள ஞாயிற்றுக்கிழமை சந்தைக்காக பொருட் களை கொண்டுவர வயலூருக்கு போயிருந்தேன் அன்றிரவு மர வள்ளி கிழங்குகளை பிடுங்குவதற்காக அங்கு தங்கிருந்தேன் 24 ம் திகதி காலை அப்பகுதியை விட்டு புறப்படும் போது அவ் குடியிருப்பு பகுதி முழுவதும் இராணுவம் சுற்றி வளைக்கப்பட் டிருந்தது நான் விவசாயிகளுடன் ஒரு குடிசையில் இருந்தேன் நான் கைது செய்யப்பட்டாலும் பின் விடுவிக்கப்பட்ட போது நான் எடுத்துச் சென்ற பணமும் சைக்கிளும் காணாமல் போயிருந்தது

இராணுவத்தினர் என்னை செல்லுமாறு சொன்னதால் நான் சென்றேன் ஆனால் குமரன் குளப் பகுதியில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள இடத்தில் மறைந்திருந்தேன் சிறிது நேரத்தில் துப்பாகி வேட்டுக்கள் கேட்டன பின் இராணுவத்தினர் தமது வாகனத்தில் சென்ற பின்பு நான் அந்த இடத்துக்கு சென்று பார்த்தபொழுது அவர்கள் சுடப்பட்டு இறந்து கிடந்தார்கள் ஆயி னும் இரு விவசாயிகள் காயத்துடன் கிடந்தனர் ஒருவருக்கு வாய்க்குள் துப்பாகி வைத்து வெடிவைக்கப்பட்டுள்ளது. இவர் இறக்கவில்லை மற்றவரின் பெயர் நடராஜா நான் இச் செய் தியை வயலூருக்கு சென்று கூறினேன் இதில் 40 க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டதாக" கனகசபை உறுதிப்படுத்தினார்.

வயலூர் கிராம விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டு 23 வரு டங்களின் பின்பு 2008ஆம் ஆண்டு தான் முதல் முதலாக இப்படுகொலை பற்றி வெளியுலகிக்கு கொண்டுவரமுடிந்தது இருந்தபோதும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற் றில் அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சுவார்த்தை நடை பெற்றுக் கொண்டிருந்த சமயம் தமிழ் மக்களை சிங்கள பேரின வாத அரசின் படையினரால் பௌத்த கோட்பாடு அடிப்படையில் வயலூர் கிராமம் தமிழ் இன அழிப்பின் ஆரம்ப மையப்புள்ளி என்பதுடன் இது ஒரு கிராமத்தையே அழித்த கறைபடியாத படுகொலையாகும். இக் கிராமம் காடுகளாகிவிட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சமாதான பேச்சுவார்த்தையின் போது முதல் முதல் நிகழ்ந்த ஒரு படு கொலை என்பதுடன் அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான படு கொலைகள் மூலம் பேரினவாத அரசு தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் நீலாவணைவரை தங்க வேலாயுதபுரம், பெத்துவில், குண்டுமடு, அக்கரைப்பற்று, திராய்க்கேணி, வீரமுனை, சென்றல்காம், மல்வத்தை, அம்பாறை நகர், காரைதீவு, கல்முனை, நிந்தவூர் போன்ற தமிழ் கிராமங்கள் இராணுவத்தினராவும் ஊர்காவல்படையின ராலும் சுற்றிவளைத்து சிறுவர், இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியம் படுகொலை செய்யப்பட்டதுடன் அவர்களது வாழ் விடங்கள் தீ வைத்து எரித்து உடைத்து அழித்தனர்.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தில் பல கிரா மங்கள் அழிக்கப்பட்டன இருந்தபோதும் அந்த அழிக்கப்பட்ட வரலாறுகள் வெளியுலகிற்கு கொண்டுவரப்படவில்லை இத னால் தற்போதைய சமூதாயத்துக்கு தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவே தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் அந்தந்த காலத்தில் அதற்கான நினை வேந்தல்களை செய்யவேண்டும் என்பது தமிழ்களின் கடமை யாகும்.

இருந்த போதும். தமிழ் இன அழிப்பின் ஆரம்ப புள்ளியாக இந்த மாவட்டத்தில் ஆட்சியாளர்களால் அட்டவணை போட்டு நடாத் தப்பட்ட தமிழின அழிப்புக்களை பறைசாற்றி நிற்கின்றது. என்பதை அனைவரும் உணர்ந்து அதற்கான செயற்பாடுகளை செய்யவேண்டும்.

விடுதலைப் போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது?

– மு. திருநாவுக்கரசு –

26.08.2025

“உன்னை நீ கைவிட்டு விட்டால் உன்னைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது” என்று ஒரு பிரெஞ்சு பழமொழி உண்டு. உன்னை நோக்கிப் பிறரைத் திரும்பிப் பார்க்கச் செய்ய வேண்டுமேயாயினும், நீயே சத்தமிட வேண்டும். ஒரு பச்சைக் குழந்தை கூட தன்னருகே யாரும் துணையில்லை என்றால் அழுது, கத்தி யாரையும் தன்பால் ஈர்த்துவிடும்.

இனப்படுகொலைக்குள்ளான ஈழத் தமிழர்கள், கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாகப் போராடாதிருக்கும் நிலையில், உரியவனும் பாரான் அடுத்தவனும் பாரான் அண்டை நாடும் பாராது; வெளிநாடுகளும் பாராது. உனக்கு யாரும் கை கொடுக்க வேண்டுமாயின், நீயே கை தூக்க வேண்டும். ஆதலால், களத்தில் போராடுவதன் மூலம் மட்டுமே உள்ளும் புறமும் கவனத்தை ஈர்த்துப் போர்க் கொடியைச் சர்வதேசத் தளத்தில் நிறுத்த முடியும்.

“Only the fittest will survive” (“தக்கன மட்டுமே உயிர் வாழும்”) - அதாவது, இங்கு காணப்படும் சூழலுடன் தன்னையும் இணைத்துத் தனக்குப் பொருத்தமாகக் கையாளத் தெரிந்தவை மட்டுமே உயிர் வாழும் என்பதே இதன் முழுமுதற் பொருள்.

இந்த உயிரியல் டார்வினிசத்தைச் சமூக அல்லது அரசியல் டார்வினிசமாகக் கையாளும் போது, அதை அதிகம் தலைமைத்துவப் பண்புடன் கூடிய வகையில் கையாள வேண்டும். உயிரியல் டார்வினிசத்தில், அந்த உயிருக்குச் சுயநல உயிரியல் மரபணு (Selfish Gene) இயல்பாக இயற்கைத் தேர்வின் படி தத்துவத்தை வழங்குகிறது.

மனிதனும் உயிர் என்ற வகையில் சுயநல மரபணுவைக் கொண்டவனேயானாலும், ஒரு சமூகமாக இருந்தபோது, அங்கு மேலதிகமாகத் தலைமைத்துவ ஆளுமை தேவைப்படுகிறது. இந்த வகையில், உயிரியல் டார்வினிசத்திலிருந்து சமூகவியல் டார்வினிசம் குறிப்பிடத்தக்க அளவுக்குத் தெளிவான ஆளுமைப் பரிமாண வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

சமூகப் பரிமாணத்தைக் கட்டமைப்புச் செய்து முன்னெடுக்கும் விதத்தில் தவறுகள் இழைக்கப்பட்டால், அந்தச் சமூகம் தக்க தேர்வின்றித் தேய்ந்து போய் அல்லது அழிந்து போய்விடும். அதாவது, உயிரிகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட உயிர்களின் தலைமைத்துவத் திறகப்பால், மனிதச் சமூகத்தில் நுண்ணறிவும் முன்னறிவும் கொண்ட அளவாற் பெரிய ஓரினம் (சிங்கள இனம்), அளவாற் சிறிய இனங்களின் மீது அதிக தலைமைத்துவ ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலம், சிறிய இனங்களின் தெரிவு சுருங்கும், பாதிப்புக்குள்ளாகும், சீரழிவுக்கு உள்ளாகும்.

இந்த வகையில், ஈழத் தமிழர்கள் அதிகம் தலைமைத்துவப் பண்புடனும் முனைப்புடனும் செயல்பட்டால் மட்டுமே, காணப்படும் சமூகச் சூழல் யதார்த்தத்தில் தம்மைத் தக்கவைக்க முடியும்.

மனிதனும் ஏனைய பிராணிகளைப் போல ஓர் உயிர் என்பதால், உயிரியல் டார்வினிசத்திலுள்ள பொதுத்தன்மைகள் மனிதனுக்கும் உண்டேயானாலும், உயிரினங்களில் அதிக நுண்ணறிவு கொண்டு மனிதன் சமூகமாகத் தன்னைக் கட்டமைப்பதில் வேறுபட்ட ஆளுமை அளவுகளைப் பிரயோகிக்க முடிகிறது.

அரசுள்ள அளவாற் பெரிய சிங்கள சமூகத்தோடு, அரசற்ற அளவாற் சிறிய தமிழ்ச் சமூகம், தலைமைத்துவ ஆளுமையில் தக்க முனைப்பைக் காட்டத்தவறினால், அந்தச் சமூகம் தன் வாழ்நிலையை இழந்துபோக நேரும்.

இந்நிலையில், ஈழத் தமிழர்கள் தம்மைத் தமிழர் என்ற உட்சமூக ரீதியாகவும், இலங்கை என்ற உள்நாட்டு ரீதியாகவும், அண்டை நாடு, வெளிநாடுகள், சர்வதேச சமூகம், உலகளாவிய அரசியல் நிலை போன்ற காணப்படும் அனைத்துப் புறநிலை மாற்றங்களுக்கும் பொருத்தமாக, தமக்கான தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டும்.

அந்த வகையில், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலான அரசியற் சூழலில், ஈழத் தமிழர் நிலையானது “கூழ்முட்டை” (Rotten Egg) நிலையையே கொண்டுள்ளது. மேற்படி நடப்புநிலை, உள்ளூர், உள்நாட்டு, வெளிநாட்டு, உலகளாவிய யதார்த்தத்தை உள்வாங்கி, இப்போது ஒரு புதிய வகையில் தமிழ்த் தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டும் என்று இக்கட்டுரை வேண்டி நிற்கின்றது.

ஏறக்குறைய 1970களின் பிற்பகுதியளவில், ஒற்றை உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஆரம்பமான ஆயுதப் போராட்டம், தரைப்படை, கடற்படை, பீரங்கிப்படை, விமானப்படை, சர்வதேச சரக்குக் கப்பல் அணியென வளர்ந்த நிலையில், கோட்டை கொத்தளங்களெல்லாம் அழிந்தவாறு, குண்டூசிகூட இல்லாத நிலையை ஆயுதப் போராட் டம் அடைந்துள்ளது.

ஆனால், 1979 ஆண்டு 10 ஆயிரத்துக்குட்பட்ட படையினருடன் ஒரு பிரிகேடியரைத் தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்த இலங்கை இராணுவம், இன்று அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய வகையில் 3 இலட்சத்து 46 ஆயிரம் படையினருடன் காணப்படுகிறது. நாடாளுமன்ற அரசியலில் 21 உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று சிதைந்து, சுக்குநூறாகி, தமிழரசுக் கட்சி எட்டு உறுப்பினர்களையும், சனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு உறுப்பினரையும், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு உறுப்பினரையும் பாதிக்குமேல் சுருங்கிக் கிடக்கிறது. மேலும், சனநாயகப் பண்பற்றுச் சீரழிந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது.

2001 ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீதான தாக்குதல், உலகெங்கும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் முதுகெலும்பை உடைக்க வழிவகுத்த போதிலும், அதுவே உலகெங்கும் மக்கள் போராட்ட அலைகள் எழும்புவதற்கு ஏதவாகவும் அமைந்தது. எனவே, “மக்கள் போராட்ட அலை” எனும் ஓராயுதம் உலக அரங்கில் முதன்மை பெறத்தொடங்கியது. பறிக்கப்பட்ட வெடிகுண்டு, துப்பாக்கி ஆயுதத்துக்குப் பதிலாக, மக்கள் திரளெனும் ஓராயுதம், மக்கள் சனநாயகக் கிளர்ச்சியாய் வடிவம் பெற்றது.

முள்ளிவாய்க்காலில் இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்ததோடு முடிந்துவிடவில்லை. அங்கு, அரச இராணுவம் தனது இராணுவச் சூளையில், “இனப்படுகொலை” என்னும் மிகக் கூரியதோர் ஆயுதத்தை உற்பத்தி செய்தது. எனவே, முள்ளிவாய்க்காலில் பறிபோன துப்பாக்கி, வெடிகுண்டு ஆயுதங்களுக்குப் பதிலாக, மக்கள் காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டதன் வாயிலாக, “இனப்படுகொலை” என்னும் ஆயுதம் தமிழ் மக்கள் கைக்குக் கிடைத்தது.

இந்த வகையில், “இனப்படுகொலை” என்ற ஆயுதத்தை முதலீடாகக் கொண்டு, தமிழ்மக்கள் தமது அரசியற் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று, 2016 ஆம் ஆண்டு இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்ட “டொனமூர் முதல் சிறிசேன வரையான உத்தேச அரசியல் யாப்பு” என்ற நூலில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அந்நூல் வெளியிட்டு விழாவில், தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் உட்பட, பல்வேறு அரசியற் தலைவர்களும், பல்கலைக்கழக அறிஞர்களும், ஊடகவியலாளர்களும் உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது, ஈழத் தமிழர்களின் குறைந்த பட்ச உரிமைக்கான போராட்டங்களைக் கூட இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. முதலாவதாக, இலங்கையில் நடைமுறையிலுள்ள நாடாளுமன்ற மரபு அரசியற் பாதை, இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அதை வளர்க்கவே உதவியுள்ளது என்பதை, 1833 ஆண்டு நடைமுறைக்கு வந்த “கோல்புரூக் யாப்பு” நடைமுறையிலிருந்து, இன்றைய (2025) ஆட்சியாளர்களின் யாப்பு நடைமுறை வரை, வெள்ளிடை மலையெனத் தெரிகிறது.

தமிழ்த் தலைவர்கள், குறிப்பாக “சோல்பரி அரசியல் யாப்பு” ஒட்டிய காலத்தில், 14 மணி நேரம் மூச்சுவிடாமற் பேசியும் பயனில்லை. தற்போது நாடாளுமன்றத்தில், திரைப்படப் பாணியில் 14 நிமிடங்கள் அங்கிங்குமாய்க் காலை, கையை உயர்த்தி, முதுகை வளைத்து, கண்ணை உருட்டி, சொண்டைப் பிதுக்கிப் பேசியும் எந்தப் பயனுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தமக்கான மக்கள் ஆதரவை உள்ளும் புறமும் நிரூபிப்பது சரி. ஆனால், நாடாளுமன்றத்தில் பேச்சுப் போட்டி நடத்தி எதனையும் சாதிக்க முடியாது. மாறாக, நாடாளுமன்றத்தை உள்ளும் புறமும் போர்க்களமாக மாற்றவல்ல திட்டங்களையும், வியூகங்களையும் வகுத்து, அதற்கூடாகப் போராட்டத்தை நாடாளுமன்றத்துக்குள்ளும், புறமும், உலக அரங்கிலும் எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான வியூகங்கள் வகுக்கப் பல வழிகளுண்டு. இதற்கான வியூகங்களைப் பின்பொரு தனிக் கட்டுரையில் ஆராய்வோம்.

இப்போது, போராட்டத்துக்கான முதற் திட்டத்தை வரையறை செய்வோம்:

ஆயுதப் போராட்டத்திலிருந்து மக்கள் போராட்டத்துக்கு:
ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, உள்ளும் புறமும் தடை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை, இந்தியா தவிர, மேலும் 31 நாடுகளில் அந்தத் தடைப்பட்டியல் நீள்கிறது. ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே உள்ளும் புறமும் இடமில்லை. ஆனால், “இனப்படுகொலைக்கெதிரான குரலை” மனிதநேயத்தின் அடிப்படையில் உலகெங்கும் முன்னெடுக்க முடியும்.

அதனைத் தமிழகத்திலும் முன்னெடுக்கலாம். முழு இந்தியாவிலும் முன்னெடுக்கலாம். அமெரிக்காவிலும் முன்னெடுக்கலாம். ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் முன்னெடுக் கலாம். உலகின் ஏனைய நாடுகளிலும் முன்னெடுக் கலாம்.

இது எதிரிக்கும், தமிழர் உரிமைகளை எதிர்க் கவல்ல வேறு சக்திகளுக்கும் எதிரான ஒரு பலம் வாய்ந்த ஆயுதம். செம்மணிப் புதைகுழியும் இதற்கு அரணமாகிறது. குறிப்பாக, 1958 ஆம் ஆண்டிலிருந்து கறுப்பு யூலை வரையும், அதன் பின்பும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அனைத்து மனிதப் படுகொலைகளும் தொடர்பான நீதி நிர்வாக நடவடிக்கைகளும் இவற்றுக்கு அணி சேர்க்கின்றன.

2. போராட்ட முன்னுரிமைகள்:
முதலாவதாக, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இசைப்பிரியா மீதான பாலியல் வன்முறை, படுகொலை சிறுவன் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை என்பனவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி, அதற்கான போராட்டத்தை உள்நாட்டு அரங்கிலும், தமிழகத்திலும், இந்தியாவிலும், உலக அரங்கிலும் முன்னெடுக்க வேண்டும்.

3. பொது செயற்குழு அமைப்பு:
இதற்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தளமாகக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்ச் சமூகம் ஒன்றுதிரண்டு, நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி கோரிப் போராடுவதற்கான ஒரு “பொது செயற்குழு”வை உருவாக்க வேண்டும்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கு வகிக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் பங்குவகிக்கலாம்.

சிவில் சமூக உறுப்பினர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், மூத்த குடிமக்கள் உள்ளடக்கிய 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு “செயல் குழு”வை உருவாக்கி, பிரச்சினையைக் கையாளு வதற்கு அதற்கு அனைத்து அதிகாரங்களையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதுவே தமிழ் மக்களால் உள்ளும் புறமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும்.

அதுவே எம்மத்தியில் ஏற்பட்டுள்ள உள் உடைவுகளைச் சரிசெய்வதற்கும், புதிய செயல் பூர்வமான ஒரு பாதையை வடிவமைக்கவும் வழிகோலும். “An idle mind is the devil’s workshop” (“வெறும் மனம் பிசாசின் பட்டறை”) என்பதற்கிணங்க, போராடாது தேங்கி வரண்டு கிடக்கும் ஒரு சமூகத்தின் மனதில் பிசாசுகள் குடிகொண்டு, அதனைத் தங்கள் பட்டறையாக மாற்றிவிடும். இப்போது தமிழினத்தின் அரசியலும் அப்படித்தானுள்ளது. எனவே, “இனப்படுகொலை” என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி, அதற்காகப் போராட வல்ல ஒரு அமைப்பைச் சனநாயகப் பூர்வமாக வடிவமைத்து, வெற்றிடங்களை நிரப்பிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளும் தமிழரின் தலையில் கொண்டையும் கட்டி, கொண்டையில் பூவும் கட்டி, அதற்கப்பால் தலையில் குருவி கூடும் கட்டிச் செல்லும்.

உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்களே!

ஈழத்தமிழ் மண், இந்து மாகடலின் மையத்தில் இந்தியாவின் வாசற்படியாக இருக்கவல்ல, அதன் கேந்திர அமைவிடத்தின் நிமித்தம், அது உலகப் பெரும் வல்லரசுகளையெல்லாம் ஈர்க்கவல்ல புள்ளியிலுள்ளது. சர்வதேச கவனத்தை ஈர்க்கக்கூடிய புள்ளியிலுள்ளதால், அதனை ஒரு முதலீடாகக் கொண்டு, அறிவாற்றலுடனும், ஆளமைத் திறனுடனும் தமிழ்த் தலைவர்கள் செயல்பட வேண்டும்.

www.sangathamil.ca

எலும்புக்கூடுகள் நிலத்தை கிழித்துக்கொண்டு உண்மையை சொல்ல வெளிவருகின்றன!

சட்டத்தரணி ரனிதா ஞானராஜா

15.08.2025

நீங்கள் உடல்களை புதைக்கலாம், ஆனால் உங்களால் உண்மையை புதைக்க முடியாது, புதைக்கப்படாத எலும்புக்கூடுகள் நிலத்தை கிழித்துக்கொண்டு வெளியேவந்து உலகத்திற்கும் மக்களிற்கும் எங்களை உரிய முறையில் புதைக்கவில்லை, எங்களிற்கு நீதி வழங்கப்படவில்லை என தெரிவிக்க வருகின்றன என சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

தரிந்து ஜெயவர்த்தன, தரிந்து உடுவரகெதர எம்எப்எம் பசீர் ஆகியோர் இணைந்து எழுதிய செம்மணி எனும் நூலின் வெளியீடு வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றவேளை அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நான் மூன்று முக்கிய விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்

நாங்கள் ஏன் மனித புதைகுழிகளை பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் கடத்தப்பட்டவர்கள் அல்லது காணமல் போனவர்கள் காணாமலாக்கப்பட்டவர்களுடன் தொடர்புபடுத்த முயல்கின்றோம்? குறிப்பாக வடக்குகிழக்கில்.

இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக யுத்தம் இடம்பெற்றது, உலகில் அதிகளவானவர்கள் பலவந்தகாணாமலாக்கப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என ஐக்கிய நாடுகளின் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த குழு தெரிவித்துள்ளது.

ஐநாவின் குழு பலவந்தமாக காணாமலாக்கப்பட்டிருக்க கூடியவர்கள் எண்ணிக்கை 60,000 முதல் ஒரு 100,000 என தெரிவித்துள்ளது, அவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யுத்தகாலத்தின் பயங்கரவாத தடைச்சட்டம என்றமிகவும் கொடூரமான பயங்கரமான சட்டம் நடைமுறையிலிருந்தது, அவசரகாலசட்டம் போன்ற அதற்கு ஆதரவான சட்டங்கள் காணப்பட்டன என்பது உங்களிற்கு தெரியும், இவை பயங்கரவாதத்தை கையாள்வதற்காக நடைமுறைக்கு வந்தவை, இந்தசட்டங்களை வலுக்கட்டாயமாக மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தினார்கள், குறிப்பாக வடக்குகிழக்கில்.

விசாரணைக்காக அழைக்கப்பட்ட மக்கள், அவர்கள் ஒரு போதும் திரும்பிவரவில்லை. சோதனைச்சாவடிகள் ஊடாக நடந்துசென்று கொண்டிருந்தவர்கள், அதனை கடந்து சென்றவர்கள் ஒருபோதும் மீண்டும் திரும்பிரவரவில்லை.

தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறும், சுற்றிவளைப்புகள் இடம் பெறும், மக்களை சுற்றிவளைத்து தலையாட்டி ஒருவரின் முன்னால் நிறுத்துவார்கள், அவர் தலையாட்டினால் அந்த நபரை கொண்டு செல்வார்கள், அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பலர் மீண்டும் திரும்பவில்லை.

2009 வரை இவற்றை திட்டமிட்ட முறையில் முன்னெடுத்தார்கள்.

வடக்குகிழக்கிலும் முழு நாட்டிலும் 2009 மே மாதத்துடன் யுத்தம் முடிவடைந்துவிட்டதை என நாங்கள் நினைக்கின்றோம், ஆனால் நீங்கள் அங்கு சென்றால், வடக்குகிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டால், வடக்குகிழக்கில் நிழல்யுத்தம் தொடர்ந்தும் நீடிக்கின்றது என்பதை நீங்கள் பார்ப்பீர்கள் .

யுத்தம் முடிவடைந்த பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை மிகதீவிரமாக நடைமுறைப்படுத்துகின்றார்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் கண்காணிப்பின் கீழ் இருக்கின்றனர், மனித உரிமை விடயங்களிற்காக செயற்படுபவர்கள் கண்காணிக்கப்படுகின்றார்கள்.

நாளாந்தம் ஒவ்வொரு நாளும் பலர் சிஐடி டிஐடியினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் தொடர்ந்தும் அழைக்கப்படுகின்றனர்.

சிஐடி டீஐடி போன்ற அரச கட்டமைப்புகள் தங்கள் அலுவலகங்களை வடக்குகிழக்கில் ஏற்படுத்தியுள்ளன. கொழும்பில் உள்ள தங்கள் அலுவலகங்களிற்கு விசாரணைக்கு அழைப்பதற்கு பதில் வடக்குகிழக்கில் உள்ள தங்கள் அலுவலங்களிற்குபலரை விசாரணைக்கு அழைக்கின்றார்கள்.

மிகச்சமீபத்தில் கேள்விப்பட்டிருப்பீர்கள், தரிந்துவும் அவரது நண்பர்களும் குமணனின் பெயரை இங்கே குறிப்பிட்டனர்.

குமணன் புகைப்பட ஊடகவியலாளர், அவர் தொடர்ச்சியாக தனது புகைப்படங்கள் மூலம் வடக்குகிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து பேசிவரும் ஒருவர். மிக வலுவான முறையில் அவர் இதனை செய்துவருகின்றார்.

அவரை 17ஆம் திகதி விசாரணைக்காக அழைத்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் வடக்குகிழக்கில் நிலவரம் இவ்வாறானதாகத்தான் காணப்படுகின்றது.

ஏன் நாங்கள் மனித புதைகுழிகளை பலவந்தமாக காணாமல் போகச்செய்தலுடன் தொடர்புபடுத்த விரும்புகின்றோம் என்றால், யுத்தம் முடிவடைந்த பின்னரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள பல குடும்பத்தவர்கள் உள்ளனர், அவர்கள் தங்கள் நேசத்திற்குரியவர்கள் குறித்த பதிலை கோருகின்றனர், அவர்கள் சோதனை சாவடியில் காணாமல்போயிருக்கலாம் அல்லது யுத்தத்தின் இறுதி தருணத்தில் சரணடைந்திருக்கலாம்.

அவர்கள் சரணடைந்தால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் எல்எல்ஆர்சி முன்னால் சாட்சியமளிக்கையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் யுத்த வலயத்திலிருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிக்கு உயிருடன் வரவில்லை என தெரிவித்தார்.

நாங்கள் இந்த எண்ணிக்கை குறித்தே பேசுகின்றோம்.

நாங்கள் தற்போது திறக்கப்பட்ட மனித புதைகுழிகளுடன் போராடுகின்றோம், 14 மனித புதைகுழிகள் திறக்கப்பட்டு நீதி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது செம்மணிமனித புதைகுழி குறித்து குறிப்பிடுவேன்.

கிருசாந்தி குமாரசுவாமி கொலை வழக்கு குறித்து இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டவேளை தனது வாயை திறந்த சோமரட்ண ராஜபக்சவினால் இந்த விடயம் தெரியவந்தது - 1999 யூலை 3ஆம் திகதி - அந்த திகதியிலிருந்து அவர்கள் அந்த விடயத்தை கையாள ஆரம்பித்தனர், விசாரணைகளை முன்னெடுத்தனர், புதைக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இருந்து 15 மனித எச்சங்களை அகழ்ந்தனர். விசாரணைகள் முடிவடைந்ததும் ஆறு சந்தேகநபர்கள் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட அறிக்கை மீண்டும் கொழும்பு நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு திரும்பிவரவில்லை.

முப்பது வருடங்களாகியும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து எந்த அறிவுறுத்தல்களும் இல்லை.

நாங்கள் குடும்பத்தவர்களை சென்று சந்திக்கும் போது அவர்கள் இரத்தமாதிரிகளை வழங்கியதாக மரபணு பரிசோதனைக்கு உட்பட்டதாக தெரிவிக்கின்றனர், மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை தங்கள் உறவுகள் என அடையாளம் காட்டியவர்கள் உள்ளனர். ஆனால் அதன் பின்னர் இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மக்களின் பங்களிப் குறைவாக காணப்படுகின்றது அச்சுறுத்தல்களே இதற்கு காரணம்.

நிபுணத்துவம் இல்லை, நிபுணர்கள் தேவை

14 மனித புதைகுழிகள் குறித்து பேசும் போது ஐந்து முக்கியமான மனித புதைகுழிகள் விவகாரத்தில் நான் ஆஜராகியுள்ளேன்.

ஒன்று மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி, மற்றையது மன்னார் சதொசா மனித புதைகுழி - 18 மனித

எச்சங்கள் மீட்கப்பட்டன, அவை அநுராதபுரம் சட்டவைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன, பின்னர் கொழும்பிற்கு மாற்றப்பட்டன, எலும்பு பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது, இன்னமும் வெளியாகவேண்டிய அறிக்கைகள் உள்ளன. 2013 இந்த நடவடிக்கைகள் ஆரம்பமாகின எவ்வளவு காலம் என நினைத்து பாருங்கள், குடும்பத்தவர்கள் ஒவ்வொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் சமூகமளித்துள்ளனர்.

சாதொச மனித புதைகுழி 2018 இல் அடையாளம் காணப்பட்டது 379 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன, கார்பன் டேட்டிங் இடம்பெற்றது, ஆய்வுகூட அறிக்கை வெளியானது ஆனால் அது அர்த்தப்படுத்தப்படவில்லை. நாங்கள் கோரிய அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை எடுத்ததால் அது 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது, 52 மனித எச்சங்கள் ஆராய்ச்சி, எலும்புபரிசோதனை அறிக்கைகள் போன்றவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒன்றரை வருடங்களிற்கு முன்னர் நீதிமன்றம் தடமறிதல் செயல்முறைக்கு உத்தரவிட்டுள்ளது. காணாமல்போனோர் அலுவலகத்திற்கு இதற்கான உத்தரவு வழங்கப்பட்டது.

காணாமல்போனவர்கள் அலுவலகத்தினால் எந்த பயனும் இல்லை. அது வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை. அது அமைச்சொன்றின் ஒரு பகுதியாக காணப்படுகின்றது, அமைச்சின் அறிவுறுத்தலிற்கு ஏற்ப செயற்படவேண்டிய நிலையில் உள்ளது.

இந்த நிலையில் காணாமல்போனவர்கள் அலுவலகம் நீதியை பெற்றுதரும் என இன்னமும் சித்தரிக்கின்றார்கள்.

செம்மணி

செம்மணியில் 32 வாரங்கள் மிகச்சிறிய அளவு நிலப்பரப்பினை தோண்டியவேளை 141 மனித எலும்புக்கூடுகளை மீட்டுள்ளனர். சிறிய இடத்தில் இது மிகப்பெரியது.

நாங்கள் அந்த பகுதி முழுவதையும் அகழ் வதற்கான கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை குறித்து குறிப்பிட வேண்டும், அங்கு மிகவும் ஆபத்தான நிலை காணப்படு

கின்றது.

எலும்புக்கூடுகள் மனித எச்சங்கள் கண்ணிவெடிகளுடன் கலந்து காணப்படுகின்றன.

இது மிகவும் ஆபத்தான விடயம். எங்களிற்கு இவற்றை கையாள்வதற்கு தொழில்நுட்ப திறன் அவசியம்.

நாங்கள் மண்ணிற்கு கீழே எங்கள் அன்புக்குரியவர்களை தேடுகின்றோம்.

காணாமலாக்கப்பட்டவர்கள் குடும்பத்தினர் உறவினர்கள் களைப்படைந்துவிட்டனர், அவர்கள் பல ஆணைக்குழுக்களின் முன் சென்றுள்ளனர்.

நீதி வழங்குதல் என்பது மிகவும் மெதுவான மந்த கதியிலான செயற்பாடாக காணப்படுகின்றது.

காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்கள் பதில்களிற்காக காத்திருக்கின்றனர். அவர்களிற்கு உண்மையை அறிவதற்கான உரிமையுள்ளது, தங்கள் நேசத்திற்குரியவர்களிற்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான உரிமையுள்ளது, அவர்களிற்கு கௌரவமான இறுதி சடங்கினை முன்னெடுப்பதற்கான உரிமையுள்ளது.

உண்மையான தகவல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன, தணிக்கைக்கு உள்ளாகின்றன.

வடக்கில் என்ன நடந்தது நடக்கின்றது என்பது தெற்கில் உள்ளவர்களிற்கு முழுமையாக தெரியாது. உண்மையை தெரியப்படுத்துவதை அதிகரிக்கவேண்டும்.

உண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும்,

இன்றுவரை, யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களை நாங்கள் பூர்த்தி செய்கின்றோம், ஆனால் அரசாங்கத்திடமிருந்து எந்த ஒப்புக்கொள்ளுதலும் இல்லை, இது எனது சகோதரிக்கு இடம்பெற்றுள்ளது, நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களிற்கு நீதியை உண்மையை வழங்குவோம் என இதுவரை அரசாங்கம் தெரிவிக்கவில்லை.

நீங்கள் உடல்களை புதைக்கலாம், ஆனால் உங்களால் உண்மையை புதைக்க முடியாது, புதைக்கப்படாத எலும்புக்கூடுகள் நிலத்தை கிழித்துக்கொண்டு வெளியேவந்து உலகத்திற்கும் மக்களிற்கும் எங்களை உரிய முறையில் புதைக்கவில்லை, எங்களிற்கு நீதி வழங்கப்படவில்லை என தெரிவிக்க வருகின்றன.



தமிழீழ விடுதலை வரலாற்றில் செப்ரெம்பர்

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் லெப். பரமதேவா அவர்களின் 41ஆவது வீரவணக்க நாள்

சிங்கள இராணுவத்தால் கைதாகி மட்டக்களப்பு சிறையுடைப்பில் வெளியேறிய லெப். பரமதேவா (இராமலிங்கம் பரமதேவா, மட்டக்களப்பு, பிறப்பு: 30.10.1956) பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்துகொண்டார். களவாஞ்சிக் குடி சிங்கள காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 22.09.1984 அன்று வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் திலீபனின் தியாகப் பயணம்

இந்திய வல்லாதிக்க ஆளும்வர்க்கத்தின் அரசியல் முகமூடியைக் கிழித்தெறிந்து, தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் இந்திய அரசின் நயவஞ்சகச் செயலை சுட்டிக்காட்டுவதற்காக 15.09.1987 அன்று சாகும், வரை நீரா காரமற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, பன்னிரெண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி 26.09.1987 அன்று தனது உயிரைத் ஈகம் செய்தார் லெப். கேணல் திலீபன் அவர்கள்.

வந்தாறுமூலை பல்கலைக்கழகப் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாஞமூலை பல்கலைக்கழகத்துள் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் மக்கள் 05.09.1990 அன்று பீ.ஏ. கருணாதிலக தலைமையிலான சிங்கள இராணவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்னர். இதில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட் 158 தமிழ் மக்கள் பலியாகினர்.

சத்துருக்கொண்டான் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 09.09.1990 அன்று ஏ.எம். டபிள்யூ. செனிவரத் தின தலைமையி லான விசேட அதிரடிப்படையினர் சத்துருக்கொண்டான் பகுதியை சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட 180 தமிழ் மக்களை கைதுசெய்த கொலை செய்தனர்.

லெப். கேணல் சந்திரன் அவர்களின் 35ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

வன்னிப் பிராந்தியத்தின் அரசியற் துறைப் பொறுப்பாளராக லெப். கேணல் சந்திரன் (இராமலிங்கம் முத்துலிங்கம், கிளிநொச்சி, பிறப்பு: 13.04.1964) பணியாற்றிய போது நடந்த கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பில் நேரடியாக பங்குகொண்டு விழுப்புண்ணேந்தி மருத்துவச் சிகிச் சைக்காக தமிழ்நாடு செல்லும் வழியில் 23.09.1990 அன்று சிறீலங்கா கடற்படையின் தாக்குதலில் கடலில் வீரச் சாவடைந்தார்.

யாழ். கோட்டை மீட்பு

170 நாள் முற்றுகைச் சமரின் பின் விடுதலைப் புலிகளால் யாழ். கோட்டை மீட்கப்பட்டு 26.09.1990 அன்று யாழ். கோட்டையின் மீது தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

ஒப்பிரேசன் மின்னல் முறியடிப்பு

தமிழீழத் தாயகத்தை இரண்டாகப் பிளக்கும் நோக்கத்தைக் கொண்ட மணலாறு ஒப்பிரேசன் மின்னல் படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட நாள் 26.09.1991. இப்படையெடுப்பு 28.08.1991 அன்று ஆரம்பித்து 26.09.1991 வரையான 28 நாட்கள் நீடித்தது. இச்சமரில் எமது முதல் நிலைத் தளபதிகளில் ஒரவரான லெப். கேணல் ஜஸ்ரின் (பொன்னுச் சாமி பாஸ்கரன், காங்கேசன்துறை, பிறப்பு:03.04.1962) உட்பட 236 வீரர்கள் வீரச்சாவடைந்து தேசத்தைக் காத்தனர். 300 வரையான தமது சிப்பாய்களை இழந்து சிங்களப்படை தோல்வியைச் சந்தித்தது.

லெப். கேணல் சுபன் அவர்களின் 33ஆவது வீரவணக்க நாள்

25.09.1992 அன்று பூநகரிப் படைகாமின் பள்ளிக்குடா இராணுவ வேலியைத் தகர்த்தெறிய முற்பட்டதாக்குதலில் லெப். கேணல் சுபன் (வினாசித்தம்பி சுந்தரலிங்கம், மன்னார், பிறப்பு: 21.07.1965) வீரச்சாவடைந்தார். மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியான இவர் இந்தியப் படைகளின் “செக்மேற்” றின் போது சிறப்பாக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாத்தளன் படுகொலை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் பகுதியில் 18.09.1993 அன்று இரவு நிகழ்ச்சி ஒன்றில் குழுமியிருந்த தமிழ் மக்கள் சிறீலங்கா விமானப் படையினர் புக்காரா விமானங்களால் குண்டுவீசிக் கொலை செய்தனர். இதில் 13 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40ற்கும் அதிக மானோர் படுகாயம் அடைந்தனர்.

சாவகச்சேரிப் படுகொலை

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் 28.09.1993 அன்று சிறீலங்கா விமானக் குண்டுவீச்சால், பதுங்குகுழியில் இருந்த பெண்கள், குழந்தைகள், உட்பட 23 தமிழ் மக்கள் மண்ணால் மூடப்பட்டு மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

லெப். கேணல் நரேஸ் அவர்களின் 32ஆம் ஆண்டு வீரச்சாவு நாள்

முல்லைத்தீவு - கிளிநொச்சி கோட்டங்களின் சிறப்புத் தளபதியாக பணியாற்றியவர். இரண்டாவது ஈழப்போரில் சிங்களப் படைக்கு எதிரான பல சமர்களில் முக்கிய பங்கு வகித்தவர். இறுதியில் எதிரியின் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது 28.09.1993 அன்று லெப். கேணல் நரேஸ் (சிங்கராஜா அருள்நாயகம், புதக் குடியிருப்பு, பிறப்பு: 07.11.1969) வீரச்சாவடைந்தார்.

ஒப்பிரேசன் யாழ். தேவி முறியடிப்புச் சமர்

29.09.1993 அன்று ஆனையிறவுப் பெருந்தளத்திலிருந்து யாழ். குடா நாட்டிற்கான விநியோக மார்க்கமாக விளங்கிய கிளாலி இறங்கு துறையை கைப்பற்றுவதற்காக கனரக வாகனங்கள் சகிதம் 5,000ற்கு மேற்பட்ட சிங்களப் படை யினர் முன்னேறினர். புலோப்பளையில் வைத்துப் படை யினரை வழிமறித்த விடுதலைப் புலிகள் ஆக்ரோசமான முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இடம்பெற்ற 4 மணித்தியால முறியடிப்புத் தாக்குதலில் 125 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். இப்படை நடவடிக்கையில் சிங்கள இராணுவத்தினரை வழிநடத்திய கட்டளை அதிகாரி கேணல் சரத் பொண்சேகா உட்பட 234 படையினர் படு காயமடைந்தனர். ரி-55 தாங்கிகள் இரண்டும், பவள் கவச வாகனம் ஒன்றும் முற்றாக சிதைக்கப்பட்டன. வேறு இரண்டு கவசவாகனங்கள் சேதடைந்தன.

சாகரவர்த்தனா கப்பல் மூழ்கடிப்பு: கடற்கரும்புலி லெப். கேணல் நளாயினி உட்பட நான்கு கரும்புலிகள் வீரச்சாவு



தமிழீழத் தேசியத் தலைவரது ஆழ்மனக் குகையிலிருந்து உதயசூரியனாகப் பிரகாசித்த கடற்புலிகள் மகளிர் படையணி என்னும் எண்ணக் கருவைச் செயற்பாட்டுச் சாத்தியமாக்க ஏனைய தளபதிகளுடன் பாடுபட்டு அப் படையணியை வானுயரக் கட்டியெழுப்பியதோடு, அப்படைப்பிரிவின் முதற் சிறப்புத் தளபதியாகவும் நிகழ்ந்தவர் லெப். கேணல் நளாயினி, சிலாபத்துறையில் 19.09.1994 அன்று ஏ-602 இலக் கடலரசன் எனும் அர்த்தப்படும் சிறீலங்காக் கடற்படையின் சாகரவர்த்தனா கட்டளைக் கப்பல் கடற்கரும்புலிகள் மகளிர் படையணிச் சிறப்புத்தளபதி லெப். கேணல் நளாயினி (ஆறுமுகசாமி பத்மாவதி, ஊறணி, வல்வெட்டித்துறை, பிறப்பு: 07.01.1972) தலைமையிலான கடற்கரும்புலி மேஜர் மங்கை (கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி, முள்ளியான், யாழ்ப்பாணம், பிறப்பு: 16.12.1965), கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன் (குகதாசன் பிரணவன், நல்லூர், யாழ்ப்பாணம், பிறப்பு: 05.07.1974), கடற்கரும்புலி கப்டன் வாமன் (கந்தசாமி ரவிநாயகம், கோவில்போரதீவு, மட்டக்களப்பு, பிறப்பு: 22.08.1971) மூழ்கடித்து வீரச்சாவடைந்தனர். இச்சம்பவம் தமிழீழத்தின் மேற்கு கடற்பகுதியான கற்பிட்டிக் கடற்பரப்பில் இடம்பெற்றது. இவ் வெற்றிகர கடற்தாக்குதல் சமரின் போது சாகரவர்த்தனா கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அஜித் போயகொட மற்றும் உதவிக் கட்டளை அதிகாரியும் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

கடற்கரும்புலி லெப். கேணல் நளாயினி	கடற்கரும்புலி மேஜர் மங்கை	கடற்கரும்புலி கப்டன் வாமன்	கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன்

தமிழீழத்தின் முதன் முதல் மணக்கொடைத் தடைச்சட்டம்

செப்டெம்பர் மாத ஆரம்பத்தில், நாம் இப்போது காலடி எடுத்து வைக்கின்றோம். இதே செப்டெம்பர் மாத ஆரம்பத்தில்தான் தமிழீழத்தின் சமுதாய கொடுமை ஒன்றிற்கு சாவு மணி அடிக்கின்ற சரித்திரத்தின் ஆரம்பமாகவும், அத்திவாரமாகவும் அமைந்துள்ளது. ஆம், செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி -1995ஆம் ஆண்டன்றுதான் முதன் முதலாக - ‘மணக் கொடைத் தடைச் சட்டம்’ என்கின்ற சீதனத் தடைச் சட்டம் தமிழீழத்தில் அமுலாக்கப்பட்டது.

கடற்கரும்புலி கப்டன் அருள்ஜோதி அவர்களின் 30ஆவது வீரவணக்க நாள்

10.09.1995 அன்று காங்கேசன்துறைமுகத்தினுள் ஊடுருவி தரையிறக்கும் கப்பல் மீது கரும்புலித் தாக்குதலில் பங்கு கொண்டு கரும்புலி கப்டன் அருள்ஜோதி (முத்துலிங்கம் சியாமளா, காரைநகர்-யாழ்ப்பாணம், பிறப்பு: 10.09.1995) வீரச்சாவடைந்தார்

கடற்கரும்புலி கப்டன் அருள்ஜோதி

www.sangathamil.ca

கடற்கருபுலி மேஜர் கீர்த்தி, மேஜர் அன்பு, மேஜர் செவ்வாணம், கப்டன் சிவா ஆகிய மாவீரர்களின் 30ஆவது வீரவணக்க நாள்

20.09.1995 அன்று தமிழீழக் கடற் பிரதேசத்திற்குள் உட்பிரவேசிக்கும் சிங்களக் கடற்படையின் மனோபலத்தை சிதைக்க காங்கேசன்துறை துறைமுகக் கடற்பரப்பில் கடற்புலிகள் தொடுத்த சமருக்கு பலம் சேர்த்து, எதிரியின் மனோபலத்தை உடைத்தெறிய காரைநகர் கடற்படைத் தளத்தை நோக்கிச் சென்ற ‘லங்காமுடிந்த’ சிறீலங்கா விநயோகக் கப்பல் மற்றும் டோறா மீதான தாக்குதலை கடற்கரும்புலிகளான கடற்கரும்புலிகளான மேஜர் கீர்த்தி (வல்லிபுரம் நகுலேஸ்வரன், பேராலை-பளை, பிறப்பு: 04.10.1973), மேஜர் அன்பு (இராமசாமி ராஜ்பவான், சாக்கோட்டை - பருத்தித்துறை, பிறப்பு: 22.01.1975), மேஜர் செவ்வானம் (கிருஸ்ணபிள்ளை சுமதி, மூளாய்-யாழ்., பிறப்பு: 22.01.1974), கப்டன் சிவா (கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ், மண்டைதீவு-யாழ்., பிறப்பு: 24.12.1977) ஆகியோர் மேற்கொண்டு விரச்சாவடைந்தனர்.

கடற்கரும்புலி மேஜர் கீர்த்தி | கடற்கரும்புலி மேஜர் அன்பு | கடற்கரும்புலி கப்டன செவ்வானம் | கடற்கரும்புலி கப்டன் சிவா

முல்லைத்தீவு கடற்பரப்பில் கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த கரும்புலிகளின் 26ஆவது வீரவணக்க நாள்

முல்லைத்திவு கடற்பரப்பில் 26.09.1999 அன்று சிறீலங்கா கடற்படையினர் மீதான கடற் கரும்புலித் தாக்குதலின் போது மேஜர் நாதவேணி (நாகேந்திரம் அனுஜா, யாழ், பிறப்பு: 29.12.1978), மேஜர் ரவி (கந்தையா செல்வன், யாழ், பிறப்பு: 21.04.1971), மேஜர் செழியன் (துங்கவேல் ஆனுந்தகுமாரர், மட்டக்களப்பு, பிறப்பு: 10.03.1997) வீரச்சாவடைந்தனர்.

கடற்கரும்புலி மேஜர் நாதவேணி | கடற்கரும்புலி மேஜர் ரவி | கடற்கரும்புலி மேஜர் செழியன்

லெப். கேணல் சிவாஜி அவர்களின் 29ஆவது வீரவணக்க நாள்

17.08.1996 அன்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் ஏற்பட்ட மோதலின் போது லெப். கேணல் சிவாஜி (கிருஷ்ணன் சிறீஸ்குமார், பதுளை-சிறீலங்கா, பிறப்பு: 04.07.1969) வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் பாவரசன் அவர்களின் 28ஆவது வீரவணக்க நாள்

முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியான இவர் புலனாய்வுத்துறையிலும் முக்கிய பொறுப்பாற் றியவர். இறுதியில் நிதித்துறையில் செயலாற்றிய லெப். கேணல் பாவரசன் (சின்னத்துரை ஆனந்தகுமார், யாழ்ப்பாணம், பிறப்பு: 21.07.1961) சிறந்த எழுத்தாளரும், கவிஞருமாவார். 10.09.1997 அன்று ஜெயசிக்குறுக் களமுனையில் படையெதிர்ப்பு நடவடிக்கையில் வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் அருணா [அருணன்] அவர்களின் 27ஆவது வீரவணக்க நாள்

கடற்புலிகளின் முக்கிய போர்த் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் அருணா (இராசேந்திரன் சகிகரன், யாழ், பிறப்பு: 16.12.1973), நரேஸ் கடற்தாக்குதல் படையணித் தளபதியாக பணியாற்றினர். முல்லைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையுடன் இடம்பெற்ற கடும்சமர் ஒன்றில் 22.09.1998 அன்று வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் செல்வி [றியன்சி], லெப். கேணல் ஞானி அவர்களின் 29ஆவது வீரவணக்க நாள்

ஓயாத அலைகள் -2 வெற்றி சமரில் முக்கிய பங்கேற்று ஊடறுப்பு அணி ஒன்றின் தலைவியாகச் சென்று 27.09.1998 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் செல்வி (சிவஞானம் ஜெனிற்றா, சாவற்காடு- மன்னார், பிறப்பு: 14.03.1974), லெப். கேணல் ஞானி (பேரின்பநாதன் சூரியகுமாரி, கன்னல்குடா -மட்டக்களப்பு, பிறப்பு: 03.03.1976) போர் முனையில் தாம் நின்றிருந்த இடம் மீது செல் போடுங்கோ எங்களை பார்க்கவேண்டாம் எனக்கூறி எதிரிக்குப் பேரழிவை ஏற்படுத்தினார்கள்.

கிளிநொச்சி நகர் மீட்ட ஓயாத அலைகள் – 2

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் - 2 நடவடிக்கை மூலம் 27.09.1998 அன்று ஒரு பிரிகேட் தலைமையகத்தையும் பல மினி முகாங்களையும் கொண்டதான 8 கி.மீ நீளமான இராணுவ வலயமும், 1500 இற்கு அதிகமான படையினரும் அழிக்கப்பட்டு கிளிநொச்சி நகர் மீட்கப்பட்டது. இரண்டு யுத்த டாங்கிகள் உட்பட பெருமளவான ஆயுத தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர். இழந்த எமது பிரதேசங்களை மீட்டெடுத்த பெரும் சமரின் வெற்றிக்கு வலுச்சேர்த்து 405 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

ரிவிகிரண முறியடிப்பு

03.09.2000 அன்று இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட ரிவிகிரண எனும் இராணுவ படையெடுப்பு தொடங்கிய நாளிலே விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் – 3 நடவடிக்கை மூலம் முறியடிக்கப்பட்டது.

லெப். கேணல் இரும்பொறை அவர்களின் 25ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

03.09.2000 அன்று யாழ. குடாநாட்டில் பலமுனைகளில் சிறீலங்கா படையினரால் முன்னெடுக்கப்பட்ட பாரிய முன்னகர்வு முயற்சிக்கொதிரான முறியடிப்புச் சமரில் எதிரிக்கு பேரழிவை கொடுத்து தீரமுடன் களமாடி லெப். கேணல் இரும்பொறை (ஆசிர்வாதம் ரமேஸ், யாழ்ப்பாணம், பிறப்பு: 07.04.1973) உட்பட 120 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஓயாத அலைகள் – 4

தென்மராட்சிப் பகுதியில் 26.09.2000 அன்று விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் - 4 நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது.

சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டைசெய்யமுடியாது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர் கேணல் சங்கர் அவர்களின் 24ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் 26.09.2001 அன்று வன்னி ஒட்டுசுட்டான பகுதியில் சிங்கள இராணுவத்தின் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை, சிறீலங்கா அரசு 04.09.2002 அன்று நள்ளிரவுடன் நீக்கியது. சந்திரிகா அரசால், 1998 ம் ஆண்டு, விடுதலைப்புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையானது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பெரும் தடைக்கல்லாக அமைந் திருந்தது தெரிந்ததே. இத்தடை நீக்கமானது, தாய்லாந்தில் நடைபெற்ற நேரடிப் பேச்சு வார்த் தைக்கு வழியேற்படுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுவார்த்தை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சு வார்த்தை 16.09.2002 அன்று தாய்லாந்தில் ஆரம்பமாகி நடை பெற்றது. சந்திரிகா அரசுடன் மேற் கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முறி வடைந்ததற்குப் பின்னர், சுமார் ஏழாண்டுகள் கழித்து நடை பெற்ற நேரடிப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

கைதிகள் பரிமாற்றம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையினருக்கும் இடையேயான கைதிகள் பரிமாற்றம் ஒன்று 28.09.2002 அன்று, வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடைம்பெற்றது. இந்நிகழ்வில் ஏழாண்டுகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த படையினர் ஏழு பேரும் விடுவிக்கப்பட்ட அதே வேளை, சிறீலங்காச் சிறைகிளல் இருந்து விடுவிக்கப்பட்ட பதினொரு விடுலைப் புலிகளும் வைபவரீதியாக பரிமாற்றம் செய்யப்பட்டனர்.

ஓமந்தையில் விடுவிக்கப்பட்ட 11 பேரில், பலாலியில் சிங்கள விமானப் படைத்தளம் மீது 1994ம் ஆண்டு நடத்தப்பட்ட கரும்புலித்தாக்குதல் அணிக்கு தலைமையேற்றுச் சென்று, சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட கரும்புலிவீரர் கெனடியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் தளபதிகளும், சிறீலங்கா படைத்தளபதிகளும் சந்திப்பு

12.09.2002 அன்று விடுதலைப் புலிகளின் தளபதிகளும் சிறீலங்கா படைத் தளபதிகளும், முகமாலையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். முகமாலையில் இருதரப்பு முன்னணி காவல் நிலைக ளுக்கும் இடைப்பட்ட சூனியப் பகுதியில் 12.09.2002 அன்று இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது. போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புரூ ஹோ டே அவர்கள் இச்சந்திப்பை ஒழுங்கு படுத்தியிருந்தார். விடுதலைப் புலிகளின் வட பகுதிக்கான கட்டளைத் தளபதி கேணல் தீபன், அவரின் உதவியாளர் லெப்டினன்ட கேணல் லோரன்ஸ், பளைப் பகுதிப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் அறிவு ஆகியோரும், சிறீலங்கா தரப்பில், யாழ் மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, நிர்வாக இளைப்பாளர் பிரிகேடியர் உபாலி, லெப்டினன்ட் கேணல் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர் .

வவுனியா கூட்டுப்படைத்தலைமையகம் மீதான கரும்புலித் தாக்குதல்

09.09.2008 அன்று வவுனியா கூட்டுப்படைத் தலைமையகம் மீதுான கரும்புலித் தாக்குதலின் வீர காவியமான கரும்புலி மாவீரர்கள் ஆன கரும்புலி லெப். கேணல் விநோதன் (இரத்தினம் பிரதாப், வேலணை -யாழ்), லெப். கேணல் மதியழகி (இரத்தினசாமி லோகேஸ்வரி, பாண்டியன்குளம் - மல்லாவி), கரும்புலி மேஜர் ஆனந்தி (சாந்தகுமார் விஜயலட்சுமி, மன்னங்குளம் - மட்டக்களப்பு), கரும்புலி மேஜர் நிலாகரன்(முணியாண்டி ஜீவராசா, கிளிநொச்சி), கரும்புலி கப்டன் முத்துநகை(சிவகுருநாதன் சிவரோகினி, முகாவில் - இயக்கச்சி), கரும்புலி கப்டன் எழிலகன் (கிருஸ்ணபிள்ளை பிரபாகரன், பருத்தித்துறை - யாழ்), கரும்புலி கப்டன் கனிமதி (திருநாவுக்கரசு தட்சாயினி, பேரடம்பன்- பூநகரி), கரும்புலி கப்டன் அறிவுத்தமிழன்

(வையாபுரி சசிகலா, சமயபுரம் - வவுனியா), கரும்புலி கப்டன் அகிலன் (இராசகுலேந்திரன் கேதாரன், யாழ்ப்பாணம்), கரும்புலி கப்டன் நிமலன் (தவராசா தவக்குமார், அக்கரைப்பற்று - அம்பாறை) ஆகியயோரும் வீரச்சாவடைந்தனர். இத்தாக்குதலில் இந்தியாவால் வழங்கப்பட்ட இந்திர ராடர் தாக்கியழிக்கப்பட்டதுடன் படைத்தலைமையகம் பலத்த சேதமாக்கப்பட்டது. இதில் இரு இந்திய தொழில் நுட்பவியலாளர் காயமுற்றது குறிப்பிடத்தக்கது.

38ஆம் ஆண்டு
வீரவணக்கம்
38th Year
Veeravanakkam
SEPT
26
2025
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன் (27.11.1963–26.09.1987)
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ்
மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம்
நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு
(15.09.1987–26.09.1987) இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987)
demanding five demands from the Government of India to fulfill
the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறிலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில்
கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறிலங்கா கடற்படை கைது
செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை
05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட
லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளுக்கும்
எமது 38ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ஆம் லெப். கஸ்தூரி
வீரவேங்கை ரஞ்சினி
வீரவேங்கை தயா
2ஆம் லெப். மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில்
இந்தியப் படையுடன் நடந்த மோதலில்
முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதி
உட்பட 2ஆம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா
ஆகிய மாவீரர்களுக்கும் எமது 38ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10 அக்டோபர்
கேணல் சங்கர்
26.09.2001
அன்று
முல்லைத்தீவு
ஒட்டுசுட்டான் வீதியில்
சிறீலங்கா ஆழ
ஊடுருவும் படையினரால்
நடாத்தப்பட்ட
கிளைமோர் தாக்குதலில்
வீரச்சாவடைந்தார்.
இம் மாவீரருக்கு எமது
24 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்